# என் மனம் உன் வசமே...

ஆர். மகேஸ்வரி



என் மனம் உன் வசமே...

ஆர். மகேஸ்வரி

என் மனம் உன் வசமே...

ஆர். மகேஸ்வரி



# என் மனம்
# உன் வசமே...



## 1

பூமியை பனியின் பிடியிலிருந்து விடுவிக்க... பிரகாசமாய்... கிழக்கு வானிலிருந்து மெல்லப் புறப்பட்டுக் கொண்டிருந்தான், இளஞ்சூரியன்!

புல்களுக்கும்... மலர்களுக்கும் வேண்டாத பாரமாய்... அவற்றின் மேல் மனசாட்சியே இல்லாமல் ஏறி அமர்ந்திருந்த பனித்துளிகள்... சூரியக்கதிர் வீச்சுக்குப் பயந்து... ஓடி ஒளிந்து கொண்டிருந்த... அழகான... இளங்காலைப் பொழுது!

சஞ்சனா குளித்து... உடுத்திக் கொண்டு... அழகிய தேவதையாய்... மெல்ல மாடிப்படியிலிருந்து இறங்கி வந்தாள்.

சஞ்சனா... ஒரு அழகுப் பூந்தோட்டம்!

சந்தனத்தில் இழைத்தது போன்ற வடிவான உட லமைப்பு!

வட்ட முகத்தில் மானாய் துள்ளி விளையாடும் கண்கள்!

கதுப்பு ஆப்பிள் கன்னங்கள்!

ரோஜாவாய் சிவந்த மென்மையான உதடுகள்!

இடுப்புக்குக் கீழே நீண்டு வளர்ந்த மினுமினுப்பான அடர்ந்த கூந்தல்!

மொத்தத்தில் அச்சு அசல் போத்தீஸின் சாமுத்ரிகா பட்டு விளம்பரத்திற்கு வரும் மீரா ஜாஸ்மின் போன்று இருப்பாள்!

சர்வ லட்சணமும் பொருந்திய (கொண்ட) பெண்!

பார்த்துக்கொண்டே... பருகிக் கொண்டே இருக்கலாம் போன்ற மிகையான அழகி!

கண்களில் காந்தத்தின் ஈர்ப்பு சக்தியும்... காஷ்மீரின் குளிர்ச்சியும்... ஒரு சேர குழைத்தாற் போன்று கசியும் வசீகரப் பார்வைக்குச் சொந்தக்காரி, சஞ்சனா!

காலையில் எழுந்தது முதற்கொண்டே இதயத்தில் இனம் புரியாத... இன்னதென்று அறிய முடியாத சோகம்... அவளை ஆட்கொண்டது!

மனம் சோர்ந்து... மடிந்து... களைப்பாய் இருப்பது போன்ற உள்ளுணர்வு!



வீட்டில் சொல்லிக் கொண்டு பள்ளிக்குக் கிளம்பினாள்!

பள்ளியில் எதிர்படும் ஆசிரிய, ஆசிரியைகளின் வணக்கத்திற்குத் தலையசைப்பாலும்... செயற்கையாய் புன்னகையை வலிய முகத்தில் சூடிக்கொண்டு... பதில் வணக்கம் கூறி... பள்ளி தாளாளர் என்ற அறைக்குள் நுழைந்து... அந்த குஷன் நாற்காலியில் அமர்ந்தாள்.

ஒவ்வொரு பைலாய் எடுத்துப் பார்த்தாள்!

கையெழுத்து இடவேண்டியவைகளுக்கு கையெழுத் திட்டாள்!

பள்ளியின் ப்ரையர் பெல் அடிக்க... உள்ளே இருந்து மைதானத்திற்கு வந்தாள்.

பள்ளி வளாகத்தில் மாணவ, மாணவியர் அனைவரும் ஒன்று கூடி வரிசை வரிசையாய் நிற்க...

அவர்களை ஆசிரியப் பெருமக்கள் ஒழுங்குபடுத்திக் கொண்டு இருந்தனர்.

ஆசிரியர்களுக்கு இளம் ஆகாய வண்ண சட்டையும், கருப்பு பாண்டும் யூனிபார்ம்!

ஆசிரியைகளுக்கு இளம் பிங்கில் சந்தனக்கலர் பார்டர் போட்ட விலையுயர்ந்த காட்டன் புடவைதான் யூனிபார்ம்!

பள்ளி நிர்வாகம் இலவசமாய் மூன்று செட் யூனிபார்ம் கொடுத்துள்ளது.

தூக்கிப் போட்ட கொண்டையும்... அந்த காட்டன் புடவையும் ஆசிரியைகளுக்கு அம்சமாய் இருக்கும்!

அதே உடுப்புதான் சஞ்சனாவும் அணிவாள்!

அந்த உடையில் களையுடன்... மிடுக்காய் பேரழ குடன் திகழ்வாள், சஞ்சனா!

ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த பள்ளி, அது!

முதலில் குறைந்த அளவு குழந்தைகளைக் கொண் டிருந்தது. தற்போது அங்கே பத்தாயிரத்திற்கும் மேல் மாணவர்கள் உள்ளனர்.

இத்தனை வளர்ச்சிக்கும் காரணகர்த்தா சஞ்சனாதான்!

கல்வியின் தரம்... குறைந்த கட்டணம் கண்டு ஏழை மக்களும்... தங்கள் குழந்தைகளை அப்பள்ளியில் சேர்த்து இன்புற்றனர்!

நிறைவான கல்வி அங்கே கிடைக்க... புற்றீசலாய் அப்பகுதியைச் சுற்றியிருந்த மக்கள் எல்லோரும் தங்கள் குழந்தைகளை அப்பள்ளியில் சேர்த்தனர்!

இலவச பாடப் புத்தகம்...

கட்டண தவணை முறை...

இலவச மதிய உணவு...

தொண்ணூறு சதவீதத்திற்கு மேல் மார்க் எடுக்கும் மாணவர்களுக்கு மிகக் குறைவான கட்டணச் சலுகை...

தொண்ணூற்று ஐந்து சதவீதத்திற்கு மேல் மார்க் எடுத்தால் கட்டணமே இல்லாமல் இலவசக் கல்வியும்...

பள்ளியில் படிக்கும் வெளியூர் மாணவ, மாணவி யருக்கு இலவச பஸ் வசதி என்று எத்தனையோ நல்ல பல சலுகைகள் அங்கே உண்டு!

இத்தனை வசதியிருக்க... மக்களுக்கு விளம்பரமே இல் லாமல் பிரபலமானது அந்த 'சஞ்சனா மெட்ரிகுலேசன் பள்ளி!'

'சஞ்சனா மெட்ரிகுலேசன் பள்ளி' சேவைக்காய்... மக்களின் துயர் துடைக்க... ஏழை மக்களின் கனவுகள் நிறைவேற ஆரம்பிக்கப்பட்டது!



கல்வியை வியாபாரமாக்கி... கோடி கோடியாய் சம் பாதித்துக் கொழுக்கும் கொள்ளைக் கூட்டங்களிலிருந்து விலகி...

கல்வியை வியாபாரமாக்காமல்... சேவை நோக்குடன்... அர்ப்பணிப்பு உணர்வுடன் ஆரம்பிக்கப்பட்ட... அற்புத மான பள்ளி, அது!

கூலி வேலை செய்யும் பெற்றோர்களுக்கெல்லாம் வரமாய்... அமுதமாய்... இப்படி ஒரு வாய்ப்பு... கிடைக்கு மென்று எதிர்பார்க்காத அத்தனைப் பேரும் வியந்து... மகிழ்ச்சியாய்... அப்பள்ளியில் தங்களின் மழலைகளைச் சேர்த்து ஆனந்தப்பட்டனர்.

தங்கள் குழந்தைகளின் ஆங்கில, தமிழ், இந்தி அறிவு கண்டு... புலமைக் கண்டு வியந்தனர், குழந்தைகளைப் பெற்றவர்கள்!

எல்.கே.ஜி.யிலிருந்து பனிரெண்டாம் வகுப்பு வரை உள்ளது.

சஞ்சனாவின் அன்பு... அறிவு... பண்பு... சேவை... இனிமையான பேச்சால்... அத்தனை பேரின் இதயங் களிலும் தெய்வமாய் குடியேறினாள்!

கள்ளக்குறிச்சி நகரை விட்டு மேற்கே கச்சிராய பாளையம் நெடுஞ்சாலையில் ஒரு கி.மீட்டர் பயணித் தால்... இயற்கையான சுற்றுச் சூழ்நிலையில்... தூய்மை யான சுகாதாரத்துடன்... நல்ல காற்றோட்டத்துடன் கூடிய மிகப் பெரிய பிரம்மாண்ட கட்டிடத்துடன் பள்ளி திகழ் கிறது!

நூறு ஏக்கர் பரப்பளவில்... சுற்று மதில் சுவர் எழுப்பி... கலைநயத்துடன் கட்டப்பட்ட கட்டடம்... விளையாட்டு மைதானம்... நீச்சல் குளம்... குதிரை ஏற்றப் பயிற்சி மைதானம்... பஸ் நிற்கும் மைதானம் என்று, அழகாய்... அம்சமான முறையில் பள்ளி அமைந்திருக்கிறது.

இவ்வளவு பெரிய கல்வி நிறுவனத்தை நிர்வகிக்கும் சஞ்சனாவிற்கு வயது இருபத்தி ஒன்பதுதான்!

கார்த்திக் அந்தப் பள்ளியின் முதல்வர்! தலைமை முதல்வன்!

ஒன்றாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு என்று வரிசையாய் பனிரெண்டு வகுப்புகளையும் பொறுப்பாய் நிர்வகிக்க பனிரெண்டு பள்ளி முதல்வர்கள்!

அவர்களையெல்லாம் மேற்பார்வையிட்டு... பள்ளியைத் தரமுள்ளதாய் வைத்துக் கொள்ளும் தலைமை முதல்வன்தான், கார்த்திக்!

ஆசிரியை, ஆசிரியர்கள், முதல்வர்கள் அத்தனை பேரையும் தன் கண்ட்ரோலில் வைத்திருப்பவள்தான், சஞ்சனா.

பள்ளியின் தாளாளர் எப்போதாவதுதான் பள்ளியை மேற்பார்வையிடுவார்கள்!

ஆனால், சஞ்சனா முழு நேரமும் பள்ளியிலேயே இருப்பாள்!

வழிபாட்டுக் கூட்டம் முடிந்தது.

எட்டாம் வகுப்பிற்கு மேற்பட்டவர்களுக்கு மட்டும் தான் மைதானத்தில் வழிபாட்டுக் கூட்டம்!

மீதமுள்ள மாணவர்கள் வகுப்பறையிலேயே எழுந்து நின்று ஒலிபெருக்கியின் கட்டளைக்கேற்ப நாட்டுப்



பாடலையும், தேசிய கீதத்தையும் பாடிவிட்டு அமருவர்.

வகுப்பாசிரியர்கள் மேற்பார்வையிடுவார்கள்!

மைதானத்து மாணவர்கள் அமைதியோடு வகுப்பறைக்குச் சென்று அமர... முதல் வகுப்பு ஆரம்பமானது!

சஞ்சனா ஹாஸ்டலுக்குச் சென்றாள்.

உணவறையில் அவளுக்குக் காலை உணவு பரிமாறினார்கள்!

உணவு தொண்டைக்குள் இறங்கவில்லை!

அபாரமான சுவையுடன் இருந்தாலும்... அதனை சுவைக்க முடியவில்லை!

முதலாளியம்மா சாப்பிட்டுவிட்டு குறை கூறக் கூடாது என்று பார்த்துப் பார்த்து மொத்த உணவையும் சமைப்பார்கள்!

ஹாஸ்டல் உணவு போல் அல்லாமல்... வீட்டு உணவு போல தரமாய்... சத்து மிகுந்ததாய்... சுவையாய் இருப்பதால்... மாணவர்களும் நன்றாக உண்பார்கள்!

கவலையோடு ஹாஸ்டலில் விட்டுச் சென்ற பெற்றவர்கள்... மறுமுறை வந்து... தங்களின் குழந்தைகளைக் கண்ணுற்றவர்கள்... கவலை அகன்று செல்வார்கள்!

அங்குள்ள அத்தனை குழந்தைகளுக்கும் தாயாகி அன்பையும்... பாசத்தையும் குழைத்துக் குழைத்து ஊட்டுபவள், சஞ்சனா!

ஹாஸ்டல் குழந்தைகள் அனைவருக்கும் அம்மாவாகிப் போனவள், சஞ்சனா!

இரண்டு ஆண்டுகளாய் பத்து, பனிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வை அங்கே உள்ள மாணவர்கள் எழுதுகிறார்கள்!

நூறு சதவீதம் தேர்ச்சி... மாவட்டத்திற்கு முதல் மதிப்பெண்... என்று மாவட்டத்தின் நெம்பர் ஒன் பள்ளியாய் தரம் உயர்ந்து உள்ளது. 'சஞ்சனா மெட்ரிகுலேசன் பள்ளி!'

'ஒரு குழந்தையின் முதல் ஆசிரியை, தாய்!

இரண்டாவது தாய், ஆசிரியை!'

என்ற இலக்கணத்திற்குப் பொருத்தமாய் தன்னை அர்ப்பணித்து... கற்பிக்கும் ஆசிரியப் பெருமக்கள் இருக்கும் வரை சஞ்சனாவிற்குக் கவலையில்லை!

உணவை அப்படியே தட்டில் வைத்துவிட்டுப் போய்... கையைக் கழுவிக்கொள்ள...

''மேடம் உணவின் சுவை பிடிக்கலையா?'' என்று பயந்தவாறே சர்வண்ட் கேட்க...

''அதெல்லாம் இல்லை! சுவை அற்புதம்! என்னால் தான் சாப்பிட முடியவில்லை!''

''உடம்பு சரியில்லையாங்க, மேடம்?''

வேலையாள் பாசமாய்க் கேட்க...

''அதெல்லாம் இல்லை!'' என்று புன்னகைத்தாள்!

''உடம்பு சரியில்லைன்னால் ஆஸ்பிட்டலுக்குப் போங்க, மேடம்!'' என்று அக்கறையோடு கூற...

''உங்க அக்கறைக்கு ரொம்பவே நன்றிங்க! நான் வரேன்!'' என்று கிளம்பினாள்.



மேல்மட்ட ஊழியர்கள் முதற்கொண்டு கடைமட்ட ஊழியர்கள் வரை எல்லோரையும் சமமாய் பாவிப்பாள்! மதிப்பு கொடுப்பாள்! அன்போடு பேசுவாள்!

அவளின் இந்த குணத்திற்காகவே எல்லோரும் உண்மையாக உழைத்தனர்!

எல்லோர் வீட்டு விசேஷத்திலும் தவறாமல் போய் கலந்து கொள்வாள், சஞ்சனா!

அதனால், அவளை சாதாரண மனுஷியாய்ப் பார்க்காமல் தேவதையாய் எண்ணி பூஜிப்பார்கள்!

பள்ளியை ஒரு சுற்று சுற்றிவிட்டு... மீண்டும் தன்னறைக்குப் போய் அமர்ந்தாள்!

வேலையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள்!

அவளை காலையிலிருந்து ஆட்டிய சோக உணர்வு மெல்ல மெல்ல நீங்கியது!

அவளின் இறுக்கம் தளர்ந்தது!

கொஞ்ச நேரத்தில்...

அவளுடைய செல்போன் வீறிட்டது!

அவளை செல்போனில் அழைத்தது... அவளுடைய உயிர்த்தோழி, கௌஷிகா!

''சஞ்சனா... ஏய் சஞ்சனா... உடனே புறப்பட்டு வாடி!'' குரலில் பதற்றம் தெரிந்தது.

''ஏய் கௌஷிகா... என்ன ஆச்சு? என்ன செய்தி? எதுக்குப் புறப்பட்டு வரணும்? எங்கே புறப்பட்டு வரணும்?'' என்று சஞ்சனாவும் படபடப்பாய் கேட்க...

''ந.... நம்ம ச... சந்தோஷ்...'' என்று உளறினாள்.

''சந்தோஷ்...''

''சந்தோஷுக்கு...'' என்று மீண்டும் அவள் பதற்றத்தோடு வார்த்தை வராமல் தவிப்பது போனிலேயே தெரிந்தது.

''நம்ம சந்தோஷ்... திடீர்ன்னு மயங்கி விழுந்துட்டார்டி!''

''ஐய்யோ...''

சஞ்சனா வீறிட்டாள்.

''அவரை அள்ளிப் போட்டுட்டுப் போய் 'ஜெய் ஆஸ்பிட்டல்'ல சேர்த்திருக்கேன்!''

''கௌஷிகா... என்னடி சொல்றே?'' என்று சஞ்சனா அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல்... விம்மி வெடித்தாள்.

''ஐ.சி.யூல அனுமதிக்கப்பட்டிருக்கார்! டாக்டர் ஜெய் ட்ரீட்மெண்ட் கொடுத்துட்டு இருக்கார்!''

''கடவுளே...'' என்று கத்தினாள், சஞ்சனா.

''என்ன? ஏது?ன்னே டாக்டர்ஸ் சொல்ல மாட்டேங்கிறாங்க! உடனே நீ புறப்பட்டு வா சஞ்சனா!'' கௌஷிகா அழுகையோடு சொல்ல...

''வரேன்... வரேன்! உடனே வரேன், கௌஷிகா'' என்று போனை ஆப் செய்தாள்.

''சந்தோஷ்... சந்தோஷ்...'' என்று அவள் அழுகையோடு வெளியே வரவும்...

கார்த்திக் அவளைப் பார்க்க வரவும் சரியாய் இருந்தது.

''மேடம்... மேடம்... ஏன் அழறீங்க?'' என்று பயத்தோடு கேட்க...

''சந்தோஷ் திடீர்ன்னு மயங்கி விழுந்துட்டாராம்! ஜெய் ஆஸ்பிட்டல்ல ஐ.சி.யூல அனுமதிக்கப்பட்டிருக்கார், கார்த்திக்!''



''வாங்க போகலாம்!'' என்று கிளம்பி வேகமாய் நடக்க...

கார் டிரைவர் தயாராய் இருந்தான்.

இருவரும் ஏறி அமரவும்... கார் புறப்பட்டது.

சஞ்சனா முதுகு குலுங்கக் கதறி அழுதாள்.

''சார்க்கு ஒண்ணும் ஆகியிருக்காது! நீங்க அழாதீங்க, மேடம்! ப்ளீஸ் மேடம்! நீங்க எத்தனை உறுதியானவங்க! நீங்களே இப்படி சின்னப் பிள்ளையாட்டம் அழலாமா?

கலங்காதீங்க! சந்தோஷ் சாரோட நல்ல மனசுக்கு எதுவும் ஆகாது!...

டாக்டர் ஜெய் கல்லை நகரின் புகழ்பெற்ற மருத்துவர்! கைராசிக்காரர்! போற உயிரையும் திரும்பக் கொண்டு வர... கடவுளுக்கு இணையானவர்ன்னு தெரியும்தானே மேடம்?

அப்புறமும் அழுதா எப்படி மேடம்?

கட்டுப்படுத்துங்க, மேடம்! ப்ளீஸ் மேடம்!'' என்று கார்த்திக் கெஞ்ச...

அவள் கண்களைத் துடைத்து... மீண்டும் கன்னத்தில் சரம் கோர்த்த கண்ணீரை அடக்க பெரும்பாடுபட்டாள்.

ஆஸ்பிட்டல் வந்துவிட்டது.

காரை விட்டு இறங்கி... புயலாய் ஓடினாள், சஞ்சனா.

ஆஸ்பிட்டல் வராந்தாவில் கௌஷிகாவோடு அம்மா சத்தியவதியும்... அத்தை அபிராமியும் அழுது கொண்டு இருந்தனர்.

சஞ்சனா ஓடிப்போய் ஷோபாவில் அமர்ந்து வீறிட்டுக் கொண்டிருந்த அத்தையைக் கட்டிக் கொண்டாள்.

அத்தையின் அழுகை அதிகமாகி... மார்பிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதாள்!

அபிராமியிடம் இருந்து சஞ்சனாவைப் பிரித்துக் கொண்டு போய் எதிர் ஷோபாவில் அமர வைத்தாள், கௌஷிகா.

"கௌஷி... கௌஷி... என்டி இப்படியெல்லாம் நடக்குது?"

"சஞ்சனா... கட்டுப்படுத்து, சஞ்சனா!"

"முடியலையே... முடியலையே!"

"சந்தோஷுக்கு எதுவும் ஆகாது! ப்ளீஸ்..." என்று கண்ணீரோடு கெஞ்சினாள், கௌஷிகா.

சஞ்சனா அழுத களைப்பில் சோர்ந்து... மடிந்து... கௌஷிகாவின் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டாள்!

சந்தோஷ்... அவளுடைய சொந்த அத்தை மகன்!

அத்தை அபிராமி... அப்பா ஆதவனின் செல்லமான ஒரே சகோதரி!

சஞ்சனா அந்தப் பள்ளியை நிறுவ துணையிருந்தவன், சந்தோஷ்!

சந்தோஷ்... கள்ளக் குறிச்சியின் மையப்பகுதியில் பெரிய கம்ப்யூட்டர் சென்டரை உருவாக்கி நிர்வகித்துக் கொண்டிருக்கிறான்!

அந்தக் கட்டிடத்தின் ஒரு பகுதியில் மாணவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறது!

அடுத்ததாய், மறுபுறம் பிரம்மாண்டமான கம்ப்யூட்டர் விற்பனையகமும்...



அடுத்ததாய், கம்ப்யூட்டரை பழுது பார்க்கும் சர்வீஸ் சென்டரும்...

அடுத்ததாய் கம்பெனிகளுக்கு டேட்டா தயாரித்துக் கொடுத்தலும் என பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருக்கிறது. 'சந்தோஷ் கம்ப்யூட்டர் சென்டர்.'

நான்கு பிரிவுகளிலும் வேலையாட்களை நியமித்து... பொறுப்புடன் பார்த்துக் கொண்டான், சந்தோஷ்!

தொழிலில் நல்ல லாபம்!

அடுத்ததாய் விழுப்புரம் நகரில் இது போல கம்பெனியை ஆரம்பிக்க அடித்தளம் போட்டிருக்கிறான், சந்தோஷ்!

சந்தோஷ் கம்ப்யூட்டர் படிப்பில் முதுகலைப் பட்டம் பெற்றவன்!

கௌஷிகாவும் அந்தக் கல்வியே கற்றிருக்க... சந்தோஷ் கம்பெனியில் மேனேஜராய் பணிபுரிகிறாள்!

சந்தோஷ், சஞ்சனா, கௌஷிகா மூவரும் நண்பர்கள்!

சந்தோஷும், சஞ்சனாவும் பிரிக்க முடியாத கலவைகளாய் வாழ்ந்தவர்கள்!

ஒருவரிடம் ஒருவர் இதயத்தைத் தொலைத்துவிட்டு... அவன் இதயத்தில் அவளும்... அவள் இதயத்தில் அவனும் என்று வாடகை எதுவும் கொடுக்காமலேயே வாழ்ந்தவர்கள்!

கனவுகளில் கைக்கோர்த்து...

கற்பனையில் சண்டையிட்டு...

ஒருவர் மீது ஒருவர் உரிமையுடன் கோபித்துக் கொள்வதும்...

பின்னர் சமாதானமாவதும்...

அவள் அழுதால் அவன் அழுதும்...

அவன் சிரித்தால் அவள் சிரித்தும்...

ஒருவரை ஒருவர் மறக்காமல் எந்த நேரமும்... அவன் நினைவுகளோடு அவளும்... அவள் நினைவுகளோடு அவனுமாய் சுற்றித் திரிந்தவர்கள்!

ஒருவருக்கு ஒருவர் சளைக்காமல்... விட்டுக் கொடுக்காமல்... உயிராய்... உணர்வாய்... சுவாசமாய்... நேசத்தை சுவாசித்தவர்கள்!

அழியாத அன்பை பரிமாறிக் கொண்டவர்கள்!

கடவுளால் கூட நம்மைப் பிரிக்க முடியாது என்று ஈருடலும்.. ஓருயிருமாய் வாழ்ந்தவர்கள்!

காதலையே சுவாசமாய் எண்ணி வாழ்ந்தவர்கள்!

காதலையே உண்டு, உயிர்ப்பித்து வாழ்ந்தவர்கள்!

உருகி உருகி... மருகி மருகி... காதலித்த அற்புதமான காதலர்கள்!

அப்போது அவள்... அவனுக்கு 'அவன் சஞ்சனா?'

அப்போது அவன்... அவளுக்கு 'அவள் சந்தோஷ்'

இப்போது...?

சஞ்சனாவின் கண்ணீர் வழியும் கண்களில் அவளுடைய இளமைப் பருவம்... ஞாபகப் பெட்டகத்தில்... காட்சியாய் ஓடி கண்ணாமூச்சு காட்டியது!



## 2

நாகராஜன் - அபிராமி தம்பதியருக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது!



அவன்தான் சந்தோஷ்!

இரண்டு வருடம் கழித்து... ஆதவன் - சத்தியவதி தம்பதியருக்கு... ரோஜாக்குவியலாய்... அழகாய்... சந்தன சிற்பமாய்... தங்கக் கட்டியாய்... பெண் குழந்தை பிறந்தது!

ஆதவனுக்கும், அபிராமிக்கும் பத்து வயது வித்தியாசம்!

இருவருக்கும் சிறு வயதிலேயே தாய் இறந்து விட்டாள்!

தாய்க்கு தாயாகவும்... சகோதரிக்கு சகோதரியாகவும் ஆதவனைக் கண்ணும், கருத்துமாய் வளர்த்தது, அபிராமிதான்!

அவனுக்குப் பத்து வயதும்... அவளுக்கு இருபது வயதும் இருக்கும்போது... தந்தையும் தவறிவிட.... எல்லாமாகிப் போனவள், அபிராமி!

கள்ளக்குறிச்சி - கச்சிராயபாளையம் நெடுஞ்சாலையில் சுமார் எட்டு கி.மீ. தூரத்தில் உள்ளது, 'பூஞ்சோலை கிராமம்'!

மதிப்பும், மரியாதையுமான குடும்பம் ஆதவனுடையது!

அந்த கிராமத்தில் ஐம்பது ஏக்கருக்கு மேல் விவசாய நிலமிருந்தது!

அதை இருபது வயது அபிராமியால் நிர்வகிக்க முடியாமல் போக... அந்த சமயம் எங்கிருந்தோ அநாதையாய்... அவளிடம் வேலை கேட்டு வந்தவர்தான், நாகராஜன்.

அபிராமிக்கு நாகராஜனைப் பிடித்துப்போக... வேலைக்காரனாய் இருந்த நாகராஜனை... ஆதவனின் சம்மதத்தோடு... மணந்து... மன்னவனாக்கிக் கொண்டாள்.

நீண்ட நாட்கள் குழந்தை பேறு இல்லாமல்... மலடியாய் இருந்தவளின் வாழ்க்கையை மலர வைத்தவன் தான், சந்தோஷ்!

ஆதவனுக்கும் திருமணமாகி இரண்டாண்டுகளில் பிறந்தவள் தான், சஞ்சனா!

குழந்தையைப் பார்த்து அத்தனை பேரும் மகிழ்ந்து போனார்கள்!

''அக்கா... குழந்தை அப்படியே நம் அம்மாவின் சாயலில் இருக்காள்! இந்த வைரக்குட்டிக்கு என்ன பெயர் வைக்கலாம்?''

அபிராமி யோசிக்க...

''நம்மையெல்லாம் மகிழ்ச்சியில் ஆழ்த்த வந்ததால்... இந்த பட்டுக்குட்டிக்கு மகாலஷ்மி என்று நம் தாயின் பெயரை வைக்கலாமா?''

ஆதவன் அக்காவைப் பார்த்து ஆசையாசையாய் கேட்க...

''ச்சே... உனக்கு வேற பேரே கிடைக்கலையா, ஆதவா? சரியான கிராமம், நாட்டுப்புறம் என்பதை நிரூபிக்கிறாயா? ச்சே... உன் ரசனையும்... மண்ணும் சகிக்கலேடா!''

அபிராமி முகம் சுளித்தாள்.

''அப்போ உன் மருமகளுக்கு என்ன பேர் வைக்கலாம்?''

ஆதவன் அக்காவின் முகம் பார்த்துக் கேட்க...

''நல்ல புது பேரா வைக்கணும்! நாகரீகமான பேரா வைக்கணும்!''

''புதுப்பேரா? உனக்குத் தெரிந்தால் சொல்லேன்! உன் மருமகளுக்கு... உனக்குப் பிடிச்ச பேரையே சூட்டிடலாம்!''

''என் மருமகளுக்கு நான் பேர் வைக்காமல் பின்னே யார் வைப்பது? ம்? சந்தோஷுக்கு ஏத்தப் பேராதான்



வைக்கணும்! அப்போதானே பின்னாடி ரெண்டு பேருக்கும் கல்யாணம்ன்னு வரும்போது... பேர் பொருத்தம் சரியில்லைன்னு... ஜோசியக்காரன் சொல்லமாட்டான்!

சந்தோஷ் என்ற பேருக்கு பொருத்தமா... சஞ்சனான்னு வைக்கலாமா? 'சந்தோஷ் - சஞ்சனா' பேர் பொருத்தம் கனகச்சிதம், இல்ல? 'சஞ்சனா'ங்கிற பேர் உனக்குப் பிடிச்சிருக்கா, ஆதவா?''

அபிராமி ஒரு சினிமா பைத்தியம்!

ஒரு படம் கூடப் பார்க்காமல் விடமாட்டாள்!

சமீபமாய் பார்த்த... சினிமாவின் நாயகி பெயர், சஞ்சனா! அதுவே பிடித்தும் போக... சந்தோஷ் என்ற பேருக்கும் பொருத்தமாய் இருக்க... தன் மருமகளுக்கு இந்தப் பெயரை சூட்டி வாய்நிறைய அழைக்க விரும்பினாள்!

''என்னடா யோசிக்கிறே? பிடிச்சிருக்கா? இல்லையா, ஆதவா? சஞ்சனாங்கிற பேர் எவ்வளவு நல்ல பெயர்...!

சஞ்சனா... சஞ்சு... சஞ்சம்மா... சஞ்சனாம்மா... என்று எப்படிக் கூப்பிட்டாலும் தித்திக்குது, இல்லையா?''

ஆதவனுக்கும் இந்தப் பெயர் பிடித்திருந்தது!

''ஆமாக்கா! நல்ல பெயர்தான்! நம்ம மாப்பிள்ளைக்குப் பொருத்தமான பெயர்தான்! பெயர் ரொம்ப அருமைக்கா! சஞ்சனான்னே குழந்தைக்குப் பெயர் சூட்டிடலாம்!''

''ரொம்ப சந்தோஷம், ஆதவா! நன்றிடா, ஆதவா!''

''எதுக்குக்கா நன்றி?''

''எனக்குப் பிடிச்ச பேரை... என் மருமகளுக்கு சூட்டி அழகு பார்க்க அனுமதி அளிச்சதுக்கு!''

''உன் விருப்பத்துக்கு மாறா... நான் என்னைக்கு அக்கா நடந்திருக்கேன்? ம்?''

ஆதவன் அன்போடு கேட்க... அபிராமி கர்வத்தோடு புன்னகைத்தாள்!

அபிராமிக்கு தம்பி மனைவி சத்தியவதியை அவ்வள வாய் பிடிக்காது!

காரணம்?

தம்பியின் அன்பை, பாசத்தை பங்கு போட்டுக் கொள்ள வந்தவள் என்று ஆத்திரம்!

அபிராமி, ஆதவன் குடும்பம் இரண்டும் பிரியாமல் நாள் முழுக்க ஒன்றாய் சமைத்துச் சாப்பிடுவார்கள்!

இரவு மட்டும்... எதிரில் உள்ள பெரிய பங்களாவில் போய் படுத்துக் கொள்வார்கள், அபிராமி, நாகராஜன் தம்பதியினர்.

சத்தியவதி ஆதவனை மணந்து வந்த பின்னர் ஒரு வேலையும் செய்ய மாட்டாள், அபிராமி!

சத்தியவதிக்கு வேலை மேல் வேலையாய் வைப்பாள்!

பிடித்தமான உணவு வகையைக் கூறி... உடனே செய்துத் தரச் சொல்லி ஏவுவாள்!

மொத்தத்தில் அங்கே அபிராமியின் ஆட்சிதான் நடந்தது!

சஞ்சனா பிறந்த ஒரு வருடத்தில் அபிராமிக்கு ஒரே பிரசவத்தில் இரட்டையாய் இரு பெண் குழந்தைகள் பிறந்தது!

லதா, சுதா எனப் பெயரிட்டு மகிழ்ந்தாள், அபிராமி!

சஞ்சனா இருக்குமிடத்தில்தான் சந்தோஷ் இருப்பான்!

சஞ்சனா உண்ணாமல் சந்தோஷ் உண்ணவே மாட்டான்!



சஞ்சனா சிரித்தால் சந்தோஷும் சிரித்து... சஞ்சனா அழுதால் சந்தோஷும் அழுது... என்று குழந்தைமி லிருந்து அன்புடன் வளர்ந்தனர்!

சந்தோஷ் தன் தங்கைகள் மேல்கூட அந்த அளவு பாச மாகவும், அன்பாகவும், உயிராகவும் இருக்க மாட்டான்!

ஆனால், சஞ்சனா இல்லாமல் ஒரு நிமிடம் கூடப் பிரிந்து இருக்கவே மாட்டான்!

'உன் முறைப் பொண்ணு!'

"உன்னைக் கட்டிக்கப் போறவள்!"

"உன் பொண்டாட்டிடா, சந்தோஷ்!"

"சந்தோஷ்... சஞ்சனாவை கண்கலங்காமல் பார்த்துக்க வேண்டிய பொறுப்பு, உன்னுடையது!"

அந்த பூஞ்சோலை கிராமத்தில் உள்ள சொந்த பந்தங் கள்... பால பருவத்தில் போதித்த போதனைகள் அத்தனை யும்... அவனுக்குப் புரியாமல் போனாலும்... 'சஞ்சனா தனக்கு சொந்தமானவள்! தன்னுடன் சேர்ந்து சாப்பிட, விளையாடப் பிறந்தவள்! சஞ்சனாவைப் பிரியாமல் இருக்க வேண்டும்! அழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று அப்போதே அவனுடைய ஒவ்வொரு அணுவிலும்... நரம்பிலும் ரத்தத்திலும் ஊறிவிட்டது!

ஐந்து வயது நிறைவடைந்ததும் சந்தோஷைக் கொண்டு போய்... அந்த கிராமத்தில் இருந்த ஆரம்பப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பு சேர்த்தனர்!

'சஞ்சனா இல்லாமல் பள்ளிக்குப் போகமாட்டேன்'... என்று மறுநாள் முதற்கொண்டு அழுது அடம் பிடித்தான், சந்தோஷ்!

அபிராமி அவன் அழுவதைச் சட்டை செய்யாமல் அடித்து இழுத்துக் கொண்டு போய் பள்ளியில் விட்டு விட்டு வந்தாள்!

சில சொந்த பந்தங்களின் விசாரிப்புகளுக்கு பதில் சொல்லிவிட்டு... அபிராமி வீடு திரும்பும் முன்னர்... சந்தோஷ் பள்ளியிலிருந்து ஆசிரியருக்கு தெரியாமல் புறப்பட்டு குறுக்கு வழியில் புகுந்து வீட்டிற்கு ஓடிவந்து விடுவான்!

தினம் தினம் இதுவே தொடர்ந்தது!

ஒருநாள் குடுகூட வைத்துப் பார்த்துவிட்டாள், அபிராமி!

ஆனால் சந்தோஷ் அசையவில்லை!

'சஞ்சனா இல்லாமல் பள்ளிக்குப் போகமாட்டேன்' என்று அவனின் அடம் அதிகமாக... அபிராமியும், நாகராஜனும் அவனை அவன் போக்குக்கே விட்டுவிட்டனர்.

சாரதாவின் வயிற்றில் சஞ்சனா பிறந்த பின்பு... மீண்டும் உண்டாகாமலேயே ஒற்றைப் பிள்ளையோடு இருந்தாள், சத்தியவதி!

ஆதவன், சத்தியவதி தம்பதியினருக்கு ஆண் பிள்ளை மேல் ஆசையே இல்லாமல் போனது!

சந்தோஷையே அந்த இரு குடும்பத்தின் வாரிசாய் நினைத்தனர்!

அபிராமியிடம் சஞ்சனாவையும் விட்டு விட்டு... சத்தியவதி, தங்கள் பண்ணையின் மேற்பார்வைக்கு சில நாட்களில் கிளம்பி விடுவாள்!

மேற்பார்வையிடுதல் இரண்டாம் பட்சம்தான்! முதல் காரணம்... அபிராமியிடம் இருந்து தப்பிக்க சத்தியவதி காடு, கழனிக்குச் சென்று விடுவாள்!



பூஞ்சோலை கிராமத்தில்... பெரும்பாலான நிலங்களில் ரோஜா, மல்லிகை, முல்லை, ஜாதிமல்லிகை, கனகாம்பரம் என்றுதான் விளையும்!

திருச்சி, விழுப்புரம், விருத்தாசலம், திருவண்ணாமலை, வேலூர் போன்ற முக்கிய நகரங்களுக்கெல்லாம் இந்த கிராமத்திலிருந்துதான் மலர்கள் ஏற்றுமதியாகிறது!

கிராமத்தைச் சுற்றி எழில் கொஞ்சும் மலர் செடிகள் இருப்பதால்... கிராமமே மணத்துடன் இருக்கும்!

ஆதவனும் தன்னுடைய வயலில் எல்லா வகையான மலர்களையும்... முப்பது ஏக்கருக்கு மேல் பயிரிடுகிறார்!

பூக்கள் உற்பத்தியில் நல்ல லாபம்!

லாபங்கள் அத்தனையும் மீண்டும் மீண்டும் நிலமாய் பெருகிக் கொண்டிருக்கிறது!

நிலத்தை விற்க விரும்புபவர்கள் அத்தனை பேரும் ஆதவன் முன்பே வந்து நிற்பார்கள்!

ஆதவன்தான் அந்த சுற்று வட்டத்து மனிதர்களில் சரியான தொகையை நிர்ணயம் செய்து வழங்குபவர்! மற்றவர்களிடம் போய் யாரும் ஏமாற விரும்பாததால் அவரிடமே நிலத்தை விற்பதற்கு விரும்புவர்!

மற்ற நிலங்களில் வாழையும், தென்னையும், கமுகும், கரும்பும், நெல்லும் விளைந்து அவர்களின் விவசாய நிலமே ரம்யமாய் காட்சி தரும்.

வற்றாத நீர் உள்ள ஏழெட்டு கிணறுகள்!

நவீன முறை விவசாயம்!

அக்கா கணவரின் ஒத்துழைப்பு என்று எல்லாமும் இருக்க... இப்போது அவர்களுக்கு நூறு ஏக்கருக்கு மேல் விவசாய நிலமிருக்கிறது!

சஞ்சனாவிற்கு ஐந்து வயது பூர்த்தியானதும் அவளையும், சந்தோஷையும் கொண்டு போய் பள்ளியில் சேர்த்தனர்!

இருவரும் ஒழுங்காய் பள்ளிக்குச் சென்றனர்!

சந்தோஷைவிட சஞ்சனா படிப்பில் கொஞ்சம் குறைச்சல்தான்! சந்தோஷ் கற்பூரமாய் பத்திக் கொள்ளுவான்!

வகுப்பில் அவன்தான் முதல் மதிப்பெண் பெறுவான்!

சஞ்சனா இரண்டாம் மதிப்பெண் பெறுவாள்!

இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு படிக்கும் காலத்தில்... இரண்டாம் மதிப்பெண் பெறுவதற்காய் சஞ்சனா முகம் சோர்ந்து போவதைக் கண்ட சந்தோஷ்... ஏதாவது ஒரு பாடத்தில் பரிட்சையை சரியாக எழுதாமல் வந்து விடுவான்!

அதன் காரணமாய் அவன் இரண்டாம் இடத்திற்கு வர... சஞ்சனா முதலிடத்திற்கு வந்து குதூகலிப்பாள்!

அந்த சந்தோசம்... சந்தோஷுக்கு ரொம்பவே பிடித்திருந்தது!

அவளுக்காக முதல் இடத்தை விட்டுக் கொடுப்பதும் மிக மிகப் பிடித்திருந்தது!

சஞ்சனாவிற்கு கணக்கு சரியாய் வராது!

சந்தோஷ் சூப்பராய் கணக்குகளைச் செய்வான்!

சஞ்சனாவுக்குப் புரியாத கணக்குகளைப் பொறுப்பாய் சொல்லிக் கொடுப்பான்!

ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்கு சஞ்சனாவுக்கு விடை தெரியாமல் போனால்...



"நான் சொல்றேன், சார்! எங்க சஞ்சனாவை அடிக்காதீங்க, சார்! ப்ளீஸ் சார்..." என்று கெஞ்சுவான்!

நான்காம் வகுப்புப் படிக்கும் காலத்தில்...

பள்ளிக்கு தடுப்பூசி போடுவதற்கு மருத்துவர்களும், செவிலியர்களுமாய் ஒரு குழு வந்தது!

அதனைக் கண்ட சந்தோஷ்... சஞ்சனா, கௌஷிகா, இன்னும் பிற நண்பர்களை அழைத்துக் கொண்டு... ஆசிரியர்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரியாமல் பையை பள்ளியிலேயே போட்டுவிட்டு... சின்னக் காம்பவுண்ட் சுவர் ஏறி, குதித்து ஓட்டம் பிடித்தார்கள்!

நாள் முழுக்க ஏரி, ஆறு, காடு, கழனி என்று சுற்றித் திரிந்து விட்டு மாலை வீடு போனார்கள்!

ஏற்கனவே பள்ளியின் பியூன் மூலம் தலைமையாசிரியர் அபிராமிக்கு செய்தியைச் சொல்லி அனுப்பி விட்டார்!

அபிராமியும் பெரிய பிரம்போடு காத்திருந்தாள்!

சந்தோஷ், சஞ்சனாவைக் கண்டதும்... பிரம்பால் இருவரையும் மாறி மாறி அடித்தாள்!

சஞ்சனா தாங்க முடியாமல் துள்ளினாள்!

நாளெல்லாம் வெயிலில் சுற்றிய அலுப்பு... மதியம் சாப்பிடாத பசி... அத்தையின் ஆவேசமான பிரம்படியைத் தாங்க முடியாத சஞ்சனா...

"வேணாம், அத்தை! அடிக்காதீங்க, அத்தை! வலிக்குது, அத்தை!" என்று வீறிட்டழுதாள்!

அவளின் அழுகையை தாங்க முடியாத சந்தோஷ்...

"அம்மா... அவளை அடிக்காதீங்க! விடுங்க!" என்று சஞ்சனாவின் முன்பு பாய்ந்து... இரு கைகளையும் நீட்டித் தடுத்தான்.

''அவளுக்கு நீ வக்காலத்து! உனக்கு அவள் வக்காலத்தா? தள்ளுடா!'' என்று ஆவேசமாய் பிரம்பை நோங்க...''

சந்தோஷ்... அபிராமியின் கையில் இருந்த பிரம்பைப் பிடுங்கிக் கொண்டான்!

''அம்மா... அவள் மேல் தப்பில்லே! தப்பெல்லாம் என் மேல்தான்! ஊசிப்போட்டால் சஞ்சனாவுக்கு வலிக்கும் என்றுதான் நான் அவளை அழைத்துப் போனேன்! தப்பு செய்த என்னை எவ்வளவு வேண்டுமானாலும் அடியுங்க! கொல்லுங்க! அவளை எதுவும் செய்யாதீங்கம்மா!...

சஞ்சு மதியமே பசி தாங்காமல் அழுதாள்! கிழங்கும், கரும்பையும் சாப்பிடக் கொடுக்க... அவள் சாப்பிடவே இல்லை! அவளுக்கு முதல்ல சாப்பிட ஏதாவது கொடுங்கம்மா!''

சந்தோஷ் சொல்லிவிட்டு அழுதான்.

''அறிவு கெட்ட முண்டம்! தடுப்பூசி போட்டாத்தான் ரெண்டு பேரும் நோய், நொடி இல்லாமல் ரொம்ப நாள் வாழலாம்!

இதுகூடத் தெரியாத பசங்களா இருக்கீங்களே! யாராவது கெடுதிக்கு இப்படி ஊசிப்போட வருவாங்களா?

அங்க வந்த டாக்டருங்க எல்லாம் எவ்வளவு படிச்சவங்க, தெரியுமா? நாளைக்கு நீயும், சஞ்சு குட்டியும்... டாக்டருக்குப் படிச்சி, முடிச்சிட்டு வந்து... அம்மாவுக்கு உடம்பு சரியில்லாமல் போனால் ஊசிப் போடப் போறீங்களே! நீங்களே இப்படி ஊசிக்குப் பயந்து ஓடலாமா?...

தனியார் ஆஸ்பத்திரிக்குப் போனால், நூறு இருநூறுன்னு கொடுத்தாதான் இதுபோல தடுப்பூசிகளைப்



போடுவான்! மடையா... கவர்ன்மெண்ட்காரன் போடும் போதே போட்டுக்கணும். புரியுதா?

இனி இதுபோல பள்ளிக்கு ஊசிபோட டாக்டருங்க வந்தால்... போட்டுக்காமல் ஏமாத்திட்டு ஓடக்கூடாது! என்ன?'' அபிராமி ஆத்திரத்தோடு கேட்க..

''சரிம்மா!'' என்றான் சந்தோஷ்.

''நீயும், சஞ்சனாவும் ரொம்ப நாள் உயிரோட இருக்கணும்தானே?''

''ஆமா!''

''அப்படின்னா ஊசிப் போட்டுக்கணும்!''

''சரிம்மா!''

''ஏமாத்த மாட்டியே?''

''ம்கூம்!''

''ஏமாத்தினே இன்னொரு முறை... சூட்டுக் கோலை அடுப்புல வச்சி... கால்லயே இழுத்துடுவேன்! அதுவும் உன் கால்ல இல்ல... இதோ இவளோட கால்ல சூடு வச்சிடுவேன்!''

அபிராமி மிரட்ட... சந்தோஷ் அலறினான்.

''ஐய்யோ வேணாம்மா... அப்படியெல்லாம் என் சஞ்சுவுக்கு சூடு வைக்காதம்மா!''

''அப்படியெல்லாம் நான் செய்யாமல் இருக்கணும்னா... தடுப்பூசி போட வந்தால் போட்டுக்கணும்! பசங்களை இழுத்துட்டுப் பள்ளிக்கூடத்தை விட்டு ஓடக்கூடாது!''

''நிச்சயமா ஓடமாட்டேம்மா!'' சந்தோஷ் சொல்ல...

''ஏய் குட்டி... இங்க வாடி செல்லம்!'' என்று அபிராமி மருமகளைப் பார்த்து ஆசையாசையாய் கைநீட்டி அழைக்க...

சஞ்சனா சின்ன விழிகளை உருட்டி... பயத்துடன் பின் வாங்க...

"அத்தை அடிக்கமாட்டேன்டி, ராசாத்தி! வாடி என் கண்ணே!" என்று அன்பு மேலிட அழைக்க...

"நான் வரமாட்டேன் போ! நீ கெட்ட அத்தை! நீ வலிக்க வலிக்க அடிக்கும் அத்தை!"

சஞ்சனா சொல்லிவிட்டு... சின்ன செப்பு உதட்டைப் பிதுக்கி அழ...

அபிராமி தாங்க முடியாமல்... சஞ்சனாவை இழுத்து இறுக்கிக் கொண்டாள்.

தட்டில் சாதம் போட்டு... இருவருக்கும் ஊட்ட... சஞ்சனா 'உண்ணமாட்டேன்' என்று அடம் பிடித்தாள்.

"சஞ்சு குட்டி... நான் குடுத்தா சாப்பிடுவே தானே?" என்று சந்தோஷ் கேட்டு... அவளின் கண்ணீர் வழியும் கண்களைத் துடைக்க...

"ம்..." என்று சஞ்சனா வாயைத் திறக்க.

இருவரையும் தனியே விட்டு விட்டு... லதா, சுதா எங்கிருக்கின்றனர் எனத் தேடி அபிராமி அவ்விடம் விட்டு நகர்ந்தாள்.

இனி அவளை சந்தோஷ் உண்ண வைப்பான்... உறங்க வைப்பான் என்று அவளுக்கு நன்றாகத் தெரியும்!

சஞ்சனாவும் சந்தோஷின் பேச்சைத்தான் கேட்பாள் என்று தெரியும்!

அவள் அவனுக்கு சாதத்தை ஊட்ட... அவன் அவளுக்கு ஊட்ட... கொஞ்ச நேரத்திற்கு முன் அபிராமி அடித்த அடியின் வலி அவர்களிடமிருந்து விலகிப் போனது!

* * *



ஒரு நாள்...

ஒரு மாணவன் அழகான பையைப் பள்ளிக்கு எடுத்து வந்தான்!

அதன் அழகில் லயித்து... அதனைப் பார்க்க இருவரும் போட்டி போட்டுக் கொண்டு... 'நான் தான் முதலில் பார்ப்பேன்!' என்று... பையை அந்தப் புறமும் இந்தப் புறமும் சந்தோஷும், சஞ்சனாவும் இழுக்க...

பை பிய்ந்துப் போனது!

ஆசிரியர் சந்தோஷையும், சஞ்சனாவையும் நிற்க வைத்து... பெரிய பிரம்புத் தடியால் விளாசிவிட்டார்!

பின்னர் மைதானத்தில் போய்... மணற்பரப்பில் முட்டிப் போடச் சொன்னார்!

காலையிலேயே மண்டையைப் பிளக்கும் வெயில் அடித்தது.

தரையும் சுட... தலையும் சுட தாங்க முடியவில்லை, இருவராலும்!

ஆசிரியர் கையிலும் தலையிலும் அடித்தது வேறு விண்விண்ணென்று வலித்தது!

சஞ்சனாவிற்கு கையெல்லாம் சிவந்து விட்டது!

சந்தோஷிடம் கோபித்துக் கொண்டு வேறுபுறம் திரும்பிக் கொண்டாள்!

சில மாணவ, மாணவிகள் காலை இடைவேளையின்போது அருகே வந்து கேலி செய்தது... அவளுக்கு அவமானமாய் இருந்தது.

அவள் கண்ணீரைக் கண்டு... அவனுக்கும் கண்ணீர் வந்தது!

நெஞ்சு பதறியது!

"ஸாரி... ஸாரி... சஞ்சம்மா!" என்று சொன்னான்.

"இனி நான் உன்கிட்டப் பேசமாட்டேன், போ!" என்று அவள் தேம்பித் தேம்பி அழ...

சந்தோஷ் எழுந்து ஆசிரியரிடம் ஓடினான்.

"சார்... சஞ்சனா மேல எந்தத் தப்பும் இல்ல, சார்! கண்ணன் பையைப் பிய்த்தது நான்தான், சார்! நிஜம் சார்! சஞ்சனாவை விட்டுடுங்க சார்!" அழுதான்.

"சஞ்சனாவைத் தண்டிக்காதீங்க, சார்! சஞ்சனாவால் இதுபோல தண்டனையெல்லாம் தாங்க முடியாது, சார்! சஞ்சனாவை நாங்க பூப்போல வச்சிக்குவோம்! அவள் எங்க வீட்டு செல்லகுட்டி, சார்!"

சந்தோஷின் அழுகை ஆசிரியரின் மனதைக் கரைக்க... இருவரையும் வகுப்பிற்கு அழைத்தார்.

சஞ்சனாவிற்கு இரவெல்லாம் காய்ச்சல் பாடாய் படுத்தி விட்டது!

சத்தியவதி உள்ளூர் நர்சிடம் சென்று மாத்திரை வாங்கி வந்து போட்டுப் படுக்க வைத்தாள்! தூக்கத்தில் எழுந்து எழுந்து திடீர் திடீர் என சஞ்சனா கத்தினாள்.

சந்தோஷின் கை, கால், முதுகில்... பிரம்பால் அடித்த தன் அடையாளமாய்.. பட்டை பட்டையாய் சிவந்து, வீங்கி விட்டது!

அபிராமி ஆயின்ட்மெண்ட்டை தடவி விட்டுத் தூங்க வைத்தாள்.

மறுநாள் ஆத்திரத்தோடு பள்ளிக்குச் சென்று விட்டாள்.

"ஏய்யா வாத்தி... உனக்கு கொஞ்சமாச்சும் அறி விருக்கா...? பையைப் பிய்ச்சிட்டாங்கன்னு ரெண்டு



இளம் குருத்தையும்... சக்கையா அடிச்சி... வெய்யில்ல முட்டிப் போட வச்சிருக்கீயே!...

என் மருமகள் காய்ச்சல் கண்டு படுத்துட்டா! என் மகனுக்கு கை, கால், முதுகெல்லாம் பட்டை பட்டையா சிவந்து, வீங்கிப் போச்சு!...

எவ்வளவு பெறும் அந்த பை? அதை என்கிட்ட சொல்லியிருந்தால்... ரெண்டு பங்கு விலைப் போட்டு... அதைவிட ஒஸ்தியான பையை வாங்கிக் கொடுத்திருப் பேனே!...

அந்தக் கால் காசு பெறாத பைக்காக... சின்னக் குழந்தை களைப் போட்டு மாட்டை அடிக்கறாப்போல அடிச் சிருக்கீயே!...

உனக்கெல்லாம் மனுஷத் தன்மையே இல்லையா? மனசாட்சியை அடகு வச்சிட்டு வாழறியா?

நீ என்ன புது வாத்தியா?

எங்க செல்வாக்குத் தெரியாதா, உனக்கு? நாளைக்கே பெரிய ஆபீஸரைப் பார்த்து... உன்னை இந்த ஊரை விட்டே தூக்கிடுவேன்!... இந்த அபிராமியைப் பற்றி தெரியாமல்... எங்க பிள்ளைங்க மேல கை வச்சுட்டே! உன் கையை வெட்டறேன், பாருய்யா!" என்று ஆவேச மாய் சத்தம் போட்டாள்.

சத்தம் கேட்டு தலைமையாசிரியர் ஓடி வந்தார்.

"யோவ் ஹெட்மாஸ்டரு... பையன் யாரு? ஊருக்குப் புதுசா? நீ எங்கேய்யா போனே? இப்படி அடிச்சி நொறுக்கி யிருக்கானே! வேடிக்கைப் பார்த்துட்டு இருந்தீயா?"

"அபிராமி அம்மா... நான் நேற்று லீவும்மா! ஆபீஸ் விஷயமா வெளியே போயிருந்தேன்! எனக்கு எதுவும்

தெரியாது! காலையில் வந்ததும்... உமா சொன்னாங்க! உடனே இவரைக் கூப்பிட்டுக் கண்டிச்சி வச்சிருக்கேன்!

இனி இதுபோல தவறு நேராமல் பார்த்துக்கிறேம்மா! ஆதவன்கிட்ட நான் மன்னிப்பு கேட்டேன்னு சொல்லுங் கம்மா!''

தலைமையாசிரியர் பயத்தோடு பணிவுடன் கூற...

''சொல்லி வை, இந்த அபிராமியைப் பத்தி! அப்புறமா விபரீதமா போயிடப் போகுது!

யோவ் வாத்தியாரே... என் மகன் மேலேயோ... என் மருமகள் மேலேயோ கையை வச்சே... நீ அப்புறம் தொலைஞ்சிடுவே!''

கத்திவிட்டு அபிராமி வெளியேறினாள்.

''நல்லா படிக்கற பசங்களைப் போட்டு அடிச்சி வச்சிருக்கான்!'' என்று வீதியில் சொல்லிக் கொண்டே போனாள்!

தலைமையாசிரியர் அந்தப் புதிய ஆசிரியரை அழைத்து... மீண்டும் புத்தி சொன்னார்.

''அவங்க இல்லேன்னால் நம்ம பள்ளிக்கூடத்து காம்பவுண்ட் சுவர் இருக்காது! அவங்க தன் சொந்தக் காசைப் போட்டு கட்டிக் கொடுத்ததுதான்... வெளிப்புற மதிற்சுவர்! அப்புறம் மாணவர்களுக்கான கழிப்பிட வசதி... தண்ணீர் வசதி எல்லாம் அவங்க ஏற்படுத்திக் கொடுத்தவைகள்தான்!

ஆதவன்... நம்ம பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் தலைவர்! அவர் பிள்ளைகளைப் போய் இப்படிப் போட்டு அடிச்சிருக்கீங்களே! ரெண்டு பேரும் நல்ல பிள்ளைகள்! அருமையா படிப்பாங்க! போகப்போக



அவங்களைப் பற்றி அறிந்து கொள்வீர்கள், மிஸ்டர்!'' என்று தலைமையாசிரியர் கூறி அனுப்பி வைத்தார்.

பின்னர் சந்தோஷ், சஞ்சனாவைப் பற்றித் தெரிந்து கொண்ட ஆசிரியர் உண்மையாக மன்னிப்புக் கேட்க... அதன் பிறகு அவர்களிடையே வலுவான பிணைப்பு ஏற்பட்டது!

அந்த ஆசிரியர் உற்ற நண்பனாகவும்... ஆசானாகவும் மாறிப் போனார்!

அவர்களின் கற்கும் வேகம் கண்டு ஆச்சரியமாகிப் போனார்!

தன் வீட்டுத் தோட்டத்தில் குலை குலையாய் வாழை யும், மாங்காயும் காய்த்துத் தொங்கினாலும்... மாற்றான் வீட்டுத் தோட்டத்து மாங்கனியை கை காட்டுவாள், சஞ்சனா!

முள்வேலி ஏறி கை காலிலெல்லாம் கிழித்துக் கொண்டு மாங்கனியை கொண்டு வந்து தருவான் சந்தோஷ்!

அதை சஞ்சனா ஆசையாசையாய் சாப்பிடுவதை அவன் ஆசையாய் பார்த்துக் கொண்டிருப்பான்!

விடுமுறை நாட்களில் காடு, கழனி என்று கை கோர்த்துத் திரிவார்கள்! கௌஷிகா இல்லாமல் வெளியே செல்ல மாட்டார்கள்!

ஐந்தாம் வகுப்பு முடிந்து... ஆறாம் வகுப்பு படிக்க கல்லை நகருக்குச் சென்றார்கள்!

சந்தோஷ் அரசு ஆண்கள் பள்ளியில் சேர்ந்தான்!

சஞ்சனா அரசு பெண்கள் பள்ளியில் சேர்ந்தாள்.

மாலை இருவரும் பஸ்ஸில் வீட்டிற்கு ஒன்றாய் வரு வார்கள்!

சில நாட்கள் சந்தோஷ் சைக்கிளை மிதித்து பின்புறம் அமர்ந்து சஞ்சனா பள்ளிக்குச் செல்வாள்!

பஸ், சைக்கிள் எதில் சென்றாலும் இருவருமே பிரியவே மாட்டார்கள்!

ஒரு விபத்து ஒன்றில் நாகராஜன் இறக்க...

மொத்தக் குடும்பமே ஸ்தம்பித்து விட்டது!

அபிராமியைவிட ஆதவன்தான் இடிந்து போய் விட்டார்!

அபிராமிகூட கொஞ்சம் தேறி விட்டாள்!

ஆனால், ஆதவனால் நீண்ட நாட்கள் கழித்துதான் தேறவே முடிந்தது!

அபிராமி சரியான பெரும் செலவாளி!

கல்லை நகருக்குச் சென்று கண்டதையும் வாங்குவாள்!

அவள் நகரத்துக்குச் சென்று திரும்பினால் குறைந்த பட்சம் நான்கு ஐந்தாயிரம் வேண்டும்!

கணவன் இருக்கும் வரை ஏதோ சில பொருட்களை அந்த புறமும் இந்தப் புறமும் நகர்த்தி வைத்தவள்... அவர் இறந்த பின்னர் அதுவும் நின்று போனது!

ஒரு தூசு, துரும்பைக்கூட கிள்ளிப் போடமாட்டாள்!

சத்தியவதியை உட்கார்ந்த இடத்திலிருந்தே விரட்டுவாள்!

காபி, சாப்பாடு அனைத்தும் அவள் உட்கார்ந்த இடத்துக்கே வரவேண்டும்!

கண்ட நேரங்களில் கண்டதைச் சமைத்துத் தரச் சொல்லுவாள்!



வெள்ளி, சனிக் கிழமைகளில் அசைவம் செய்யச் சொல்லுவாள்!

''அண்ணி... இன்று வெள்ளிக்கிழமையும் அதுவுமா கறி சமைக்கணுமா? கோவிலுக்குக் குழந்தைகளைக் கூட்டிட்டுப் போகலாம்ன்னு இருக்கேன்!''

சத்தியவதி நியாயமான காரணத்திற்காக மறுப்பு தெரிவித்தால்...

''என் புருஷன் இருந்திருந்தால் இப்படி மதியாமல் இருப்பாளா? கேவலம் முண்டச்சிதானே... அதுவும் நாதியத்தவ தானேன்னு உன் பொண்டாட்டிக்கு என்னைக் கண்டால் இளப்பம்!

நானும் புத்தி சரியா இருந்து... நல்லவனா... பணக்காரனாப் பார்த்துக் கட்டியிருந்தால்... இந்த நிலைமை... எனக்கு ஏற்பட்டு இருக்குமா?

இப்போ நினைச்சி என்ன புண்ணியம்? மாடு மாதிரி உழைக்கறாரே... தம்பிக்கு உதவுவாங்கன்னு நினைச்சி... அவங்களுக்குக் கழுத்தை நீட்டினேன்! உழைச்சி உழைச்சி உங்களை முன்னேற்றிட்டுப் போய் நிம்மதியா குழியில படுத்துட்டாங்க!

கடைசியில நாங்க ரொம்பக் கஷ்டப்படறோம்! தம்பி பொண்டாட்டிகிட்ட கையேந்தி சாப்பிடணும்ன்னு விதி!'' என்று அபிராமி மூக்கை சிந்துவாள்!

''சாமியாவது... பூதமாவது? எனக்கு சாமி, கடவுள், தெய்வம் எல்லாமே என் அக்கா தான்டி! என் அக்கா கேக்கறதை ஒழுங்கா சமைச்சிக் கொடு!'' என்று கத்துவார்.

சில சமயம் அக்காவின் அழுகை கண்டு... மனைவி மாபெரும் குற்றம் செய்ததாய் எண்ணி... சத்தியவதியை கைநீட்டி அடிப்பார்!

சத்தியவதியின் முடியை இழுத்துப் போட்டு அடிப்பார்.

நாளாக நாளாக மனைவி மேல் எந்தத் தப்பும் இல்லை என்று உணர்ந்தார்!

அக்காவின் அழிச்சாட்டியத்தையும், அழுகையையும் ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ள மாட்டார்!

அக்காவின் குற்றப்பத்திரிகையை காதிலே வாங்கிக் கொள்ள மாட்டார்!

காடு முடாய் இருந்த சத்தியவதியின் வாழ்க்கை பூக்குவியலாய் இதமளிக்க...

அது பொறுக்காமல்... பூகம்பமாய் அவளின் வாழ்க்கையில் வேதனையான அந்த நாள் வந்தது!



## 3

செயற்கையான இடியோடும்... மின்னலோடும்... மத்தாப்பு மழையுமாய்... வானம் களைகட்டியிருந்தது!

அது ஒரு தீபாவளித் திருநாளின் இதமான... ரம்யமான... காலைப் பொழுது!

வாணவெடியும்... ராக்கெட்டும்... புஸ்வாணமும்... கம்பி மத்தாப்புமாய்... குதூகலித்து வெடித்துக் கொண்டிருந்தனர், சந்தோஷ், சஞ்சனா, லதா, சுதா!

சஞ்சனா ரெட்டை ஜடை, பட்டுப் பாவாடை, சட்டையில் மானாய் துள்ளினாள்!



''சஞ்சனா தள்ளிப்போ! புஸ்வாணம் நெருப்புப் பட்டால் உன் பட்டுப்பாவாடை, சட்டையெல்லாம் வீணாப் போயிடும்! போ, சஞ்சனா!''

சந்தோஷ்... சஞ்சனாவை விரட்டிக் கொண்டிருந்தான்!

லதா, சுதா இருவரும் கம்பி மத்தாப்பை சுட்டுக் கொண்டிருந்தனர்.

''நான் வைக்கறேன், சந்தோஷ்!''

''உதைப்பேண்டி! மரியாதையா அத்தான்னு கூப்பிடு! சந்தோஷ், கிந்தோஷ்ன்னு மரியாதையில்லாமல் கூப்பிட்டே... இந்த ராக்கெட் வெடியை... உன் மேல பத்த வச்சி தூக்கிப் போட்டுடுவேன்!''

''ஐய்யோ வேணாம், அத்தான்! அப்படிச் செய்துடாதே சந்தோஷ் அத்தான்!'' என்று சஞ்சனா பயப்பட...

''ஏய் சஞ்சு குட்டி... அத்தான் அப்படியெல்லாம் செய்ய மாட்டேன்! உனக்கு கம்பி மத்தாப்புதான் சரிப்படும்! ஒண்ணும் ஆகாது! இதையெல்லாம் வெடிக்க வந்தே... மேலே வெடிச்சால் புண்ணாயிடும்! தூரேப் போ!''

சந்தோஷ் சொல்லிவிட்டு ஓடிப்போய் பெரிய வெடியை வைப்பதில் மும்முரமானான்!

அபிராமி நாற்காலியில் பிடித்து வைத்த பிள்ளையாராய் அமர்ந்திருந்தாள்!

''அக்கா... ஏன் உட்கார்ந்திருக்கே? தலைக்கு எண்ணெய் தேய்ச்சிக் குளிச்சிட்டு... இந்த பட்டுப் புடவையைக் கட்டிக்கோ!'' என்றவர்...

அழகான பட்டுச்சேலையை அவளிடம் நீட்ட... அதைக் கையில் வாங்கியவள்... நிமிடத்தில் தூக்கித் தூரே வீசினாள்!

''அக்கா... என்ன? ஏன்?''

ஆதவன் பதற...

''உன் பொண்டாட்டிக்கு மட்டும் ஒரு முழ ஜரிகைப் புடவை! எனக்கு மட்டும் நாலங்குலம் ஜரிகை வச்ச புடவையா?

உன் புடவையும் வேண்டாம்! ஒரு எழவும் வேண்டாம்! போ... போய்... இதையும் அந்த மேனாமினுக்கிகிட்டேயே கொடு! கட்டிக்கட்டும்!''

''அக்கா... உன் சேலையில் உள்ள ஜரிகை அத்தனையும் ஒரிஜினல் வெள்ளி ஜரிகை! ஆனால், அவளுது அப்படியில்லே! பார்க்கத்தான் பகட்டா இருக்கும்! செயற்கை ஜரிகை! உன் சேலையைவிட விலையும் குறைவு! தரமும் குறைவுக்கா!'' என்று ஆதவன் விளக்க...

''யாருகிட்ட பொய் சொல்றே?'' என்று சீற...

''நிஜம், அக்கா!''

''நான் என்ன முட்டாளா? மூடாத்மாவா? போடா... போ... என் புருஷன் இல்லேன்னு எல்லோரும் தரக் குறைவா நடத்தறீங்க!...

நானும், என் பிள்ளைகளும் இடிசோறு... இழி சோறு தின்னறோம்!''

அபிராமி சத்தமிட்டாள்.

''ஏய் நல்ல நாளும் அதுவுமா கத்தறே? கொஞ்சம் மெதுவாப் பேசக்கா!''

''சொந்தத் தம்பியே... என்னை வேறா பிரிச்சிப் பார்க்கும்போது... கத்தாமல்... எப்படி இருக்க முடியும்?''

''காலங்கார்த்தால என்னவோ... ஏதோன்னு வேலையத்த ஜனங்க... நம்ம வீட்டுப் பஞ்சாயத்துக்கு வந்துடப் போறாங்க!''



''வரட்டும்டா! அப்போதானே உங்க ரெண்டு பேரு லட்சணமும்... ஊராருக்குத் தெரிய வரும்!''

''கத்தாமல் மெல்லப் பேசுக்கா!''

''என் பேச்சு உனக்கு கத்தலா இருக்கா? இருக்கும்டா இருக்கும்! அந்தச் சிறுக்கி உன்னை இந்த அளவு உசுப்பேத்தி வச்சிருக்கா! நல்லா உன்னை அவ முந்தானையில முடிஞ்சிட்டா! அவ முந்தானை சுகத்துலே அக்காவை எதிர்த்துப் பேசறே, இல்ல?'' என்று அழ...

''ஐய்யோ... என்ன பேசறேக்கா? ஏன் இப்படியெல்லாம் அசிங்கமா பேசறே? பாவம் சத்தியவதி... உன்னை ஒரு நாள் கூடத் தப்பாகவும், தரக் குறைவாகவும் நினைச்சதில்லே! என்கிட்ட உன்னைப் பற்றி எதுவுமே சொல்ல மாட்டாள்! அவ மேல பழியைத் தூக்கிப் போடறியே, அக்கா? வேண்டாம்! ஊரான் வீட்டுப் பெண்ணை இப்படி நோகடிக்கக் கூடாது!''

''பொண்டாட்டியைச் சொன்னதும்... உன்னால தாங்க முடியலையா? அந்த அளவு 'மனைவி மந்திரம்' வேலை செய்யுதா?''

''மீண்டும் சொல்றேன்! அவளைக் குறை சொல்லாதே! அவ மேல பழியைப் போடாதே!'' என்று ஆதவன் கொஞ்சம் எகிற...

''ஐய்யோ... ஐய்யோ... கூடப் பொறந்த அக்காவை விட... நேற்று வந்த மனைவி பெரிசாயிட்டாளா? இந்த அநியாயத்தை யார்கிட்ட சொல்லுவேன்! கட்டன மவராசனும் பொட்டுன்னு விட்டுட்டுப் போயிட்டார்! நானும், மூணு பிள்ளைகளும் நாதியில்லாமல் நடுத்தெருவில் நின்னு தவிக்கிறோமே!...

ஒவ்வொண்ணுக்கும் உங்ககிட்ட கையேந்தராப்பல செய்துட்டுப் போயிட்டாரே! உங்களுக்கு எங்களைப் பார்த்தா பிச்சைக்காரங்க போலத் தெரியுதா?'' என்று அபிராமி பெரிதாய் ஒப்பாரி வைக்க...

சத்தியவதி மனம் கலங்கி மூலையில் உட்கார்ந்து விட்டாள்!

அபிராமி சத்தம் கேட்டு... உள்ளே வந்த சந்தோஷ், சஞ்சனா, லதா, சுதா நால்வரும்... அதிர்ச்சியாய் சூழ் நிலையைக் கண்டனர்.

''என் கையிலயும் நாலு காசிருந்தால்... என்னை மதிப்பீங்க! நீயே கதின்னு கிடக்கறவளை உனக்குப் பிடிக்கலே, இல்லையா?''

''ஐய்யோ... அக்கா... ஏன் இப்படியெல்லாம் பேசறே? உனக்கு என்னவெல்லாம் வேணும்? சொல்லு? நகையா? பணமா? சொத்தா? சொல்லுக்கா?''

ஆதவன் பணிவாய் கேட்க... அபிராமி சீறினாள்.

''கேட்டால் அப்படியே கொடுத்துடப்போறே!''

''உனக்கு என்ன வேணுமோ கேளுக்கா! நான் கொடுக் கறேன்!''

''நம்ம சொத்தையெல்லாம் என் பேர்ல எழுதி வை!'' நாக்கில் நரம்பே இல்லாமல் அபிராமி கேட்க...

''எப்படிக்கா? ஐய்யோ... எப்படி முடியும்?''

''முடியாது... முடியாதுதானே? பெரிசா என்ன வேணுமோ கேளு... நான் கர்ணனுடைய பரம்பரைன்னு பெருமையா சொன்னே?''

''..................''



''உன் பெண்ணை என் மகனுக்குத்தானே கொடுக்கப் போறே?''

''ஆமாம்!'' சட்டென்று ஆதவன் சொல்ல...

''நாளைக்கு உன் பொண்ணு... என் மகனோடத்தான்... என் வீட்டுக்கு வந்து வாழப் போறாள்! நாளைக்கு எழுதப் போறதை... இப்பவே என் பேர்ல எழுதிடேன்!''

''அது எப்படி முடியும்? நீயும், நானும் ஒரு தாய் பிள்ளையானாலும்... வாயும், வயிறும் வேறுதானே? இப்போதே என் மனைவியை தெருநாயைவிடக் கேவலமா நடத்தறே! சொத்து எல்லாத்தையும் உன் பேர்ல எழுதி வச்சிட்டால்... எங்களை என்ன பாடுபடுத்துவே! அது முடியாதுக்கா!

பாதியை வேண்டுமானால் உன் பேர்ல எழுதி வைக் கறேன்! பாதியாப் பிரிக்கவும்... பாதியைக் கேட்கவும் தான் உனக்கு உரிமையிருக்கு!''

''நாளைக்கு உன் பெண் என் வீட்டுக்குத்தான் வாழ வரணும்!''

''உன் பேச்சை நம்ப முடியாதுக்கா! நீயோ பேராசை பிடித்தவள்! நீ எவ்வளவு நல்லவளா... ஒரு தாயைப் போல இருந்தே! உன் குணம் வயசாக ஆக மாறிட்டே வருது!

உன் பேச்சை நம்பி எல்லாத்தையும் தூக்கிக் கொடுத் துட்டு... என் பெண்ணை அம்போன்னு விட்டுடறதா? நாளைக்கே ஒரு விபத்துல நாங்க ரெண்டு பேரும் இறந்து போயிட்டால்... நீ என் பெண்ணை நல்லா பார்த்துப் பேன்னு எப்படி நம்ப?

என் பேர்லயும் சொத்திருந்தால்... எனக்கு ஒண்ணுன் னாலும்... சொத்துக்காக நீயோ... அல்லது நம்

சொந்தக்கார ஜனங்களோ... என் பெண்ணைப் பார்த்துக்கும்!''

''கொடுக்க முடியுமா? முடியாதா?'' என்று காட்டமாய் அபிராமி கேட்க...

''என் பெண்ணுக்கும், நம்ம மாப்பிள்ளைக்கும் கல்யாண வயசு வரட்டும்! கல்யாணம் முடிந்த நொடியே... என் சொத்தையெல்லாம் மாப்பிள்ளை பெயருக்கு எழுதித் தந்துடறேன்!''

''ஏன்டா... உனக்கு என் பேர்ல அவ்வளவு நம்பிக்கை யில்லையா?''

''ஆமாம்!'' என்று சொல்ல... அபிராமிக்கு பயங்கரக் கோபம் வந்து விட்டது.

''நம்பிக்கை இல்லாதவனோட ஒரு நிமிடம் இருக்க மாட்டேன்! சொத்து, நகை, பணம் எல்லாத்தையும் வேறு வேறா பிரிச்சிக் கொடுத்துடு! நாங்க வேறயா போயிட றோம்!''

''வேணாம், அக்கா! ஒண்ணாவே இருக்கலாம்!'' என்று ஆதவன் கெஞ்ச...

''ம்கூம்! இனி ஒரு பொழுது உங்களோட இருக்க மாட்டேன்! அத்து விட்டுடு! அக்காங்கிற பந்தத்தையும் அத்து விட்டுடு!...

உன் பெண் இனி என் வீட்டுக்கு வாழ வரப்போற தில்லே!...

இனி உன் வீட்டு மருமகன்... என் பிள்ளைன்னு கனவு கண்டுட்டு இருப்பதை விட்டுடு!...

என் மகன் உன் மகள் கழுத்தில்... இனி ஒரு போதும் தாலி கட்ட மாட்டான்! இனி நீ யாரோ! நான் யாரோ! புரியுதா?''



அபிராமி கறாராய்ப் பேச... ஆதவன் கண்ணீரோடு சொன்னார்.

''என்னக்கா... இப்படியெல்லாம் பேசறே? சின்னஞ் சிறுசுங்க! பாவம்! பிரிச்சா தாங்காதுங்க! ஒரு கூட்டுப் பறவையா நாலும் சுற்றித் திரியுது! விளையாடுது! இதுங்களைப் பிரிக்க வேண்டாம்!

விபரம் தெரியாத வயசுல இருந்தே கணவன் - மனைவின்னு இதுங்களுக்கு ஆசைக்காட்டி வளர்த்தாச்சி! அந்த உறவுன்னா என்னன்னே தெரியாது! ஆனால் ரெண்டும் பிரியமா... பாசமா... அன்பா... இணைஞ்சி இருக்குதுங்க! அப்படிப்பட்ட மனசைப் பிரிக்க வேண் டாக்கா! சொல்றதை கேளுக்கா!''

ஆதவன் கெஞ்சவும்...

அபிராமி மிஞ்சினாள்!

''உன்னைவிட நல்ல வசதியான வீட்டுப் பெண்கள்... என் வீட்டு மருமகளாக்கும்!''

''ஐய்யோ...''

''அண்ணி... அப்படிச் சொல்லாதீங்க அண்ணி! குழந் தைங்க தாங்காதுங்க!'' சத்தியவதி கெஞ்சியதை அலட் சியம் செய்து ஆதவனைப் பார்த்துச் சொன்னாள்.

''சொத்தைப் பிரிக்க நாளைக்கே ரிஜிஸ்டர் ஆபீஸ் போறோம்! நான் சொல்றது புரியுதா?'' என்றவள்...

பிள்ளைகள் மூவரையும் இழுத்துக் கொண்டு எதிர் பங்களாவிற்குச் சென்றாள்!

சந்தோஷ் வர மறுத்து.... விழுந்து புரண்டு அழ... முதுகில் நான்கு மொத்து வைத்து... தரதரவென இழுத்துப் போனாள், அபிராமி.

அம்மாவின் குணம் உனக்குத் தெரியும் தானே? உன்னையும், உன் தங்கச்சிகளையும் தனியே தவிக்க விட்டுட்டு... தூக்கு மாட்டித் தற்கொலைப் பண்ணிப் பேன், பொய்யில்லே, சந்தோஷ்! அம்மா பத்தி உனக்குத் தெரியும்தானே, மகனே?...

நான் சொல்றதைக் கேட்கலே... செத்துடுவேன், சந் தோஷ்! பொய்யில்லே, சந்தோஷ்! ஜாக்கிரதை, சந் தோஷ்!''

இப்படி மிரட்டிய பிறகு எப்படி சஞ்சனாவைப் பார்ப் பான்! பேசுவான்!

சந்தோஷ் சஞ்சனாவை எதிரில் கண்டாலும் பேசவே மாட்டான்!

சஞ்சனா ஆசையாசையாய் அருகில் ஓடுவாள்!

அவன் மௌனமாய் அகன்று செல்லுவான்!

சஞ்சனாவுக்கும் அத்தையின் அரக்க குணம் தெரியும்!

அதன் பிறகு... சஞ்சனாவும் சந்தோஷிடம் பேச முயற்சிக்க மாட்டாள்!

அத்தை தன் பிள்ளைகளுக்கு எத்தனையோ முறை கொள்ளிக் கட்டையில் சூடு வைத்ததைக் கண்ணால் கண்டவள், சஞ்சனா! அதனாலேயே சந்தோஷைக் கண்டால் மென்மையாய் புன்னகைத்துவிட்டு ஒதுங்கிப் போவாள்!

அபிராமி கையிலிருந்த ரொக்கத்தைத் தாம்தூம் என்று கணக்கு பாராமல் செலவழித்தாள்.

பணமெல்லாம் தீர்ந்துப்போக ஒரு சில நகைகளையும் விற்று செலவழித்தாள்!



காடு, கழனிக்குச் செல்ல மாட்டாள், அபிராமி!

பண்ணையின் விளைச்சலில் பாதியை முழுங்கி விடுவான் அவள் அமர்த்திய கணக்குப் பிள்ளை! மீதிக்கு பயிரிட்ட செலவு, உரம், பூச்சிக்கொல்லி, ஆட்கூலி என்று கணக்குக் காட்டி மொத்தத்தையும் அந்தக் கணக்கு பிள்ளையே முழுங்க...

விவசாயம் நமக்குச் சரிப்பட்டு வராது என்று அத்தனை சொத்துக்களையும் அடிமாட்டு விலைக்கு விற்று... பணத்தை வங்கியில் போட்டாள், அபிராமி.

வங்கியிலிருந்து வரும் வட்டிப்பணம் சில சமயம் அவளுக்குப் போதவில்லை! அதனால் ரொக்கத்திலும் கை வைத்து எடுத்துச் செலவு செய்தாள்!

ஆதவன் வருடத்திற்கு நான்கு ஏக்கராய் பக்கத்தில் வந்த நிலங்களை விலைக்கு வாங்கிப் போட...

அபிராமியோ வயிறு எரிந்தாள்!

எட்டாம் வகுப்பு முடிந்து... கோடை விடுமுறையில்... சஞ்சனா பூப்பெய்தினாள்!

ஆதவனும், சத்தியவதியும் சந்தோசப்பட்டனர்!

அந்த சந்தோசத்தை அபிராமியிடம் சொல்வதற்கு நான்கு பெரிய மனிதரோடு... அபிராமியின் வீட்டிற்குச் சென்றார், ஆதவன்!

அந்தப் பெரிய நிலைப்படியை மிதிக்கும்போது...

''நில்லுடா! யாருடா நீ?'' என்ற அபிராமியின் அதட்ட லுக்கு வாயடைத்துப் போய் விட்டனர், ஊர் பெரியவர்கள்!

''எங்கேடா வந்த?''

''அக்கா...'' ஆதவன் முகம் கறுத்துக் கூப்பிட...

''அக்கா... செத்துப் போயிட்டேன்னு எழவுக்கு வந்தீயா?'' என்று சீறவும்.

''அக்கா... என்னக்கா இப்படிப் பேசறே? நான் என்ன உன் எதிரியா?''

''ஆமாடா!''

''எதிரியா இருந்தாகூட வீட்டுப் படியேறி வந்துட்டா பிடிக்குதோ... பிடிக்கலையோ வாங்கன்னு கூப்பிடுவோம்! நீ என்ன வான்னுகூட கூப்பிட வேண்டாம்! என்ன விஷயம்ன்னு கேட்டாக்கூடப் போதும்க்கா!'' என்று கண்கள் கலங்கச் சொல்ல...

''அபிராமி... உன் கூடப் பிறந்தவன்! உனக்குப் பிறகு... உன் எச்சில் பாலைக் குடிச்சி வளர்ந்தவன்... ஆசையா நல்ல செய்தி சொல்ல வந்திருக்கான்! இந்த சமயத்துல மனம் நோகறாப்பல பேசலாமா? என்ன சேதின்னு கேளும்மா?''

நால்வரில் கொஞ்சம் வயதானவராய் இருந்தவர் அதட்ட...

''சரி என்ன விஷயம்ன்னு சொல்லிட்டு இடத்தைக் காலி பண்ணுங்க!''

அபிராமி பட்டென்று முகத்தில் அடிக்காத குறையாய் கேட்க...

ஆதவன் துவண்டு போனார்!

''சட்டு புட்டுன்னு விஷயத்தைச் சொல்லிட்டு இடத்தைக் காலி பண்ணுங்க! எனக்கு நிறைய வேலையிருக்கு!''

ஆதவன் மனதைத் தேற்றிக் கொண்டு...

''அக்கா... என் பொண்ணு... உன் மருமகள்... பெரிய மனுஷி ஆயிட்டாள்!'' என்று ஆசையாய் சொல்ல...



''உன் பொண்ணுன்னு மட்டும் சொல்லு! கனவுல கூட அவளை என் மருமகளா ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டேன்! நினைக்க மாட்டேன்!'' என்று முகம் சுளித்துச் சொல்ல...

''ஐய்யோ அக்கா... இப்படியெல்லாம் பேச உனக்கு எப்படி மனசு வருது?''

''..........''

''எங்களைவிட அவகிட்ட நீதானே உன் மகனைக் காட்டி 'உன் புருஷன்டி.' உன் அத்தான்டி! நல்லா கவனிச்சிக்கோ... சீக்கிரமா பெரிய மனுஷியா ஆனாத்தான்... உன் கழுத்துல தாலி கட்டுவான்!' என்று அடிக்கடி சொல்லி... அவள் மனதில் ஆசை விதையை ஊன்றினாய்!...

இப்போ நீயே இப்படிப் பேசினா எப்படிக்கா? சரி... அது இல்லக்கா இப்போ பிரச்சனை! சஞ்சனாவுக்கு மஞ்சள் தண்ணி ஊத்தி ஒதுக்கி விடணும்! முறைப் பையன் உன் மகன்! அவன்தான் சஞ்சனாவுக்கு பச்சை ஓலையில் குடிசை கட்டணும்!

கோபத்தைப் பாராட்டாமல் நீயும், மாப்பிள்ளையும் வரணும்!

நீ வர்லேன்னால் ஊர் ஜனங்க முன்னாடி ரொம்ப அவமானமா போயிடும்!

தயவு செய்து மறுக்காமல் வாக்கா! உன்னை கெஞ்சிக் கேட்டுக்கிறேன்!''

கண்களில் கண்ணீர் பளபளக்க ஆதவன் கெஞ்ச...

''நான் முடிவெடுத்தா முடிவெடுத்ததுதான்! நம்ம உறவு உடைஞ்சிப் போச்சி! அதை ஒட்ட வைக்க ஒரு போதும் முடியாதுடா!''

''ஊர் ஜனங்க முன்பு... என் மானத்தைக் காப்பாற்றுக்கா! உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்! என்னை மன்னித்து... என் வீட்டுக்கு வாக்கா!''

''நானோ... என் மகனோ எந்தக் காலத்திலும் வரமாட்டோம்!''

''நடக்க வேண்டியதை போய் கவனி!''

''நீயும், மாப்பிள்ளையும் வராமல் எப்படி அந்த சடங்கு நடக்கும்?''

''அதை நீ அன்றே யோசித்து இருக்கணும்! என் பையனுக்குத் தானே உன் பெண்ணை கட்டி வைக்கப் போறே... இப்போதே சொத்தையெல்லாம் என்கிட்டக் கொடுத்துடு என்று சொன்னதும் நீ கொடுத்திருக்கணும்! அப்போ செய்த தப்புக்கு... நீ இப்போ வருந்த வேண்டாமா?''

''அக்கா...''

''சும்மா கெஞ்சிட்டு இருக்காமல் போய் உன் வீட்டு விசேஷத்தைப் பார்! ஊரே உனக்குச் சொந்தம்!''

''உன் சொந்தத்துக்கு அது ஈடாகுமா?''

''மூணாம் தர முறைப் பையன் எவனாவது இருப்பான். அவனை அழைச்சிட்டுப் போய் மாலைபோடச் சொல்லு! உன் மகளுக்கு குடிசைக் கட்டச் சொல்லு!'' என்று கறாராய் சொல்ல...

''அக்கா... நீயும், மாப்பிள்ளையும் வராமல் நான் போகவே மாட்டேன்!''

''நாள் முழுக்க என் வீட்டு வாசல்ல நீ தவமிருந்தாலும் வரவே மாட்டேன்! தெரியுமா?'' அபிராமி வேகமாய் கத்த...



உள்ளே இருந்து வந்த சந்தோஷ்... இதையெல்லாம் கண்ணுற்று...

''அம்மா... மாமா கெஞ்சறார், இல்ல? பாவம்மா, மாமா! வாம்மா மாமா வீட்டுக்குப் போவோம்!''

சந்தோஷ் சொல்ல... அடுத்த நொடியில் ஆதவன் மேலிருந்த ஆத்திரத்தையெல்லாம்... சந்தோஷ் மேல் காட்டினாள், அபிராமி.

அம்மா அடிக்க... சந்தோஷ் வலியில் துடித்தான்.

''அக்கா... நீ வரவேண்டாம்! மாப்பிள்ளையை அடிக்காதே. அக்கா! விடுக்கா! வேண்டாம்!''

அவசரமாய் ஓடிவந்து மறித்த ஆதவனை தூரே தள்ளி விட்டு... சந்தோஷை இழுத்துக் கொண்டு உள்ளே போய்... கதவை மூடிக் கொண்டாள்.

ஆதவன் அவமானம் தாங்காமல் வீட்டிற்கு வந்தார்!

அங்கு நடந்த களேபரத்தை ஆதவன் கண்ணீரோடு சத்தியவதியிடம் விளக்க...

சத்தியவதி விம்மினாள்! வெடித்தாள்!

சஞ்சனாவிற்கு மஞ்சள் நீர் ஊற்றினார்கள்!

சொந்தத்தில் ஒரு முறைப் பையன் வந்து அவள் நெற்றியில் குங்குமம் வைத்தான்!

மாலையை கழுத்தில் போட்டான்!

பச்சை தென்னை ஓலையில் குடிசையை கட்டி விட்டுப் போனான்!

அத்தையும், சந்தோஷும், லதா, சுதாவும் வராததால் சஞ்சனா கலங்கிக் கண்ணீர் விட்டாள்.

அதன் பிறகு...

ஒவ்வொரு தீபாவளி, பொங்கலின் போது... அபிராமி தரும் காசில் மிச்சம் வைத்து... சஞ்சனாவிற்குப் பொட்டு, வளையல், ஹேர் பேண்ட், கழுத்துக்கு முத்து மாலை என வாங்கி... கௌசிகாவிடம் கொடுத்து விடுவான்!

சஞ்சனா அதை ஆனந்தத்தோடு அணிந்து கொள்வாள்!

பத்தாம் வகுப்பில் சந்தோஷ் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்றான்!

சஞ்சனா... பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்றாள்!

பதினொன்றாம் வகுப்பில் கம்ப்யூட்டர் சயன்ஸும், கணக்கும் உள்ள குருப் எடுத்தார்கள்!

சஞ்சனாவிற்கும், கௌஷிகாவிற்கும் சில கணக்குகள் தெரியாமல் போகும்! அப்போது சஞ்சனா... கௌஷிகாவை சந்தோஷிடம் அனுப்புவாள்!

சந்தோஷ் விளக்குவான்!

கௌஷிகா அவனிடம் தெரிந்து கொண்டு வந்து... சஞ்சனாவிற்கு சொல்லிக் கொடுப்பாள்!

அதே போல வேதியியல் பார்முலாக்களிலும் இரு பெண்களுக்கும் சந்தேகம் வரும்!

சந்தோஷோ வேதியியல் பார்முலாக்களைக் கரைத்துக் குடித்தவன்! அதனை அழகாய் கௌஷிகாவிற்கு சொல்லிக் கொடுக்க... கௌஷிகா சஞ்சனாவிற்குக் கற்பிப்பாள்!

அன்று...



கௌஷிகா மெல்ல மெல்ல... கொலுசு சப்தமிட்டு சிணுங்காமல்... பூனைப் பாதம் வைத்து சந்தோஷ் அறைக்கு நுழைய...

அபிராமி அவளை வழி மறித்தாள்!

"ஏய்... கௌஷிகா... என்ன? என்ன வேண்டும்?"

கௌஷிகா அத்தையிடம் வசமாய் மாட்டிக் கொண்டோமே என்று பயத்தில் விக்கித்து நிற்க...

"என்னடி பொண்ணே... நீ என்ன பேசாமடந்தையா? எதுக்குடி இங்கே வந்தே? திருடி மாதிரி என் மகன் அறையில் நுழையறே?" என்று கொஞ்சம் சீற...

"அத்தை... கணக்குல ஒரு டவுட்! அதான் சந்தோஷ் கிட்ட கேட்டு கிளியர் பண்ணிட்டுப் போகலாம்னு வந்தேன்!"

"அவனும் உன்னைப் போலத் தானே... பள்ளிக்கூடம் போறான்?"

"ஆமா, அத்தை!"

"ஆசிரியர் கிட்ட பாடம் படிக்கிறான்! அவனுக்கு வராத சந்தேகம் உனக்கு மட்டும் வருதாக்கும்? பள்ளிக்கூடம் போனோமா... வாத்தியார் சொல்லித் தாரதை... சிந்தையை செலுத்தி கவனிச்சோமான்னு இருந்தால்... எப்படி பாடத்துல சந்தேகம் வரும்?

ம்? பாடம் நடத்தும்போது புத்தியை எங்கே வச்சிட்டு இருப்பே?

சும்மா கணக்கு தெரியல... அறிவியலு தெரியலன்னு வந்து நிற்கறே! வயசுப் பையனை... சும்மா தளுக்கி, மினுக்கி, வளைச்சிப் போட்டுடலாம்னு எதுனா கனா கண்டுட்டு வரியாடி?" என்று கோபமாய் அபிராமி கேட்க...

''அத்தே... என்னத்தே இப்படிப் பேசறீங்க?''

கௌஷிகா பரிதாபமாய் கேட்க...

''பின்னே என்னடி... உனக்குத் தினமுமா படத்துல சந்தேகம் வரும்?''

அபிராமி அவன் மீது ஒரு சந்தேகப் பார்வையை வீச...

''நிஜமாத்தான், அத்தே! பொய்யில்லே அத்தே!'' என்று கெஞ்சலுடன் கூற...

''இந்த அபிராமி பையனை வளைச்சிப் பிடிச்சிட லாம்ன்னு மட்டும் கற்பனைக்கூட செய்துடாதே!'' சதி எத்தினாள், அபிராமி.

''அத்தே...''

''நான் பொல்லாதவளாயிடுவேன்! என்னைப் பற்றித் தெரியுமில்லையா?''

''ம்...''

''ஜாக்கிரதை! தாவணியை ஒழுங்கா இழுத்துக் கட் டிட்டுப்போ! அங்க இங்க விலகப் போய் அவன் முன்னாடி நிற்காதே! என்னடி முறைக்கறே?''

''முறைக்கலே அத்தே! இழுத்துப் போர்த்திட்டேப் போறேன்!''

கௌஷிகா தாவணியை இழுத்து கழுத்தை மூடிக் கொள்ள...

''போ... போ... போய் கேட்டுத் தெரிஞ்சிட்டு... சட்டு புட்டுன்னு இடத்தைக் காலி பண்ணு!''

''செய்யறேன், அத்தை!''

கௌஷிகா சந்தோஷை நாடிச் செல்ல...



''பெண்ணைப் பெத்தவனெல்லாம் கவலையில் லாமல் தெருவுல அவுத்து வுட்டுட்டு நிம்மதியா இருக் கானுங்க! வயசுப் பையனை வச்சிட்டு... இப்போ நாங்க எல்லாம் மடியில நெருப்பையள்ளிக் கட்டிட்டாப்போல பயந்து நடுங்கிட்டு இருக்க வேண்டியதா இருக்கு!...

காலம் ரொம்ப ரொம்பக் கெட்டுப் போயிடுச்சிடா சாமி! ச்சே! என்ன அநியாயமோ!''

அபிராமி புலம்பிக் கொண்டே போக....

கௌஷிகா கவலையை விட்டொழித்து... சந்தோஷைப் பார்த்து புன்முறுவல் பூத்தாள்.

அத்தையிடம் தினம் தினம் கிடைக்கும் வசவுகள்தான்!

கௌஷிகாவிற்குக் கேட்டு கேட்டுப் புளித்து விட்டது!




பள்ளிப் படிப்பு முடிந்தது!

சந்தோஷ் சென்னையில் உள்ள பிரபல கல்லூரியில் பி.எஸ்ஸி கம்ப்யூட்டர் சயன்ஸ் குரூப் எடுத்துப் படித்தான்!

சஞ்சனா அதே கல்லை மாநகரில் உள்ள ஆர்.கே.எஸ். கல்லூரியில் பி.ஏ. இங்கிலீஷ் லிட்டரேச்சர் படித்தாள்!

ஆனால், கௌஷிகா அதேக் கல்லூரியில் அவளும் சந்தோஷ் போல பி.எஸ்ஸி கம்ப்யூட்டர் சயின்ஸ் எடுத்துப் படித்தாள்!

அறியாப் பருவத்தில் இருந்த விருப்பம், பிரியம், ஆசை, அன்பு அத்தனையும்... இப்போது அறியும் பருவத்தில்... கலவையாய் கலந்து... குழைந்து... காதலாய் உருவெடுத்தது. இருவரிடையேயும்!

காதலிக்கும் வயசு வந்த பிறகு... குடும்பத் தகராறு அவர்களைப் பிரித்து வைத்து... வேடிக்கைக் காட்டி... கண்ணா மூச்சி ஆடினாலும்... அவர்கள்...

கண்களால் காதல் பேசினர்!

இதழ்களின் புன்னகையால் நலம் விசாரித்துக் கொண்டனர்!

கண்களும், இதழும் அவர்களின் காதலுக்கு உரம் போட்டு வளர்த்தது!

அந்த காதலின் மொழி... மௌன மொழி!

மௌனம்தான் எத்தனை வீரியமும்... சக்தியும் வாய்ந்தது!

மௌனம்... இருவரையும் ஒருவராய் கட்டிப் போட்டு காதலில் உருக வைத்தது!

கண்ணும் கண்ணும் கலக்கும்போது... ஸ்பரிசிக்கும் போதுதான்... எத்தனை உணர்ச்சிகளின் பிரவாகம்!

இதழும் இதழும் விரிந்து... மலர்ந்து... மயங்கி... கிறங்கி... குழைந்து... உருகி... புன்னகையை மின்னலாய்க் கொட்டும்போது ஏற்படும் நெகிழ்வுதான் எத்தனை விலை மதிக்க முடியாதது!

இரு உடல்கள் இணைவதைவிட... இரு உள்ளங்கள் பின்னிப் பிணைவதில்... எவ்வளவு ஆனந்தம்!

இருவரின் இதயமும் கை நீட்டி... அன்போடு... பாசத்தோடு... நேசத்தோடு கட்டிக் கொள்ளும்!



காதலில் கரையும்!

நேச மழையில் சிலிர்ப்போடு நனையும்!

எதிர் எதிர் வீடு... அவர்கள் காதலுக்கு துணை நின்றது!

அவள் அறையின் சன்னலருகே உட்கார்ந்து... அவனைக் கண்ணுறுவாள்!

அவன் அறையில் சன்னலருகே நின்ற காலோடு... தவமாய் தவமிருந்து... அவளையே விழியெடுக்காமல் பார்த்துக் கொண்டிருப்பான்!

சந்தோஷ்... எப்போது லீவுக்கு பூஞ்சோலை கிராமத்திற்கு வருவான் என்று ஏங்கி... தவித்து... கலங்கி... தத்தளித்து... அவன் வரவுக்காய் தவமிருப்பாள், சஞ்சனா!

நாட்கள் வேகமாய் இறக்கைக் கட்டி பறக்காதா?

வார விடுமுறை எப்போது வரும்?

கல்லூரியில் கலாட்டா ஏற்பட்டு விடுமுறை கிடைக்குமா? என்று ஏங்கிப்போய் கிடப்பான், சந்தோஷ்!

வார லீவுகளுக்கு வந்தால் அபிராமி சில சமயங்கள் கத்துவாள்! சந்தோஷ் அதை சட்டை செய்ய மாட்டான்!

வார லீவு பண்டிகைகளுக்கு விடும் லீவு, செமஸ்டர் லீவு என்று அடிக்கடி வீட்டிற்கு வந்துவிடுவான்!

எல்லாம் அவனுடைய தேவதையை தரிசிக்கத்தான்!

விடிய விடிய இருவர் அறையிலும் விளக்கெரியும்!

அம்மாக்கள் எட்டிப் பார்த்தால் 'கல்லூரிப் பாடம்' படிப்பார்கள்! அவர்கள் சென்று மறைந்தால் இருவரும் 'காதல் பாடம்' படிப்பார்கள், வரிவரியாய்!

காதலில்... காதலனுக்காய் காதலியும்... காதலிக்காய் காதலனும்... எனக் காத்திருத்தலே பெரும் சுகம் தானே!

அந்த அருமையான... மதிப்பு மிகுந்த... ஆனந்தமான சுகத்தை தான்... சந்தோஷும், சஞ்சனாவும் அனுபவித்துக் கொண்டிருந்தனர்!

அவர்களிடையே பேச்சும்... சிரிப்பும்... தொடுகையும்... அணைப்பும்... அணைப்பால் ஏற்படும் சிலிர்ப்பும்... சந்தர்ப்பம் கிடைக்கும் போது அவள் மடியில் அவன் தலை வைத்துப் புரண்டும்... அவன் தோள் வளைவில் அவள் முகம் புதைத்து மூழ்கியும் என மற்ற காதலர்கள் போல் மகிழாமல்...

தூரேயே இருந்து... தொட்டுக் கொள்ளாமல்... கட்டிக் கொள்ளாமல்... பேசிக் கொள்ளாமல்... மௌனமே மொழியாய் காதலித்தனர்.

அந்தக் காதலில்தான் எத்தனை பேரானந்தம்!

அந்த பேரானந்தத்தைதான்... பனிச்சாரலாய் அனுபவித்தனர்!

அவர்களின் நேசத்திற்கு புறாவாய் படபடத்து... பறந்து... தூது சென்றது, கண்களும்... இதழில் ஏற்படும் புன்னகையும்தான்!

சந்தோஷ் கல்லூரியில் இருக்கும்போது... சஞ்சனாவை ஏற்கனவே தன் மனக்காமிராவால் விதவிதமாய் எடுத்த போட்டோக்களை பெரிது படுத்தி... திகட்டத் திகட்ட பார்த்து சுவைப்பான்!

கனவுகளில் காதல் பேசுவான்!

கற்பனையில் அவளோடு கைகோர்த்து திரிவான்!



என்னதான் கனவுகளிலும்... கற்பனைகளிலும் அவளோடு கைகோர்த்து காதல் பேசினாலும்...

அவளைக் கண்களால் பருகி... எட்ட நின்று... நிமிடம் கூட வீணாகாமல் பார்த்துக் கொண்டே இருக்கும் சுகமே தனிதான்!

அதனால் அடிக்கடி சென்னையிலிருந்து ஓடிவந்து விடுவான்!

அப்படி வரும் போது மறக்காமல் சஞ்சனாவுக்கும், தங்கைகளுக்கும் ஏதாவது வாங்கி வருவான்!

சஞ்சனாவுக்கு வாங்கி வந்த பொருட்களை கௌஷிகாவிடம் கொடுத்துவிடும்போது... அவள் முகம் வாடுவதைக் கண்டான்!

அதன் பிறகு கௌஷிகாவுக்கும் சேர்த்து வாங்கி வந்தான்!

கௌஷிகா மகிழ்ந்து போனாள்!

சஞ்சனாவோ அவன் வாங்கிக் கொடுக்கும் சுடிதார், சல்வார், பாவாடை, தாவணியில் கல்லூரிக்குச் செல்வாள்.

அவன் பரிசளித்த உடைகளையே அடிக்கடி சஞ்சனா உடுத்த.. அதைக் காண சகிக்காமல்... அந்த வருட தீபாவளிப் பண்டிகைக்கு ஒரேயடியாய் நான்கு சுடிதார் செட் வாங்கி வந்து கொடுத்தனுப்பினான்!

சஞ்சனா 'நன்றி' என்று ஒரு தாளில் எழுதி அனுப்புவதோடு சரி!

சஞ்சனாவினுள் சந்தோஷ் உயிர் வரை... உயிரின் எல்லை வரை ஊடுருவி கலந்து விட்டான்...! கரைந்து விட்டான்...!

சஞ்சனாவின் நினைவுகளை முழு நேரமும் ஆக்கிரமித்துக் கொண்டான், சந்தோஷ்!

சஞ்சனாவின் நினைவுத் தடத்தில் ஆழக் கால் தடம் பதித்தான்! அவள் மனப்பாதையில் அவனுடைய கால் தடங்களே நிறைய!

சஞ்சனாவின் நினைவுகளைத் திருடிக் கொண்ட திருடன், சந்தோஷ்!

சஞ்சனாவின் இதயத்தை ஆக்கிரமித்துக் கொண்டு... சிம்மாசனமிட்டு ஆட்சி புரியும் இளவரசன், சந்தோஷ்!

அவளின் அழகான பூ மனதைக் கொய்து கொண்ட கள்வன்... கந்தர்வன், சந்தோஷ்!

அவளின் நினைவு குளத்தில் நீச்சலடித்து... நெஞ்சில் நிறைந்தவன், சந்தோஷ்!

சஞ்சனாவின் இதயத்தில் எளிதாய் இறங்கி... காதலை வளரவிட்டவன், சந்தோஷ்!

சந்தோஷ்...

சந்தோஷ்...

சந்தோஷ்... என்று நாள் முழுக்க அவனை நினைவுகளில் சுமந்து... வெற்றுடம்பாய் வலம் வந்தாள், அவள் உயிர் அவனிடமிருக்க...!

சந்தோஷ் இல்லாத ஒரு வாழ்வை... அவளால் கற்பனைக்கூட செய்து பார்க்க முடியாது!

அந்த அளவு அவனிடம் தொலைந்து போய் இருந்தாள், சஞ்சனா!



ஒரு நாள்...

கௌஷிகாவின் நோட்டில்... கௌஷிகா என்ற பெயருக்கு பின்பு... சந்தோஷ் என்று சேர்த்து... ஸ்ரீராம ஜெயம் போல நோட்டு முழுக்க 'கௌஷிகா சந்தோஷ்' என்று எழுதியிருந்ததைக் கண்டு...

சஞ்சனா பதறிப் போனாள்!

அடுத்த நிமிடம் பத்ரகாளியானாள்!

"என்னடி? என்ன இது? தினம் பாடம் கேட்டுட்டு வரேன்னு அத்தை வீட்டுக்குப் போனதெல்லாம்... என் அத்தானை மயக்கத்தானா?"

சஞ்சனாவின் கேள்வியைத் தாங்க முடியாத கௌஷிகா அலறினாள்.

"ஐய்யோ..."

"என் அத்தானை மடக்கத்தானா...?"

சஞ்சனா எரிமலைக் குழம்பை விட வீரியமான வார்த்தைகளை அவள் மேல் வீச...

"சஞ்சனா... சஞ்சு... தெரியாமல் எழுதிட்டேன்டி?"

கௌஷிகா அவள் கைப்பிடித்துக் கதற...

"என்ன? எதுடி? எதுடி தெரியாமல் செய்துட்டே? சந்தோஷ் அத்தான் எனக்குத்தான்னு தெரியுமில்லே?"

"..........."

"அவரை நான்தான் மணந்துக்கப் போறேன்னு தெரியுமில்லே? என் உடமை... என் உரிமை... என் உயிர்.. என் சொந்தம்... என் சந்தோசம்... எல்லாமே என் சந்தோஷுன்னு தெரியுமில்லையா?

"..................."

"அவரை நான் என் உயிருக்குயிரா நேசிப்பதும் தெரியும் தானே?" என்று புயலாய் சீற...

"ஸாரி... ஸாரி!"

"என் சந்தோஷை நீ எப்படி நினைக்கலாம்?"

நெஞ்சுக்கூடு ஏறி இறங்க... பெரிய பெரிய மூச்சுக் களை வெளிப்படுத்தினாள், சஞ்சனா!

"ஐய்யோ இல்லடி! சும்மா... சும்மா தமாசுக்கு எழுதினேன்! என்னை மன்னிச்சிக்க சஞ்சனா!"

கௌஷிகா கெஞ்ச...

"தமாசா? எதுடி? மனசுல இல்லாதது தான் வெளியில வருமா? இப்படி கௌஷிகா சந்தோஷுன்னு எழுதிக்க வருமா? வேண்டாம்! பொய் சொல்லாதே!...

அத்தான்கிட்டே கணக்கு கேட்டுட்டு வரேன்னு முன்னே போனதெல்லாம்... முடிந்தால் அவரை கணக்குப் பண்ணிடலாம்ன்னு தானா, கௌஷிகா...?

கெமிஸ்ட்ரியில சந்தேகம்ன்னு கேட்க போனப்போ... அவருக்கும், உனக்கும் கெமிஸ்ட்ரி இருக்கான்னு தெரிஞ்சுக்கத்தானா...?

எப்படியாவது மயக்கி உன் மடியில அத்தானைப் போட்டு... உன்னிடம் இழுத்துக்கணும்ன்னு பாத்தாயா...?

என் அத்தானை உன் முந்தானையில் முடிந்து கொள்ள முயற்சி செய்தாயா...?

ச்சே...! இது தெரியாமல்... நானும் மட்டி மாதிரி... மடைச்சி மாதிரி... தினம் உன்னை நம்பி... அது கேட்டு



வா... இது கேட்டு வான்னு உன்னை அனுப்பி... என் தலையில நானே நெருப்பையள்ளிக் கொட்டிட்டேனா?"

"..............."

"என்னிடம் 'காதல் பார்வை' பார்க்கறாப்போல உன் னிடமும் பார்க்கிறாரா? அந்த மனுசனுக்கும் உன்மேல் ஆசை இருக்கா?"

சஞ்சனா சாமி வந்தாற்போலக் கத்தினாள்.

"சஞ்சு... நான் சொல்வதை நம்புடி! அவர் என்னைத் தப்பா ஒரு பார்வைகூட இதுவரைப் பார்த்ததில்லேடி!"

கௌஷிகா அழுதே விட்டாள்!

"அப்போ... நீதான் பார்ப்பாயா...?"

சஞ்சனா கண்ணை உருட்டிக் கேட்கவும்...

கௌஷிகா பயந்தே விட்டாள்.

"இல்லே!"

"நிஜத்தை சொல்லு?"

"............"

"உனக்கு என் சந்தோஷ் மேல ஆசையில்லையா?"

"............"

"உன் மௌனமே உன் மனசுல உள்ளதை மறைக் காமல் எனக்குத் தெரிவிக்குதே! உனக்கு அவர் மேல் ஆசையிருக்கா? உன்னைப் போய் என் தோழியா... அது வும் உயிர்தோழியா நினைத்து ஏமாந்து இருக்கேனே!...

நான் எவ்வளவு பெரிய முட்டாள்...!

அதுவும் இந்த உலகம் புரியாத கண்ட்ரி புருட்ன்னு என்னைச் சொல்லலாம்!" என்று அழவும்,

கௌஷிகா தேம்பலோடும்... விம்மலோடும் சொன்னாள்.

''என்னை மன்னித்துக் கொள், சஞ்சனா! சந்தோஷ் மேல் நான் ஆசைப்பட்டது தப்புதான்! நான் ஆசைப்பட்டா போதுமா...? அவர் என் மேல் ஆசைப்பட வேண்டாமா...? பிரியம் கொள்ள வேண்டாமா...?''

அவர் மனம் முழுக்க நீயிருக்க... என்னை எப்படி நினைப்பார்! சும்மா அறிவிலி போல ஆசைக் கொண்டுட்டேன்! என் மனதில் உள்ள ஆசையை அழிச்சிக்கிறேன், சஞ்சு!''

சஞ்சனா நம்பாமல் பார்க்க...

''நம்பாமல் பார்க்கிறாயே, சஞ்சு! நிஜம், சஞ்சு! சந்தோஷும் நீயும் சேர... என்னால் ஆன உதவியை உனக்குச் செய்வேன், சஞ்சு! சத்தியம், சஞ்சு!''

கௌஷிகா உறுதியாய் சொல்ல...

''இத்தனைப் பெரிய கள்ளியா இருந்திருக்கிறாயே! உன்னை எப்படி நம்புவது?''

''உன் மேல் ஆணை, சஞ்சனா! எனக்கு... என்னைவிட உன்னைத் தான்டி ரொம்பவேப் பிடிக்கும்! உன்மேல் ஆணை வைத்துமா... என்னை நம்பல? ம்?''

கௌஷிகா சோகமாய்... பாவமாய் முகத்தை வைத்துக் கொண்டு கேட்க...

''நம்புகிறேன்! சரி அத்தான் மனதில் நான் இருக்கேனா, கௌஷிகா...?''

சஞ்சனா மெதுவாய் தன் சந்தேகத்தைக் கேட்க...



''இது என்னடி இடியட் மாதிரி கேள்வி கேட்கறே!''

''இல்லை! எனக்கு சந்தேகம்தான்! சந்தோஷ்... என்னை விழிகளால் ஸ்பரிசிப்பதும்... உதட்டின் புன்னகையால் நலம் விசாரிப்பதும் மட்டும்தான்! அவர் என்னிடம் பேசுவதே இல்லையே!'' என்று குறைப்பட்டுக் கொள்ள...

''ரெண்டு பேர் சிரித்து... பேசி.. கும்மாளம் போட்டு... யாருக்கும் தெரியாமல் சந்தித்து... சில்மிஷம் செய்து கொண்டால்தான், காதலா...? நேசமா...?

சந்தோஷ்... உன்னைப் பார்க்கும் பார்வையிலேயே... அவர் உன் மேல் வைத்த காதல் தெரியவில்லையா?

கண்களால் பேசி... புன்னகையால் செய்தியை பரிமாறிக் கொண்டு... ஒருத்தரை ஒருத்தர் உயிராய்... உணர்வாய் நேசிக்கிறீங்களே!

இது... இதுதான்டி உண்மையான காதல்! காதலுக்கே களங்கம் கற்பிக்காத காதல்!

காதலே உங்களைப் பார்த்து நேசிக்கும்! சுவாசிக்கும்!

அப்படியொரு காதல் உங்களுடையது! உனக்கு எப்படி அத்தானின் மேல் சந்தேகம் வரலாம்?''

கௌஷிகா காரமாய் கேட்க...

''எனக்கு அத்தையை நினைத்தால் பயமா இருக்குடி!'' என்று மெல்ல முனக...

''அத்தை கிடக்கிறாள்! அவள் அப்படித்தான்! ஊரெல்லாம் உன்னை மட்டும் கட்டி வைக்க மாட்டேன்னு தம்பட்டம் வேறு அடித்துக் கொண்டு திரிகிறாள்!

ஆனால், அத்தான்... உன்னைக் கைவிட மாட்டார்! அத்தான்... அப்படி ஒரு மோசமானவரும் இல்லை!''

"எனக்கு இருந்தாலும் பயம்தான்!"

"எதுக்கு பயம்? சந்தோஷ் அத்தான் பற்றி உனக்குத் தெரியுமில்லையா? நீயில்லாமல் வேறொருத்தி கழுத்தில் தாலி கட்டிடுவாரா? கட்டிட விட்டுடுவேனா?" என்று கௌஷிகா கோபமாய்ச் சொல்ல...

"அம்மா பேச்சைக் கேட்டுக் கொண்டு..." என்று சஞ்சனா இழுக்க...

"அந்தப் பொம்பளை ரொம்ப மிஞ்சினால்... நானே அவளைக் கொன்று போட்டுடுவேன்!"

சஞ்சனா அதிர்ச்சியோடு அவளை நோக்க...

"உங்க ரெண்டு பேருக்கும் நடுவில் அவள் மட்டும் வரட்டும்! எதுனா பேசட்டும்! கலகம் பண்ணட்டும்! அரிவாளை எடுத்து ஒரேப் போடாப் போட்டுட்டு... உங்களைச் சேர்த்து வைத்துவிட்டு... ஜெயிலுக்குப் போயிடுவேன்!"

"கௌஷி...!"

சஞ்சனா அழுகையோடு... கௌஷிகாவை அணைத்துக் கொண்டாள்!

அத்தை எத்தனை எதிர்ப்பு தெரிவித்தாலும்... மறுத்தாலும்... அத்தான் கைவிட மாட்டார் என்று கள்ளமில்லாமல்... கபடமில்லாமல்... கண் மூடித்தனமாய்... எக்கச்சக்கமாய்... சந்தோஷ் மேலான காதலை வளர்த்துக் கொண்டாள் சஞ்சனா!

இதயத்தில் நேசத்தை வேரூன்றி விட்டாள்!

அவள் நம்பிக்கையை சந்தோஷ் பொய்க்கப் போவது தெரியாமல்!






சஞ்சனா... பி.ஏ., படிப்பை முடித்துவிட்டு மேற்படிப்புக்கு சேரவில்லை!

சந்தோஷ்... மீண்டும் அதே கல்லூரியில் எம்.எஸ்ஸி. சேர்ந்து படித்தான்.

பூஞ்சோலை கிராமம் திருவிழாக் கோலம் பூண்டது!

பொங்கல், தீபாவளிக்கு வீட்டைச் சுத்தப்படுத்தி வெள்ளை அடிக்கிறார்களோ இல்லையோ... ஆனால் திருவிழாவிற்கு வெள்ளை அடித்தனர்.

வீடுகளும், வீதிகளும் சுத்தமாயின! புதுமணப் பெண்ணாய் அந்த ஊரே அழகிய கோலம் கொண்டது!

சந்தோஷ்... திருவிழாவிற்கு வருவானோ... மாட்டானோ... என்று கவலையாய் இருந்தாள், சஞ்சனா.

"துர்க்கையம்மனுக்கு திருவிழா! அதனால் கல்லூரிக்கு விடுமுறை போட்டுவிட்டு வா, சந்தோஷ்!" என்று அபிராமி மகனுக்கு போன் செய்ய... சந்தோஷ் வந்து சேர்ந்தான்.

சந்தோஷைக் கண்ட சஞ்சனா குதூகலித்தாள்!

அன்று மாலை...

ஊரே திரண்டு துர்க்கையம்மனுக்கு பொங்கல் வைத்தது!

சஞ்சனாவும் அம்மாவுக்கு அடுப்பு மூட்ட மூன்று கற்களை பொறுக்கிக் கொண்டு வந்து... அடுப்பை தயார் செய்து... விறகு வைத்து... அடுப்பைப் பற்ற வைத்தாள்!

அதன் பிறகு அடுப்பை சத்தியவதி பார்த்துக் கொள்ள...

சஞ்சனா கௌசிகாவோடு திருவிழாக் கடைகளைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினாள்.

அங்கே பார்வதியம்மாள் சஞ்சனாவைக் கண்டு அதிசயத்தார்!

முதல் பார்வையிலேயே சஞ்சனாவைப் பிடித்து விட்டது! தனது மகனுக்கு இவளைப் பெண் கேட்டால் என்ன? பெண் பேரழகியாய் இருக்கிறாளே! அதே சமயம் நிரம்ப அடக்கமானவளாகவும்... அழுத்தமானவளாகவும் இருக்கிறாளே! இது போன்ற ஒரு பெண்ணால்தான் திவாகர் போன்ற முரட்டுக் குதிரையை அடக்க முடியும்!

மனதிற்குள் கணக்கிட்டார்!

திவாகரைத் தேடிப் போனார்!

அவனோ... தன் தோழர் பட்டாளங்களோடு... திரு விழாவிற்கு வந்த பெண்களைக் கிண்டல் செய்து சிரித்துக் கொண்டிருந்தான்!

திவாகர் வடக்கநந்தல் காரன்! பூஞ்சோலையிலிருந்து ஒரு பத்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கிராமமும் அல்லாத பெருநகரமும் அல்லாத சிறு நகரம் அது!

ஐயா ராமசாமியின் ஒரே மகன், திவாகர்!

ஐயா ராமசாமி என்றால் சுற்று வட்டத்து கிராம, நகரத்து மக்களுக்கு நன்கு தெரியும்!

வள்ளல்!



வாரி வாரி கொடுக்கும் தாராள மனம் படைத்தவர்!

சுற்று வட்டத்து மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் நீதிமான்!

அங்கே போலீஸ், வக்கீல், நீதிபதியைவிட மதிப்பு மிக்கவர், ஐயா ராமசாமி!

ஏதாவது பிரச்சனையென்றால் அந்தப் பக்கத்து மக்கள் போலீஸ் ஸ்டேஷன், கோர்ட் என்று போக மாட்டார்கள்! உடனே ஐயா ராமசாமியைத்தான் போய் பார்ப்பார்கள்! பிரச்சனையை தீர்த்துக் கொண்டு வருவார்கள்!

ஒரு சின்ன கெட்டப் பழக்கமும் இல்லாதவர், ஐயா ராமசாமி!

ஆனால், அவர் மகனோ அவருக்கு எதிர் மாறான குணம் கொண்டவன்!

எந்த ஒரு கெட்டப் பழக்கமும் அவனிடம் தஞ்சம் புகாமல் இல்லை! ஊரில், உலகில் உள்ள அத்தனை கெட்டப் பழக்கத்திற்கும் அடிமையானவன்!

படிப்பும் சரியாக ஏறவில்லை!

கல்லூரிக்கு லஞ்சம் கொடுத்து... பி.ஏ. பட்டத்தை பாஸ் பண்ணிக் கொண்டு வந்தவன், திவாகர்!

வயது இருபத்தேழு ஆகிறது!

கல்யாணம் வேண்டாம் என்று கூறிக் கொண்டு பொலிகாளையாய் சுற்றிக் கொண்டிருக்கிறான்!

தினம் தினம் அவன் சட்டைப் பையில் பத்தாயிரத்திற்கு மேல் பணத்தை வைத்துவிட வேண்டும்! இல்லையேல் சத்தம் போடுவான், பார்வதியம்மாளிடம்!

இரவு குடிக்காமல் ஒரு நாளும் வீடு திரும்பி வரமாட்டான்!

ஐயா எவ்வளவோ கண்டித்துப் பார்த்து விட்டார்! திவாகர் அவர் பேச்சைக் கேட்காமல் போக... கண்டு கொள்ளாமல் விட்டு விட்டார்!

தந்தையும் மகனும் பேசியே இரண்டு வருடத்திற்கு மேலாகிறது!

பார்வதியம்மாளும் கண்ணீர் விட்டு... கதறி... அழுது புலம்புவார்! திவாகர் திருந்திய பாடில்லை!

காலையில் காரை எடுத்துக் கொண்டு சென்றான் என்றால் இரவுதான் வீடு திரும்புவான், திவாகர்!

அந்த நேரத்தில் அவனுக்குப் பிடித்த வெள்ளைப் பணியாரமும், தேங்காய் சட்னியும் செய்து சுடச்சுடப் பரிமாற வேண்டும்! அம்மாவின் அந்த மெனு அவனுக்குப் பிடிக்கும்! அதுவும் அம்மாவே வந்து செய்து தர வேண்டும்! வேலைக்காரர்கள் வந்து செய்து தர முன் வந்தால் கத்துவான்! உண்மையிலேயே பட்டினியாய் போய் படுத்துக் கொள்வான்!

அதனால் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் பார்வதியம்மாளே வந்து செய்து தருவார்!

திவாகருக்கு ரம்யா என்ற தங்கை உண்டு!

அவள் திருமணமாகி அமெரிக்க மாப்பிள்ளையோடு அங்கேயே இன்பமாய் வாழ்கிறாள்!

கோடை விடுமுறையில் இந்தியாவிற்கு வருவாள்! அண்ணனின் செய்கை பிடிக்காமல்... மாமியார் வீட்டில் நிறைய நாட்கள் இருந்துவிட்டு... கடமைக்காய் வருவாள்! அந்த சமயம் பார்வதியம்மாளே அவளைக் கொடுத்த இடம் தேடி அடிக்கடி சென்று விடுவார்!



திவாகருக்கு திருமணம் ஆனால் தேனிலவு கொண்டாட என்றே... அவன் சிறு வயதாய் இருக்கும் போதே ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, வெள்ளிமலை போன்ற இடங்களில் பெரிய பெரிய பங்களாக்களையும், தேயிலை, காபி தோட்டங்களையும் வாங்கிப் போட்டு வைத்துள்ளார், ஐயா ராமசாமி!

மகன் எந்த ஊரில் ஆசைப்பட்டு தேனிலவை வைத்துக் கொள்வானோ என்று கனவு கண்ட அவர்கள் ஆசையில் 'திருமணமே வேண்டாம்!' என்று கல்லெறிய ஐயா ராமசாமியும், பார்வதியம்மாளும் துவண்டு விட்டனர்!

ஊரில் ஏகப்பட்ட சொத்திருக்கிறது!

இவ்வளவு சொத்துக்களையும் நம்பிக்கையான ஆள் கொண்டு ஐயாவே நிர்வகிக்கிறார்!

மகன் வளர்ந்து தன் சுமைகளைக் குறைப்பான் என்று எதிர்பார்த்தவருக்கு ஏமாற்றம்!

மகன் தொழிலில் பங்கு கொள்ளாததால் அவர் துயரப் படவில்லை! துக்கப்படவில்லை!

மகன் இந்த அளவு கெட்டு குட்டிச் சுவரானதில் ரொம்பவே துவண்டு விட்டார்!

சிங்கம் போல இருந்தவர்... சீக்கிரமே மூப்பின் பிடியில் சிக்கி விட்டவர் போல காட்சியளிக்கிறார்!

நோயே அண்டாத உடம்பு... இப்போதெல்லாம் அடிக்கடி நோயை பட்டுக் கம்பளம் விரித்து... வரவேற்று... வாழ்த்துப் பாடுகிறது!

மகனுக்கு ஒரு திருமணம் மட்டும் வற்புறுத்தி செய்து வைத்து விட்டால்... மனைவி என்று ஒருத்தி வந்து

முடியைப் பிடித்து... கேள்வி கேட்டுத் திருத்தி விடுவாள் என்று மலை போல் நம்பிக்கை, பார்வதியம்மாளுக்கு!

திவாகரை திருத்த... கடைசி ஆயுதமாய் நம்பியிருப்பது அவனுடைய திருமணத்தையும், மனைவியையும் தான்!

அவனுக்குத் தெரியாமலேயே பெண் பார்க்கச் சென்றனர்!

எத்தனையோ பேர் பெண் கொடுக்க முன் வந்தனர்!

அதில், ஒன்று பெண்ணைப் பிடிக்கவில்லை! அல்லது குடும்பத்தைப் பிடிக்கவில்லை!

இரண்டும் பிடித்து விட்டால்... பெண்ணின் வீட்டாரோ திவாகரின் குணம் கேள்விப்பட்டு... காத தூரம் ஓடினர்!

துக்கத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்கள் மகனை வம்படியாய் இழுத்துக் கொண்டு குல தெய்வம் துர்க்கையம்மன் வழிபாட்டிற்கு வந்தனர்!

ஐயா சாமியை வணங்கிவிட்டு... இருவரையும் இங் கேயே விட்டு விட்டுச் சென்று விட்டார்!

இவர்கள் இரவு சாமி ஊர்வலத்தைக் கண்டுவிட்டு காலையில்தான் செல்வார்கள்.

அம்மா அவனைக் கண்டு விட்டு அருகில் வந்தாள்!

''திவா... அந்த மஞ்சள் தாவணியும்... குங்குமக் கலர் பட்டுப் பாவாடையும் உடுத்தி... ரெட்டை ஜடையில்... அழகாய்... தேவதையாய் ஒரு பெண் நிற்கிறாளே! அவளைப் பார், திவாகர்! அவள் ரொம்ப லட்சணமான அழகு இல்லையா?'' என்று சந்தோஷத்தோடு கேட்க...

திவாகர் திரும்பிப் பார்த்தான்! ஆனால், அம்மா என்ன நோக்கத்திற்காகக் காட்டுவாள் என்று தெரிந்ததனால் திவாகர் எரிச்சலுற்றான்!



''அதுக்கென்ன?'' என்று தாயை முறைத்தான்.

''ஆமாவா இல்லையா, திவா?''

''எம்மா தொல்லை செய்யறே? அழகாத்தான் இருக்கா? ஏன் அவளுக்கு 'மிஸ் யுனிவர்ஸ்'ன்னு எதுனா பட்டம் தர விரும்பறீங்களா?'' என்று நக்கலாய் கேட்க...

''இந்த இடக்கான பேச்சுதானே வேண்டாம்!''

''அப்போ என்னை விட்டு தூரேப்போம்மா!''

''அவள் உன் பக்கத்தில் நின்றால் ஜோடிப் பொருத்தம் ரொம்ப நல்லாயிருக்கு, கண்ணா.''

''ஐய்யோ... புலம்ப ஆரம்பிச்சிட்டீங்களா?''

''அவள் உனக்கு மனைவியா அமைந்தால் ரொம்ப நல்லாயிருக்கும்!''

''வீணா கனவு காணறதை விட்டுட்டு தள்ளிப் போங் கம்மா!''

''அவள் முகத்தைப் பாரேன்! அழகோட... அறிவும் உள்ளவளாய் தெரியுது! உன்னை அவளால்தான் திருத்த முடியும்!'' அழுத்தம் திருத்தமாய் கூற...

''என்னைத் திருத்த இனி ஒருத்தி பிறந்துதான் வரவேண்டும்!''

''சரியான அழுத்தக்காரியாகவும்... பிடிவாத குண முள்ளவளாகவும் இருப்பா போலத் தெரியுது! உனக்கு அவள்தான் சரிப்படுவா!''

''வர்லேன்னு சொன்னவனை அடம் பிடித்து அழைத்து வந்துட்டு... இங்கேயும் பழைய புராணத்தைப் பாடணுமா?''

''திவாகர் கண்ணா...'' கண்களில் ஆசை மின்ன பார் வதியம்மாள் கூப்பிட...

"என்னை ஒருத்தி வந்து எதிர்த்துக் கேள்வி கேட்கக் கூடாது! அடக்கக் கூடாது! அதைச் செய்யாதே... இதைச் செய்யாதேன்னு ஆர்டர் போடக்கூடாதுன்னுதானே... நான் எவளையும் கட்டிக்க மறுக்கிறேன்..

திருமணங்கிற சடங்கு என் வாழ்க்கையில் வர வாய்ப்பில்லே! வீணா எதுனா கனவு கண்டுட்டு... மனசைக் கஷ்டப்படுத்திக்காதேம்மா!

இந்த உலகத்துல நான் மதிக்கிற ஒரே ஜீவன் நீங்க மட்டும்தான்! உங்களுக்கு அடங்குவேனே தவிர... உங்க ஆசைக்கெல்லாம் கட்டுப்பட மாட்டேன்! உங்க மதிப்பை... எனக்கு திருமணம் செய்து வைக்கிறேன்னு ஏதாவது உளறிக் கெடுத்துக்காதீங்கம்மா!" என்று சத்தம் போட...

"திவாகர் உனக்குன்னு ஒருத்தி வரணும்டா! அந்த தேவதை வந்து எங்க வீட்டு வாரிசை பெத்து என் கையில கொடுக்கணும்! ஏங்கிட்டு இருக்கேன், ராசா! என் நெஞ்சுக் கூட்டுல இருக்க ஆசைக்கு தீ வச்சுடாதேப்பா!" என்று கண்ணீர் பளபளக்க பார்வதியம்மாள் கூற...

"அம்மா... புலம்பாதீங்க! போங்கம்மா!" என்று கோபத்துடன் திவாகர் சொல்ல...

"அந்த துர்க்கையம்மன்தான் கண் திறந்து... உனக்கு நல்லதொரு புத்தியைக் கொடுக்கணும்!"

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அம்மன் சன்னதியை நோக்கிச் சென்றார், பார்வதியம்மாள்.

"டேய் திவா... நிஜமாகவே அவள் இயற்கையான பேரழகிதான்டா!"

"வானத்திலிருந்து வந்த தேவதைப்போல அட்டா... என்ன அழகு?"



"கண்கள் ரெண்டும் மீன் குஞ்சுகள்தான்!"

"குண்டு முகமும்... கன்னக் கதுப்புகளும் ஆப்பிள் போல இருக்கே! ஏதோ ஒரு நடிகையை அவள் வதனம் நினைவு படுத்துதே!"

"மீரா ஜாஸ்மின் போலவே இருக்காடா?"

நண்பர்கள் மாற்றி மாற்றி அவளை வர்ணிக்க...

திவாகரும் அவளைக் கூர்ந்து நோக்கினான்.

இதுவரை எத்தனையோ அழகிகளை திவாகர் கண்டிருக்கிறான்! ருசித்திருக்கிறான்! ஆனால், இவள் அழகு உண்மையிலேயே கண்ணைக் கட்டிப் போட்டது! நெஞ்சை சிறை செய்து கொண்டது!

ஒரு முறைக்குப் பலமுறை அவளைப் பார்க்கத் தூண்டியது! பருகத் தூண்டியது!

பின் மாலை வரை அவள் போகுமிடமெல்லாம்... அவளை ஆசையாசையாய் ரசித்துப் பார்த்துக் கொண்டு பின்னாலேயே சென்றான்!

"ஒரு நாளைக்கு என்னோட இருக்க... எவ்வளவு கூலி கேட்பா?"

திவாகர் நண்பனைப் பார்த்துக் கேட்க...

"போடா முட்டாள்! உனக்கு அந்தப் பெண்ணைப் பார்த்தால்... அந்த மாதிரி பெண் போலத் தெரியுதா?"

"............"

"சின்னப் பெண்! குடும்பப் பெண்! இந்த ஊர்ல அவ அப்பாவும் ஒரு பெரிய மனிதராம்! நல்ல குடும்பமாம்! பி.ஏ. படித்திருக்கிறாள்! உன்னோட படுக்க வர... கூலி கேட்கிற ஜாதியில்லே, அவள்!"

"அப்புறம் அவளை எப்படி அடைவது?" திவாகர் தீவிரமாய் கேட்க...

"அதெல்லாம் முடியாது!" நண்பன் கூற...

"அவளை உனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கா, திவாகர்?" திருபாகரன் கேட்க...

"ஆமா!"

"அவளை அடையணும்னால் அதுக்கு ஒரே வழி திருமணம் தான்!"

"டேய்... டேய்..." என்று திவாகர் சீற...

"சத்தியமா, மச்சான்! உனக்கு அவள் கிடைக்கணும்னால் அம்மாவிடம் சொல்! அம்மா... உடனே ஐயாவைக் கூட்டிட்டுப் பெண் வீட்டிற்குப் போவார்! பெண் வீட்டாரின் சம்மதத்தோடு உனக்கு அவளையே திருமணமும் செய்து வைப்பார்!" ராஜா சொல்ல...

"அதை விட்டுட்டு அவளை வேசியாய் பார்க்காதே! காசுக்காக மானத்தை விற்கிற கூட்டத்தைச் சேர்ந்தவள் இல்லை, அவள்! பல்லை இளிச்சிட்டு போய் நின்னே... உன் தோளை உரித்து விடுவாள்! கொஞ்சம் கோபமுள்ள முரட்டுப் பெண் கூடவாம்!" சிவா சொன்னான்.

இரவு...

சாமி ஊர்வலம் வர... வான வேடிக்கையும், கரகாட்டமும் களைக்கட்டியது!

மக்கள் கூட்டம் அலை மோதியது!

சஞ்சனா தந்தையிடம் அனுமதி பெற்று அங்கே வந்தாள்!

சாமியையும், அப்படியே சந்தோஷையும் ஆசை தீர தரிசிக்கலாம் என்ற நப்பாசையில்தான் வந்தாள்.



கௌஷிகாவும் அவளோடு இருந்தாள்!

திவாகர் சஞ்சனாவையே வைத்த விழி எடுக்காமல் விரசமாய் பார்த்துக் கொண்டிருப்பதை... சந்தோஷ் கண்டு கொண்டான்!

கோபம் கோபமாய் வந்தது.

"ரமேஷ்... அவள் பேர் என்னடா?" திவாகர் கேட்க...

"சஞ்சனாவாம்!"

"பேர்ல கூட அழகு தெரியுதுடா! என் கண்ணைக் கட்டி காந்தமா வளைச்சி இழுக்கிறாள்! சிலை போல சிறுத்த இடுப்பும்... பெருத்த மார்புமாய்... ஐய்யோ... சாண்டில்யன் எழுதும் வரலாற்று நாவல்ல வர ஹீரோயின் போல இருக்காளே! என் உள்ளம் கொள்ளை போகுதே!"

திவாகர் சொல்ல...

சந்தோஷுக்கு கண்மண் தெரியாமல் கோபம் வந்தது.

ஓடிப்போய் திவாகரின் சட்டையைக் கொத்தாய்ப் பற்றினான்.

"யாருடா? யாருடா நீ? இந்த ஊருக்குப் புதுசா? கொலை பண்ணிடுவேன், ராஸ்கேல்! யாரை? யாரைப் பார்த்துடா இப்படி நாகரீகமே இல்லாமல் வர்ணிக்கிற?"

தணலாய் வார்த்தைகளைக் கொட்டினான், சந்தோஷ்.

"ஏய்... விடுடா... விடுடா..." என்று சட்டையைப் பிடித்த கையை அப்புறப்படுத்த திவாகர் போராட...

சந்தோஷ் ஓங்கி அறைந்தான்!

திவாகர் அவமானமாய் உணர்ந்தான்!

"அவளை வர்ணித்தால் உனக்கென்னடா?" திவாகர் கத்தினான்.

"அவள் என் உயிர்டா! என் உடமைடா! என் மாமன் மகள்! நாயே... நீ எப்படி அவளை அசிங்கமாய் பார்ப் பாய்... பேசுவாய்?"

"உடமையாம் உடமை! எந்த விதத்துலடா?"

"நான் லவ் பண்ணும் பொண்ணு! நாளைக்கு என்னை மணக்கப் போகிறவள்! என் மனைவி! அவளை கண்டபடி நாக்குமேல் பல்லைப் போட்டு பேசினே... கந்தலாயிடுவே!"

அவனை விட மூன்று வருடத்திற்கு இளையவன் அப்படிக் கேட்க... பெருத்த அவமானமாய் இருந்தது திவாகர்க்கு!

"நான் அப்படித்தான் பேசுவேன்! உன்னால் என்னடா செய்ய முடியும்?" என்று திவாகர் கோபமாய் கேட்க...

அடுத்த நொடி... இருவரும் அடித்துக் கொண்டு... ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு உருண்டனர்!

கூட்டம் கூடி வேடிக்கைப் பார்த்தது!

இருவரையும் தனித்தனியே பிரித்து விட்டது.

இதையெல்லாம் அறியாத சஞ்சனாவோ சந்தோசமாய் வீடு நோக்கிப் பறந்தாள்!

திவாகரால் வரப்போகும் விபரீதம் தெரியாமல்!

## 7



மறுநாள் காலை...



இந்த நிகழ்ச்சியை அபிராமியின் பாம்பு செவியில் யாரோ போய் மகுடி வாசித்துவிட... பாம்பாய் படமெடுத்து ஆடினாள்.

"என்ன சந்தோஷ்... நான் கேள்விப்பட்டது நிஜம் தானா?" என்று கோபமாய் சீறினாள்.

"என்னம்மா? என்ன கேள்விப்பட்டே? ஏன் இந்தக் கோபம்?"

"சொல்லுடா, சந்தோஷ்?"

"எதைம்மா?"

"அந்த சஞ்சனா சிறுக்கியை எவனோ வர்ணிக்க... சண்டைக்கு போனியாமே? உண்மையாகவா?"

சந்தோஷ் மௌனமாய் இருந்தான்.

"என்னடா பதில் சொல்லாமல் இருக்கே? என்ன நெஞ்சழுத்தம், சந்தோஷ்?"

"நமக்கும், அவங்களுக்கும் பேச்சு வார்த்தை இல் லாமல் இருக்கலாம்! ஆனால், மாமாங்கிற சொந்தம் விட்டுப் போயிடுமா?"

"என்னடா சொல்றே?" அபிராமி ஆங்காரமாய் கேட்க...

"ஏம்மா கத்தறே? பீபி, சுகர்ன்னு உடம்புல எக்கச்சக்க நோய் இருக்கு! இப்படி கத்தி எதையாவது இழுத்து விட்டுக்காதே!"

"பேச்சை மாத்தாதே, சந்தோஷ்! ஐயா ராமசாமி பைய னோட கட்டி சண்டைப் போட்டியா?"

"ஆமாம்மா! நம்ம சஞ்சனாவைப் பற்றி தப்புத் தப்பா பேசறான்! பார்க்கிறான்! பார்த்துட்டு சும்மா இருக்கச் சொல்றீயா?"

''நமக்கு ஆகாதவங்களுக்கெல்லாம் பரிஞ்சிட்டுப் போவியா?''

''மாமா நல்லவர்! ரெண்டு குடும்பமும் இப்போதும் சேரணும்ன்னு நினைக்கிறவர்! புற்று நோயால் அவதிப் படறார்! கொஞ்சமும் உனக்கு மனமிரங்கலையே!''

''எப்படிடா இரங்கும்? பொண்டாட்டி முந்தானையில ஒளிஞ்சவனுக்கெல்லாம்... கடவுள், தண்டனை கொடுத்துட்டார்!'' என்று இகழ்ச்சியாய் சொல்ல...

''மாமா பாவம்! இப்படியெல்லாம் மனசாட்சியே இல்லாமல் பேசாதம்மா! ஒரு பாவமும் செய்யாத மாமா வையே கடவுள் தண்டிக்கும்போது... உன்னை நிறையவே தண்டிச்சுடுவான்!''

''மாமன் குடும்பத்துமேல் உனக்கென்ன இவ்வளவு பாசம்?''

''பாசத்தை மூடி வைக்க முடியாதும்மா! நீ அவங்க கிட்டவெல்லாம் பேசக்கூடாதுன்னே... பேசல! ஆனால், சஞ்சனாவை எவனோ கண்டபடி வர்ணிப்பான்! அதைப் பார்த்துட்டு என்னால சும்மா இருக்க முடியாதும்மா!''

''ஏன்? ஏன்டா?''

''நான் அவளை நேசிக்கிறேம்மா! நாளைக்கு அவளைத் தானே கட்டிக்கப் போறேன்!''

மனதில் அடைத்து வைத்துக் கொண்டிருந்ததை... தாயிடம் துணிச்சலாய் வெளியிட்டு விட்டான்.

''உனக்கு அவ்வளவு துணிச்சலா?''

அபிராமி சாமியாடினாள்!

''சின்ன வயசுல இருந்து நீதானே அவளைக் காட்டி 'உன் பொண்டாட்டி'ன்னு பழகிவிட்டே!''



''அது அப்போ! இனி அதுபோல வெறும் கனவு கூட கண்டுடாதே!''

''நான் நிஜத்தை தான் சொல்றேன்! சஞ்சனாவைத்தான் திருமணம் செய்துக்குவேன்! என் மனைவின்னால் அது சஞ்சனாத்தான்!''

சந்தோஷ் அழுத்தம் திருத்தமாய் சொல்ல...

''ஐய்யோ.. ஐய்யோ... என் தலையில ஏன்டா இப்படி பெரிய கல்லைத் தூக்கிப் போடறே? பேசலே... பேசலேன் னுட்டு... எங்கிருந்து காதல் வந்தது?''

''சின்ன வயதுல இருந்தேம்மா! என் காதலை வளர்த்தவள், நீதான்! வளர்ந்து பெரியவனாக... இதுக்குப் பேர் தான் காதல்ன்னு தெரிஞ்சிக்கிட்டேன்! சஞ்சனா விடம் பேசலேன்னாலும்... பழகலேன்னாலும்... என் உள்ளுக்குள்ள காதல் ஆலமரமா வளர்ந்துடிச்சி!'' அவன் காதலோடு சொல்ல...

''அந்த சிறுக்கி மட்டும் என் மருமகளா வந்தால்... அந்த நிமிடமே... நான் உயிரோடு இருக்க மாட்டேன்!''

''ஏம்மா... மிரட்டறீயா, என்ன?''

''இல்லேடா நிஜமாத்தான் சொல்றேன்!''

''எத்தனை நீ எதிர்த்தாலும் சஞ்சனாத்தான்... எனது மனைவி! அதைக் கடவுளால் கூட மாற்ற முடியாது! தெரியுமாம்மா?''

சந்தோஷ் அழுத்தமாய் சொல்ல...

''அவ எதைடா காட்டி மயக்கினா? இவ்வளவு தீவிரமா இருக்கியே! அவளோட தப்பு தண்டாவரை போயிட் டையா?''

"அசிங்கமா பேசாதேம்மா! தாய்ன்னு பார்க்கறேன்!"

"இல்லேன்னால்?"

"வர கோபத்துக்கு அறைஞ்சிடுவேன்!"

"அப்படித்தான் சொல்லுவேன்! எதைப் பார்த்து மயங்கினே? அவள் ஆத்தா தான் பாடம் புகட்டியிருப் பாள், சஞ்சனா சிறுக்கிக்கு! வரி பிசகாமல் உன்னை வளைச் சிப் பிடிச்சுட்டாள்! ஆத்தா... என் தம்பியை முடிச்சி கிட்டாள்! அவ மகள்... என் மகனை முந்தானையில முடிஞ்சிட்டாளா? மகனே... உனக்கு அப்படி ஒரு நினைப்பு இருந்தால் செத்துடுவேன்டா!"

அபிராமி அழுகையோடு கூற...

"எம்மா... திரும்பத் திரும்ப செத்துடுவேன்னு மிரட்டறே!" அலட்சியமாய் சந்தோஷ் கூற...

அபிராமி எழுந்து ஓடினாள்!

அறையைப் பூட்டினாள்!

ஒரு சேலையை எடுத்து... பேனில் போட்டு... சுருக்கு மாட்ட போக...

சந்தோஷ் கதவை உடைத்து... தாயைக் காப்பாற்றி னான்.

"என்னைக் காப்பாற்ற நீ யாருடா? நீ என் எதிரிடா?" அபிராமி கத்த...

"அம்மா... அம்மா..." என்று பதறினான்.

"உன் முகத்துல விழிக்கவே பிடிக்கலே!"

"அப்படியெல்லாம் சொல்லாதேம்மா!"

"போ.. போயிடு!"



"அவள் நம்ம சஞ்சனாம்மா! நம் மாமா பொண் ணும்மா!"

"அவள் பேச்சை எடுத்தே... நான் சாவில் இருந்து தப்ப மாட்டேன்!"

"ஏம்மா.. ஏன்?"

"எனக்கு அவங்களைப் பிடிக்கலை! என் மனசுக்கு விரோதமா நடந்தே... நான் செத்துப் போவேன்! அப்புறமா நீ கத்திக் கதறப் போறே! உங்களை எல்லாம் அநாதையா தவிக்க விட்டுட்டுப் பரலோகம் போகத்தான் போறேன்! அது கூடிய சீக்கிரம் உன்னால் நடக்கும்!"

அபிராமி சொல்லிவிட்டுப் படுக்கையில் விழுந்து அழுதாள்.

சந்தோஷ் சிலையாக நின்றான்.

அபிராமி வீட்டில் நடந்தவைகள் எதுவுமே... சஞ்சனா வீட்டிற்குத் தெரியாது!

ஏன் திவாகர் சந்தோஷுக்கு நடந்த கைகலப்புக்கூட ஆதவனுக்குத் தெரியாது! காலையிலேயே கிளம்பி விட்டனர், ஒரு திருமணத்திற்கு!

திவாகர் வீட்டிற்குச் சென்றவன் அன்று நாள் முழுக்க வெளியே செல்லவில்லை!

கூண்டுப் புலியாய் அலைந்தான், அறைக்குள்ளே!

அவன் உள்ளம் அவமானத்தால் கொழுந்து விட்டு எரிந்தது!

அவன் ஆத்திரம் சந்தோஷைப் பழி வாங்கினால்தான் அடங்கும்!

'என் சஞ்சனா' என்று என் சட்டையைப் பிடித்தவ னிடம் 'பாருடா இவள் இப்போது என் சஞ்சனா' என்று நெஞ்சை நிமிர்த்திக் காட்ட வேண்டும்!

அதற்கு ஒரே வழி? திருமணம்தான்!

அம்மா சந்தோசப்படுவாள்!

அப்பா பூரித்துப் போவார்!

இருவரையும் உடனே அழைத்துக் கொண்டு சஞ்சனா வீட்டிற்குச் செல்ல வேண்டும்! அவளைப் பெண் கேட்க வேண்டும்!

அந்த வீடும் சம்மதித்தால்... உடனே திருமணத்தை நடத்த வேண்டும்!

சஞ்சனாவை மனைவியாக்கி... சந்தோஷ் முகத்தில் கரியைப் பூச வேண்டும்!

பார்வதியைத் தேடி சமையலறைக்குச் சென்றான்.

"என்னம்மா வேலையா இருக்கீங்களா?"

அக்கறையாய் கேட்ட மகனை ஆசையோடு நோக்கினார், பார்வதி.

உலகத்து சந்தோசமெல்லாம் அவர் முகத்தில் மலர...

"ஏன்? என்னப்பா, திவா?" என்று கேட்க...

"நான் உங்களோட தனியா பேசணும்!"

வேலைக்காரிகளைப் பார்த்துச் சொன்னான்.

குறிப்புணர்ந்த இருவரும் அவ்விடம் விட்டு அகன்றனர்.

"அம்மா... நான் நேரே விஷயத்துக்கு வரேன்!"

"ம்... சொல்?"

"நான் திருமணம் செய்துக்கத் தயார்!"

உடனே பூரித்த பார்வதியம்மாள்...

"திவா... திவா... நிஜம்தானா? நீ சொல்றது நிஜம் தானா?"



"ஆனால் ஒரு கண்டிசன்..."

"என்னப்பா?"

"திருவிழாவுல காட்டினாயே... அந்தப் பெண் என்றால்... அடுத்த முகூர்த்தத்திலேயே... நான் அவள் கழுத்தில் தாலி கட்ட தயார்!" என்று முடிவாய் சொல்ல...

"அதுக்கென்ன? அப்பாட்ட சொல்றேன், தயா! நாளைக்கே அந்தப் பெண்ணைக் கேட்க ரெண்டு பேரும் போறோம்!

"நான் திருமணம்னு ஒண்ணு செய்து கொண்டால்... அவளைத் தான் பண்ணிப்பேன்! அவங்க வீட்டுல மறுத்துட்டா... அதுக்காக வேற பெண்ணை மணக்க மாட்டேன்! எனக்கு தேவை அவள்தான்! என் மனைவியா! புரியுதாம்மா?"

திவாகர் அழுத்தம் திருத்தமாய் சொல்ல...

"திருமணமே வேண்டாம் என்றவன் இந்த அளவு இறங்கி வந்திருக்கிறாயே... சந்தோசமா இருக்குப்பா, திவா! அந்தப் பெண்ணோட தாய், தகப்பன் கால்ல விழுந்தாவது... அவளை உனக்குக் கட்டி வைக்கிறேன்!"

பார்வதியம்மாள் கண்கள் கலங்கக் கூற...

"ஏன் இப்படிப் பேசறீங்க?"

திவாகர் கோபத்தோடு கேட்க...

"உன்னைப் பற்றித்தான் சுற்று வட்டத்துக்கே தெரியுமே, திவாகர்! குருடி கூட கொஞ்சம் யோசிப்பாள்! அவளோ தங்க விக்ரகம் போல இருக்கா! அவங்க வீடும், அவளும் சம்மதிக்கணும்!

இந்த பாழாப்போன பணம் உன்னைக் கெடுத்ததா? இல்ல உன்னை எனக்கு வளர்க்கத்தான் தெரியலையா?

இப்போ நொந்து என்ன செய்வது? காலம் கடந்து வர ஞானோதயத்தால் என் புண்ணியம்? ம்?''

பார்வதியம்மாள் சலித்துக் கொண்டாலும்... கண வரைத் தேடி சிட்டாய்ப் பறந்தார்.

ஐயா ராமசாமியிடம் விஷயத்தைச் சொல்ல...

''நிஜமாவா? நிஜமாவா, பார்வதி? திவாகர் அப்படியா சொன்னான்! அந்த பொண்ணுன்னால் கட்டிக்கிறேன்னு சொன்னானா?''

''ஆமாங்க!''

''அந்த ஆத்தாதான் கண் திறந்து நம்ம பிள்ளைக்கு நல் வழிக் காட்டாறாள்!

துர்க்கையம்மன் அருளால் ஆதவன் மட்டும் சம்மதித்து விட்டால்... இந்த உலகில்... என்னைவிட சந்தோசமான வன் இருக்க மாட்டான்...!

பாரு... எங்கே இந்தத் தறுதலை... இப்படியே சுத்திட்டு... திருமணம் செய்துக்காமல்... நம் வம்சத்தை அழிச்சிடு வானோன்னு பயந்தேன், பார்வதி...

இனி பயமில்லே! ஐயா ராமசாமியோட வாரிசு வழி வழியா இந்த சொத்தை ஆளப்போகுது! ஊருக்கெல்லாம் நன்மை செய்யப் போகுது!''

''நிச்சயமா செய்யுங்க!''

''மருமகள் வந்த மறுவருடமே... ஒரு பிள்ளையை பெத்து... என் கையில் கொடுக்கச் சொல்லி... நீதாம்மா அவளுக்கு அறிவுறுத்தணும்!''

ஐயா ராமசாமி மகிழ்ச்சியில் துள்ளினார்.

''இத்தனை ஆசையா உங்களுக்கு?''



''ம்!''

''ஐய்யோ... இப்போ உங்களைப் பார்க்க... ஒரு இருபது வயது குறைஞ்சாப்போல தெரியுதுங்க!''

பார்வதி ஆனந்தத்தோடு சொல்ல...

''அப்போ நீ ரெடிங்கிறே?''

''எதுக்கு?'' பார்வதியம்மாள் புரியாமல் கேட்க...

''திவாகருக்கு ஒரு தம்பியைப் பெத்துக் கொடுக்க!

ஐயா ராமசாமி சொல்லிவிட்டு மீசையை முறுக்கி... கண் சிமிட்ட...

''ச்சே.. கிழவனுக்கு ஆசையைப் பார்!''

''ஏய் நான் கிழவனா?'' என்று அவரை கட்டியணைக்க.

''இல்லையா பின்னே?'' பார்வதியம்மாள் சிணுங்க...

''கிழவனா... இல்ல நான் குமரனான்னு பரிசோதித்து விடலாமா?''

''ஐய்யோ விடுங்க! திவாகர் வந்துடப் போறான்!''

''வரட்டுமே! என் பொண்டாட்டியைக் கட்டிக்குவேன்! முத்தம்கூட கொடுப்பேன்!'' என்று பார்வதியின் கன்னத்தில் முத்தமிட்டு அவரை விலக்கி நிறுத்த...

''மீசை நரைத்தாலும்... கிழவனுக்கு இந்த குறும்புக் கெல்லாம் குறைச்சலில்லே!''

பார்வதி அவர் கன்னத்தில் ஆசையாய் குத்த...

ஐயா ராமசாமி சந்தோசமாய்... சாமி ரூமைத் தேடிப் போனார்.

ஆனால், அவர் சந்தோசம் நிலைக்கப் போவதில்லை எனத் தெரியாமல்!

# 8



விலை உயர்ந்த அந்தக் கார் வாசலை அடைத்துக் கொண்டு வந்து நிற்க...

அதிலிருந்து ஐயா ராமசாமியும், பார்வதியம்மாளும் இறங்கி வந்தார்கள்!

பின்னாடியே வேலைக்காரி தங்க தாம்பூலத்தில் பழம், பூ, ஏந்தி வந்தாள்.

ஆதவன் எழுந்து புரியாமல் பார்த்தார்.

பின்னர்...

''வாங்க... வாங்க ஐயா! வாங்கம்மா!'' என்று வரவேற்று சோபாவில் அமர வைத்தார்.

சத்தியவதி மரியாதையோடு தண்ணீர் எடுத்து வந்து கொடுத்தாள்.

தாம்பூலத் தட்டைக் கண்டு ஓரளவு புரிந்தாலும்... ஆதவன் கேட்டார்.

''நம்ம வீட்டைத் தேடி இவ்வளவு தொலைவு பயணம் பண்ணி வந்திருக்கீங்களே, ஐயா! என்னய்யா விஷயம்?'' என்று கேட்க...

''ரொம்ப ரொம்ப நல்ல விஷயம்தான்!'' அவர் சொல்ல...

''உங்க பெண் வீட்டுல இல்லையா? பார்க்கணுமே!'' பார்வதியம்மாள் கூற...



''சஞ்சனா...'' என்று பின் கட்டைப் பார்த்து சத்தியவதி குரல் கொடுக்க... பட்டாம் பூச்சியாய் துள்ளி ஓடி வந்தவளைப் பார்த்து திருப்தியாய் புன்னகைத்தார், ஐயா ராமசாமி.

''இத்தனை அழகுள்ள தேவதையைக் கண்டால் எவன்தான் மயங்க மாட்டான்? விசுவாமித்திரரே மயங்கும் போது... நம் திவாகர் எம்மாத்திரம்? இல்லையா, பார்வதி?'' என்று மகிழ்ச்சியாய் மலர்ந்தார்.

''ஆதவா... நேரே விஷயத்துக்கு வரேன்! நான் உன் வீட்டுக்கு வந்தது.... என் பையனுக்கு உன் பெண்ணைக் கேட்கத்தான்!''

சஞ்சனா அதிர்ந்தாள்!

உடம்பெல்லாம் உதற... வியர்த்துக் கொட்டியது!

''நம்ம பய திருவிழாவுல உன் பெண்ணைப் பார்த்திருக்கான்! பட்டுன்னு பிடித்துப் போய் இருக்கு!

கட்டினால் உங்க பெண்ணை மட்டும்தான் கட்டுவேன்னு அடிச்சிச் சொல்றான்...!

இதுநாள் வரை கல்யாணத்தை மறுத்துட்டு இருந்தவன்... இப்படிச் சொல்ல.... உடனே ஆசையா புறப்பட்டு வந்துட்டோம்! என்னப்பா ஆதவா சொல்றே?''

ஆதவன், சத்தியவதி இருவரும் அதிர்ச்சியில் பேச்சை மறந்து... பதில் சொல்லாமல் நிற்க...

சஞ்சனா நெருப்பில் நிற்பது போல தத்தளித்தாள்!

கண்களிரண்டும் பொங்கியது! பெரும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்!

''நீங்க மௌனமா இருப்பதைப் பார்க்க பயமா இருக்குப்பா, தம்பி! என் மகனைப் பற்றி தவறா கேள்விப் பட்டதை வைத்து மறுத்துடாதீங்க!''

"என் மகன் ஒண்ணும் ராமன் இல்லே! ராவணன்தான்! ஆனால் உங்க பொண்ணு மேலே ரொம்ப ஆசை வச்சிருக்கான்! அந்த ஆசை... அவனை நல்லவனா திருத்திடும்ன்னு நம்பிக்கை இருக்கு!"

"கால்கட்டுப் போட்டால் எப்பேர்ப்பட்ட பொலிகாளையும் அங்கிடுது. இல்லையா?"

"அதுபோல.... உன் பொண்ணு மட்டும்... அவனுக்கு மனைவியா வந்தால் திருந்திடுவான்!"

"இல்லேன்னாலும்... சஞ்சனா பொண்ணு திருத்திடும்! எனக்கு உங்க மகள் மேல்... ரொம்ப ரொம்ப நம்பிக்கை இருக்கு!"

"மாட்டேன்னு மட்டும் மறுத்துடாதீங்க!"

பெரியவர்கள் இருவரும் மாறி மாறிக் கெஞ்சினார்கள்!

சஞ்சனாவின் விழிகளில்... ஒரு நதி உருவாகத் தயாராகிக் கொண்டிருந்தது!

"திவாகரோட என் வம்சமே... வாரிசே அழிஞ்சிடும்ன்னு ரொம்பப் பயந்தேன், ஆதவா! அந்த பய இப்படிச் சட்டென்று சொல்லப் பூரித்துப் போயிட்டேன்! என் மகன் மேல நம்பிக்கை இல்லைன்னாலும்... என்னை நம்புப்பா! என் எல்லா சொத்துக்களையும் உன் மகள் பேர்ல திருமணத்துக்கு முன்னே எழுதிடறேன்! சரின்னு சொல்லு, ஆதவா?" ஐயா ராமசாமி கெஞ்சினார்!

இதுபோல் அவர் யாரிடமும் கெஞ்சியதில்லை!

மகனுக்காக ஆதவனிடம் கெஞ்சினார்!

"ஐயா என்னை மன்னிக்கணும்!" என ஆதவன் கூற...

"ஏன், ஆதவா?"



"எனக்கு ஒரு அக்கா இருப்பது உங்களுக்குத் தெரியும்!"

"ஆமா!"

"அவளுக்கு ஒரு மகன் இருப்பதும் தெரியும்!"

"ம்... மெட்ராஸ்ல படிக்கறான், இல்ல?"

"ஆமாங்க ஐயா! சஞ்சனாவுக்கு சந்தோஷ்தான்னு சின்ன வயசுலேயே முடிவு பண்ணிட்டோம்! சந்தோஷுக்காகத்தான் பெண்ணை வச்சிருக்கேன்! வளர்த்துட்டு வரேன்!"

ஆதவன் அப்படிச் சொல்லவும்... சஞ்சனாவின் இதயம் மெல்ல மலரலாயிற்று!

"அபிராமியோட ஒட்டு, உறவு இல்லேன்னு கேள்விப் பட்டேன்!"

"அக்கா தான் ஐயா எங்களை ஒதுக்கி வச்சிருக்கு! அக்கா மேலேயும்... அவள் பிள்ளைகள் மேலேயும் இன்னமும் அதே பாசமும்... அதே அன்பும் குறையாமல் இருக்குங்கய்யா!...

சின்னக் குழந்தையிலேயே 'உன் புருஷன் உன் பொண்டாட்டி'ன்னு ஆசையை மனசுல ஊட்டி வளர்த்துட்டோம்!

இப்போ அந்த ஆசை ரெண்டு உயிர்லேயும் கலந்து ஆலமரமா வளர்ந்திருக்கு! எப்படிய்யா பிரிக்க?"

ஆதவன் கவலையாய் சொல்ல...

"சத்தியமா இந்த விஷயம் தெரியாது, ஆதவா! தெரிஞ்சிருந்தால் வந்திருக்கவே மாட்டேன்! மன்னிச்சிக்கோம்மா பொண்ணே!" என்று சஞ்சனாவைப் பார்த்துச் சொல்ல,

"ஐயா..." என்று ஆதவனும், சத்தியவதியும் பதறினர்.

"என்ன பார்வதி உட்கார்ந்திருக்கே? எழு? போகலாம்!"

ஐயா ராமசாமி சொல்லிவிட்டு எழ...

"என்னங்க..." என்று இழுத்த பார்வதியம்மாளை அடக்கினார்.

"சின்னதிலேயே போட்ட முடி! இறுகி, பிரிக்க முடியாமல் பிணைஞ்சிருக்கும்! பாவம்! ஆசைப்பட்ட ரெண்டு மனசை பிரிக்கக் கூடாது, பார்வதி! திவாகருக்கு அவ்வளவுதான் யோகம்ன்னு நினைச்சிக்கோ! ஆதவா... திருமணப் பத்திரிகையை அனுப்பு! கட்டாயம் வரேன்! வாழ்த்திட்டுப் போறேன்! உன் பொண்ணை அந்த அளவு பிடிச்சிப் போச்சு!"

ஆதவனை நோக்கி இரு கையெடுத்துக் கும்பிட்டு விட்டுக் கிளம்ப... பார்வதியும் மனசே இல்லாமல் எழுந்து பின்னாடி சென்றார்.

அவர்கள் சென்றவுடன்...

சஞ்சனா பேச நா எழாமல்... தத்தளித்து... சட்டென்று கண்ணீர் வழிய... தந்தையின் காலில் விழுந்தாள்.

"சஞ்சு... சஞ்சம்மா... என்ன இது கெட்டப் பழக்கம்? நான் உன் அப்பாடா! உன் ஆசை, எண்ணம் எல்லாம் நல்லாத் தெரியும்!...

பணம், காசு, சொத்துக்காக... என் பொண்ணோட மனசை உடைப்பேனா...?

அந்த அளவு கொடுமைக்காரனாவா நினைச்சி கலங்கினே! உன் அத்தைகிட்ட உடனே பேசறேம்மா!"

"அப்பா..." என்று குலுங்கியவள்... அவர் மடியில் தலை வைத்துக் கதறினாள்!



"நான் உயிரோட இருக்கும் போதே இதுக்கு ஒரு முடிவு தெரியணும்மா!"

"என்னங்க..." என்று கதறினாள், சத்தியவதி.

"நான் ரொம்ப நாளைக்கு உயிரோடு இருக்க மாட்டேன்!"

"அப்பா..." வீறிட்டாள், சஞ்சனா.

"ஐய்யோ... ஏன் இப்படிப் பேசறீங்க?" தலையில் அடித்துக் கொண்டாள், சத்தியவதி.

"இந்த புற்றுநோய் என்னை விடாது, சஞ்சனா! எனக்கு ஆசைதான்! உனக்கொரு பிள்ளை பிறந்து... அதைத் தூக்கிக் கொஞ்சி கூத்தாடிட்டு சாகணும்ன்னு ஆசைதான்!

மாப்பிள்ளை படிச்சிட்டு இருக்கார்! இப்போ அவங்க கல்யாணம் பண்ணிக்கலேன்னாலும்... அக்காவும், சந்தோஷம்... உன்னை மனப்பூர்வமா கட்டிக்கச் சம்மதிச்சாவே சந்தோசம்தாம்மா..."

"அப்பா... அப்பா..."

"நீயும் மாப்பிள்ளையும் பட்டுடுத்தி... மணக்கோலத்துல பக்கத்துல பக்கத்துல நின்னு எனக்குக் கண் குளிர ஒரு காட்சி தந்தால் போதும்!"

"நடக்குமாப்பா?" என்று கதற...

"அப்போதான் நிம்மதியா கண்ணை மூடுவேன்!"

ஆதவன் வாயைச் சட்டென்று பொத்தினாள், சஞ்சனா.

"நீங்க யாருக்குமே பாவம் பண்ணலையே. உங்களுக்குப் போய் இந்த நோய் வந்துடிச்சேப்பா!"

"விதிம்மா... எல்லாம் விதி!" கண்ணீர்விட...

''கடவுள் என்று உண்டாப்பா? எனக்கு அதில் நம்பிக்கை இல்லேப்பா!''

''நம்புவோம், தாயி! நல்ல வழிகாட்டுவார் இறைவன்னு நம்புவோம்!''

''நீங்க முதல்ல அத்தைகிட்ட பேசுங்கப்பா!''

''கண்டிப்பா, சஞ்சனா!''

''நீங்க அக்காவைப் பாருங்க! மாப்பிள்ளை கூட இன்னும் கொஞ்ச நாள் லீவில் இருப்பாராம்! எத்தனை நாளைக்கு பொட்டப் புள்ளையை வச்சிருப்பது? கட்டி வீட்டுல விட்டுட்டுப் போய் கூட படிக்கட்டும்!''

சத்தியவதி சொல்ல.

''ஐயோ அதெல்லாம் வேண்டாம்மா! படிப்பு கெட்டுடும்! அவர் சம்மதிச்சாவே போதும்! நல்லபடியா படிப்பை முடிச்சிட்டு வரட்டும்! அப்புறமா கல்யாணம் பண்ணிக்கிறேன்! நான் அவருக்காக காத்திருக்கேம்மா!''

சஞ்சனா சொல்ல...

''சஞ்சனா சொல்றதுதான் சரியாப்படுது, சத்தியவதி!'' என்றார், ஆதவன்.

ஐயா ராமசாமியும், பார்வதியம்மாளும் வருவார்கள் என்று வீட்டிலேயே இருந்தான், திவாகர்!

அவர்களின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தான், திவாகர்!

இருவரும் முகம் வாடி வர... திவாகர் முகமும் பீஸ் போனாற் போலானது!

''என்னம்மா? என்ன சொன்னாங்க?''

அவர்கள் மௌனமாய் இருக்க...



''முடியாதுன்னு மறுத்துட்டாங்களா?'' கோபமாய் கேட்க...

''அப்படியெல்லாம் திமிரா சொல்லலை, திவா! அவங்க பொண்ணுக்கு ஏற்கனவே மாப்பிள்ளை ரெடியா இருக்காம்! அந்த மனுசன் விளக்கமா, விரிவா, பணிவாத்தான் சொல்லியனுப்பினார்!

நல்ல குடும்பம்! நல்ல பெண்! தட்டிப் போயிடுச்சேன்னு ரொம்ப ரொம்பக் கஷ்டமா இருக்கு!''

பார்வதியம்மாள் கவலையோடு சொல்ல...

''நீங்க பெண்ணை கேட்கற விதமா கேட்கலையா...?'' என்று சீறினான்.

''கேட்டோம்பா! சின்ன வயசுலேயே பேசின பந்தம்! முறிக்க முடியாதுன்னு சொல்லும்போது என்ன செய்வது?''

''நான் அந்தப் பெண்ணுன்னால்தான் திருமணம் செய்துக்குவேன்!''

திவாகர் சொல்ல...

ஐயா ராமசாமி கோபமானார்.

''அவளைத் தவிர ஊர்ல பொண்ணுங்களுக்கா பஞ்சம்?''

கோபமாய் கத்தினார்.

''நீ செய்யற அட்டூழியத்திற்கு... அது போல நல்லப் பெண் எப்படிக் கிடப்பாள்?''

''நான் அட்டூழியக்காரன்தான்! அநியாயக்காரன்தான்! ஆனால் நீங்கள் வள்ளல்தானே...? கர்ணனுடைய வம்சா வழின்னு சொல்லிட்டு தானம், தர்மம் செய்யறீங்க தானே? நீங்க செய்யற புண்ணியத்தால் அந்தப் பெண் எனக்குக் கிடைக்கக் கூடாதா?

அப்போ நீங்க செய்யற தர்மம்... மனசு வந்து... நல்ல உள்ளத்தோட செய்யணும்னு செய்யலையா?''

''நீ அதிகமா பேசறே, திவாகர்?''

''நீங்க செய்த ஏராளமான புண்ணியத்தால் அந்தப் பெண் எனக்குக் கிடைக்கக் கூடாதா?''

''வாயை மூடிட்டுப் போடா!'' ஐயா ராமசாமி சீற...

''திவாகர் யார் யாருக்குன்னு கடவுள் முடிச்சிப் போடறானோ... அந்த பந்தம் தான் சேரும்!'' பார்வதியம்மாள் சொல்ல...

''நீங்க பேச வேண்டாம்!''

''நாம நினைக்கறதெல்லாம் நடக்காது! அந்த சஞ்சனா என்ற தேவதை... சந்தோஷ் என்ற தேவனுக்கு மாலையிடவே பிறந்திருக்கும்போது... அதையெல்லாம் நினைச்சி... வெட்டியாப் பேச வேண்டாம்!''

'சந்தோஷ்' என்ற பேரைக் கேட்டதும் கொதித்துப் போனான், திவாகர்.

''அவளை அடையாமல் விடமாட்டேன்!''

திவாகர் பல்லிடுக்கில் பொறும...

அது ஐயா ராமசாமியின் காதில் விழுந்து விட்டது.

''ஏய்... ஏதாவது குறுக்கு வழிப்போய்... உன் ரவுடி சாம்ராஜ்யத்தால்... அவளை எதுவும் செய்துடாதே!

உனக்கு இப்போ இருக்க பெண் பாவத்துக்கே... சாபத்துக்கே... உன் ஜென்மா ஜென்மத்துக்கும் தித்தணும்? இதுல புதுசா அந்தப் பொண்ணுக்கு எதுனா கெடுதல் செய்துடாதே!



அவள் அப்பன் நோயோட போராடிட்டு இருக்கான்! காசு, பணம் இருக்கு! ஆனால் பாவப்பட்டவன்! நோயின் கோரப்பிடியில் சிக்கி தவிச்சிட்டு இருக்கான்!''

திவாகர் முறைத்துக் கொண்டு நின்றான்.

''அதுபோல குடும்பத்தை... குருவிக் கூட்டை அழிக்கறாப்போல... சாதாரணமா அழிச்சிடாதே! நீ செய்தாலும் செய்வே! புரியுதா? நான் பொல்லாதவனாயிடுவேன்! ஜாக்கிரதை!''

ஐயா ராமசாமி அவனுக்குப் புத்தி புகட்டிவிட்டு தன் அறைக்குப் போனார்.

''இந்த மனுசனுக்கு மத்தவங்க மேல இருக்க.... அக்கறையில துளிகூட என் மேல் இல்லம்மா! பெத்த பிள்ளையைவிட.... அந்தக் குடும்பத்து மேல காட்டும் பாசத்தைப் பார்த்தீர்களா?...''

''அப்பாவைக் குறை சொல்லாதே, திவாகர்! அவர் மேல என்ன தப்பிருக்கு?''

''பெத்த பிள்ளையோட ஆசையை நிறைவேத்தி வைக்க முடியாத நீங்களெல்லாம் ஒரு நல்ல தாயும், தகப்பனுமா?ச்சே!''

பெரும் ஆத்திரத்தோடு கத்திவிட்டு காரில் ஏறி பண்ணைக்கு வந்தான்.

பண்ணை வீட்டுக் கட்டிலில் மல்லாந்து படுத்தான்.

பெரும் அவமானமாய் உணர்ந்தான்!

'பெண்ணால் நிராகரித்தல்' பெரும் அவமானம் தானே?

ஆசைப்பட்டது அனைத்தையும் இதுநாள் வரை தங்கு தடையில்லாமல் அனுபவித்தவன்... தற்போது நிராகரிக்கப்படும்போதும் தாங்க முடியவில்லை?

தவித்தான்!

தத்தளித்தான்!

சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தான்!

எத்தனை சிகரெட்டை பற்ற வைத்து ஆழ புகைத்தும் அவன் நெஞ்சம் ஆறவில்லை!

நெருப்பாய் கழன்று எரிந்தது!

மண்டையே உடைந்து சிதறும் போல பிரம்மை ஏற் பட்டது.

இரு கைகளாலும் மண்டையைப் பிடித்துக் கொண்டான்.

கட்டிலை விட்டு இறங்கினான்.

பிரிட்ஜைத் திறந்து ஸ்காட்சும், சோடாவும் எடுத்து வந்து... கண்ணாடி டம்ளரில் சரித்து விழுங்கினான்!

போதை ஏறியும் கோபம் குறையவில்லை!

அவன் கூட்டாளிகளை ராஜா, மூர்த்தி, சிவாவை உடனே வரச் சொன்னான்!

"போன காரியம் காயா...? பழமா...?" இது ராஜா.

"பழமா இருந்தால் மாப்ள சந்தோசமா இருப்பான், இல்ல? இப்படிக் கொதிச்சிப் போய் இருப்பவனிடம் என்னடா வெட்டியான கேள்வி?" இது மூர்த்தி.

"மாப்பிள்ளையோட கோபத்தை அதிகரிக்கவே கேட்டீயாடா ராஜா?" இது சிவா.

"சரி சொல்லு மாப்ளே? பொண்ணு வீட்டுல என்ன சொன்னாங்களாம்?"

"முடியாதுன்னு சொல்லிட்டாங்களாம்!"

"ஏன்?"



"அன்னைக்கு என்னை ஒரு ஹீரோ அடிச்சானே?"

"ஆமா... அவனுக்கென்ன?"

"அவனுடைய அத்தை மகனாம்! அந்த சஞ்சனா அவனுக்காகவே பிறந்தவளாம்! பிறந்தப்பவே போட்ட முடியாம்! அவனுக்குத்தான் அவளைத் திருமணம் செய்து வைக்கப் போறாங்களாம்!"

மூவரும் மௌனமாய் அவனை நோக்க...

"அவங்க வீட்டுல அப்படிச் சொல்ல என்னைப் பெற்ற ஜென்மங்களும் வாழ்த்திட்டு வந்து இருக்குங்க! நினைக்கவே வெட்கக் கேடா இருக்கு!"

திவாகரின் முகம் நெருப்பாய் எரிந்தது!

"நிஜமாவா மாப்ளே? அன்னைக்கு நெஞ்சை நிமிர்த்தி ஒரு பொடிப்பயல் வந்தானே... அவனுக்குத்தான் அந்தப் பெண்ணைக் கொடுக்கப் போறாங்களா...?"

மூர்த்தி ஆவேசமாய் கேட்டான்.

"உலகத்துல அவளை விட்டா... வேற பெண்ணே இல்லையா, திவாகர்?" இது ராஜா.

"நீ என்னடா சொல்ல வரே?"

"விடு திவாகர்! அவளைவிட பேரழகியாய் பார்த்துக்க லாம்."

"அவளை விட்டால் நான் ஆம்பளையாடா, மச்சி? மீசை வச்ச ஆம்பளையா, நான்? அப்புறம் எனக்கே என் மேல் சந்தேகம் வந்துடும்... நான் ஒரு பொட்டையோன்னு!"

திவாகர் காரசாரமாய் பேச...

"நீ சொல்றது நூறு சதவீதம் உண்மைதான், மாப்ளே! நீ வீரமுள்ள ஆம்பள! எத்தனை பொட்டச்சிகளை ஆட்டம்

காண வச்சிருப்பே! எப்பேர்ப்பட்ட முரட்டுக் குதிரையை யெல்லாம் அடக்கி சேனம், வார்ப்பட்டையெல்லாம் கட்டி உன் காலடியில விழ வச்சிருப்பே! அப்படிப்பட்டவன் நீ பின்வாங்கலாமா?'' இது மூர்த்தி.

திவாகருக்கு உசுப்பேற்றினான்.

''இந்த திவாகர் நினைத்து அடையாது போன பொருளோ... பொண்ணோ உண்டா? திவாகர் அவள் மேல் கண்ணை வச்சிட்டேன்! அவளை அனுபவிக்காமல் விடவே மாட்டேன்! பார்த்த உடனே பட்டுன்னு பிடித்துப் போன பொண்ணாச்சே! போனாப் போகுது... கல்யாணம் பண்ணி காலமெல்லாம் குடித்தனம் நடத்தலாம்ன்னு பார்த்தேன்! ஐயா பையன் தறுதலையா... தனிமரமா கிடக்கான்னு ஒரு பயலும் சொல்ல வழியில்லாமல்... அவளைக் கட்டி, மனைவியாக்கி விட்டுலப் போட்டால்.. ஊர்ல எனக்கும் மதிப்பு உயரும்ன்னு பார்த்தால்... அவள் எனக்குக் கிடைக்க மாட்டாளா...?

விட்டுடுவேனா? திவாகர் அந்த அளவு கையாலாகா தவன் இல்லை! அவளுக்கு அது தெரியணும்!''

''என்ன செய்யணும், நாங்க?''

''அவளைப் பற்றிய முழு செய்தியும் சேகரிங்கடா!''

''சரி மாப்ளே!''

''அவள் எங்கே போறாள்? என்ன செய்யறாள்? எல்லாத்தையும் கலெக்ட் பண்ணிட்டு வந்து சொல்லுங்க! அவளை இரவோட இரவா தூக்கிடலாம்!''

திவாகர் கோபத்தின் உச்சியில் இருந்தான்!

கண்கள் இரண்டும் போதையை மீறி... கோபத்தில் இரத்தமெனச் சிவந்திருந்தது!



''நீ வெட்டியா கோபப்பட்டு உடம்பைக் கெடுத்துக் காதே, மாப்ளே! நாளைக்கே உனக்கு சஞ்சனாவைப் பற்றிய புல் டிடெய்லும் கொடுத்துடறேன்! அப்புறமா தேதி குறித்துக் கொடு!'' இது சிவா.

''அந்த அழகான மயிலின் சிறகை முறித்து... தூக்கிட்டு வந்து... உன் மடியில் போட்டுடறோம், மாப்ளே!'' இது மூர்த்தி.

''உங்க அப்பாவுக்கு இந்த விஷயம் தெரிந்தால் வம்பாயிடுமே, திவாகர்!'' ராஜா மெல்ல கூற...

''யாருடா இவன் நடுவுல...! பெரிசா புத்தி சொல்ல வந்துட்டையா, என்ன?''

திவாகர் அதட்ட....

''நீ இந்தப் பெண்ணோட பிரச்சனையில் கொஞ்சம் யோசித்துச் செய்யலாம், திவாகர்! இவனுங்க சொல்றானுங் கன்னு புத்தி தடுமாறி... வம்படியா ஏதாவது விபரீதத்தை இழுத்து விட்டுக்காதே!''

''உன்னை யார்டா இங்கே வரச் சொன்னது? உன்னைப் போல பயந்தாங்கொள்ளிகளுக்கெல்லாம் இங்கே வேலை இல்லே! போ... போயிடு!''

''திவாகர் நான் உனக்கு நல்லதுதான் சொல்றேன்!''

''நீ எனக்கு எந்த நல்லதும் சொல்ல வேணாம்! உன் திருவாயை மூடிட்டுப் போ! மவனே... இந்த விஷயத்தை மட்டும் என் அப்பன்கிட்டயோ... ஆத்தாகிட்டயோ... பத்த வச்சே... நான் கொலைகாரனா மாறிடுவேன். உன்னைக் கொல்லவும் தயங்க மாட்டேன்! போடா! போ...''

திவாகர் அவனைப் பிடித்து வெளியே தள்ள...

ராஜா ஓடிப்போய் சுவற்றில் முட்டிக் கொண்டான்!

அடுத்த நொடி எழுந்து கோபமாய் வெளியேறினான்.

திவாகர், சிவா, மூர்த்தி மூவரும் அவளை அடைய என்ன செய்யலாம்? என்று யோசித்தனர்.

சஞ்சனா என்ற அழகான புள்ளிமானை... திவாகர் என்ற புலி எப்படி அடித்துச் சாப்பிடலாம் என்று வியூகம் அமைத்தது!

புள்ளிமான் தப்புமா....?

அல்லது புலியின் கோரப்பல்லில் விழுந்து தன் உயிர் விடுமா...?



ஐயா ராமசாமி சஞ்சனா வீட்டிற்கு வந்து பெண் கேட்டதையும்...

ஆதவன் பதில் கூறியதையும்...

எப்படியோ தெரிந்து கொண்ட அபிராமி... விண்ணுக்கும் மண்ணுக்கும் தாவித் தாவிக் குதித்தாள்!

சந்தோஷ் எதுவும் பேச முடியாமல் படுக்கையில் போய் சுருண்டான்!

அவன் மனமெல்லாம் அன்னையின் சொற்களால் வலித்தது!



தீ மூட்டி இதயத்தைப் பொசுக்கிய கணக்காய் துடித்தான்!

'இந்த தாய் உயிரோடு இருக்கும் வரை மாமன் வீட்டோடு சேர மாட்டாளா?'

'சஞ்சனாவை மணக்க விடவே மாட்டாளா?'

'இவளின் எண்ணம் இப்படி இருக்க... நான் மாய்ந்து மாய்ந்து சஞ்சனாவைக் காதலித்து விட்டேனே!'

'இப்படி ஒரு அரக்கியை தாயாய் கொண்டு விட்டு... எனக்கு காதல் ஒரு கேடா?'

'நடக்கும்..! நடக்காது...! எனப் பார்த்து வருவதா காதல்?'

'காதல்.... என்னுள் இயல்பாய் வேரூன்றி... விழுது விட்டு விட்டதே!'

'காதலில் தன்னலம், சுயநலம் ஏது...?'

'அப்படி சுயநலம் பார்ப்பது காதலே இல்லையே!'

'அதற்கு வேறு பல பெயர்கள் உண்டே.... அசிங்க அசிங்கமாய்...!'

'அம்மாவின் சொல்லுக்குக் கட்டுப்படுவதா...?'

'சஞ்சனாவின் மேலான காதலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதா?'

'பாசமா... அம்மாவா?'

'காதலா... காதலியா...?'

'நான் சஞ்சனாவின் அன்புக்குக் கட்டுப்படுவதா...?'

'அல்லது அம்மாவின் அதிகாரத்திற்கு அடங்கிப் போவதா...?'

கடைசியில் காதல் ஜெயிக்குமா...?

அல்லது அம்மாவின் அட்டூழியம் ஜெயிக்குமா...?

திவாகர் வேறு பெற்றவர்களை அனுப்பி பெண் கேட்ட செய்தியறிந்து உள்ளுக்குள் கொதித்துக் கொண்டிருந் தான்!

சந்தோஷுக்கு முடிவெடுக்கவே முடியவில்லை!

அவனின் நிலை பெரும் பாதிப்புக்கு உள்ளான படகின் நிலையானது!

உள்ளம் உள்ளுக்குள்ளே ஓலமிட்டது!

அவனுள் முத்தாய் பொத்திப் பொத்தி வைத்திருந்த காதல்... கண்ணீர் விட வைத்து... வேடிக்கை காட்டுகிறது!

மாமா 'சந்தோஷுக்குத்தான் சஞ்சனா' என்று கூறியது கண்டு... ஒரு புறம் இதயம் ஆனந்தக் காற்றை சுவாசித்தது!

கொஞ்ச நேரத்தில்...

ஆதவனும், சத்தியவதியும் பயத்துடனும்... அதே சமயம் ஒரு முடிவு தெரியாமல் போகப் போவதில்லை என்ற நிமிர்வுடனும் உள்ளே நுழைய...

பெரிய உடம்பைத் தூக்கிக் கொண்டு காளியாய் ஓடி வந்தாள், அபிராமி!

''வீதி வாசலை திறந்து போட்டுட்டால்... தெருவே போற கண்ட நாயெல்லாம் உள்ளே நுழைஞ்சிடுது! நாய்ங்க ரெண்டும் வந்த விஷயத்தைச் சொல்லிட்டுக் கிளம்பலாம்!''

வார்த்தை என்ற நெருப்பை அள்ளி வீச ஆதவனும், சத்தியவதியும், துடித்து விட்டனர்.

'பெண்ணைப் பெற்றவர்களாயிற்றே!' என்று சுடு சொற்களை வாங்கிக் கொண்டு கல்லாய் நின்றனர்!



''எதுக்கு வந்தீங்க?''

''............''

''உங்களுக்கும் எனக்கும்தான் ஒட்டு, உறவு இல் லையே!''

''............''

''அக்கா, தம்பிங்கிற உறவு அறுந்து பல வருசமாச் சில்லே!''

மனசாட்சியே இல்லாமல் பேசிய அபிராமியிடம்... அந்த விஷயத்தைக் கேட்கவே பயமாக இருந்தது, ஆதவனுக்கு!

''வேலையிருக்கு, நீங்க ரெண்டு பேரும் கிளம்பினால் நல்லாயிருக்கும்!''

அபிராமி அதிர்ந்து பேச...

சந்தோஷ்... தாய் யாரிடம் இப்படி அதிகாரமாய் பேசிக் கொண்டிருக்கிறாள் என்று தெரிந்து கொள்ள எழுந்து வெளியே வந்தான்!

மாமன், மாமியைக் கண்டு அவன் முகம் சூரியகாந்தி யாய் மலர்ந்தது!

''வாங்க மாமா.. வாங்க அத்தே! ஏன் நிக்கறீங்க? உட்காருங்க, மாமா. உடம்பு எப்படியிருக்கு, மாமா? பரவா யில்லையா மாமா? டாக்டர் என்ன மாமா சொல்றார்?''

சந்தோஷ் அன்புடன் கேள்வி மேல் கேள்வி கேட்க... இருவரும் முகம் மலர்ந்தனர்.

''சந்தோஷ்... உனக்கு இங்கே என்ன வேலை? நீ உள்ளே போ!''

தாய் அதட்ட....

சந்தோஷ் அப்படியே நின்றான்.

"அக்கா... எனக்கு நோய் முத்திட்டே வருது! ரொம்ப நாளைக்கு உயிரோடு இருக்க மாட்டேன்!"

கண்கள் கலங்க ஆதவன் கூற...

"இதெல்லாம் எனக்குத் தேவையில்லாத விஷயம்!" அபிராமி முகம் சுளித்துச் சொல்ல...

"சஞ்சனாவை நிறைய பேர் பெண் கேட்டு வராங்க!"

"சந்தோஷம்!" என்று நக்கலாய் அபிராமி சொல்ல...

"எல்லாமே நல்ல இடம்தான்! என் அக்கா மகனுக்கு தான் கொடுக்கப் போறேன்! என் பெண்ணுக்கு சந்தோஷ் இருக்கான்னு சொல்லிச் சொல்லித் தட்டிக் கழிச்சுட்டே வரேன்!

நீ ரெண்டு பேருக்கும் உடனே கல்யாணம் செய்து வைக்க வேண்டாம்! மாப்பிள்ளை படிப்பை முடிச்சிட்டு வரட்டும்! அப்போ கல்யாணம் செய்து வை! எனக்கு அதிர்ஷ்டம் இருந்தால் என் பெண்ணோட திருமணத் தைப் பார்க்கிறேன்!"

ஆதவன் நீளமாய் பேசி மூச்சு வாங்கினார்.

பின்னர் மீண்டும் தொடர்ந்தார்.

ஆனால் அபிராமி எரிமலையின் சீறலோடு கொதித்துக் கொண்டிருந்தாள்.

"எனக்கு இன்னைக்கு முடிவு தெரிஞ்சாகணும், அக்கா!"

அபிராமி இடைப் புகுந்தாள்.

"என்ன முடிவுடா?"



"என் மகளை... உங்க வீட்டு மருமகளா ஏத்துக்கச் சம்மதமா? சந்தோஷுக்கு சஞ்சனாவைக் கட்டி வைப்பாயா? இந்தக் கேள்விக்கு மட்டும் பதில் தெரிந்தால் போதும்! ஐயா ராமசாமி வீட்டுல இருந்து கூட பெண் கேட்டு வந் தாங்க!"

"பெரிய இடமாச்சே! சட்டுபுட்டுன்னு கொடுக்க வேண்டியதுதானே!" நகைப்போடு கேட்டாள்.

சத்தியவதி சுவற்றில் சாய்ந்து நின்று கொண்டு கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்.

"முடியாதுன்னு சொல்லிட்டேன்! எத்தனை பெரிய இடம் வந்தாலும் அதெல்லாம் மாப்பிள்ளையோட கால் தூசுக்கு வருமா?"

"இது போல பேச்செல்லாம் வேண்டாம்! போ... போய் யாராவது பெண்ணைக் கேட்டால் கட்டி வை! மடத் தனமா... அறிவிலி போல அபிராமியை நம்பிட்டு இருக் காதே!

என்னைக்குச் சொன்னாலும் என் முடிவு ஒண்ணு தான்!...

என் மகன்.... உன் மகள் கழுத்துல தாலி கட்டவே மாட்டான்!"

"அக்கா... உன் முடிவு இதுதானா..."

"இதுதான்!"

"உனக்கு என் மேல் இரக்கமே ஏற்படலையா?"

"இல்லை!"

"என் பெண் மேல் கொஞ்சம் கூட கருணையே வர வில்லையா?"

"இல்லை!"

"என் பெண் உனக்கு என்ன பாவம் செய்தாள்?"

"உனக்கு மகளாய் பிறந்ததுதான் பாவம்!"

"உன் மகனையே நினைச்சி உயிர் வாழ்ந்துட்டு இருக்காளே... அவளுக்கு என்ன பதில் சொல்லப் போறே?"

"அவளுக்குப் பதில் சொல்லணும்ன்னு... எனக்கு தலையெழுத்தில்லே! அவளிடம் என் மகனையே நினைச்சிட்டு இருன்னு... நான் சொல்லலே!"

"உன் மனம் என்ன கல்லா?"

"ஆமா!"

"நீ கூரான முள்ளா? இப்படி எங்க இதயத்தைக் குத்திக் கிழிச்சி ரணமாக்கிறியே! உனக்கு இது நல்லாயிருக்கா?"

"ரொம்பவே நல்லாயிருக்கு!"

"நான் அப்படி என்ன தவறு செய்துட்டேன்?"

"நீ செய்யலையா?"

"நீ அன்னைக்கு முழு சொத்தையும் உன் பேர்ல எழுதி வைக்கச் சொன்னே! மடையன்போல நான் எழுதி வைக்கலே! இன்னைக்கு அந்தச் சொத்து பல மடங்கா பெருகி இருக்கு! என் அத்தனை சொத்தையும்... இப்போ உன் காலடியில் சமர்ப்பிக்கிறேன்! அதுக்கு ஈடா உன் மகனுக்கு என் மகளைத் திருமணம் செய்து வைத்து... அந்த இரண்டு உள்ளங்களையும் சந்தோசமா வாழ வையுக்கா! ப்ளீஸ்..."

"யாருக்கு வேணும் உன் சொத்து? தேவையில்லே!"

"என் மகளை மட்டும் மறுத்துடாதேக்கா!"



"உன் சொத்தும் வேண்டாம்! உன் சொந்தமும் வேண்டாம்! உன் பெண்ணும் வேண்டாம்! இடத்தை காலி செய்!"

அபிராமி மனசாட்சியே இல்லாமல் பேச...

"மாப்பிள்ளை... அம்மா இப்படிச் சொல்றாங்களே! நீங்க என்ன நினைக்கறீங்க? என்ன சொல்ல விரும்பறீங்க? என் பெண்ணை உங்களுக்காகவே வளர்த்துட்டு வரேன்! வர மாப்பிள்ளைகளை எல்லாம் வேண்டாம்ன்னு மறுத்துட்டு இருக்கோம்!...

நாங்க என்ன செய்யட்டும்? என் கணவரோட வேதனை தெரியலையா? அவரோட நோயின் தீவிரம் விளங்கலையா?"

சத்தியவதி கண்ணீரோடு சந்தோஷைப் பார்த்துக் கேட்க...

சந்தோஷ் எதுவும் பேச முடியாமல் தத்தளித்தான்!

"என் மகளோட ஆசை தெரியலையா? அவளோட மனம் படும்பாடு புரியலையா? உங்களுக்கு என் மகளைத் திருமணம் செய்துக்கணும்ன்னு எண்ணம் இருக்கா? அல்லது இல்லையா?"

"....................."

"இப்படி பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம்?"

"அத்தை..."

"சஞ்சனாவை உங்களுக்காக வச்சிருக்கவா...? வேண்டாம்ன்னு சொன்னால்... அவர் உயிரோடு இருக்கும் போதே எவன் கையிலாவது புடிச்சிக் கொடுத்துடுவேன்! அவரும் அவளோட மணக்கோலத்தைப் பார்த்துட்டு நிம்மதியா செத்துப் போவார்!"

"அத்தை..." என்று பதறி... சத்தியவதி அருகில் போக...

"ஏய்... நில்லுடா! என்னடா... அவள் நீலிக் கண்ணீரை கண்டு மனம் இரங்குதா?

தாயைவிட மாமன் மனைவி உனக்கு உசத்தியா? என் தம்பியை வளைச்சிட்ட அரக்கி, அவள்! உன்னையும் வளைச்சி முந்தானையில முடிஞ்சிட்டுப் போய் மகளுக்குக் கட்டி வச்சிடுவாள்! சரியான கைகாரி! சாகசக்காரி! இவள் வலையில் விழுந்துடாதேடா!"

அபிராமி இப்படி அசிங்க அசிங்கமாய் பேச...

"ச்சே... என்ன கேடுகெட்ட ஜென்மமோ!" என்று தலையில் அடித்துக் கொண்டு... வாடிய முகத்துடன்... மனம் வெதும்பி உள்ளேப் போனான், சந்தோஷ்.

ஆதவன் சத்தியவதியிடம்...

"சத்தியவதி... இனி நாம் இங்கே நிற்பது அசிங்கம்மா! ஒரு பெண்ணைப் பெற்றவர்கள் இதற்கு மேல் இன்னும் இறங்கி எப்படி கெஞ்சி நிற்பது? வா போகலாம்!"

குலுங்கிய சத்திய்வதியின் தோள் பற்றி அழைத்துப் போக...

அபிராமிக்கு அந்தக் காட்சி... நெஞ்செரிச்சலைத் தந்தது!

"ஐயா ராமசாமி வீட்டுல இருந்து பெண் கேட்டு வந்துட்டாங்களாம்! பெரிசா பீத்திக்க வந்துட்டான்! என் மகனுக்குப் பெரிய இடத்துல பெண் பார்த்து வைப்பேன்! பில்கேட்சாமே... பெரிய பணக்காரனாமே... அவன் வீட்டுல கூட... என் மகன் அழகுக்கு, 'அறிவுக்கும்,



படிப்புக்கும் பெண் கேட்டால்... மறுக்காமல் கொடுத்துடுவான்! மக்கும்!"

அபிராமி முகத்தை தோளில் இடித்து உள்ளேப் போனாள்.



# 10

பூமி... சூரியனைப் பிரியப் போகிறோமே என்று வருந்தி... வாடி... அழுது கொண்டிருந்த அந்த வேளையில்... இரவை விரட்டிக் கொண்டு... மதி மகிழ்ச்சியாய் தன் பால் ஒளியால் பூமியைத் தாலாட்ட.... பூமிக் குழந்தையும் எழுந்தமர்ந்து... சிங்காரமாய் சிரித்த... இரவு ஏழு மணி!

ஆதவனும், சத்தியவதியும் அபிராமி வீட்டில் நடந்த நிகழ்வுகளை, அவமானங்களை, அலட்சியங்களை ஒன்று விடாமல் சொல்ல...

சஞ்சனா விம்மி வெடித்து... முதுகு குலுங்க... சிறு குழந்தையாய் தாயின் மடிமீது தலை வைத்து அழுது புலம்பியவள் அப்படியே சோகம் தாங்க முடியாமல் தூங்கி விட்டாள்.

ஆதவனும், சத்தியவதியும் இடிந்து போய் உட்கார்ந்து விட்டனர்.

சஞ்சனாவிடம் லேசான அசைவு தெரிய...

''சஞ்சனாம்மா... எழுடா! இரவு எட்டு மணியாயிடிச்சிடா! நீ பசி தாங்க மாட்டியேம்மா! சாப்பிடுடா!''

தந்தை வார்த்தையைக் கேட்டவள்...

''எனக்கு சாப்பாடு ஒண்ணுதான் குறையாப்பா?'' என்று மீண்டும் அழ... மீண்டும் அவள் கண்களில் குற்றால நீர்வீழ்ச்சி பெருக்கெடுத்து ஓட...

ஆதவன் மகளின் நிலை கண்டு துடிதுடித்துப் போனார்.

''தாயீ... என் தாயீ... என் அக்கா மனசு கல்லா இருக்கே! எவ்வளவு இறங்கிப் போயும்... அவள் மனசுல இரக்கம் சுரக்கலையே! நான் என்ன செய்வேன்? என் பெண்ணோட ஆசையை நிறைவேத்த முடியாத பாவியாயிட்டேனே?'' அவர் அழவும்...

''அப்பா... அப்பா... அழாதீங்கப்பா!''

சஞ்சனா ஆதவனின் கண்ணீரைத் துடைத்துவிட...

''தாயீ... தாயீ... என்னை மன்னிப்பாயா?''

''நீங்க என்னப்பா தப்பு செய்தீங்க?''

''உன் மனசுல சின்ன வயசு முதற்கொண்டு ஆசையை விதைச்சி... அந்த ஆசை, இப்போ... பெரிய மரமா வளர்ந்து.... காய்ச்சி... கனிஞ்சிப் போய் இருக்கே! இப்போ உன் ஆசையில்... என்னோட பிறந்தவள் வெந்நீரை ஊற்றறாளே! நீ துடிச்சிப் போறியே! என்னால் இதை கண் கொண்டு காண முடியலையே!''

''அப்பா... அப்பா...'' சஞ்சனா தழுதழுக்க...

''உன் மனசுல அப்படி ஒரு எண்ணத்தை வளர்க்கலேன்னால்... நீ இந்த அளவு கத்த மாட்டியே! கதற



மாட்டியே! துடிக்க மாட்டியே! துன்பப்பட மாட்டியே! துயரப்பட மாட்டியே! அவன் மேல் இந்த அளவு நேசம் வச்சிருக்க மாட்டியே! உன் இத்தனை தவிப்புக்கும்... துடிப்புக்கும்... வெடிப்புக்கும் நாங்களும் காரணம் தானே?''

ஆதவன் அடக்க முடியாமல் அழ...

அதைக்காண சகிக்காத சஞ்சனா... நிமிர்வோடு தாயின் மடியிலிருந்து எழுந்தாள்.

கண்களைத் துடைத்துக் கொண்டாள்!

கலைந்திருந்த தலையை அவிழ்த்து முடிந்துக் கொண்டாள்!

கண்களில் சுரக்கும் கண்ணீரை கஷ்டப்பட்டுக் கட்டுப்படுத்தினாள்.

அவரிடம் கேட்டாள்.

''நான் என்னப்பா செய்யட்டும்?''

''தெரியலேம்மா! புரியலேம்மா!'' என்று குலுங்கியவரிடம்...

''கடைசி முயற்சியாய் அத்தானை தனியே சந்தித்துப் பேசிப் பார்க்கட்டும்மா?''

அவள் ஆதவன் என்ன சொல்வாரோ என்று கவலையோடு கேட்க...

''உன் இஷ்டம், சஞ்சனாம்மா!''

அவர் சட்டென்று ஒத்துக் கொள்ள... நம்ப முடியாதவளாய்...

''நிஜமாவாப்பா...?''

"சந்தோஷை நீயும் ஒரு முறை கேட்டுப் பார்த்துடடா! அதுல எந்தத் தப்புமில்லே!"

"உங்களுக்கு இதுல வருத்தமே இல்லையாப்பா?"

"ம்கூம்!"

"இத்தனை கேவலப்பட்டும் இந்த பெண் சந்தோஷை தனியே சந்தித்துக் கேட்கட்டும்மான்னு உளறராலேன்னு உங்களுக்கு என் மேல் கோபம் வரலையா? எரிச்சல் வரலையா?"

"உன் சந்தோசம் எனக்கு முக்கியம் செல்லம்மா!"

ஆதவன் அவள் தலைமுடியை ஆதரவாய் கோதிவிட....

"நீ ஒண்ணுமே சொல்லலையேம்மா...?"

சஞ்சனா.... சத்தியவதியைப் பார்த்துக் கேட்க...

சத்தியவதி அவளைத் தோளில் சாய்த்து மிருதுவாய் தட்டி...

"என் மகளோட சந்தோசம்... என் உயிர் போன்றதாச்சே! அதை எப்படி மறுக்க முடியும்? நீ ஒரு வார்த்தை கேட்டுப் பார்த்துடடா! அவன் சம்மதித்தாலும் சந்தோசப்படுவே! அவன் மறுத்துட்டாலும் மனசை திடப்படுத்திக்குவே!"

"ஏய் சத்தியவதி... அவன் மறுப்பான்... அது இதுன்னு ஏன் என் பெண்ணைக் கலங்க விடறே? நல்லதே நடக்கும்ன்னு நினை! நல்ல வார்த்தை சொல்லி இவளைத் தேற்றாமல்... இவளை மீண்டும் ஏன் வாட விடறே?" என்று ஆதவன் கோபத்துடன் சீற...

"இல்லீங்க... சஞ்சனா போய் கேட்டு சந்தோஷ் ஏதாவது மறுக்கப் போக..."

"நிறுத்து! அவன் மறுக்க மாட்டான்! எனக்கு நம்பிக்கை இருக்கு! என் பெண்ணுக்கும் சந்தோஷுக்கும்



விரைவிலேயே திருமணம் நடக்கும்! என் அக்கா மனம் மாறி நம்மகிட்ட வருவாள்!" என்றவர்...

சஞ்சனாவைப் பார்த்து...

"சந்தோஷ் உன்னை மணக்க ஒத்துக் கொண்டாலே போதும்மா! திருமணம் கூட இப்போ செய்துக்க வேண்டாம்! நீங்க ரெண்டு பேரும் பட்டுடுத்தி... மணக் கோலத்துல அருகருகே நின்று ஒரு காட்சி மட்டும் தந்துட்டால்... அதை கண் குளிரப் பார்த்துட்டு... பின்னாடி நிம்மதியா செத்துடுவேன்ம்மா!"

"ஐயோ அப்பா... என்ன பேசறீங்க?"

"நிஜம் பேசறேம்மா! எமன் எனக்குத் தேதி குறிச்சிட்டான், இல்லையா?"

"இல்லப்பா... நீங்க என் கல்யாணத்தைப் பார்ப்பீங்க! எனக்குப் பிறக்கப் போகும்... உங்க பேரப் பிள்ளையையும் பார்த்து, கொஞ்சிட்டுத்தான் சாவீங்க!"

"அந்த ஒரு புண்ணியம் மட்டும் என் கடைசி காலத்துல கிடைக்கணும்மா! அதுக்கு ஆண்டவன் அருள் செய்யட்டும்மா!"

சஞ்சனா எழுந்து... கௌஷிகா வீட்டிற்குச் சென்றாள்.

கௌஷிகா வீடு.. அதே தெருவில்.... நான்கு வீடு தள்ளித்தான் இருக்கிறது.

அந்த நேரத்தில் சஞ்சனாவைக் கண்ட கௌஷிகா ஆனந்தமானாள்.

"ஏய் சஞ்சனா என்னடி இந்த நேரத்துல? நல்லாயிருக்கீயா?"

"ம்..." சுரத்தே இல்லாமல் சொல்ல...

"அப்பாவோட உடம்பு பரவாயில்லையா, சஞ்சனா?"

"அவருக்கு வந்திருக்கறது, கேன்சராச்சே! அது அவரைக் கொஞ்சம் கொஞ்சமா கொல்லுதே!"

"குணப்படுத்தவே முடியாதா?"

"எப்படி முடியும்? விஞ்ஞானம் எவ்வளவு முன்னேறினாலும், கேன்சரையும், எய்ட்சையும் பூரணமா குணப்படுத்த இன்னும் மருந்து கண்டு பிடிக்கலையே! ஹீமோதெரபி, ரேடியம் தெரபின்னு அவருக்குக் கொடுக்கறோம்! மருந்து, மாத்திரை சாப்பிடறார். ஆனாலும் நோய் குறையலையே! மாறா தீவிரமாயிட்டே போகுதே!"

"உனக்கொரு திருமணம் செய்து பார்த்துட்டால் அவர் நிம்மதியாயிடுவார்!"

"ஆமாம், கௌஷிகா."

"உன் அத்தையைப் போய் பார்க்க வேண்டியது தானே?"

"அம்மாவும், அப்பாவும் போய் பார்த்தாங்க!"

"அத்தை என்ன சொன்னாள்?"

"மறுத்துட்டாள்!"

"அந்த அரக்கி குணம்தான் தெரிஞ்சதாச்சே! நீ அத்தானை நேரடியா கேட்டுடேன்!"

"ஆமாம் கேட்கணும்!"

"எப்போ?"

"நாளை ஞாயிறுதானே! நம்ம ஊர் சிவன் கோயில்ல அவ்வளவா கூட்டம் இருக்காது! அவரை மாலையில வரச் சொல்லு, கௌஷிகா!"



"சரி, நானே அழைச்சிட்டு வரேன்!"

"எங்கே இருப்பே?"

"குளக்கரையில்!"

"நிச்சயமா சந்தோஷை அழைச்சிட்டு வந்து உன் கண் முன்னால நிறுத்தறேன்! நீ தயங்காமல் கேட்டுடு!"

"சரி!"

"அவர் வழவழ கொழகொழன்னு பட்டும் படாமலும் பதில் சொன்னால்... நீ விடவே கூடாது! கட் அண்ட் ரைட்டா நீ பேசணும்!"

விதி சஞ்சனாவைப் பார்த்து கோரப்பல் தெரிய சிரிப்பது தெரியாமல்...

"கட்டாயம் பேசறேன், கௌஷிகா!" என்றாள்.




மறுநாள்...

மயக்கும் மாலைப் பொழுது!

அழகான பழமை வாய்ந்த சிவாலயம்!

கோயிலின் விஸ்தீரணம் பிரமிக்க வைக்கும்!

கலைநயமும், கட்டுமானமும் ஆச்சரியம் கொள்ள வைக்கும்!

பெரிய தெப்பக்குளம், அதில் வாழும் மீன் குஞ்சுகள் கண்களுக்குக் குளுமை...! ரம்யம்...!

அந்தக் காலத்தில் வாழ்ந்த புகழ்பெற்ற மன்னனால் கட்டப்பட்டது.

பெரிய பெரிய கருங்கற்களைக் கொண்டும்... கற்தூண்களைக் கொண்டும் பிரமிப்பு ஊட்டும் வகையில் கோயிலை அந்த மன்னன் கட்டியிருந்தான்.

கோயிலின் அருகில் பிரம்மாண்டமான அரண்மனை உள்ளது. அங்கே ராஜா - ராணி தங்கும் வசந்த மண்டபம், அரண்மனை, தர்பார், படை வீரர்கள் தங்கும் பெரிய மண்டபம், யானை கொட்டகை, குதிரை லாயம் என்று அத்தனையும் இருக்கிறது.

ஒரு காலத்தில் மன்னனும், படை வீரர்களும், பொது மக்களும் என்று சிறப்பாய் செயல்பட்டுக் கொண்டிருந்த அந்த இடம் இப்போது சிதிலமாகிக் கொண்டிருந்தது.

ஆனால் அவன் கட்டிய சிவாலயம் மட்டும் எவ்வளவு பழமை வாய்ந்ததானாலும்... தனது கம்பீரம் குறையாமல்... அழகு குறையாமல்... கலை நயம் குறையாமல் ஓங்கி உயர்ந்து... தனது பெருமையை பறை சாற்றிக் கொண் டிருக்கிறது!

கோயிலுக்கு மன்னன் கொடுத்த ஏராளமான நிலங் களிலிருந்து நல்ல வருமானம் வருகிறது.

அங்கே ஆறுகால பூஜையும் நடைபெற்றுக் கொண் டிருக்கிறது.

அந்தக் காலத்தில் அரச குமாரிகள் சிவனை வழிபட... அரண்மனையிலிருந்து ஆலயம் வரை செல்ல பூமிக்கடியில் சுரங்கப் பாதை இருந்தது. இந்த சுரங்கப் பாதை தற்போது பாழடைந்து, இடிந்து வெளவால்களின், பூச்சி புழுக்களின், பாம்பு போன்ற கொடிய நச்சு விலங்கு களின் கூடாரமாகி இருக்கிறது!



சஞ்சனா குளக்கரையில் தவிப்புடன் அமர்ந்திருந்தாள்!

சந்தோஷின் வரவை எதிர்பார்த்து ஏக்கத்துடன் காத்திருந்தாள்!

சஞ்சனாவின் மனம் மட்டும் பாறாங்கல்லை சுமந்த கணக்காய்... மூச்சுக் காற்றுக்காய் தவித்துக் கொண டிருந்தது!

பத்து வருட பெரும் இடைவெளிக்குப் பிறகு... அவன் அருகில் அமர்ந்து... அவன் முகம் பார்த்து... தன் காதலுக் காய் யாசிக்க வேண்டுமே என்று கலங்கிக் கொண்டிருந் தாள்!

தனக்கும், தன் காதலுக்கும் இத்தகைய கஷ்டமான நிலைவரும் என்று கனவில் கூட நினைத்துப் பாராதவள்... நிஜத்தில் மாண்டுத்தான் போனாள்! மருகித்தான் போனாள்...! துடித்துத்தான் போனாள்!

அவளை கலங்க வைத்த... காக்க வைத்த....

கவலை ரேகைகளை படிய வைத்த நாயகன் கௌஷிகா வோடு படிகளில் இறங்கி வந்தான்.

கௌஷிகா தூரத்திலேயே அவனை மட்டும் அனுப்பி விட்டு நின்று கொண்டாள்.

சந்தோஷ் மெதுமெதுவாய் அவளருகே வந்தான்!

நின்றான்!

அளவான உடலோடு... நெடுநெடுவென வளர்ந்து... அடர்ந்த மீசையும்... அழுத்தமான உதடுகளோடும்... சிரிக்கும் கண்களோடும்... அழகிய மன்மதனாய் நின்ற சந்தோஷை... கண்கள் கலங்க நோக்கினாள்!

அவன் கண்களும் அவள் கண்களோடு கலக்க...

நோக்கினர்... நோக்கிக் கொண்டிருந்தனர்!

முதலில் தன்னிலையை உணர்ந்தவன், சந்தோஷ்!

சஞ்சனாவின் அருகில் சென்று சிறு இடைவெளி விட்டு அமர்ந்தான்.

"அ... அத்தான்... ந... நல்லாயிருக்கீங்களா...?"

சஞ்சனா வார்த்தை எழாமல் திக்கித் திணறிக் கேட்டாள்.

சந்தோஷ் மௌனமாய் மெல்லத் தலையசைத்தான்!

"அப்பா, அம்மா... உங்க வீட்டுக்கு வந்ததும்... அத்தை திட்டி அனுப்பிட்டாங்களாம்!"

அவன் மௌனமாய் அவளைப் பார்த்துக் கொண்டிருக்க...

"முடியாதுன்னு சொல்லிட்டாங்களாம்!"

சந்தோஷ் கண்களில் சோகத்தை சட்டென்று நிரப்பி... அவளை நோக்க...

"நான் உங்களை நேசிக்கிறேன், அத்தான்!" அவள் உயிரில் கலந்து உருகலாய் வார்த்தைகள் வர...

அவன் எந்த உணர்ச்சியும் இல்லாமல்... அவளைப் பார்வையால் தீண்ட....

"நீங்கள் என் உயிர்! என் இதயம்! என் சுவாசம்! நீங்கள் இல்லாத வாழ்க்கையை கனவில்கூட நான் நினைத்துப் பார்த்ததில்லை! அத்தை அவங்க முடிவை சொல்லிட் டாங்க! நீங்க என்ன சொல்ல வரீங்க? உங்க முடிவு என்ன?" என்றவள் கேட்டாள்.

"நீங்களும் என்னைக் காதலிக்கறீங்கதானே...?"

"..........."

"மௌனமாய் இருந்தா என்ன அர்த்தம், சந்தோஷ் அத்தான்? உங்க முடிவுதான் இறுதியானது!"



"..........."

"நான் உங்க அம்மா மனது மாறும் வரை காத்திருக்கத் தயார்! நீங்க என்னைக் காத்திருக்கச் சொல்லணும்!"

"..........."

"உங்க தங்கச்சிங்க ரெண்டு பேரும் படித்து, முடித்து... அவங்களுக்கு நல்ல இடத்துல வரன் பார்த்து திருமணத்தை முடிச்சிட்டு... அப்புறமா என்னை மணந் துட்டால் போதும்!"

"என்னை மணந்து... அப்புறமா உங்க தங்கச்சிங்க வாழ்க்கையை கவனிக்காமல் விட்டுடுவீங்களோன்னுகூட அவங்களுக்கு பயம் இருக்கலாம்!"

"..................."

"அத்தை அந்த பயத்தால்கூட நம் திருமணத்தை மறுக்கலாம்! அத்தைக்கு அந்த பயமே வேண்டாம்! அத்தையிடம் பேசுங்க, அத்தான்!"

"..................."

"எத்தனை ஆண்டுகளானாலும்... நான் காத்திருக்கத் தயார்! என்ன சொல்றீங்க...?"

"................"

"அப்பாவோட ஹெல்த் கண்டிசன் தெரியுமில்லையா?"

"................"

"அவர் ரொம்ப நாள் உயிரோட இருக்க மாட்டார்!"

"................"

"அவர் நிம்மதியா சாக... உங்க சம்மதம் வேண்டும், அத்தான்!"

"....................."

"உங்ககிட்ட இருந்து 'சம்மதம்' என்ற வார்த்தையை மட்டும்தான் எதிர்பார்க்கிறேன்! எப்போது திருமணம்...? எவ்வளவு நாளில் என்னை மணந்துப்பீங்க? அப்படின்னு எல்லாம் கேட்டு உங்களைத் துன்புறுத்த மாட்டேன்! தொல்லை கொடுக்க மாட்டேன்!

"....................."

"எத்தனையோ நல்ல மாப்பிள்ளைங்க வராங்க! அவர்களை எல்லாம் உங்களுக்காக மனம் உவந்து நிராகரிச்சுட்டு வராங்க, என்னைப் பெற்ற தெய்வங்கள்!"

"அவங்களுக்கும் மனசு இருக்கும் இல்லையா, அத்தான்? அப்பா... என்னை மணக்கோலத்துல பார்த்துட்டு செத்துப் போகணும்ன்னு சொல்றார்! தூக்கத்துல கூட இதையேத்தான் புலம்பறார்!"

"....................."

"என் அப்பா ஆசைப்படுவது... உங்களுடைய சம்மதத்தை மட்டுமே!"

"....................."

"அடுத்ததா உங்களையும், என்னையும் பட்டுடுத்தி மணக் கோலத்துல அருகருகே பார்க்கணும்ன்னு பேராசைப் படறார்!"

"....................."

"அத்தான்கிட்ட கடைசியா நானும் ஒரு வார்த்தை கேட்டுப் பார்க்கறேன்னு சொன்னதுக்கு... அப்பா மறுப் பேதும் சொல்லலே! நான் என்ன செய்யட்டும், அத்தான்?

"....................."



"நீங்களும் என்னைப்போல காதலிக்கறீங்க தானே? உங்களுக்காக காத்திருக்க எனக்கு பரிபூரண சம்மதம்!"

"....................."

"வாழ்வின் எல்லைவரை கூட உங்களுக்காகக் காத்திருப்பேன்! காத்திருக்கவா, அத்தான்...?"

நேசம் மேலிடக் கேட்டாள்!

அவள் கண்கள் உடைப்பெடுத்த ஆறானது.

சந்தோஷ்... தனது மாமன் மகளிடம்... தன்னுடைய உண்மையான நேசத்தை எடுத்துச் சொல்ல முடியாத நிலையை எண்ணி துக்கப்பட்டான்!

அபிராமி வேறு தூக்க மாத்திரையையும்... வயலுக்கு அடிக்கும் பூச்சிக்கொல்லி மருந்தையும் மடியில் கட்டிக் கொண்டு நேற்றிலிருந்து எதுவும் உண்ணாமல்... உறங்காமல்... படுக்கையில் முடங்கிக் கிடக்கிறாள்.

தாயின் இத்தனை தீவிரம் கண்டு சந்தோஷ் ரொம்பவே பயந்து போனான்.

சஞ்சனாவிற்கு சம்மதம் சொல்லி... இவளை எவ்வளவு நாட்கள் காக்க வைப்பது?

அவள் காத்திருப்பின் பலனாய்... கடைசியில் இரு வரும் இணைந்தால் இன்பம்!

இல்லையேல்... எத்தனை பெரிய பாவமாகிப் போகும்?

நான் எவ்வளவு பெரிய பாவியாகிப் போவேன்!

முடிவெடுக்க முடியாமல்... முள்ளின் மேல் அமர்ந்திருப்பது போல உணர்ந்தான், சந்தோஷ்!

அதனால், எந்த முடிவும் எடுக்க முடியாமல்... மௌனத்தை துணைக்கழைத்துக் கொண்டு... குத்துக் கல்லாய் அமர்ந்திருந்தான்.

இத்தனை நாட்களும் அவனிடமிருந்த மௌனத்தை ரசித்தவள்... இப்போது அவனுடைய மௌனத்தை வெறுத்தாள், சஞ்சனா.

"அத்தான்... உண்மையை உடைச்சி சொல்லிடுங்க! நிஜமாகவே... என் மேல் உங்களுக்குக் காதல் இல்லையா? மௌனமா இருந்தால் என்ன அர்த்தம்? ஒரு பெண் இதைவிட இன்னும் எப்படிக் கீழிறங்கிக் கெஞ்சுவது, அத்தான்?"

பொங்கிய அழுகையை மென்று விழுங்கிக் கேட்டாள்.

சந்தோஷோ மௌனத்தைக் கலைக்காமல்... அப் படியே இருந்தான்.

அவள் உயிர் வழிய வழியக் காதலித்த காதலும்... காதலனும்... எத்தனை பழி வாங்கி விட்டனர்?

அவள் உயிரில் கலந்து... உணர்வில் ஊடுருவி... நெஞ்சத்தில் தென்றலாய் தவழ்ந்த.... இதயத்தை சில்லிட வைத்த... சிலிர்க்க வைத்த அத்தனைக் காதலும்... அவளை அணுஅணுவாய் சிதைத்துச் சின்னா பின்னமாக் கியது.

'நிஜம் தானா...? அத்தனையும் நிஜம்தானா...?'

உருகி உருகி... மருகி மருகி... சந்தோஷை காதலித்தது நான் மட்டும் தானா...?'

'என் சுவாசமாய்... அவர் மேலான நேசத்தை நினைத்து வாழ்ந்தது... நான் மட்டும் தானா...?'

'காதலில் கரைந்து... காணாமல் போனது நான் மட்டும் தானா...?'

'அப்போ... கண்ணோடு கண் நோக்கி காதல் மொழி பேசியது... உதடோடு உதடு கலந்து மௌனமே மொழி



யாய்... புன்னகையால் பேசிக் கொண்டது... அத்தனையும் பொய்யா...?'

'அப்போ என் பக்கம் மட்டும்தான், நேசமா?'

'என் நேசத்திற்கு எதிர் நேசம் அவரிடம் இல்லையா...?'

'இத்தனை நாளும் நான் 'அவருக்கும் என்மேல் காதல்... நேசம்... பாசம்... அன்பு...' என்று நினைத்து, சிலிர்த்து, சிலாகித்தது... அத்தனையும் வெறும் பிரமையா?'

'வெறும் மாயையோடுதான் இத்தனை நாளும் வாழ்ந்தேனா...?'

'வெறும் கற்பனையில் கோட்டை கட்டி... கனவுகளால் சித்திரம் தீட்டி... ஐய்யோ... பாழாய்ப் போன இதயம் இப்படி ஏமாந்து... இத்தனை நாளும் ஏங்கி ஏங்கி... உயிர் மூச்சுக்காய் தவித்திருக்கிறதே!'

'விடிய விடிய இத்தனை நாளும் தூக்கத்தில் கண்ட கனவுகள் அனைத்தும் நிறைவேறாத கனவுகள் தானா? அத்தனை அன்யோன்யமாய் இணைப் பிரியாமல் குடும்பம் நடத்தியது எல்லாம் கனவுக்கு தானா?'

'நிஜத்தில் சேர முடியாது என்று தெரிந்துதான்... என் ஏக்கம் போக்க... அத்தனை அற்புதமான கனவுகள் வந்ததா? கற்பனைகள் பெருக்கெடுத்ததா?'

'ஐய்யோ... என் கணவனாய் சந்தோஷ்... தங்கக் கட்டிகளாய் ஆண் ஒன்று... பெண் ஒன்று என்று குழந் தைகள்...! ஆனந்தமான ஊடலும் கூடலுமான வாழ்க்கை...! அவ்வளவும் வெறும் தூக்கத்தில் வந்த கற்பனை கனவுகள் தானா?'

'என் காதல் கைக்கிளைக் காதலா?'

'குறுந்தொகைத் தலைவியாய் முகம் வாடி... கண்களும், உடம்பும் பசலைப் படிந்து... காத்திருந்தது... அவ்வளவுமே விழலுக்கு இறைத்த நீர் தானா?'

'இவர் எப்போது... எப்படி பொய்யன் ஆனார்?'

'இவர் பொய் சொல்லலாம்! ஆனால்... ஆனால்... என்னைத் தீண்டி சிலிர்க்க வைத்த இந்த அழகான கண்கள் பொய் சொல்லுமா?'

'இந்த ஏக்கப் பார்வை... என் கற்பனை தானா?'

'நான் போகுமிடமெல்லாம் நின்று... எனக்காக காட்சி தந்தார் என்று இறுமாந்து இருந்தது... அத்தனையும் பொய்யா...?''

'விடிய விடிய படிக்கிறோம் என்ற பாவனையில் ஒருவரை ஒருவர் விழுங்குவது போலப் பார்த்துக் கொண்டது எல்லாம்... எல்லாமே... கானல் நீரா?'

அவளுள் கோபம் பூகம்பமாய்... சுனாமியாய்... சூறாவளியாய் சுழன்று வீசியது!

''நீங்கள் அபிராமி பெற்ற பிள்ளையல்லவா? கல்லுக்குள் காதலையும்... இரும்புக்குள் இதத்தையும்... நெருப்புக்குள் குளிர்ச்சியையும்... பூகம்பத்திடம் பூவின் மென்மையையும்... எரிமலையிடம் தென்றலின் குளிர்ச்சியையும் எதிர்பார்ப்பது எவ்வளவு தவறு? எவ்வளவு மதியீனம்?...

என்னை எதனால் அடித்துக் கொள்ளலாம்?

பச்சை மூங்கிலை வளைத்து விடலாம்! ஆனால், நீங்களோ காய்ந்த மூங்கில் என்று இப்போது தானே



தெரிகிறது! உங்களில் வளையும் தன்மையை எதிர்பார்க்க முடியுமா?''

மிதமிஞ்சிய கோபத்தில் கத்தினாள்.

அவளுள் வெறுமை!

அந்த வெறுமை வெறுப்பாகி...

அந்த வெறுப்பு கோபமாகி...

அந்தக் கோபம் பயங்கர குரோதமாகி...

அதன் விளைவாய்...

சட்டென்று முடிவெடுத்தாள்.

எழுந்தாள்!

அவனை ஆழமாய் ஒரு பார்வை பார்த்தாள்!

அடுத்த நிமிடம் விறுவிறுவென்று நடந்தாள்!

கௌஷிகா புரியாமல் அவளைப் பார்க்க...

சஞ்சனாவோ பதில் சொல்லாமல் வேகமாகப் படியேற...

கௌஷிகா அவள் பின்னோடே ஓடினாள்.

ஆனால் அவள் வேகத்திற்கு ஈடு கொடுத்து நடக்க முடியவில்லை, கௌஷிகாவால்!

அதனால் ''சஞ்சனா... சஞ்சனா...'' என்று அழைத்தபடி படியேற...

அவள் நீண்ட தூரம் படியேறிச் சென்ற பின்...

''சஞ்சனா...''

சந்தோஷ் உயிர் வழிய... காதல் மேலிட... நேசம் நிரம்பி வழிய அழைக்க...

அது அவள் செவியை எட்டாமல் காற்றோடு காற்றாய் கரைந்து போனது!

''நான் உன்னைக் காதலிக்கவில்லை!'' என்று அவன் சொல்லியிருந்தாலும் சஞ்சனா இவ்வளவு கலங்கியிருக்க மாட்டாள்.

'உன்னோடு திருமணம் இல்லை! அதனால், நீ வேறு ஒருவனை மணந்து மகிழ்ச்சியாய் இரு!' என்று அறிவுறுத்தி இருந்தாலும் இவ்வளவு துடிதுடித்து இருக்க மாட்டாள்.

எதுவுமே பேசாத... சொல்லாத... மவுனமே அவளைக் கொன்று கூறு போட்டது.

அவளை உள்ளுக்குள் கத்திக் கதற வைத்தது!

இதுவரை அவள் கரம் கோர்த்து... ஒட்டி உறவாடி... கை கோர்த்து திரிந்த மௌனம்... இப்போது பகையாகிப் போனது!

மௌனத்தை வெறுத்தாள்!

காதலை வெறுத்தாள்!

சந்தோஷ் மேல் கொண்ட அளவு கடந்த அன்பை, நேசத்தை, பாசத்தை, காதலை, பக்தியை, பிணைப்பை தன்னுள் இருந்து துடைத்தெறிய கங்கணம் கட்டிக் கொண்டாள், சஞ்சனா.

அவளுள் ஊடுருவி, உயிர் வரை பரவிய... நேசத்தின் ஆணி வேரை, சல்லி வேரைக் கண்டறிந்து... அதை அடி யோடு... அவளிடமிருந்து பிடுங்கி எறிய முயற்சித்தாள்.

''சஞ்சனா நில்! சொல்வதைக் கேள்! சந்தோஷ் என்ன சொன்னார்? ஏன் இந்தக் கோபம்? பொறுமையா போடி!



என்னால ஓடி வர முடியலை!'' கௌஷிகா மூச்சு வாங்க வாங்கச் சொல்ல...

''நான் திவாகரை திருமணம் செய்துக்கப் போறேன்!''

''எந்த திவாகரை?''

''ஐயா பையன் திவாகரை! வடக்கநந்தல் ராமசாமி ஐயா பையன் திவாகரை திருமணம் செய்துக்கப் போறேன்!''

''ஏய் அறிவு கெட்டவளே...''

கௌஷிகா கோபமாய் சொல்ல...

''சத்தியமா அவரைத்தான் மணந்துக்கப் போறேன்!''

''உனக்கென்ன புத்தி மழுங்கிடிச்சா? இல்லே பைத் தியம் பிடிச்சிடிச்சா?''

''கௌஷிகா நீ எதுவும் பேசாதே! திருமணம் என் சொந்த விஷயம்! நீ எதுவும் எனக்கு புத்தி சொல்ல வேண்டாம்!''

''சந்தோஷ் நல்லவர்டி!''

''விஷம்! சந்தோஷ் பயங்கர விஷம்!'' முகம் சுளித்து சொல்ல...

''அவர் என்னதான் சொன்னார்?''

''அவரா நல்லவர்? கனிவே இல்லாத கல்லை நினைத்து அநியாயமா என் சந்தோஷத்தை... என் வாழ்க்கையை அழிச்சிட்டு வாழ்ந்து இருக்கேன்...!

என் வாழ்க்கையை அந்த மடையனிடம் தொலைச் சிட்டு.. அப்பா, அம்மாவை வேதனைப்படுத்திட்டு வாழ்ந்து இருக்கேன்..!

இப்படி ஒரு பொய்யன் சந்தோஷ்னு தெரிஞ்சிருந் தால்.. இன்னேரம் எவனையாவது கட்டிட்டு.. ஒரு பேரப்

பிள்ளையை பெற்று... என் அப்பா மடியில போட்டு இருப்பேனே!''

சஞ்சனா அப்படியே மடங்கி உட்கார்ந்து... தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

''அந்த சந்தோசத்திலாவது.. என் அப்பா ஆயுள் நீடிச்சிருக்குமே! இனியும் என் அப்பாவோட ஆசைகளை.. என் பொய்யான காதலுக்காக அழிக்க விரும்பலே! என் முடிவை இனி ஒரு நாளும் மாத்திக்க மாட்டேன்! இப்பவே அப்பாகிட்ட இந்த செய்தியைச் சொல்லப் போறேன்!''

கண்களை துடைத்து எழுந்து சஞ்சனா நடக்க...

''சஞ்சு.. பொறுக்கலாம் சஞ்சு!''

''பொறுக்கறதா? இனிமே ஒரு நொடி கூட அந்த மனுசனுக்காக காத்திருக்க மாட்டேன், கௌஷிகா!''

''சொல்றதைக் கேளு, சஞ்சனா!'' என்று கெஞ்சிக் கொண்டே வர...

அதற்குள் வீடு வந்துவிட....

ஆதவன், சத்தியவதியிடம் சகலத்தையும் சொன்னாள், சஞ்சனா.

இருவரும் கலங்கினார்கள்.

''அப்பா.. ஐயா ராமசாமி வீட்டுல இருந்து வந்தாங்க இல்லையா? அவங்க மகன் திவாகரைக் கட்டிக்க எனக்கு சம்மதம்! என் சம்மதத்தை.. உடனே அவங்க வீட்டுக்கு தெரியப்படுத்துங்க! எவ்வளவு சீக்கிரம் திருமணத்தை முடிக்க முடியுமோ.. அவ்வளவு சீக்கிரம் என் திருமணத்தை முடிச்சிடுங்க!''

இருவரும் முதலில் அதிர்ந்தனர்!



பின் மகிழ்ந்தனர்!

''திவாகர் வேண்டாம்மா! வேற நல்ல மாப்பிள்ளையாவே பார்த்து.. உனக்கு ஜாம் ஜாம்ன்னு கல்யாணத்தை நடத்தி வைக்கிறேன்!''

ஆதவன் சொல்ல...

''ஆமாம், சஞ்சனா! பையனைப் பத்தி நல்லதாவே கேள்வி படலே! பெத்தவங்க ரெண்டு பேரும் தெய்வங்கள்! நாத்தனார் தேவதை! ஆனால் அவனோடு அல்லவா வாழப் போறே.....!

மாலையிடப் போறவன் நல்லவனா அமைந்தால் தான் வாழ்க்கை இனிக்கும்! இல்லேன்னால் காலம் முழுக்க நெஞ்சில் கசப்பை சுமந்துட்டுதான் வாழ வேண்டி இருக்கும்! மாமனாரும், மாமியாரும் எத்தனை நாட்கள் உடன் வருவார்கள்?''

சத்தியவதி கவலையோடு கேட்டாள்.

''அம்மா.. அந்த அம்மாவையும், அவரையும் ரொம்பவே பிடிச்சிருக்கு! நான் இல்லேன்னதும்.. அவர்கள் முகம் எப்படி வாடிப்போயிடிச்சி, பார்த்தீங்க தானே? இத்தனை பாசமுள்ளவர்களின் மகன் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும்!''

''திவாகர் வேண்டாம்மா!''

சத்தியவதி மீண்டும் துன்பத்தோடு சொல்ல...

''அவன் கறுப்பா? சிவப்பா? தெரியலையே! குணம் மட்டும் சரியில்லேன்னு ஊர்ல பரவலா பேச்சு! அப்படி ஒரு குணக்கேடனை கட்டிக்கணும்ன்னு உனக்கென்ன தலையெழுத்தா, சஞ்சனா?''

''அம்மா.. உடம்புக்கு கற்பு இருக்காப் போல... மனசுக்கும் கற்பு இருக்கு! நான் உடலால கெடலைன்னாலும்.. மனசால கெட்டுத்தானே போயிருக்கேன்! உடம்பால கெட்டவளை வேசின்னு சொல்லும்போது.. என்னையும்...''

''ஐய்யோ சஞ்சனா..'' அம்மா சஞ்சனான்னு வாய் பொத்தினாள்.

''எனக்கு அந்த திவாகரே போதும்மா! ஒரு நல்லவனை மேலும் நல்லவனாக்குவதைவிட.. ஒரு கெட்டவனை நல்லவனாக்குவது எவ்வளவு பெரிய செயல்! எவ்வளவு பெரிய புண்ணியம்!''

''ஒரு கெட்டவனை என்றுமே திருத்த முடியாது! நீ அந்த தீயில விழுந்து பொசுங்கித்தான் போகனும்!''

''அதையும் இன்பமாவே செய்யக் காத்திருக்கேன்!''

''அப்புறமா நீ கஷ்டப்படுவே, சஞ்சனா! இப்படி ஒரு முடிவு.. அவசர முடிவு எடுத்ததுக்காக வருத்தப்படுவே! அப்போ தேடிட்டு போனாலும்.. நல்ல வாழ்க்கை கிடைக்காது!''

''சஞ்சனா போக்குக்கே விட்டுடு, சத்தியவதி, மாப்பிள்ளை சரியா இருந்தால் மாமனார், மாமியார் சரியிருக்க மாட்டாங்க...!

மாப்பிள்ளை சரியில்லேன்னாலும்.. ஒரு பெண் நினைச்சால்.. அளவுக்கதிகமான அன்பை, பாசத்தை, நேசத்தைக் காட்டி அவனை மாற்றிடலாம்! திருத்தி தன் கட்டுப்பாட்டுக்குள்ள வச்சிக்கலாம்! புரியுதா, சத்தியவதி?'' ஆதவன் அப்படிக் கூறவும்...

சத்தியவதி மௌனமானாள்.



இவர்கள் இங்கே சந்தோசமான செய்தியை தெரிவிக்க முடிவெடுத்த சமயம்...

சந்தோஷ் பாரம் சுமந்த மனதோடு கல்லூரிக்கு இரவே பயணமானான்.

திவாகரின் பண்ணை வீட்டில்...

''தினமும் மாலை, ஊரிற்கு மேற்கே உள்ள சிவன் கோயிலுக்கு வருகிறாள்! தனியாகவோ.. தோழியோடே வருகிறாள்! அந்த சமயம் கார் கொண்டுட்டுப் போய் நிறுத்தி.. தனியா வந்தால் நாளைக்கே தூக்கிட்டு வந்துடறோம்!''

நண்பர்கள் திவாகரிடம் சொல்ல...

திவாகர் கண்களில் அவளை அடையப்போகும் ஆசையின் வெறி பளபளப்பாய் தெரிந்தது.




சஞ்சனாவினுள் ஊடுருவிய.. சந்தோஷின் நினைவுகளை சுத்தமாய் துடைத்தெறிய அவள் நினைத்தாலும்.. அவளால் முடியவில்லை.

அவன் பாதச்சுவடுகளே நிறைந்த இருதயத்தில்.. அவன் நினைவுகளை.. எந்த ரப்பரைக் கொண்டும் அழிக்க முடியாமல் தவித்தாள், சஞ்சனா.

இதயத்தில் ஆழக் காலூன்றி நின்ற பாதகனை.. கண நேரம் கூட மறக்க முடியாமல் தவித்தாள்.

சந்தோஷோடு கனவுகளில் குடும்பம் நடத்தி.. சண்டையிட்டு.. ஊடலோடு காலையில் வேலைக்குப் போன கணவனின் வருகைக்கு அலங்காரத்தோடு அவள் காத்திருக்க.. அவன் வேண்டுமென்றே லேட்டாய் வர. அவள் ஊடலில் கரைந்து ஆத்திரமாய் தவித்திருக்க... அவன் வீடு வர.. இவள் முகம் சுளித்து கோபத்தோடு, அழுகையோடு படுக்கையில் போய் விழ.. அவன் முதலில் கெஞ்சி.. பின் கொஞ்ச.. அவள் ஊடலைக் கைவிட... அவர்களின் கூடலில் கட்டில் கூட பயந்து தவித்து.. எல்லாமே... எல்லாமே.. கனவாகிப் போனது!

கற்பனையில் பிள்ளைப் பெற்று... அதனை உச்சி முகர்ந்து பள்ளிக்கு அனுப்பி.. மாலை நேரத்தோடு வராத குழந்தைக்காக மனம் பதறி.. வருந்தி... அக்குழந்தையை கண்டவுடன்.. மலர்ந்து.. வாரியணைத்து... முத்தமிட்டு கொஞ்சியது அனைத்துமே காணாமல் போனது!

நிழலாகிப் போனது!

நீர் குமிழாகிப் போனது!

இனிமையான அந்த கனவுகளும், கற்பனைகளும் தீயிலிட்ட கவிதை காகிதமாய் சாம்பலாகிப் போனது!

அவள் நினைப்புகள் அத்தனையும் கானல் நீராகிப் போனது!

அவள் நடக்கும் என்று நினைத்த நிஜங்கள்... நிழலாகிப் போனது!

அவள்..

சிறகொடிந்த பறவையாய்...

அனலிட்ட புழுவாய்...



பூகம்பத்தில் மாட்டிய புள்ளிமானாய்...

எரிமலையில் சிக்கிய வண்ணத்துப் பூச்சியாய் துடித்தாள்!

இதுநாள்வரை வேதனையின் வேர்கூட அறியாத அவள்... அவளுள்ளே கத்தினாள்..! கதறினாள்..!

இருதயம் சில்லு சில்லாய் உடைந்துவிட்டது! அதனை ஒட்ட வைத்து மீண்டும் உயிர்வாழ முடியாத வேதனையோடு சுருண்டாள்!

சட்டென்று தவறான முடிவு எடுத்துவிட்டோமே என்று தவித்தாள்!

'எங்கு வேண்டுமானாலும் கோபம் கொள்ளலாம். ஆனால் காதலில் மட்டும் கோபத்தை பாராட்டக்கூடாது' என்று சஞ்சனா தெரிந்துக் கொண்டாள்!

'பொறுத்திருக்கலாமோ?'

'என் தலையில்.. நானே செந்தணலை அள்ளிக் கொட்டிக் கொண்டேனோ!'

'காதலில்.. காதலனிடம் இப்படி கோபம் கொண்டு விட்டேனே!'

'ச்சே.. பாழாய்ப் போன மனமே சட்டென்று கோபம் கொண்டு... என் குடியை அழித்துவிட்டாயே!'

'பாழாய்ப் போன ஈகோவே.. என் பாழும் மனதை மாண்டுப்போக வைத்து விட்டாயே!'

'என் சுவாசமாகி..என் ஜீவனாகி.. என் ஆத்மாவாகி.. என் உயிராகிப் போனவனிடம் வீம்புக்காய்... கோபத்தில்.. சட்டென்று எடுத்த முடிவு தப்பாகிவிட்டதே!'

'கொஞ்சம் பொறுத்திருந்தால்.. பொக்கிஷமான வாழ்க்கை கிடைத்திருக்குமோ!'

'தீயைத் தேடி தென்றலே போனக் கதையாகிப் போனதே, என் வாழ்வில்!'

'சந்தோஷ்.. சந்தோஷ்.. சந்தோஷ்..'

'உன்னை எப்படி மறப்பேன்?'

'நீயில்லாமல் எப்படி அவனோடு வாழ்வேன்?'

'என்னால் உன்னை மறந்து.. அவனோடு மனம் ஒன்றி.. எவ்வாறு குடும்பம் நடத்துவேன்?'

'செய்தி கேட்ட நாளிலிருந்து ஐயா ராமசாமியும், பார்வதியம்மாளும் சந்தோசத்தில் துள்ளி குதித்து.. தினம் தினம் நகையையும், பட்டுப் புடவையையும்... என் வீட்டிற்கு எடுத்து வந்து குவித்துவிட்டு போகிறார்களே!'

'திவாகர்.. காதல் நாயகனாய் காலை, நண்பகல், மாலை என.. மூன்று வேளைகளும்... என்னை வந்து ஆசை பொங்க பொங்க.. காமம் கண்களில் நிரம்பி வழிய வழிய பார்த்துவிட்டுச் செல்கிறானே!'

'அப்பா.. எவ்வளவு குதூகலமாய் இருக்கிறார்!'

'அம்மா.. சிட்டாய்.. வண்ணத்துப் பூச்சியாய் பறந்து பறந்து வேலை செய்கிறாள்!'

'ஊரெல்லாம் பத்திரிகை விநியோகிக்கப் படுகிறது!'

'சந்தோஷ் - சஞ்சனா' என்று இருக்க வேண்டிய பத்திரிகையில் 'திவாகர் - சஞ்சனா' என்று இருக்கிறதே!'

'இத்தனை பேரின் சந்தோசம் பார்க்க..என் சந்தோசத்தை தியாகம் செய்தால் என்ன என்றும் தோன்றுகிறது! பின் மறு நிமிடமே என் மனம் கலங்கி.. உன் காலடியில் கிடக்கிறதே!'

'சந்தோஷ்.. உன்னை நான் நிராகரித்து.. திவாகரை, மணக்க.. நான் எடுத்த முடிவு.. உனக்குத் தெரியாது, அல்லவா?'



'சந்தோஷ்.. உன்னை நான் எப்படித்தான் மறந்து வாழ்வேனோ!'

'மறதிக்கு மருந்திருக்கிறதா, சந்தோஷ்?'

சஞ்சனா மனதோடு புலம்புவாள்!

சலசலத்து ஓடும் பெரிய கோமுகி ஆறு!

நீர்பரப்புக்கு மத்தியில் அழகான வெண்மணல் திட்டு!

அந்த மணல் திட்டில் சஞ்சனாவும், சந்தோஷும் மட்டுமே.. அருகருகே.. தோள் உரசி அமர்ந்திருக்கின்றனர்.

''சஞ்சனா குட்டி...''

''ம்...''

''சஞ்ச.. சஞ்சம்மா.. என்னைப் பாரேன்!''

நாணத்தில் தலைகுனிந்து அமர்ந்திருந்தவளின் முகத்தை கைகளால் பற்றி நிமிர்த்த...

சஞ்சனா மெல்ல மெல்ல மான் விழிகள் மருள.. அவனுடைய அழகான முகத்தில் பார்வையைப் பதித்து...

''என்ன அத்தான்?''

சஞ்சனா நேசம் மேலிடக் கேட்க..

''என்னை எதனால் இந்த அளவு பிடித்தது?''

அழகாய் விழிகளும், இதழ்களும் மலர்ந்து சிரிக்க.. அப்படிக் கேட்டவனை ஆழ்ந்து நோக்கிவிட்டு...

''உங்களுடைய மென்மையான மனதை எனக்கு ரொம்பவே பிடிக்கும், அத்தான்!'' மென்னகையோடு சொல்ல...

''அப்படியா? அப்புறம்?'' ஆச்சரியமாய் கேட்க...

''அன்பான குணம்! அதிர்ந்து பேசாத பண்பு!''

"ம்.. அப்புறம்?" சந்தோஷ் ஆர்வமாய் கேட்க...

"உங்களின் அளவுக்கதிகமான திறமை! கூர்மையான நுண்ணறிவு!"

"ம்.. மேலே சொல்லு?"

"இந்த அழகான முகம்! ஜில்லென்று குளிர்ச்சியை வீசும் கண்கள்! மென்மையான புன்னகையை வழிய விடும் இதழ்கள்! பளிச்சிடும் பற்கள்!"

"ம்.. ரியலி?"

"யெஸ்! உங்கள் வழுவழுப்பான கன்னம்! அந்த கன்னத்தில் விழும் குழிகள்!"

"அடடா..."

"என் மூச்சுக்காற்றை தேடித்தேடி சுவாசிக்கும் உங்கள் நாசியும், இதயமும்.. அப்புறம்... அப்புறம்.. உங்களின் ஆண்மை.. இல்லையில்லை பேராண்மை ரொம்பவே பிடிக்கும்!"

"நான் அத்தனை அழகனா?" சந்தோஷ் நம்பாமல் கேட்க..

"ஆமா!" சஞ்சனா பட்டென்று சொன்னாள்.

"அப்புறம் இன்னும் ஏதாவது பாக்கியிருக்கா, சஞ்சனாம்மா?" காதலாய் சந்தோஷ் கேட்க...

"அப்புறம்.. அப்புறம்.. இந்த அடர்ந்த கரிய மீசையை ரொம்ப ரொம்ப ரொம்ப பிடிக்கும்!"

சஞ்சனா கண்களில் காதலையும், காமத்தையும் ஒன்றாய் போட்டு குழைத்து.. அவனை ஒரு பார்வை பார்த்து விட்டு.. அவன் எதிர்பாராத சமயம்.. அவனுடைய மீசை முடியை பிடித்து இழுக்க...



"ஐய்யோ ராட்சசி.. வலி உயிர் போகுதடி!" சந்தோஷ் அலற..

"ஸாரி அத்தான்!"

சஞ்சனா வருந்தி மன்னிப்பைக் கோர..

"வலிதாங்க முடியலையடி!" முகம் சுளித்துச் சொல்ல...

"நான் என்ன செய்ய?" குழந்தையாய் சிணுங்கி சஞ்சனா கேட்க...

"மருந்து போடுடி!"

"மருந்தா..? என்கிட்ட ஏது?"

சஞ்சனா சொல்லிவிட்டுப் புரியாமல் முழிக்க..

"உன்கிட்ட நிஜமாவே மருந்து இல்லையா? பொய் சொல்லாதே. குட்டிம்மா!"

அவன் அவள் உதடுகளை விழிகளால் ஸ்பரிசிக்க...

"உங்க கிட்ட போய் நான் பொய் சொல்வேனா, அத்தான்?"

"மடச்சி... உன் பட்டு உதட்டில் 'முத்தம்' என்ற ஏராளமான மருந்தை ஒளித்து வைத்திருக்கிறாயே!"

"ச்சீ.. புத்தியைப் பார்!"

சஞ்சனா முகம் சுளித்துச் சொல்ல...

"என் செல்லமே... என் கண்ணே.. ஒரே ஒரு சின்ன முத்தம் மட்டும் கொடுடா!"

சந்தோஷ் கெஞ்ச...

"நான் மாட்டேன்... நான் மாட்டேம்பா! கல்யாணத்துக்கு முன்னாடி இதெல்லாம் தப்பு தெரியுமா..?"

சஞ்சனா அழகாய் உதடு சுழித்துச் சொல்ல...

"என் ஏக்கம் உனக்குப் புரியலையா, வைரமே?"

"ம்கூம்.. ச்சீ.. தூரப் போங்க!"

"சஞ்சு.. சஞ்சும்மா.. ப்ளீஸ்ம்மா... இந்த அழகான உதட்டால்.. என் உதட்டில் ஒரே ஒரு முத்தம்... உதட்டுல கூட வேண்டாம்டா.. என் கன்னத்தில் கூட கொடுத்தாப் போதும்... நான் ரொம்ப சந்தோசப்படுவேன்! ப்ளீஸ்.. ப்ளீஸ்டா..."

சந்தோஷ் கெஞ்ச...

சஞ்சனா மறுக்க...

அவள் மறுப்பை சட்டை செய்யாமல் காதலோடு.. சந்தோஷ் தாவி.. அவளைக் கட்டி.. உதட்டில் முத்தமிட....

சஞ்சனா அவனிடமிருந்து விலக போராட....

அடுத்த நொடி இருவரும் மணற்பரப்பில் உருள...

"என்னை விடுங்க.. என்னை விடுங்க, அத்தான்!" என்று உருண்டவள் சுவற்றில் மோதி தூக்கத்திலிருந்து முழித்தாள், சஞ்சனா!

'ஐய்யோ.. எல்லாம் கனவா..?'

'திருமணம் நெருங்க நெருங்க இது என்ன விபரீதக் கனவு?'

தலையைத் தூக்கிப் பார்க்க.. அம்மா ஆழ்ந்த நித்திரையில் இருந்தது விடிவிளக்கின் வெளிச்சத்தில் தெரிந்தது!

சஞ்சனா மடங்கி உட்கார்ந்து.. மடியில் முகம் புதைத்து.. சத்தம் வராமல் அழுதாள், விடியவிடிய!






சூரியன் மனசாட்சியே இல்லாமல் மனிதர்களையும், மரங்களையும் சுட்டெரித்த நண்பகல் பொழுது!

வீட்டுவாசலில் வந்து குரல் கொடுத்த போஸ்ட்மேன் அருகில் போனாள், கௌஷிகா.

"உங்களுக்கு ஒரு ரிஜிஸ்டர் போஸ்ட் வந்திருக்கு!"

"கொடுங்க!" என்று வாங்கியவளிடம் போஸ்ட்மேன் அக்னாலேஜ்மெண்ட் சீட்டில் கையெழுத்து வாங்கிக் கொண்டு... அவ்விடம் விட்டு அகன்றார்.

கௌஷிகா உள்ளேப் போய் ப்ரம் அட்ரஸைப் பார்க்க மிரண்டாள்.

அது சந்தோஷிடம் இருந்து வந்த கடிதம்!

கௌஷிகா பரபரப்போடு பிரித்து படித்தாள்.

சஞ்சனாவிற்குதான் கடிதம் எழுதி இருந்தான், சந்தோஷ்!

*அன்புள்ள சஞ்சனா,*

*நலமா, கண்ணே?*

*எப்படி இருக்கிறாய், என் குட்டித் தங்கமே?*

*நான் நலமாய் இல்லையடி, பெண்ணே!*

*உன்னை என் மௌனமென்ற ஆயுதத்தால் கொன்றுவிட்டு வந்துவிட்டேனே என்று மாய்ந்துப் போகிறேன், என் உயிரே!*

உன்னிடம் மன்னிப்பை வேண்டுகிறேன்!

என்னை மன்னிப்பாயா, என் சுவாசமே?

என் அடிமுட்டாள்தனத்தை இப்போதுதான் உணர்கிறேன்!

எந்த இடத்தில் மௌனம் சாத்தியம் என்று தெரியாமல்.. உன்னை மௌனத்தால் ரொம்பவே நோகடித்துவிட்டேனா, என் உயிரில் கலந்த உறவே?

என்னை மன்னித்துக் கொள், சஞ்சனாம்மா!

என்னால் இயல்பாய் இருக்க முடியாமல் தவித்தேன்! முடிவெடுக்கும் வரை முள்ளாய் குத்திய என் இதயம்.. இப்போது மயிலிறகாய் என்னைத் தாலாட்டுகிறது!

தாய் என்பவள் தெய்வம்! என் உயிர் கொடுத்தவள்! தாய்தான் முதன்மையானவள்! முக்கியமானவள்! அவளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்தான்! மரியாதை கொடுக்க வேண்டும்தான்!

அதே தாய் ஒரு குறிப்பிட்ட வயது வரைத்தான் உடன் வருவாள்! பின் காலமெல்லாம் கைக்கோர்த்து.. கஷ்டத்திலும், நஷ்டத்திலும், துன்பத்திலும், துயரத்திலும், இன்பத்திலும், ஆனந்தத்திலும் உடன் வருபவள் மனைவி! அந்த மனைவி அம்மாவுக்குப் பிடித்தவளாய் இருக்க வேண்டும் என்பதில்லை! எனக்குப் பிடித்தவளாய் தான் இருக்க வேண்டும்!

என்னால் நீயில்லாமல் வாழ முடியாதுடி, கண்ணே! நீ என் உயிரானவள்! நீ என் உடலானவள்! நீ என் சுவாசமானவள்! நீ என் ஆத்மாவானவள்! எல்லாமே.. எல்லாமே.. நீதான் கண்மணி!



உன்னையன்றி வேறொருத்தியை மனைவியாய் என்னால் கற்பனைக் கூடச் செய்துப்பார்க்க முடியாது, சஞ்சனா!

என் சுவாசமாகிப்போன உன்னை மறந்து ஒரு சிறு நொடிப்பொழுது கூட உயிர்வாழ மாட்டேன்!

அம்மா.. நான் எங்கே உன்னை மணந்து.. அவர்களையும், தங்கைகளின் வாழ்க்கையையும் கேள்விக் குறியாக்கி.. கடமையிலிருந்து தவறிவிடுவேனோ என்று பயந்து கூட... நம்மைப் பிரிக்க நினைக்கலாம்! இதுகூட என் நினைப்புதான்!

நான் படித்து முடித்து.. நல்ல வேலைக்குப் போய்.. தங்கைகளுக்கு மணம் முடித்துவிட்டு.. பின்னர் நாம் நம் ஆசையை அம்மாவிடம் கொண்டு போவோம்! அதுவரை எனக்காக காத்திருப்பாயா, சஞ்சனாம்மா?

நம் காத்திருப்புக்கு பலனாய்.. அம்மா மனமிரங்கி சம்மதிக்கலாம்! அல்லது சம்மதிக்காமலும் போகலாம்!

அப்படியே அவர்கள் சம்மதிக்கவில்லையென்றாலும் நான் உன்னை கைவிட மாட்டேன்! அவர்களை மீறி உன்னை கைப்பிடிப்பேன்!

என் நெஞ்சில் தைரியம் வந்துவிட்டது! அந்த தைரியத்தை கொடுத்தவள், நீதான்! உன் மிதமிஞ்சிய காதல்தான்!

சஞ்சனாம்மா இன்னும் ஒரு வாரத்தில் ஊரிற்கு வருகிறேன்!

அம்மா... வீட்டை விட்டு கல்யாணத்திற்கோ, அல்லது ஷாப்பிங்கோ சென்ற சமயம் உன் வீட்டிற்கு வருகிறேன்!

மாமாவை உடனே கடைக்குப் போய்.. உனக்கு காஞ்சிப் பட்டுப் புடவையும், எனக்கு வேட்டி, சட்டையையும் எடுத்து வரச் சொல்!

நீ சொன்னதுபோல மாமாவின் முன்பு... இருவரும் பட்டுடுத்தி.. மணக்கோலத்தில் அவர்களுக்கு காட்சி தரலாம்!

மாமாவின் முன்பு உன் கைப்பிடித்து சத்தியம் செய்கிறேன் 'இவள்தான் என் மனைவி என்று!'

உனக்கு சந்தோசம்தானே?

சஞ்சனாம்மா.. ஐ லவ் யூடி!

ஒரே ஒரு முத்தம் மட்டும் அந்தப் பட்டு உதட்டிலும், கன்னத்திலும்.. வேண்டாம் வேண்டாம்.. உன் முறைப்பு இங்கே எனக்கு காட்சியாய் தெரிகிறது. அதனால், உன் உள்ளங்கையில் முத்தமிட்டு... நேசமுடன் உன் பதிலுக்காய் காத்திருக்கும்...

உன் சந்தோஷ்.

கடிதத்தை படித்து முடித்த கௌஷிகா தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

நீண்ட நேரம் அழுது கொண்டே இருந்தாள்.

தன்னைத் தேற்றிக் கொண்டு சஞ்சனாவைச் சந்திக்க.. அவள் வீட்டிற்கு போனாள்.

சத்தியவதி மட்டும்தான் இருந்தாள்.

''என்ன கௌஷி?''

''சஞ்சனா இல்லையாம்மா?''

''ஏன்? என்ன விஷயம்?''



''சும்மாதான் பார்க்க வந்தேன்!''

''அவ அத்தை, மாமா வந்து ஏதோ புடவை, நகை எடுக்கணும்ன்னு கூட்டிட்டுப் போய் இருக்காங்க!''

''முகூர்த்த புடவை எடுத்தாச்சி இல்லையா?''

''அதெல்லாம் முடிஞ்சிடுச்சி! அவங்க வீட்டு பூஜையறையில் விளக்கேத்தும்போது கட்ட வேண்டிய புடவையும், நகையும்ன்னு கூட்டிட்டுப் போய் இருக்காங்க!''

''நீங்க போகலையா?''

''நிறைய வேலை இருக்கே! அதையெல்லாம் யார் கவனிப்பா? கல்யாணம் வரை கூட மாட ஒத்தாசை பண்ணக்கூடாதா, கௌஷிகா?''

''செய்யறேம்மா! ஆமா அது என்ன கடிதம் போல?''

''அது ஒண்ணும் இல்லம்மா!''

கௌஷிகா லெட்டரை மறைக்க...

''ஏய் கௌஷிகா லெட்டர் யாருக்குடி? கொடுடி?'' என்று சத்தியவதி மிரட்ட..

''நம்ம சஞ்சனாவுக்கு சந்தோஷ் எழுதிய கடிதம்!''

கௌஷிகா மிரட்சியோடு சொல்ல..

கௌஷிகாவின் கையில் இருந்த கடிதத்தைப் பிடுங்கி படிக்கலானாள், சத்தியவதி.

படித்து முடித்த சத்தியவதி அதிர்ந்துத்தான் போனாள்.

அப்படியே சுவற்றில் சரிந்து அமர்ந்து கொண்டாள்.

உடம்பெல்லாம் உதறியது! வேர்வை ஆறாய் பெருகியது! இதயம் வேக வேகமாய் அடித்துக் கொண்டது!

'கடவுளே என்ன இது விபரீதம்?' என்று உள்ளுக்குள் கதறினாள்.

"கடிதத்தைக் காரணம் காட்டி.. திருமணத்தை நிறுத்தினால்.. எவ்வளவு பெரிய அவமானம், இரு வீட்டுக்கும்!"

"இப்போ என்னம்மா செய்வது?"

"........"

"சந்தோஷ் இப்படி எழுதியிருக்காரே! சந்தோஷ் எதுவும் பதில் சொல்லாமல் மௌனமாய் இருந்தார் என்று தான் சஞ்சனா திவாகரை மணக்க சம்மதித்தது! அவளுடைய அப்பாவின் ஆசையை நிறைவேத்த கோபத்துல எடுத்த முடிவு தான்.. இந்த திருமணம்! இந்த திருமணத்தை நிறுத்திடலாமா?"

கௌஷிகா கேட்க...

சத்தியவதி.. கௌஷிகாவின் பேச்சைக் கேட்டு, கோபமானாள்.

"அறிவு கெட்டவளே எதுவும் பேசாதே! பத்திரிகை அடிச்சி ஊரெல்லாம் கொடுத்தாச்சி!"

"அம்மா..."

"பந்தல், மேளம், கச்சேரி, சாப்பாடுன்னு எல்லாம் பேசி அட்வான்ஸ் கொடுத்தாச்சி! மாங்கல்யம், முகூர்த்த புடவை வாங்கியாச்சி! அவளுடைய அப்பா முகத்துல இப்போதுதான் சந்தோசத்தையே பார்க்கிறேன்!"

"அம்மா.. ஆனால் சஞ்சனா முகத்தில் சந்தோசமில்லையே!"

"உனக்குத் தெரியுமா.. அவள் சந்தோசமா இருக்காளா? இல்லையான்னு? சஞ்சனாவோட மாமியாரும், மாமனாரும் மனிதர்களா வாழற தெய்வங்க! சந்தோஷ் அம்மாவும் கோபத்தை விட்டு, திருமணத்துக்கு வரேன்னு.. நாலு



பெரிய மனுசாளுக்கிட்டே சொல்லி விட்டிருக்கா! அக்காவோட சேரப்போரோம்ங்கிற அளவுக்கதிகமான சந்தோஷத்துல என் புருஷன் இருக்கார்! கல்யாணத்தை நிறுத்தி இவ்வளவு பேர் சந்தோஷத்தைக் கெடுக்கணுமா?"

சத்தியவதி கோபமாய் கேட்டு.. பின்னர் சொன்னாள்.

"சந்தோஷ் அம்மா இதுக்கு ஒருநாளும் ஒத்துக்க மாட்டா! உங்களைவிட பெரிய இடமா பிடிச்சிக் காட்டறேன்னு மூச்சுக்கு மூந்நூறு தடவை சொல்லிட்டு... ஊரெல்லாம் திரியறாளாம்!"

"சந்தோஷ் பாவம்மா.."

கௌஷிகா கெஞ்ச...

"பாவம், புண்ணியம் பார்க்க வேண்டிய காலம் கடந்தாச்சு! நாங்க போய் கேட்டப்போ.. இல்லே சஞ்சனா கேட்டப்போவாது இந்த பதிலை சொல்லியிருந்தால்... இப்படி ஆகியிருக்காதில்லையா..?

சஞ்சனாவும் சந்தோஷை மறக்கற மாதிரி தெரியுது! இப்போ போய் தெளிஞ்ச குட்டையா இருக்க.. சஞ்சனா மனசை குழப்பணுமா..?

லெட்டரை சுக்கு நூறா கிழிச்சிப் போட்டுடறேன்! உன் திருவாயை மூடிட்டு இருடிம்மா!"

"அம்மா... அம்மா.."

கௌஷிகா அடக்க முடியாமல் அழுதாள்.

"சஞ்சனாவுக்குத் தெரிய வந்தால்.." என்று விசும்பினாள்.

"எப்படித் தெரிய வரும்? நீயோ.. நானோ.. சொல்லப் போறதில்லே!"

''சஞ்சனாவுக்கும், சந்தோஷுக்கும் நாம் செய்யறது பெரிய துரோகம் இல்லையா?''

''நீ போகமாட்டியா?'' என்று சத்தியவதி எரிந்து விழ...

''சந்தோஷ்... சஞ்சனா மேல உயிரையே வச்சிருக்கார்! சஞ்சனா கேட்டப்ப வாயை மூடிட்டு இருந்துட்டு.. இப்போ புத்தி வந்து எழுதியிருக்கார். உயிருக்குயிரான காதலையும்.. காதலர்களையும் ஒன்று சேராமல் பிரிப்பது பாவம்மா!''

''அப்போ.. அப்போ.. நாங்க அவமானப்படலாமா? சாகப் போற தருவாயில இருக்க சஞ்சனாப்பா.. மகளை கண் குளிர திருமணக் கோலத்தில் பார்க்கப் போறோம்னு மகிழ்ச்சியா இருக்கார்! அவரோட மன ஆசையில மண்ணள்ளிப் போடலாமா?

எனக்கென்னமோ சஞ்சனா சந்தோஷுக்காக பொறக் கலையோன்னு தோணுது!

நாமதான் சின்னஞ்சிறுசுங்க மனசுல ஆசையை வளர்த்துட்டோம்!

சஞ்சனா திவாகருன்னு கடவுள் எழுதின தீர்ப்புல நீயும் நானும் குறுக்கே புக வேண்டாம்!''

''சஞ்சனா முகத்துல கல்யாணக் களையே இல்லேம்மா!''

''வரும்! தானா வரும்! கணவனும், மாமனாரும், மாமியாரும் அவளைத் தரையில் விடாமல் தாங்கும்போது சந்தோசமா இருப்பா..!

நீ தேவையில்லாமல் சஞ்சலப்பட வேண்டாம்..!

சந்தோஷை நினைச்ச கசப்பான நினைவுகள், அனுபவங்கள், அத்தனையும் மணவாழ்க்கை இனிக்கும் போது பனிபோல பறந்துடும்..!



சஞ்சனாகிட்ட இந்த லெட்டர் பற்றி எதுனா உளறி.. இந்த திருமணத்தை நிறுத்த முயற்சி பண்ணனே.. நாங்க ரெண்டு பேரும் தூக்குல தொங்கிடுவோம்!''

''ஐய்யோ அம்மா..''

உடம்பில் தீப்பற்றிக் கொண்டவள் போல கதற...

''நிஜம்தான்டி! உன்னை இந்த வயித்துல சுமக்காதது தான் பாக்கி! நீ பொறந்த ரெண்டாம் நாளே உன் தாய் இறந்து போக.. அதன் பிறகு என் மார்லதான் பால் குடிச்சி வளர்ந்தே! உனக்கு மூக்கை சிந்தி.. மூத்திரம் கழுவின்னு கஷ்டப்பட்டிருக்கேன்..!

நீ பால் குடிச்ச.. என் மார்பு பாடையில போகனும்னு ஆசையிருந்தால் போய் சஞ்சனாகிட்ட சொல்லு!''

சத்தியவதி தாங்க முடியாமல் அழ...

''நான் சொல்லமாட்டேம்மா!'' அவள் கைப்பற்ற...

''நீ.. நீ.. இப்போ தான்டி என் மார்ல பால் குடிச்சி வளர்ந்த விசுவாசத்தைக் காட்டறே!''

''நான் சந்தோஷுக்கு என்ன பதில் எழுதுவது?''

''அவ அம்மா இன்னும் செய்தியை சொல்லல போல! ஒரு பத்திரிகையை அவன் காலேஜ் ஹாஸ்டலுக்கு அனுப்பிடு! அவனும் வந்து சேரட்டும்! அபிராமியையும்.. நாங்க நேராய் போய் கூப்பிடப் போறோம்! அவர்களும் மறுக்காமல் வருவாங்கதான்! என்ன செய்யறியா?''

''ம்..''

''சந்தோஷும் சஞ்சனாவின் திருமணம் பற்றி தெரிஞ்சிக்கட்டும்!''

''சரிம்மா!''

கௌஷிகா அங்கிருந்து கனத்த இதயத்துடன் புறப்பட்டாள்.

சத்தியவதி அந்தக் கடிதத்தை பீரோவின் ரகசிய அறையில் போட்டு பூட்டினாள்!

இது ஒரு நாள் புயலாய்.. பூகம்பமாய் தாக்கப்போகிறது என்று சத்தியமாய் சத்தியவதிக்கு அப்போது தெரியாது!



## 14

ஊரே திருவிழாக் கோலம் பூண்டது!

அந்த நீளத் தெரு முழுக்க.. பிரம்மாண்டமாய் மணப்பந்தல் போடப்பட்டு.. மங்களகரமாய் மிளிர்ந்தது.

கூட்டம் ஏராளம்!

காரும், பைக்கும் அந்த ஊரின் ஒதுக்குபுறமாய் குவிந்திருந்தது!

சஞ்சனா வானத்து தேவதையாய் ஜொலித்தாள்!

சஞ்சனா ஏற்கனவே பேரழகி! அந்த விலையுயர்ந்த கல்யாணப் பட்டிலும், வைர, தங்க நகைகளில் இன்னும் அழகு கூடி அத்தனைப் பேரையும் வியக்க வைத்துக் கொண்டிருந்தாள்!

திவாகர்.. நல்ல நிறம்! அழகன்!

அந்த பட்டுவேட்டி சட்டையில் அம்சமாய் இருந்தான்.



முகத்தில் ஏராளமான பெருமிதம் தவழ்ந்துக் கொண்டிருந்தது. கூடவே திமிர்தனமும் அப்பட்டமாய் தெரிந்தது.

காரணம்..?

கிடைக்கவே மாட்டாள் என்று நினைத்த சஞ்சனா.. இவ்வளவு எளிதாய் கிடைத்ததுதான்.. அவன் தலைக் கனத்திற்கு காரணம்!

மங்கல இசை முழங்க..

மஞ்சள் அரிசி அவர்கள் மேல் விழ..

திவாகர்.. சஞ்சனாவின் அழகான சங்கு கழுத்தில் தாலியைக் கட்டினான்!

சந்தோஷை நினைத்து கலங்கிய, மருகிய மனத்தை... தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நிறைய சிரமப் பட்டாள், சஞ்சனா!

அடிக்கடி ஈரம் சொட்டிய விழிகளை... திவாகர் அறியாமல் துடைத்துக் கொண்டாள்!

சஞ்சனாவின் கழுத்தில் தாலி கட்டிய மறுவிநாடி நெஞ்சை நிமிர்த்தி மமதையோடு அவளைப் பார்த்து புன்னகைத்தான் திவாகர்!

அம்மி மிதித்து...

அருந்ததி பார்த்து...

திவாகர் சஞ்சனாவின் கால் விரல்களில் தங்க மெட்டியைப் போட்டான்!

சஞ்சனாவின் கண்களிலிருந்து இரு கண்ணீர் மணிகள்.. உருண்டு, திரண்டு, ஓடி வந்து... அவன் தோள் பட்டையில் விழுந்து சட்டையை நனைக்க..

திவாகருக்கு பத்திக் கொண்டு வந்தது.

மெட்டியை போட்டு முடித்து எழுந்தவன்... யாரும் அறியாத வண்ணம் அவள் காதருகே சென்று...

"என்னடி அவன் நினைப்பா..?"

திவாகர் கேட்க.. சஞ்சனா செத்தே விட்டாள்!

'இவன்.. இவனுக்கெப்படி என் காதல் தெரிந்தது?'

உள்ளுக்குள் ஊமையாய் அழுதாள்!

திவாகர் இன்னும் கூர்த்தீட்டிய வார்த்தைகளை... எப்போதெல்லாம் தன்மீது வீசப்போகிறானோ என்று பயந்தாள்.

மணப்பந்தலை வலம் வரும்போது அவள் கை விரல்களைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டான்!

சஞ்சனா கம்பளி ஊறிய வேதனையை அனுபவித்தாள்!

பாலும், பழமும் ஊட்டும்போது... அவன் உண்ட எச்சில் பழத்தையும், பாலையும் அவளுக்கு ஒரு மூதாட்டி கொடுக்க.. அருவெறுப்பாய் இருந்தது.

அன்றைய மதியப் பொழுதில்.. யாருமற்ற தனிமையில்... அவளை தன்னறைக்கு வரவழைத்து.... சட்டென்று வெறியோடு இழுத்து.. இறுக்கி.. முகமெல்லாம் முத்த மிட்டு விலகினான்!

"இது ஒண்ணும் உனக்கு புது அனுபவம் இல்லை! இல்லையா, சஞ்சனா?"

திவாகர் கேட்க.. தேள் கொட்டினாற் போல துடிதுடித் தாள், சஞ்சனா.

இரவு...

முதலிரவு அறை..



கட்டில் பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது!

கட்டிலருகே இருந்த ஸ்டூல் மீது பழம், இனிப்பு அடங்கிய தட்டு ஒன்று இருந்தது.

பூக்களின் வாசம் அறையின் சூழ்நிலையை ரம்ய மாக்கிக் கொண்டிருந்தது.

சஞ்சனா மை விழிகள் மருள.. நெஞ்சில் பயத்தை சுமந்துக் கொண்டு... கால் கொலுசு சிணுங்க.. கையில் பால் சொம்போடு உள்ளே நுழைந்தாள்.

ஸ்டூலின் ஓரம் சொம்பை வைத்துவிட்டு அவன் காலில் விழுந்து, வணங்கி எழுந்தாள்.

நல்ல நிறம்.. நல்ல திடகாத்திரம்.. நல்ல கம்பீரம்.. நல்ல அழகு என்றுதான் திவாகர் இருந்தான்.

ஆனால்.. ஆனால் அவனிடம் நிறைய திமிரும்.. கள்ளத்தனமும் இருப்பதாய் சஞ்சனாவிற்குத் தோன்றியது!

அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

ஆனால் ஏளனமாய் அவன் உதடுகள் வளைந்தது.. அவளுக்கு தோன்றிய கற்பனையா..?

அவனைக் காண சஞ்சனாவிற்கு பெரும் பயமாய் இருந்தது. பயம் எதனால் என்றே அவளுக்குப் புரியவில்லை!

"இப்படி உட்கார், சஞ்சனா!"

திவாகர் தன் மடியைத் தொட்டுக் காட்டிச் சொல்ல.. மருண்டு விட்டாள்.

"என்ன முழிக்கறே! மச்சான் மடியில் உட்கார்! இந்த மடியில இனி நீயும் உரிமை கொண்டாடலாம்! இதுவரை இந்த மடியை சொந்தம் கொண்டாடியவர்கள் எல்லோரும் உரிமையே இல்லாதவர்கள்! இதுவரை எவளையும்

பார்த்து.. கட்டி.. குடித்தனம் நடத்தனும்ன்னு.. எனக்கு எண்ணமே வந்ததில்லை! அந்த எண்ணம் உன்னைக் கண்ட பின்புதான் வந்ததே! உன் அழகுதான்டி.. உன்னை என் பொண்டாட்டியா ஏத்துக்கச் சொன்னது! இதுவரை என்னைவிட அழகிகளை கண்டதில்லையான்னு கேட்டுடாதே! கண்டிருக்கேன்! ஆனால் உன் அழகுக்கு எவளுமே இணையாக மாட்டான்னுதான் தோணுது!''

திவாகர் அவளை மேலிருந்து கீழ் ரசித்து, ருசித்து காமம் வழிய சொல்ல..

சஞ்சனா.. அவனைக் கண்கள் கலங்கப் பார்த்தாள்.

''எனக்கு இந்த முதலிரவு புது அனுபவம் இல்லை. உனக்கும் தானே..?''

திவாகர் கேட்க.. நெஞ்சில் வேல் பாய்ந்தது போல இருந்தது.

''ஐய்யோ.. என்ன பேசறீங்க?'' பதற,

''நான் தப்பா எதுவும் பேசலையே!'' அலட்சியமாய் அவன் சொல்ல..

''தப்பாதான் பேசறீங்க, நீங்க! காலையில இருந்து ஏதோ உள்ளர்த்தம் வைத்து.. பேசி.. என் இதயத்தை கொல்றீங்க!''

சஞ்சனா தாங்க முடியாமல் அழுதாள்.

''உன்னைப் போலவே உன் குரலும் இனிமைதான்டி! அழுதாக்கூட ரொம்ப அழகாத்தான் இருக்கே!''

திவாகர் சொல்ல.. தாங்கவே முடியாமல் தரையில் மடிந்து உட்கார்ந்து கதறினாள்.

''அணில் கடிச்ச பழமில்லையா, நீ? அணில் கடிச்ச பழம் ரொம்ப ருசிக்கும்ன்னு சொல்லுவாங்க! சுவைச்சிப் பார்த்துடலாமா?''



திவாகர் எகத்தாளமாய் கேட்க...

''திவாகர்.. என்ன பேசறீங்க?''

''இப்படி பதறினால் உன்னைப் பார்க்கவே சகிக்கலை, தெரியுமா? கூல் டவுன் பேபி! அந்த அணில் இப்படி முட்டி மோதி.. கட்டி... கடிச்சி.. அணைச்சி சுவைச்சதா, என்ன? சொல்லுடி?''

திவாகர் சட்டென்று கோபமாகி அவள் மேல் பாய்ந்து.. வேட்டைக்குப் புறப்பட்டவன் போல.. முரட்டுத்தனமாய் சஞ்சனாவைக் கசக்கி முகர...

அவன் வேகம் தாங்காமல் சஞ்சனா துடித்தாள்.. துள்ளினாள்... கத்தினாள்.. கதறினாள்.

திவாகர் அவளின் துடிப்பை ரசித்து இன்னும் வேகமானான்!

எல்லாம் முடிந்து அவன் திருப்தியாய் எழ...

அவன் வேகம், முரட்டுத்தனம் தாங்காமல் சஞ்சனா சோர்ந்து, மயங்கி.. அப்படியே தரையிலேயே கண் மூடியவளை...

தோளில் தட்டி எழுப்ப.. அவள் பயத்தோடு துள்ளி எழுந்து உட்கார முடியாமல் தவிக்க...

அருகில் அமர்ந்த திவாகர்.. அவளை தாங்கிப் பிடித்துக் கேட்டான்.

''ஏய் சஞ்சனா.. சொல்லு? நிஜம் சொல்லு? சந்தோஷுக்காக பொறந்தவளா, நீ? அவன் பொண்டாட்டியா ஆகப்போறவள்ன்னு மார்த்தட்டினானே! என் சட்டையைப் பிடிச்சி.. அத்தனை பேர் முன்பு.. உங்க ஊர் திருவிழாவுல அவமானப்படுத்தினானே.. தெரியுமாடி?''

இந்த செய்தி அவளுக்கு புதுசு!

"எ.. என்ன சொல்றீங்க?" அதிர்ந்து கேட்க...

"தெரியாதா, உனக்கு?"

"ம்கூம்!"

"நிஜமா..?" என்று திவாகர் மிரட்ட...

"சத்தியமா தெரியாதே?"

சஞ்சனா அழுதாள்.

"பழி தீர்த்துட்டேன்டி! அவன் உடமையைத் தட்டிப் பறிச்சிட்டேன்! அவன் உரிமையை தூள் தூளாக் கிட்டேன்! யோசிக்காமல் செய்த செயலுக்கு அவன் தண்டனையை அனுபவிக்க வேண்டாமா?"

"அப்போ.. என்னை விரும்பிப் பெண் கேட்கலையா?"

"விரும்பினேன்! திருவிழாவுல அம்மா உன்னைக் கை காட்டினப்பவே.. உன் அடிமையாயிட்டேன்! பசங்களும் உன் மேலான ஆசையை தூண்டிவிட... உன்னைப் பார்த்ததும் பட்டுன்னு பிடிச்சிப்போச்சு!

ஆசையாசையா உன்னைப் பார்த்துட்டே திரிஞ்சேன்! சாமி ஊர்வலத்தின்போது.. உன்னைப் பார்த்து சந்தோசமா வர்ணிச்சது.. அந்த பய காதுல விழ... என் சட்டையைப் பிடிச்சி.. அத்தனைப் பேரும் பார்க்கப் பார்க்க அறைஞ்சான்! நீ அப்போ... அந்த நிமிடம் முன்னதான் வீட்டுக்குப் போனே! உனக்கு அப்போ தெரிய வாய்ப்பிருந்திருக்காது! காலையில யாராவது வந்து உங்க வீட்டுல சொல்லலையா?"

"ம்கூம்.."

"என்னை அவன் பெரிசா அவமானப்படுத்திட்டான்!"

"சத்தியமா தெரியாதுங்க!"



"என் பெற்றோர்களை அனுப்பி பெண் கேட்டால் உங்க வீட்டுல சந்தோஷுக்காக வச்சிருக்கோம்னு சொல்லி மறுத்துட்டாங்க...!

ஆடிப்போயிட்டேன்! நான் இதுநாள் வரை ஆசைப் பட்டு கிடைக்காமல் போனது எதுவுமே இல்லை. தெரியுமா..?

உன்னைத் தூக்கிட்டு வந்தாவது அனுபவிக்கனும்ன்னு கணக்குப் போட்டேன்!"

அவன் நிறுத்தி அவளைப் பார்க்க.. அவன் கண்கள் செந்தழலாய் எரிந்தது.

"ஐய்யோ..." சஞ்சனா அலற..

"தூக்க நாளும் குறிச்சாச்சு! அதன் பிறகு உங்க வீட்டு சம்மதம் வர.. ரொம்ப சந்தோசப்பட்டேன்!"

திவாகர் பேசப் பேச கலவரமானாள், சஞ்சனா.

"சந்தோஷும், நீயும் விரும்பனீங்களா..?"

"....................."

"உங்க காதல் எதுவரை? காடு மேடுன்னு கைக் கோர்த்துட்டு சுத்தித் திரிஞ்சதோட முடிஞ்சதா...?"

"..............."

"இல்லே.. கரும்புத் தோட்டம், மாந்தோட்டம்ன்னு.. மறைவுல படுத்து..."

"நிறுத்துங்க திவாகர்.." என்று வீறிட்டாள், சஞ்சனா.

"இப்படியெல்லாம் அசிங்கமா பேசாதீங்க! அத்தானுக் கும் எனக்கும் சின்ன பிள்ளையிலே 'அவன்தான் உன் மாப்பிள்ளை - இவள்தான் உன் பொண்டாட்டி'ன்னு அத்தை, அப்பா, அம்மா, ஊர்ல சொந்தம், சுற்றம் எல்லாம் எங்க மனசுல ஆசையை விதைச்சிட்டாங்க...!

விபரம் தெரியற வயசுல.. குடும்பத்தகாறு எங்களைப் பிரிச்சி வச்சது..!

அதுல இருந்து இதுநாள் வரை நாங்க பேசிகிட்டதே இல்லை...!

கடைசியாய் ஒருநாள் அத்தானை சிவன் கோயில்ல சந்திச்சேன்! நான்தான் பேசினேன்! அவர் என்னிடம் பேசவேயில்லை!"

அவன் அவளை சுவாரசியமாய் பார்க்க...

"அத்தான் மேல எனக்கு ஆசை இருந்ததுதான்! அவருக்கும் என் மேல் நேசம் இருந்ததுதான்! என் அத்தை யோட அரக்க குணத்தால் நான் கேட்ட போது.. அவர் எதுவுமே சொல்லல...!

அந்த கோபத்துலதான் உங்களை மணக்க ஒத்துட் டேன்...!

என் விரல் நகம் கூட என் அத்தானை தொட்டதில்லே! என் தாய்மேல் சத்தியம்...!

நீங்க நம்பணும்!

நான் காதலிச்சவதான்! ஆனால் களங்கப்பட்டவள் இல்லே! என்னை நீங்க நம்பணும், திவாகர்!"

பின் அழுகையோடே சொன்னாள்.

"என் வீட்டுல உங்களை வேண்டாம்ன்னு சொன் னாங்க! வேற நல்ல மாப்பிள்ளையா பார்க்கலாம்ன்னு சொன்னாங்க...!

ஆனால், நான் வேண்டாம்ன்னு சொல்லிட்டேன்! நீங்க கறுப்பா, சிவப்பான்னு தெரியாது, திவாகர்..! ஆனால் நல்ல குணமில்லேன்னு தெரியும்..!"



அவளை அவன் ஆழமாய் நோக்க...

"அம்மா மருந்தப்போ என்ன சொன்னேன் தெரியுமா? நல்லவனை மேலும் நல்லவனாக்கறது பெருமையில் லேம்மா! ஒரு கெட்டவனை நல்லவனாக்கறதுதான் பெருமை! புண்ணியம்ன்னு சொன்னேன்!"

சஞ்சனா சொல்லிவிட்டு குலுங்கியபடி...

திவாகர் கண்கள் பளபளக்க... ஆசையாசையாய்.. அன்போடு நோக்கி...

"என் தங்கமே!" என்று அணைக்க...

"வேண்டாம்... வேண்டாம்!" என்று சஞ்சனா மறுக்க...

"நான் இந்த சந்தோசத்தை கொண்டாடணும் சஞ்சனா! உன்னையும், சந்தோஷையும் நினைச்சி என்னென் னவோ கற்பனை செய்து கஷ்டப்பட்டுட்டு இருந்தேன். அது இல்லேன்னு தெரிஞ்சதும் ஆனந்தமா இருக்கு! வா சஞ்சனா."

திவாகர் கொஞ்சலாய் அவளை மேனி நோகும் வண்ணம் அணைக்க...

"என்னால முடியல.. விடுங்க..."

சஞ்சனா திமிர...

"நீ இப்போ சொன்னதெல்லாம் நிஜமா? பொய்யா?"

திவாகர் கேட்க...

அந்த சுடுச் சொல்லில் மீண்டும் மரித்துப் போனாள், சஞ்சனா.

விடியற்காலையில் உடம்பு அனலாய் சுட்டது, சஞ்ச னாவிற்கு!

குளிரில் நடுங்கினாள். உடம்பு தூக்கித் தூக்கிப் போட... முனகிக் கொண்டிருந்தாள்.

நல்ல தூக்கத்தில் இருந்த திவாகர்.. இவள் கதறலில் விழித்தான்!

அடுத்த நொடி பதறினான்!

''ஏய்.. ஏய்.. சஞ்சனா.. என்ன செய்யுது? என்ன ஆச்சி?''

அவளைத் தூக்க... அவள் உடல் அனலாய் சுட்டது.

நெற்றி, கழுத்து, கன்னம் என்று தொட்டுப் பார்த்தான்!

அவளை படுக்க வைத்துவிட்டு வெளியே வந்தான்.

ஹாலில் அம்மாவும், அப்பாவும் உட்கார்ந்து இருந்தனர்.

தாயிடம் விஷயத்தைச் சொன்னான்.

ஐயா ராமசாமி கோபமாய் கத்தினார்.

''தறுதலைப் பய... சின்ன பெண்கிட்ட மென்மையா நடந்துக்காமல்... தாசிட்ட போறாப்பல போயிருப்பான், பார்வதி! அதான் உடம்பு சரியில்லாமல் போச்சு!''

இருவரும் அந்த அறைக்குள் நுழைந்தனர்.

உடம்பில் ஒட்டு துணியில்லாமல்... போர்த்திக் கொண்டு படுத்திருந்த சஞ்சனா.. மாமனாரை, மாமியாரைக் கண்டு வெட்கிப் போனாள்.

பார்வதி சஞ்சனாவைத் தொட்டுப் பார்த்துவிட்டு கணவரிடம் கேட்டாள்.

''இப்போ என்னங்க செய்வது?''

''அநியாயமா இவன் பேச்சைக் கேட்டு... இந்தத் தளிரை இந்த முரடன் கையில பிடிச்சி கொடுத்துட்டமே, பார்வதி!''



ஐயா ராமசாமி இப்படிக் கூற.. திவாகர் சட்டென்று கோபமானான்.

''அப்பா.. வார்த்தையை அளந்து பேசுங்க! அம்மா.. இவர் இப்படியெல்லாம் இனியும் பேசினார்ன்னால்... நான் மனிதனாவே நடந்துக்கமாட்டேன்.''

திவாகர் தந்தையைப் பார்த்து எகிற...

சத்தம் கேட்டு சத்தியவதியும், ஆதவனும் வந்து விட்டனர்.

இரவு அங்கேதான் தங்கிவிட்டனர்.

டாக்டருக்கு போன் செய்தனர்.

அவர் வந்து சஞ்சனாவைப் பார்த்துவிட்டு.. ஊசிப் போட்டு சில மருந்து கொடுத்தார்.

திவாகரைத் தனியே அழைத்துப் போனார்.

''என்ன திவாகர் இப்படி பண்ணிட்டீங்க? சின்ன பெண்கிட்ட கொஞ்சம் பதமா நடந்துக்கக் கூடாதா?''

இப்படி அவங்க உடம்பெல்லாம் உங்க பல்லு பட்டு காயமா இருக்கே! விஷம் தெரியுமா? முதல்ல காயத்தைப் பார்த்து இந்த மருந்தை மூன்று வேளையும் பூசிவிடுங்க! புரியுதா? ரொம்ப மிரண்டுப் போய் இருக்காங்க. நீங்க இப்படி முரட்டுத்தனமாய் நடந்துக் கொண்டால்... செக்ஸ் மேல வெறுப்பு வந்துடாதா? போங்க.. போய் மருந்தை பூசிவிடுங்க! அவங்ககிட்ட இதமா நடந்துக்கங்க?''

திவாகருக்கு அந்த லேடி டாக்டர் அறிவுறுத்தி விட்டு சென்றுவிட்டார்.

ஆதவனும், சத்தியவதியும் மகிழ்ந்தனர்!

மாப்பிள்ளைக்கு தன் பெண்மேல் எத்தனை ஆசை, அன்பு, பிரியமென்று!



# 15

கல்லூரியில்...

சந்தோஷ் நடைபிணமானான்.

சஞ்சனாவின் திருமணப் பத்திரிகையைப் பார்த்த நொடியே செத்துவிட்டான்!

உயிரற்ற உடலோடு...

கடமைக்காய்...

பிடிக்காமல்தான் வாழ்கிறான்!

'உயிராய் நினைத்தவள்.. இப்படி தன்னை உதாசீனப் படுத்திப் போய்விட்டாளே!'

'பிறந்ததிலிருந்து இருபத்தி இரண்டு வருடங்களாய் என்னைக் காதலித்துக் கொண்டு காத்திருந்தவளுக்கு... என் கடிதம் கையில் கிடைக்கும் வரை காத்திருக்க முடியவில்லையே!'

'சஞ்சனா.. ஏன் இப்படிச் செய்தாய்?'

'சஞ்சனா.. என்னை தீயில் தள்ளி உயிரோடு கொன்று விட்டாயே!'

'சஞ்சனா.. திவாகர் உன்னை நன்றாக பார்த்துக் கொள் கிறானா?'

'அன்று திருவிழாவில்... உன் மேனியை அசிங்கமாய் வர்ணித்தவனுக்கு.. உன் மனதை எப்படிப் படிக்கத் தெரியும்?'



'உடல்பசி உள்ள ஒரு வேங்கைக்கு உன் மலர்மனம் எப்படிப் புரியும்?'

'கண்ணே.. கண்ணம்மா.. என் காதலியே.. அவனிடம் மாட்டி எத்தனை சித்தரவதைக்குள்ளானாய், என் சித்திரமே?'

'உன் சித்தரவதைக்கு நானும் ஒரு காரணமாய் இருப்பேனே!'

'என்னை மன்னிப்பாயா.. சஞ்சனாம்மா?'

'அல்லது சபிப்பாயா.. என் உயிரே?'

சந்தோஷ் சஞ்சனாவின் நினைவுகளிலேயே மூழ்கிக் கிடந்தான்!

அபிராமி இங்கே சந்தோஷமாய் இருந்தாள்.

'சுயநலமுள்ளவர்கள் சுதந்திரமாய் இருக்கமாட்டார்கள்! தங்களுக்குள் விலங்கைப் பூட்டிக் கொண்டு.. ஒரு சிறு வட்டமிட்டு.. வஞ்சகம்.. கொடூரம்.. சூது... வாதுவை துணைக்கழைத்துக் கொண்டு வாழ்ந்து விடுவார்கள்!

'சுயநலமுள்ளவர்கள் அடுத்தவர் இன்ப, துன்பத்தைப் பற்றி.. சிறு துளி கூட எண்ணமாட்டார்கள்!'

'அடுத்தவருடைய கஷ்டம், கலக்கம், துயரம் பற்றி சிந்திக்கவே மாட்டார்கள்!'

'சுயநலம் என்பது ஒரு சாத்தான்..! சுயநலம் என்பது ஒரு பேய்..! சுயநலம் என்பது ஒரு ராட்சசன்...! அது பிடித்தவர்கள் எவரும் சந்தோசமாய் இருக்க மாட்டார்கள்! மற்றவர்களையும் சந்தோசமாய் வாழ விட மாட்டார்கள்!'

'காலம் உள்ளவரை இது போன்ற 'விஷமிகள்... விஷ ஜந்துக்கள்' இருப்பார்கள்! இவர்களையெல்லாம்

இனம்கண்டு.. மனித சமுதாயத்திலிருந்து வேரோடு பிடுங்கி எறிந்துவிட்டால்.. எரித்துவிட்டால்.. சஞ்சனா, சந்தோஷ் போன்றவர்களின் காதல் காப்பாற்றப்படும்! சந்தோஷ், சஞ்சனாவின் வாரிசுகள் தோன்ற மாட்டார்கள்!'

'மீண்டும் என்று வருவாள்.. இந்த சுயநலக்காரர்களை அழிக்கும் ஆழிப்பேரலை சுனாமி?'

'மீண்டும் என்று வருவாள்.. இந்த சூழ்ச்சிக்காரர்களை அழிக்கும்... சூறாவளி காத்ரினா..?'

'காதல் தேவதை.. காற்றாய், கடலலையாய், பூகம்ப மாய், எரிமலையாய் மாறி வந்து... இவர்களை மட்டும் அள்ளிக்கொண்டு போக வேண்டும்!'

'வருவாள்..!'

'கட்டாயமாய் காதலைக் காப்பாற்ற வருவாள்..!'

'காதலின் வேரினை காப்பாற்றி.. துளிர்க்கச் செய்து... உயிர்த்தெழ உதவுவாள்!'

'செய்வாள்.. செய்தேத் தீருவாள், காலதேவதை!'

'அபிராமி போன்றோரை வஞ்சிப்பார்!'

'மண்ணோடு மண்ணாய் மட்கச் செய்வாள்!'

'எரித்து காற்றோடு காற்றாய் கலக்கச் செய்து விடுவாள்!'

தன் சுயநலம்.. வீம்பால்.. ஒரு சுத்தமான, சுகந்தமான, ஆழமான, அன்பான காதலை அழித்து விட்டாள், பாவி அபிராமி!'

'இருவரின் காதலும் கருக.. காரணமாய் இருந்த எமன், அபிராமி!'

'அந்த அபிராமி.. நன்றாக குத்துக்கல் போன்று இருக்கிறாள்!'



'அபிராமி என்ற காரிகை.. விதியென்ற தூரிகையை தன் கையிலெடுத்து.. தன்னைக் கடவுளாய் நினைத்துக் கொண்டு.. இரு உள்ளங்களின் உருகலான நேசத்தை மாற்றி.. தாறு மாறாய் படம் வரைந்து விட்டாள்!'

கடவுளின் வேலையை தன் கையிலெடுத்து சதி செய்து விட்டாள்!

அவளை..

மனிதன் மன்னிப்பான்...!

தெய்வம் மன்னிக்கும்..!

அந்த உண்மையான காதல் மட்டும் ஒரு போதும் மன்னிக்காது!

மன்னித்துவிட்டால்.. மகத்தான காதலும்... காதல் சக்தியும்.. இம்மண்ணில் இல்லையென்று அர்த்தம்!

காதலுக்கு அத்தனை சக்தி உண்டா?

நேசத்திற்கு அத்தனை வீரியமுண்டா?

மனிதரால் இக்கேள்விக்கு பதில் சொல்ல முடியாது!

காலம் பதில் சொல்லட்டும்!




திவாகருடனான வாழ்க்கை.. சஞ்சனாவை மிரளச் செய்தது!

எப்போது வார்த்தைகளால்.. வலிக்கச் செய்வான் என்று சஞ்சனாவுக்குத் தெரியாது!

எப்போது அவளை கசக்கி முகர்வான் என்றும் தெரியாது!

காலையில் எழுந்து போனால்.. நண்பர்களோடு உல்லாசமாய் சுற்றிவிட்டு வருவான்! அப்படி வரும்போதெல்லாம்.. வயிறு முட்ட முட்ட நன்கு குடித்துவிட்டு வருவான்!

உதடுகளில் சிகரெட் எந்த நேரமும் புகையை கக்கிக் கொண்டிருக்கும்!

அதுபோன்ற சமயங்களில்.. அவனருகில் போனாலே.. நிகோடின் நாற்றமும்.. ஆல்கஹாலின் வீச்சும் சேர்ந்து.. அவளுக்கு வயிற்றை குமட்டும்!

வேண்டாம் என்று மறுத்தாலும் விடமாட்டான்! அப்போதுதான் அதிகப்படியான ஆசையோடு அவளை நெருங்குவான்!

எவ்வளவு கண்ணீர்விட்டுக் கெஞ்சினாலும்.. அழுதாலும் சட்டையே செய்யமாட்டான், திவாகர்.

சில சமயம் தாங்க முடியாமல்.. அந்த நாற்றத்தை பொறுத்துக் கொள்ள முடியாமல்.. வயிறு குமட்டி.. அவன் மேலேயே வாந்தி எடுத்து விடுவாள்!

அப்போதெல்லாம் திவாகர் அவளை இழுத்து வைத்து அறைவான்!

சஞ்சனா துடிதுடித்துப் போவாள்!

கன்னத்தில் ஐந்து விரலும் பதிந்துவிடும்!

அப்போது வெளியேயே வரமாட்டாள்! மாமியார் அதைக் காண நேர்ந்தால் வருந்துவாரே என்று அவளுள் கலக்கம்! அப்படியே வெளியே வந்தாலும்.. அவர் முகம் பார்த்துப் பேசவே மாட்டாள், சஞ்சனா!



ஒரு ஆண்மகன்.. ஒரு நாளில்.. எவ்வளவு வேலைகள் செய்கிறான்!

மாமனாரைப் பார்க்கிறாளே.. அந்த வயதிலும் நிற்காமல்... நாள் முழுக்க இயங்கிக் கொண்டிருக்கிறார்!

குடிப்பதும்.. கும்மாளம் போடுவதும்.. பெண்டாட்டியோடு சுகிப்பதுதான் திவாகரின் முக்கிய வேலையே!

பெற்றவர்கள் எத்தனைச் சொல்லியும் திருந்தாதவன்... இந்த சஞ்சனா சொல்லியா கேட்கப் போகிறான்?

சஞ்சனா நினைத்துக் கொள்வாள்.

அவனின் செயல் கண்டு மனம் வலிக்கும்!

அவனிடம் குடியை நிறுத்தச் சொல்லி எவ்வளவோ கெஞ்சிப் பார்த்துவிட்டாள்!

அவன் கேட்பதாய் தெரியவில்லை!

ஆனால் அவளின் தொடர்ச்சியான வாந்தி.. அவனை யோசிக்கச் செய்தது!

அவன் மனைவியோடு சந்தோசமாக இருக்க முடியாமல் செய்த குடியையும், புகைப்பதையும் வெளியே வைத்துக் கொண்டான்.

வீட்டிற்கு வருவதற்கு முன் சுத்தமாய் வருவான்!

அல்லது வீட்டிற்கு வந்து பல் துலங்கி, குளித்துவிட்டுதான் சஞ்சனாவின் அருகில் வருவான்!

இதுவே தொடர.. சில நாட்கள் குடியை கூட மறந்து விடுவான்!

ஊர் சுற்றுவதும்.. இரவெல்லாம் குடித்துவிட்டு பண்ணைவீட்டில் உருளுவதும்தான்.. திருமணத்திற்கு முன் செய்யும்.. அவனின முக்கியமான வேலைகள்!

இப்போதெல்லாம் இரவானால் ஒழுங்காய் வீடு தங்கினான்! பகலில் கூட வெளியே போகாமல் மனைவி யோடு அறையைப் பூட்டிக் கொண்டு திவாகர் இருக்க.. பெற்றவர்கள் மகிழ்ந்தனர்.

அவன் சந்தோசத்திற்கு சஞ்சனா முட்டுக் கட்டைப் போடவே கூடாது! அப்படி அவள் முட்டுக் கட்டைப் போட்டால் வார்த்தைகளால் சுடுவான்.

'ஏன் அந்த சந்தோஷை மறக்க முடியலையா..?'

'தூங்கினால் அவன் கனவில் வருவான். கட்டிக் கொள்வான்..! முத்தமிடுவான்..! இந்த பாவி தூங்கவே விட மாட்டேங்கிறானே என்று வெறுப்பா இருக்கா?'

'அவனோடு இருந்திருந்தால் உனக்கு இனித்திருக் கும்! என்னோடு இருக்க கசக்கிறதா? அருவெறுக்கிறதா? என்று திவாகர் வாய் கூசாமல் கேட்பான்.

'வயிறு முட்ட குடித்து விட்டு வந்து தொடுவேன்!'

'புகைப்பதை கொஞ்சமாய் குறைத்திருக்கேன்! மீண்டும் அதிகமாய் புகைப்பேன்!'

'மீண்டும் என் பழைய பெண் தோழிகளைத் தேடிப் போவேன். சம்மதமா?'

திவாகர் மிரட்டுவான்.

''பழைய பெண் தோழிகளோடா... ஐய்யோ.. வேண் டாங்க! அந்த ஒரு செயல் மட்டும் வேண்டவே வேண் டாங்க! திவாகர் ப்ளீஸ்...''



சஞ்சனா கெஞ்சினால்..

''நான் உன்னை நெருங்கும் போது மறுக்கக் கூடாது! நீ மறுக்கலேன்னால்.. உன்னோட சந்தோசமா இருப்பேன்! அப்புறம் எதுக்கு கண்ட கழிசடைகளை நினைக்கப் போறேன்! அவளுங்களைத் தேடிப் போகப்போறேன்?''

''நான் இனி மறுக்கலே!''

''இப்போதான் நீ நல்லப் பெண்!'' அவன் இளநகைப் புரிந்தான்.

''ஆனால், நீங்க விபச்சாரிகளைத் தேடிப்போகவே கூடாது! நினைக்கக் கூடக் கூடாது!'' கண்களை விரித்து கேட்க...

''நீ வயிறு முட்ட சாப்பாடு போட்டால்.. நான் ஏன் ஹோட்டலைத் தேடிப் போறேன்?''

திவாகர் அர்த்த புஷ்டியுடன் சிரித்தான்.

அதிலிருந்து திவாகர் சஞ்சனாவை நெருங்கும் போதெல்லாம்.. தன் ஆசாபாசங்களை விலக்கி.. உணர்வு களை மழுங்கடித்துவிட்டு.. மரக்கட்டையாய் கிடந்து விடுவாள்!

ஒருநாள்...

''மாமா.. இந்த வயதிலும்.. எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுட்டு செய்யறாரே! அந்த வேலைகளை நீங்க பார்த்துட்டு.. மாமாவுக்கு ஒய்வு கொடுக்கக் கூடாதா?''

சஞ்சனா தயங்கித் தயங்கி மெல்லக் கேட்க...

''என்ன அறிவுரையா..? புருஷனைத் திருத்தி வேலை வாங்க நினைக்கறியா..?''

திவாகர் பட்டென்று அறைந்தான்.

சஞ்சனாவிற்கு வலி பொறுக்க முடியவில்லை! கன்னத்தைப் பிடித்துக் கொண்டாள்.

கண்களில் கண்ணீர் பூ.. உப்பு வாசத்தோடு மலர்ந்தது!

''ஐய்யோ... அப்படி இல்லீங்க!''

சஞ்சனா நடுக்கத்துடன் கூற...

''எனக்கென்ன வேலை தெரியும்? ம்?''

''மாமாகிட்ட கேட்டு தெரிஞ்சிக்கலாமே!''

''வேலைதான் புருஷ லட்சணம் என்கிறாயா? நான் வேலை செய்துதான் சாப்பிடணும்னு இருக்கா? குவிஞ்சி கிடக்கிற சொத்துக்களை பத்து தலைமுறை உட்கார்ந்து சாப்பிட்டாலும் தீரவே தீராது! தெரியுமில்லே? போ... போய் வேலையிருந்தாப் பார்! அதை விட்டுட்டு புருஷனுக்கு அறிவுரை சொல்ற வேலையெல்லாம் வச்சிக்காதே..!

என் தாய் சொல்லியே கேட்காத நான்.. தாரம்... நீ சொல்லியா கேட்கப் போறேன்! ம்?''

திவாகர் நக்கலாய் கேட்க..

சஞ்சனா எதுவும் பேசாமல் அவ்விடம் விட்டு நகர்ந்து விட்டாள்.

ஆதவன், சத்தியவதி, கௌஷிகா என்று மாறி மாறி.. அவளை வந்து பார்த்து நலம் விசாரித்தனர்.

அத்தை அபிராமியும் வந்தாள்!

ஐயா ராமசாமியின் செல்வாக்கு பற்றித் தெரியும். ஆனால் அவர்களுக்கு அவ்வளவு சொத்திருக்கிறது என்று தெரியாது!



அத்தனையையும் பார்த்துவிட்டு வாயைப் பிளந்துக் கொண்டாள்!

பார்வதியிடம் சொன்னாள்.

''உங்க சொந்தத்தில் பெண் இருந்தால்... என் மகனுக்கு சொல்லுங்க! உங்களைப் போலவே பணக்கார இடமா வேண்டும்! என் மகன் கம்ப்யூட்டர் படிப்பு படிக்கிறான். பெண் ரெண்டு இருக்கு! அதுகளுக்கும் மாப்பிள்ளை இருந்தால் சொல்லுங்க.''

''சரிங்கம்மா'' என்றார் பார்வதி.

''ஏய் சஞ்சனா.. என் மகனையே நினைச்சிட்டு இருந்தியேடி! அவனை மறந்து.. இவங்க மகனோட நல்லா குடித்தனம் செய்யறியா..?''

அபிராமி கேட்க..

சஞ்சனாவின் கண்களில் கண்ணீர் சரம் தொடுக்க..

அதைக் கண்ட பார்வதி மருமகளை இழுத்து அணைத்துக் கொண்டார்.

அபிராமி வெளியேறியதும்...

''உன் அருமை தெரியாத கழுதை. அவள்! கழுதைக்கு தெரியுமா, கற்பூர வாசனை? அவள் இந்த மாணிக்கத்தை நிராகரிச்சதாலதான்.. என் வீட்டு மகுடத்தில் பதிச்சி அழகு பார்க்கிறேன்..!

அவளுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன, சஞ்சனாம்மா! இந்த தங்கத்தை தாரை வார்த்து கொடுத்திருக்காளே!''

மாமியார் சொல்ல..

மனம் சமாதானமடைந்து அகன்றாள், சஞ்சனா.



# 17

சந்தோஷ் படிப்பு முடிந்த பிறகுதான் ஊரிற்கு வந்தான்! அதுவரை அவன் திரும்பவே இல்லை!

அபிராமி எவ்வளவு கெஞ்சியும் பிடிவாதமாகவே இருந்துவிட்டான்.

நாளிதழில் விளம்பரம் பார்த்து.. வேலைக்கு விண்ணப்பித்தான்.

கௌஷிகா.. அவனை ஒரு நாள் தனியே சந்தித்தாள்.

தாடியும் மீசையுமாய் கண்களில் ஜீவனற்று இருந்த சந்தோஷைக் கண்டு மனம் வெதும்பினாள்!

''சந்தோஷ்.. நல்லா இருக்கீங்களா?''

''ம்...''

''மேலே படிக்கப் போறீங்களா?''

''ம்கூம்!''

''அப்புறம்?''

''வெளிநாட்டு வேலைக்கு ட்ரைப் பண்றேன்!''

''சந்தோஷ்.. உங்க கடிதம் பற்றி சஞ்சுவுக்கு எதுவுமே தெரியாது!''

சந்தோஷ் அதிர்ச்சியானான்!

தன்னுள் அடைத்து வைத்திருந்த உண்மையை உடையவனிடம் போட்டு உடைத்தாள், கௌஷிகா.



''உங்க கடிதம் வருவதற்கு முன் எல்லாமே முடிந்து.. திருமணம் நெருங்கிக் கொண்டிருந்த நாள்! கடிதம் பற்றி சத்தியவதியம்மாவுக்கு தெரியும்! சஞ்சனாவிடம் காட்டாதே! அவள் மனம் மாறிடுவாள்! திருமணம் நின்று போகும்! அப்படியே ரெண்டு குடும்பத்து மான, மரியாதையும் தெருவுக்கு வந்துடும்! அப்புறம் எப்படி தலைநிமிர்ந்து நாங்க தெருவில் நடப்போம்? வாழ்வோம்? என்று அழுதாங்க, சந்தோஷ்...

என்னால் மீறவே முடியல, சந்தோஷ்! என்னை நீங்க மன்னிக்கணும், சந்தோஷ்! ப்ளீஸ்...''

கௌஷிகா கையெடுத்து கும்பிட்டு அழுதாள்.

''விடுங்க, கௌஷிகா! நடக்கணும்ன்னு இருப்பதுதான் நடக்கும்!''

''ஏன் இப்படி இருக்கீங்க, சந்தோஷ்?'' கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கௌஷிகா கேட்க..

''எப்படி?''

''ஒரு பைத்தியக்காரனைப் போல! பார்க்கவே நல்லாயில்ல! சஞ்சனா.. உங்களை இந்தக் கோலத்தில் கண்டால் சஞ்சலப்படுவா, சந்தோஷ்!''

''என்னால இந்த ஜென்மமில்லே.. ஏழேழு ஜென்மத்துக்கும் சஞ்சனாவை மறக்க முடியாது, கௌஷிகா!''

''சந்தோஷ்.. சந்தோஷ்.. இது சரியா?''

கௌஷிகா பதற...

''அவள் எனக்கு இனி இல்லேன்னு தெரிஞ்ச பின்னாடி எப்படி மகிழ்ச்சியா இருக்க முடியும்?

சாப்பிட பிடிக்கலே! தூங்கப் பிடிக்கலே! என் உயிர் வாழவே பிடிக்கலே, கௌஷிகா..!

என் தங்கைகள் திருமணம் வரை என்னால்.. என் உயிரை பாதுகாக்க முடியுமா என்றே தெரியலே!''

சந்தோஷ் சொல்லிவிட்டு குழந்தையாய் மாறி தேம்பித் தேம்பி அழ..

கௌஷிகாவிற்குத் தாங்கவே முடியவில்லை!

ஏனென்றால் அவளுள்ளும் அவன் மேலான காதல் இருக்கிறதே!

அந்தக் காதல் உள்ளிருந்து அவனுக்காக கரைய வைத்தது! கலங்க வைத்தது!

அவளுக்கு அவன் மேல் எப்போது காதல் தோன்றியது என்று தெரியாது!

ஆனால், அவளுள் ஊடுருவியக் காதல் அவளை நெக்குருகச் செய்தது!

''சஞ்சனா நல்லாயிருக்காளா, கௌஷிகா?''

''ம்...''

''திவாகர் அவளை நல்லாப் பார்த்துக்கிறாரா?''

''ரொம்ப ரொம்ப நல்லாப் பார்த்துக்கிறார் சந்தோஷ்!''

சஞ்சனாவின் நரக வாழ்க்கையைப் பற்றி சொன்னால், சந்தோஷால் தாங்கிக் கொள்ளவே முடியாது!

மேலும் துக்கப்படுவான்! துயரப்படுவான்! என்று நினைத்துதான் சஞ்சனா நன்றாக இருப்பதாய் கூறினாள், கௌஷிகா.

''அவள் நல்ல மனதுக்கு எங்கிருந்தாலும் நல்லாவே இருப்பாள்!'' என்று கண்ணீர் சொட்டும் கண்களோடு கடந்து போனான், சந்தோஷ்.



நான்கு நாட்கள் கழித்து...

சஞ்சனா மட்டும் தாய் வீட்டிற்கு வந்தாள்.

ஆதவனின் கால்களில் தைலத்தைத் தடவி.. கால்களை இதமாய் பிடித்துக் கொண்டிருந்தான், சந்தோஷ்.

சந்தோஷை திருமணம் முடிந்து முதன் முதலாய் காண்கிறாள்!

கண்கள் கலங்கியது...

இதயம் தடதடத்தது...

உடல் உதறியது...

கண்களின் அடியில் கருவளையம் விழுந்து.. முகம் முழுக்க தாடியும் மீசையும் மண்டிக் கிடக்க.. அந்தக் கோலத்தில் பார்க்க உருகிவிட்டாள், சஞ்சனா.

உதடுகள் துடிக்க.. உதட்டைப் பிதுக்கி அழப்போனவள்.. சட்டென்று கடினமானாள்.

தன்னுடைய இத்தனை துன்பத்திற்கும்.. இவன்தானே காரணம்!

இவன்மேல் கொண்ட காதல்தானே காரணம்!

இவன் ஏற்படுத்திய 'காதல் வடு' இல்லையேல்.. திவாகரோடு மனம் ஒன்றி குடும்பம் நடத்தி இருப்பேனே...!

சந்தோஷை காதலித்த விஷயம் தெரிந்துதானே... சில சமயங்களில் முள்ளாய் குத்துகிறான்!

முரடனாய் மாறுகிறான்!

இதையெல்லாம் ஒதுக்கிவிட்டுப் பார்த்தால்.. திவாகர் அவளுக்காக ஏங்கி.. தவித்து.. அவளின் அருகாமையை விரும்பி.. மோகத்தோடு தானே.. அவள் பெண்மையை ஆராதிக்கிறான்!

வேறு ஒரு தீவிரமான உடற்பசிக் கொண்ட பெண்ணானால்... அவனுக்கு அவனுடைய வேகம் இனிக்கத்தானே செய்யும்!

அவன் தீயாய் தீண்டவும்..

அவனோடு முள் படுக்கையில் படுப்பதுபோல எண்ணம் வரவும் இந்த சந்தோஷ்தானே காரணம்!

அம்மாவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு.. என் காதலை ஏற்றுக் கொள்ளாதவன்தானே.. இந்த சந்தோஷ்!

அன்று மட்டும் 'காத்திரு' என்று ஒரு வார்த்தை சொல்லாதவன்தானே.. இந்த சந்தோஷ்!

இவனோடு நான் பேசுவதா?

இந்த ஜென்மம் இல்லை இன்னும் எத்தனை ஜென்மமெடுத்தாலும்.. சந்தோஷோடு பேசமாட்டேன்!

''சஞ்சனாம்மா.. நல்லாயிருக்கீயாடா?''

சந்தோஷ் பாசமாய்.. உயிர் உருகக் கேட்க...

''காதல் துரோகி!''

''சஞ்சும்மா.. என்ன சொல்றே?''

''நீ ஒரு கயவன்! நீ ஒரு கள்வன்! நீ ஒரு துரோகி! புனிதமான காதலுக்கு சமாதி கட்டிய துரோகி, நீ! என்கிட்டே பேசாதே! என் முகத்திலே விழிக்காதே! போ.. போயிடு!''

வீதி வாசலைச் சுட்டிக்காட்டி கத்தினாள், சஞ்சனா.

''சஞ்சனா... என்ன பேசறே? ஏன் இப்படி அறிவு கெட்டதனமா நடந்துக்கிறே? ஏன் இப்படி அவர்கிட்ட கோபிச்சிக்கிறே? நீ பேசறது சரியாடி?''



கௌஷிகா கேட்க.. சஞ்சனா இன்னும் உக்கிரமானாள்!

நட்ட நடு சூரியனாய் சுட்டெரித்தாள்!

''துரோகி.. பாதகன்.. என் முதல் எதிரியே இவர்தான்! எதுக்கு இவரையெல்லாம் வீட்டுக்குள்ள விடறீங்க?''

பெற்றவர்களைப் பார்த்து சத்தம் போட்டாள்.

''மீண்டும் சொந்தத்தைப் புதுப்பிக்க அவர் தாய்க்காரி மட்டும் வந்தாப் போதும்! இவர் எதுக்கு வரணும்? போகச் சொல்லுங்க!''

''என்னம்மா மாப்பிள்ளையை இப்படி பேசறே?''

சத்தியவதி குறுக்கே புக...

''மாப்பிள்ளையா..? யார் மாப்பிள்ளை? கண்டவங்க எல்லாம் உனக்கு எப்படி மாப்பிள்ளையாவாங்க? உன்னுடைய ஒரே மாப்பிள்ளை.. என் கணவர் திவாகர் மட்டும்தான்! அதை ஞாபகத்துல வச்சக்கங்க!''

''சஞ்சனா..'' என்று ஆதவன் அதட்ட...

''அக்கா பிள்ளைமேல உங்களுக்கு பாசம் பொத்துட்டு வழியுதோ?''

சஞ்சனா நக்கலாய் கேட்க...

ஆதவன் வாயை மூடிக் கொண்டார்.

''விடுங்க மாமா! யார் என்னைப் பேசறா? நம்ம சஞ்சுதானே! உரிமையுள்ள இடத்தில்தானே கோபம் பாராட்ட முடியும்! என்மேல் தானே, தப்பு..!

அந்தத் தப்பை சுட்டிக் காட்டறாள்! அதில் என்ன மாமா தப்பு?

எனக்கு சந்தோசம்தான்..!

என்னை அவமானப்படுத்துவதால்... சஞ்சனாவுக்கு சந்தோசம் கிடைக்குதுன்னா.. அதில் எனக்குமே சந்தோசம் தான்!''

சந்தோஷ் சாந்தமாய் பேச..

பெரியதாய் ஒரு முறை முறைத்துக் கொண்டே உள்ளேப் போனாள்.

''அம்மா.. அம்மா..'' என்று சஞ்சனா கத்த..

''என்ன சஞ்சனா?'' என்று சத்தியவதி ஓடி வந்தாள்.

''நான் ரொம்ப சந்தோசமா இருக்கேன்! என்னை அவமானப்படுத்திய ஜீவனை.. திரும்ப அவமானப்படுத்திய திருப்தி.. இப்போ எனக்கு கிடைச்சிருக்கு...!

அதைக் கொண்டாடணும்! இந்த சேலை கசங்கி இருக்கு..!

புதுசா ஏதாவது சேலை இருக்கா? அதுவும் பட்டுச் சேலை! ம்?'' என்று கேட்ட மகளிடம்...

''என்னடி இப்படிப் பேசறே? உனக்கென்ன பைத்தியமா?''

''இல்லேம்மா.. இப்போதான் பைத்தியமே தெளிஞ்சிருக்கு! இன்னும் கொஞ்ச நேரத்தில் என் திவாகர் இங்கே வரலாம்! அவர் வரும்போது.. நான் தேவதையாய் ஜொலிக்கணும்..!

ஒருநாள் கூட வலிய போய் அவரைச் சந்தோஷப் படுத்தியதில்லை...!

மரக்கட்டைப் போல நான் இருந்தாலும்.. என்னோட சந்தோசமா இருந்துட்டுத்தான் அந்த மனுசன் எழுவார்!

இன்னைக்கு அவரை நான் வலியப்போய் சந்தோசப் படுத்தப் போறேன்!



இன்னைக்கு.. இந்த வீட்டுல நடக்கப்போறதுதான் என் சந்தோசமான முதல் உறவு...! கொடும்மா!''

சஞ்சனா கேட்க.. மறுக்க முடியாத சத்தியவதி...

''பீரோவின் ரகசிய அறையில் புதுசா ஒரு பட்டுப் புடவை வச்சிருக்கேன்!'' என்றாள்.

சாவி போட்டு திறக்க.. அழகான புடவைக் கண்ணில் பட்டது.

ஆசையோடு அதை எடுக்க.. கூடவே ஒரு லெட்டரும் வழுக்கிக் கொண்டு வந்து வெளியில் விழுந்தது.

சத்தியவதி, கௌஷிகா ஆடிப்போய் விட்டனர்.

அதனை எடுத்து பிரித்த சஞ்சனா அதிர்ந்தாள்.

செய்தியறிந்து வெலவெலத்துப் போனாள்! தீயில் விழுந்த புழுவாய் துடித்தாள்.

''என்னம்மா இது? ஏன்ம்மா சொல்லலே?''

சஞ்சனா கதறினாள்.

''என்னை மன்னிச்சிடும்மா!''

சத்தியவதி அழுதாள்.

''ஏம்மா.. இதை, இப்படி அநியாயமா மறைச்சே?''

''இதைக் கண்டு நீ திருமணத்தை நிறுத்திடுவியோன்னு பயந்துதான் சஞ்சனா..''

''நீ எப்படி...அப்படி நினைக்கலாம்? அந்த மனுசன் என்னைக் காதலிக்கவே இல்லையோன்னு சந்தேகப்பட்டேனே! என்னை ஏமாத்திட்டதா புலம்பினேனே!

அவர் நினைவு வரும்போதெல்லாம் அவரைச் சபிச்சேனேம்மா! பாவி.. நான் பாவியா இருந்துட்டு அவரை

வாயில வந்தாப்பல காதல் துரோகின்னு எல்லாம் திட்டினேனே!''

சஞ்சனா விரிட்டழுதாள்.

''கடைசி நேரம் கல்யாணத்தை நிறுத்தினால்... ரெண்டு குடும்பமும் அவமானப்படணுமேன்னு பயந்து தான்டி சொல்லலே!''

''ஒரு முடிவை எடுத்துட்டு.. யாராவது ஆரம்பத்தை நினைப்பாங்களா?''

சத்தியவதி தலையை குனிந்து கொண்டாள்.

''ஒரு முடிவை எடுக்கும்போதே அதனால் வரும் நல்லது.. கெட்டதை ஏத்துக்கிற மனப்பக்குவம் இல்லாத மடைச்சின்னா என்னை நினைச்சீங்க?''

''இல்லம்மா.. இல்லம்மா..''

''பெற்ற தாய், தந்தைக்காக என் காதலைத் தியாகம் செய்ததா நினைச்சி... சந்தோசமா என் காதல் தோல்வியை ஏத்துட்டு இருப்பேனே..!

அத்தான்.. காதலிக்கிறாப்போல நடிச்சி.. மௌனமா இருந்து ஏமாத்திட்டார்ன்னு திட்டித் தீர்த்தேனே...!

என் கரி நாக்கின் சாபம் அவரை என்ன செய்யுமோ?

ஆனாலும்.. ஆனாலும்.. என் காதலை மறக்கவும் முடியாமல் கஷ்டத்தோடு வாழறேனே...!

அத்தானை முழுவதுமாய் மறக்கவும் முடியாமல்.. அவரை முழு மனதோடு ஏத்துக்கவும் முடியாமல்... ஏம்மா என் வாழ்க்கை மட்டும் இப்படி திசை மாறிப்போச்சு?

நான் என்ன பாவம் செய்தேன்..?

ஏன் எனக்கு மட்டும் இப்படி நடந்தது..?



திவாகர்.. சந்தோஷ் ரெண்டு பேருமே பாவம் தானே?

சந்தோஷ் அத்தானுக்கு முதல்ல நல்லப் பெண்ணாப் பார்த்து கட்டி வைக்கணும்..!

என் திவாகரோடு இனி நான் சந்தோசமா வாழணும்!''

விம்மினாள்...

விரிட்டாள்..

கத்தினாள்...

கதறினாள்...

சஞ்சனா எழுந்து.. சந்தோஷ் அருகே ஓடினாள்!

''அத்தான்.. சந்தோஷ் அத்தான்.. என்னை மன்னிப்பீங்களா..? நான்தான் கோபத்துல அவசரத்துல முடிவெடுத்துட்டேன்..!

என் கோபத்தால் நம்ம ரெண்டு பேரோட இதயத்தையும் கூறுபோட்டுட்டேன்!

நீங்க என்னை மறந்து.. வேற ஒரு நல்ல பெண்ணை மணந்து இன்பமா வாழணும், அத்தான்..!

அப்படியே என்னை நீங்க முழுசா மன்னிக்கணும், அத்தான்!''

சஞ்சனா அழுகையோடு... அவன் காலடியில் விழுந்தாள்.

சந்தோஷ் பதறிப் போய்விட்டான்.

சட்டென்று கால்களை விலக்கிக் கொண்டான்.

சத்தியவதி சஞ்சனாவைத் தூக்கி நிறுத்தினாள்.

அந்த நேரம் உள்ளே நுழைந்த திவாகர் விமலையானான்.

சஞ்சனாவை ஓங்கி அறைந்தான்.

முதுகில் மொத்தினான்.

முடியைப் பிடித்து பிய்த்தான்.

"என்னடி பழைய உறவை புதுப்பிக்க.. அவன் காலில் விழுந்து கெஞ்சுகிறாயா? இவனைப் பார்த்து கெஞ்சவும்... கொஞ்சவும்தான்.. தாய் வீட்டிற்கு நான் இல்லாமல் சீராட வந்தாயா..?

நான் எதை வேண்டுமானாலும் மன்னிப்பேன்! உன்னால் எனக்கு ஏதாவது மான, அவமானம் ஏற்பட்டால் கொலையே செய்துடுவேன்!"

திவாகர் கத்தினான்.

"என் சஞ்சனாடா! என் மனைவி சஞ்சனாடா! அது உன் ஞாபகத்துல எப்போதும் இருக்கணும்!"

திருவிழாவில் சந்தோஷ் எப்படி பேசினானோ அவ்வாறு பேசிக்காட்டினான், திவாகர்.

சஞ்சனாவின் முடியைப் பிடித்து தரதரவென இழுத்துப்போய் காரில் போட்டான், திவாகர்!

இனி, அந்த மயிலின் சிறகுகள் ஒவ்வொன்றாய் பிய்க்கப்படும்..!



## 18

ஆதவன் அதிர்ச்சியில் மறுநாளே உயிரை விட்டார்.



"கொன்னுட்டையே.. என் அப்பாவை கொன்னுட்டையே! என் திருமணத்தை பார்த்த சந்தோசத்தில்.. இன்னும் கொஞ்ச நாள் உயிரோடு இருப்பார்ன்னு கற்பனை பண்ணினேனே! அவரோட சந்தோசத்துக்காகத் தானே திருமணம் செய்துகிட்டேன்! மருமகனா இருக்க வேண்டியவன் இப்படி எமனா மாறிட்டையே!"

திவாகரைப் பார்த்துக் கத்தினாள்.

தந்தையின் சடலத்தில் விழுந்து விழுந்து நாள் முழுக்க அழுதாள்.

சடலத்தை தூக்கிக் கொண்டு போக... அதைத் தாங்க முடியாமல் மயக்கமானாள். அவளைத் தூக்கிக் கொண்டு போய் திவாகர் ஹாஸ்பிட்டலில் சேர்த்தான்.

சந்தோஷ் தான் ஆதவனுக்கு கொள்ளி வைத்தான்!

அவள் கதறல்... திவாகரின் கல் மனதையே அசைத்துப் பார்த்தது.

'ச்சே.. என்ன..? ஏது..? என்று ஆராய்ந்து.. யோசிக்காமல்.. நோயுள்ள மனிதன் முன்பு கோபப்பட்டு.. அநியாயமாய் சாகடித்துவிட்டேனே! சாய்த்து விட்டேனே!'

திவாகர் உள்ளுக்குள் கலங்கினான்.. கதறினான்.

எல்லாம் முடிந்தது.

ஆசையாசையாய் ஒரு பெண்ணைப் பெற்று.. அவள் பிள்ளைப் பெற்று கொடுக்காமலேயே.. அதைப் பார்க்காமலேயே.. அவர் காற்றாகி.. கைப்பிடி சாம்பலாகிப் போனார்!

கொஞ்சநாள் கழித்து..

சந்தோஷுக்கு அமெரிக்காவில் உள்ள பெரிய கம்பெனியில் வேலை கிடைத்து.. மாதம் இரண்டு லட்சம் சம்பாதிக்கிறான்.

அவனுடைய தங்கை லதாவிற்கு திருமணம் ஆகி விட்டது.

இரண்டு வருடமாகியும்.. தங்களுக்கு ஒரு பேரப்பிள்ளையை பெற்றுக் கொடுக்காத மருமகளிடம் பார்வதி நச்சரிக்க ஆரம்பித்தாள்.

ஏன் என்றே தெரியவில்லை... சஞ்சனாவின் வயிற்றில் கருதரிக்கவில்லை.

"சஞ்சனா... நீயும், திவாகரும் ஏதாவது கட்டுப்பாடா இருக்கீங்களாம்மா...?"

பார்வதியம்மாள் கேட்க...

"புரியலையே, அத்தை!" என்று சஞ்சனா முழிக்க...

"இப்போதைக்கு குழந்தை வேண்டாம்ன்னுட்டு..."

"ஐய்யோ அத்தை!"

"குழந்தை வந்தால் உன் அழகு குலைஞ்சிடும்ன்னு..."

"ம்கூம்.. அதெல்லாம் இல்லை!"

அவசரமாய் சஞ்சனா மறுக்க...

"குழந்தை வயித்துல வந்துட்டால் உங்க சந்தோஷத்துக்கு இடைஞ்சலாயிடும்ன்னு ரெண்டுபேரும் பேசி.. ஏதாவது கட்டுப்பாடா இருக்கீங்களாம்மா..?"

"ம்கூம்.. ம்கூம்..."

"பின்னே ஏம்மா.. ரெண்டு வருசமாகியும் உன் வயிறு திறக்கல? ஒரு குழந்தை உண்டாகல?"

"தெரியலையே அத்தை!" என்று சஞ்சனா சோகமாய் சொல்ல...

"ரெண்டு பேரும் டாக்டர்கிட்ட போயிட்டு வாங்கம்மா!"



"நான் ரெடி அத்தை! ஆனால் உங்க பிள்ளை வா சம்மதிக்கணுமே!"

"நான் அவனிடம் பேசறேன், சஞ்சனா!"

"செய்யுங்க, அத்தை!"

அவளுக்கு குழந்தை என்றால் உயிர்! கொள்ளை பிரியம்! இரண்டு வருடங்களாய் குழந்தைக்காய் ஏங்கிக் கொண்டுதான் இருக்கிறாள்!

அப்பா ஆதவனின் கையில் ஒரு குழந்தையைப் பெற்று கொடுக்க முடியவில்லையே! என் குழந்தையைப் பார்த்துவிட்டு அவர் இறந்திருந்தால்... அவரின் ஆத்மா சாந்தி அடைந்திருக்குமே!

'அப்பா.. அப்பா.. நீயே மீண்டும் என் வயிற்றில் பிள்ளையாய் பிறக்க வேண்டும்!'

'வருவாயா, அப்பா?'

'வந்து என் வயிற்றில்.. கருவாகி.. உருவாகி.. என் துயர் துடைப்பாயா?'

'என்னை நீ தட்டி, தாலாட்டி, சீராட்டி வளர்த்தது போல.. உன்னை இந்த மணிவயிற்றில் பத்துமாதம் சுமந்து.. பெற்று.. என் மடியில் சீராட்டி, தாலாட்டி.. வளர்க்க வேண்டும்!'

'இந்த ஒரு ஆசையை மட்டும் நிறைவேற்று அப்பா..'

மானசீகமாய் தந்தையோடு பேசினாள், சஞ்சனா.

பார்வதியம்மா அன்று திவாகரனிடம் கேட்டாள்.

அதற்கு அவனோ...

"என்ன அவசரம்? வயது இருக்கில்லையா? எதுக்கு அலையறீங்க? குழந்தை பிறக்கும் போது பிறக்கட்டும்!"

திவாகர் அலட்சியமாய் சொன்னான்.

"அப்படி சொல்லாதப்பா! டாக்டர் பத்மினி நல்லா பார்க்கறாங்களாம்! அவரோட புருஷன் விஜய்யும் சிட்டியில பேர் போன டாக்டர்! ஒருமுறை எனக்காக ஹாஸ்பிட்டல் போயிட்டு வாப்பா, திவாகர்!"

பார்வதியம்மாள் கெஞ்ச...

மறுநாள்.. சஞ்சனாவை அழைத்துக் கொண்டு ஹாஸ்பிட்டல் சென்றான்.

இரண்டு பேருக்கும் சில டெஸ்டுகள் எடுத்தார்கள்!

ஒரு இரண்டு மணி நேரம் கழித்து வரச் சொன்னார்கள்.

இரண்டு மணி நேரமும் ஹாஸ்பிட்டல் வராண்டாவிலேயே சஞ்சனா அமர்ந்திருக்க...

திவாகர் அவளைத் தனியே விட்டு விட்டு ஊர் சுற்றி விட்டு வந்தான்.

இரண்டு மணி நேரம் கழித்து இருவரும் டாக்டரின் முன்பு இருந்தனர்.

சஞ்சனாவைப் பார்த்து டாக்டர் விஜய் சொன்னார்.

"ஷி ஈஸ் ஆல்ரைட்! அவங்களுக்கு தாயாகக் கூடிய பாக்கியம் இருக்கு! ஆனால்..."

டாக்டர் இழுத்துவிட்டு.. திவாகரைப் பார்த்தார்.

திவாகரிடம் சட்டென்று கலக்கம் ஏற்பட்டது.

"சொல்லுங்க டாக்டர்! எதுவா இருந்தாலும் மறைக்காமல் சொல்லிடுங்க! ப்ளீஸ்..."

"கௌண்டிங் குறைச்சலா இருக்கு! உயிரை உற்பத்தி செய்யற ஜீவ அணுக்களின் எண்ணிக்கை குறைச்சலா இருக்கு!"



டாக்டர் சொல்ல... செந்தணலில் விழுந்தவன் கணக்காய் திவாகர் துடிதுடித்தான்.

"ஐய்யோ.."

திவாகர் தலையில் கை வைத்துக் கொண்டான்.

"பதறாதீங்க, மிஸ்டர் திவாகர்!"

"பதறாமல் எப்படி டாக்டர்? அப்போ.. அப்போ.. இவளை என்னால் தாயாக்கவே முடியாதா?"

சஞ்சனாவிற்கு அவனைக் காண பாவமாய் இருந்தது.

"அப்படி சொன்னேனா?"

"நான் ஆண்மையற்றவனா...?"

"என்ன பேசறீங்க, திவாகர்! நீங்க ஆண்மையற்றவர்ன்னு சொல்லலையே! ஜீவ அணுக்களின் எண்ணிக்கை குறைச்சலா இருக்குன்னுதானே சொன்னேன்!"

"இது எதனால் ஏற்படும் டாக்டர்?"

"சின்ன வயதுலேயே செக்ஸ் பழக்கம், அம்மை, புகை, குடி, போதை மருந்து பழக்கம், உணவு பழக்கம், வழி வழியா வர மரபு வழிப் பழக்கம்ன்னு காரணத்தை சொல்லிட்டேப் போகலாம்!"

"இதனை சரிபடுத்த முடியுமா? ஜீவ அணுக்களின் எண்ணிக்கையை கூட்ட முடியுமா, டாக்டர்?"

திவாகர் வியர்த்து விறுவிறுக்க கேட்க...

"மருந்து, மாத்திரை உட்கொண்டால் சில பேருக்கு கூடும்! சில பேருக்கு கூடாது! பயப்படாதீங்க! நல்ல மருந்து, மாத்திரை தரேன்! விடாமல் சாப்பிட்டுட்டு வாங்க! கூடுதாவென்று பார்க்கலாம்! நீங்க கொஞ்ச நாளைக்கு

தொடர்ச்சியா ட்ரீட்மெண்ட் எடுத்துக்கணும். புரியுதா, மிஸ்டர் திவாகர்?

உங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால்.. கடவுளின் அனுக்கிரகம் இருந்தால் ஹண்ரட் பர்சண்ட் கூட வாய்ப்பிருக்கு! ராமசாமி ஐயா சன் தானே? அவரோட தானமும்... தர்மங்களும் உங்களைக் காக்கும்! கவலைப் படாதீங்க!''

டாக்டர் விஜய் ஊசி போட்டு, வீரியமிக்க மருந்து மாத்திரை எழுதிக் கொடுத்தார்.

கள்ளக்குறிச்சி நகரிலேயே புகழ்பெற்ற மருத்துவ தம்பதிகள்.. இந்த விஜய்யும், பத்மினியும்!

கைராசி டாக்டர்கள் என்று பெயர் எடுத்தவர்கள்!

சுற்றிலும் உள்ள நகர மக்களும், கிராம மக்களும் அங்கே குவிவார்கள்!

மற்ற டாக்டரை விட பீஸ் குறைச்சலாய் வாங்கி.. நிறைவான ட்ரீட்மெண்ட் கொடுப்பவர்கள்! இல்லாதோர்களுக்கும்.. ஏழைகளுக்கும் பீஸே வாங்க மாட்டார்கள்.

அவர்கள் தன்னுடைய கணவனின் குறையை சரி படுத்தி விடுவார்கள் என்று சஞ்சனா நம்பினாள்.

எப்போதும் நிமிர்வுடனும்.. அசாத்திய கம்பீரத்தோடும் இருந்த திவாகர்.. முதுகு வளைந்து விட்டது!

முகம் முழுக்க சோகம் சூழ்ந்து கொண்டது!

கண்கள் அடிக்கடி கலங்கியது!

காரை செலுத்திக் கொண்டிருந்தவன் கைகளில் லேசான நடுக்கமிருந்தது!

சஞ்சனா நகர்ந்து போய்.. அவன் இடது கையை ஆதரவாய் பற்றி..



''ஏன் டல்லாயிட்டீங்க, திவாகர்! இதெல்லாம் குறையே இல்லை! மருத்துவத்துறை ரொம்பவே முன்னேறியிருக்கு! மருந்து கரைக்டா சாப்பிடுங்க! சரியாயிடும்!'' என்று அன்போடு சொல்ல..

திவாகர் இளகிவிட்டான்.

காரை ஓரமாய் ஒதுக்கி நிறுத்தினான்.

அவள் இரு கைகளையும் பற்றிக் கொண்டு..

''சஞ்சனா.. சஞ்சனா..''என்று தழுதழுத்தான்.

''நீங்க என்ன சின்ன குழந்தையா? எதுக்கு கலங்கறீங்க? இதுக்கெல்லாமா வருத்தப்படுவாங்க? கவலை தான் மனிதனோட எதிரி! தெரியுமா? கவலைப் பட்டுட்டு மாத்திரை சாப்பிட்டால் எந்த பலனுமே அளிக்காதுங்க!''

''கவலைப்படலே, சஞ்சனா! சஞ்சனா.. என் அப்பா, அம்மாகிட்ட இந்த விஷயத்தை சொல்லிடாதேம்மா!''

''நான் சொல்லமாட்டேன்!''

''அவங்களுக்குத் தெரிய வந்தால் ரொம்ப வருத்தப் படுவாங்க! வயதான காலத்தில் பீபி, சுகர்ன்னு அதிக உயரத்துக்கு உயர்ந்துடும்!''

''நான் சொல்லமாட்டேன்! என் மேல் நம்பிக்கை யில்லையா?''

''என் மனைவி, நீ! உன்னை நம்பாமல் வேற யாரை நம்புவேன்!''

அவள் தோளில் சாய்ந்து அழுதான்.

அடுத்து வந்த நாட்களில் ரொம்ப அமைதியானான்!

அவனின் நடவடிக்கைகள் அத்தனையுமே மாறியது!

சஞ்சனாவிடம் நிரம்ப அன்போடு இருந்தான்!

தாய், தந்தையிடம் பிரியமாய் பழகினான்!

தந்தையின் தொழிலிலும் உதவினான்!

அவனை இதுபோல் பார்க்க.. சஞ்சனாவிற்கு பிடித்திருந்தது.

தீயாய் சுடாமல்.. வார்த்தைகளால் வலிக்க வைக்காமல்.. திவாகர் திருமணம் ஆன நாளிலிருந்து.. இந்த அளவு மென்மையாய் இருந்திருந்தால்.. எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று நினைத்துக் கொண்டாள், சஞ்சனா.

திவாகருக்கு வேளாவேளைக்கு சஞ்சனா மருந்து மாத்திரைகளை மறக்காமல் கொடுத்தாள்.

தொடர்ச்சியாய் ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொண்டான்.

நான்கு மாதம் கழித்து...

மீண்டும் எடுக்க வேண்டிய டெஸ்டுகள் அனைத்தும் எடுக்கப்பட்டு..

டாக்டர் விஜய் முன்பு.. முகம் முழுக்க கவலை ரேகையை அப்பிக் கொண்டு திவாகர் அமர்ந்திருந்தான்! அவன் அருகில் கலக்கத்துடன் சஞ்சனாவும் அமர்ந்திருந்தாள்.

டாக்டர் விஜய் கொஞ்சம் இறுக்கம் தளர்ந்து.. இவனைப் பார்த்து சொன்னார்.

"ஸாரி.. ஸாரி மிஸ்டர் திவாகர்! ம்கூம்! கொஞ்சம் கூட அணுக்களின் எண்ணிக்கை கூடலே! உங்களால் இவங்களை தாயாக்க முடியாது!"

டாக்டர் கூற -

திவாகர் அந்தச் சொற்களில் செத்தே விட்டான்!



அதிலிருந்து சுரத்தே இல்லாமல் நடைபிணமானான்!

அவன் சுறுசுறுப்பும்... ரவுடித்தனமும்.. தலைக்கனமும்.. ஆணவமும்... ஒன்று சேர்ந்து... எங்கோ ஓடிப்போய் ஒளிந்து கொண்டது!

'எத்தனைப் பெண்களின் கற்பினை சூறையாடி இருக்கிறான்!'

'எத்தனை பெண்களின் வாழ்க்கையை அநியாயமாக கெடுத்து வீணடித்து இருக்கிறான்!'

'இவனால் குடும்ப பெண்கள்.. கால்கேர்ள் ஆனவர்களின் எண்ணிக்கை கொஞ்சமா?'

'இவனைப் பகைத்துக் கொண்ட ஆண்கள் அனைவரும் கையிழந்து, காலிழந்து, மகளையிழந்து, மனைவியையிழந்து என்று ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை இழந்து.. சபித்துக் கொண்டு.. எத்தனை பேர் உயிர் வாழ்கின்றார்கள்!'

'அவனால் ஒட்டு மொத்தமாய் வஞ்சிக்கப்பட்டவர்களின் சாபம்தான் இன்று அவனை புயலாய் தாக்குகிறது! பூகம்பமாய் அசைத்துப் பார்க்கிறது!'

'ஒரு ஆணுக்கு திருடுவதாலோ.. பொய் சொல்வதாலோ.. ஏன் கொலை குற்றம் புரிவதாலோ கூட.. இவ்வளவு அவமானம் வந்து கூனிக்குறுகச் செய்யாது!'

'தன் மனைவியை தாயாக்க முடியாது' என்பது எத்தனை பெரிய அவமானம்! இழுக்கு! கேவலம்!'

திவாகர் உள்ளுக்குள்ளே நொந்து நூலாகிப் போனான்.

அம்மாவின் நச்சரிப்பு...

ஊர் மக்களின் 'இன்னும் பிள்ளையில்லையே' என்ற ஏச்சும், பேச்சும்...

'என்ன ஆம்பளைடா, நீ? திருமணமான மறுவருடமே பிள்ளைப் பெத்து நீ வீரன்னு நிரூபிக்க வேண்டாம்? இன்னும் குழந்தைப் பெத்துக்காமல்..' என்ற நண்பர் களின் நையாண்டி...

திவாகரால் அனைத்தையும் சகிக்க முடியவில்லை.

மீண்டும் டாக்டரிடம் ஓடினான்.

"என்னால் தகப்பனாவே ஆக முடியாதா, டாக்டர்?"

"சான்சே இல்லை!"

"அப்போ என் மனைவி தாயாகவே ஆக முடியாதா?"

"உங்க மனைவி தாயாக முடியும்!"

"என்ன டாக்டர் சொல்றீங்க?"

"விஞ்ஞானம் எவ்வளவோ முன்னேறி இருக்கு! உங்களால் சஞ்சனாவுக்கு ஒரு குழந்தையை கொடுக்க முடியாது! ஆனால், சஞ்சனா தாயாக முடியும்!"

"என்ன டாக்டர் குழப்பறீங்க?"

"ஆமாம் மிஸ்டர் திவாகர்! உங்களைப் போல குறை யுள்ளவங்க வராங்க! வேறு நபர்களோட ஜீவ அணுக்களை தானமா பெற்று.. தன் மனைவியோட கர்ப்பப் பையில வளர்த்து.. குழந்தை பெத்துக்கிறாங்க! நிறைய தம்பதிகள் இதுபோல குழந்தை பெத்து.. ஆனந்தமா வாழறாங்க! இதெல்லாம் இந்த விஞ்ஞான உலகில் சகஜமாகிப் போயிடிச்சி!

இரத்ததானம் போல... சில ஆரோக்கியமாக.. அறி வுள்ள.. புத்தி கூர்மையுள்ள இளைஞர்கள் விரும்பி.. தானாகவே வந்து.. தங்கள் விந்துக்களை டொனேட் பண்றாங்க!



அதைப் பயன்படுத்தி.. உங்களைப் போல குறையுள்ள தம்பதிகளுக்கு குழந்தை உருவாக்கறோம்! அவர்கள் வாழ்வில் வெளிச்சம் காட்டறோம்!

உங்களுக்கு இதில் உடன்பாடு இருந்தால்.. உங்கள் மனைவியை அழைத்து வாருங்கள்!"

டாக்டர் விஜய் முழுவதுமாய் கூறிவிட்டு அவனை ஆழ்ந்து நோக்க...

திவாகர் சட்டென்று கேட்டான்.

"எப்போ சஞ்சனாவை அழைத்து வரட்டும் டாக்டர்?"

"வீட்டுக்கு விலக்கான பத்தாவது நாளிலிருந்து இருபதாவது நாட்கள் வரை!"

"கண்டிப்பா அழைச்சிட்டு வரேன், டாக்டர்!"

"செய்யுங்க, திவாகர்!"

வீட்டிற்கு வந்தான் திவாகர்.

சஞ்சனாவிடம் விஷயத்தைச் சொல்ல...

"ஐய்யோ.. சொல்லாதீங்க! அசிங்கத்தை மிதிச்சாப் போல அருவெறுப்பா இருக்கு!"

சஞ்சனா காதைப் பொத்திக் கொண்டாள்.

"சஞ்சனா.. நான் சொல்வதை கேளம்மா!"

திவாகர் கெஞ்ச...

"மாட்டேன்! இது மட்டும் மாட்டேன்!"

"நீ என் பேச்சை கேட்கணும், சஞ்சனா!"

"கண்டவனோட குழந்தையை என் கருவறையில் சுமந்து... ஐய்யோ.. வேண்டாம்! அப்படி ஒரு அசிங்கம் வேண்டாம்! பெண்களோட கருவறை .. கோயில்

கற்பககிருகத்துக்கு சமம்! அப்படிப்பட்ட கருவறையை நான் ஒரு போதும் அசிங்கப்படுத்திக்க மாட்டேன்!''

சஞ்சனா குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

''படித்த பெண் தானே? அறிவியல் வளர்ச்சி உனக்குத் தெரியும் தானே? இந்த முறையில நிறைய தம்பதிகள் குழந்தை பெத்துக்கிறதா டாக்டர் சொல்றார்!''

''ம்கூம்.. வேண்டாம்.. வேண்டாம்..''

சஞ்சனா விம்மலோடு கையாட்டி மறுக்க...

''சஞ்சனா.. நான் உனக்குச் செய்த கொடுமைக்கெல்லாம் சேர்த்து வைத்து என்னைப் பழிவாங்கிடாதே!''

திவாகர் கெஞ்சினான்.

''இதுக்கு நான் ஒத்துக்க மாட்டேன்! சாகச் சொல்லுங்க செத்துடறேன்!''

அவன் அவசரமாய் அவள் வாயைப் பொத்தினான்.

''சஞ்சனா.. என்னம்மா பேசறே? ஏன் இப்படியெல்லாம் வார்த்தையால் கொல்றே?''

''ஆமாம்.. நீங்க செத்துப் போகச் சொன்னால் மனப்பூர்வமா செத்துப்போவேன்! இந்த ஒரு செயல் மட்டும் வேண்டாம்! எனக்கு குழந்தை ஆசையே இல்லை!''

சஞ்சனா கண்ணீரோடு கைக் கூப்பினாள்.

''அம்மா, அப்பாவுக்கு இருக்கு! அத்தைக்கு இருக்கு! அவர்களை ஏமாற்றலாமா..?''

''............''

''பாவமில்லையா..?''

''..........''



''நானே சம்மதிக்கும்போது ஏன் மறுக்கறே?''

''..........''

ப்ளீஸ் சஞ்சனா.. என்னைக் காப்பாற்று! ஊராரின் குத்தலானப் பார்வையிலிருந்து தேவதையாய்.. தெய்வமாய் காப்பாற்று!''

அவன் கெஞ்சினான்...! அழுதான்..!

தினம் தினம் பேசியே அவள் மனதைக் கரைத்தான்.

அவளும் உடன்பட்டு ஹாஸ்பிட்டல் வந்தாள்.

''டாக்டர்.. இந்த செய்தி ரகசியமா இருக்கணும்! ப்ளீஸ் டாக்டர்...''

திவாகர் கெஞ்சிக் கேட்க...

''உங்கள் ரகசியங்கள் காக்கப்படும்! எங்க க்ளினிக் கோட ஸ்பெஷாலிட்டியே அதுதான்!''

''சந்தோசம், டாக்டர்!''

திவாகர் விஜய்யைப் பார்த்தும்.. பத்மினியைப் பார்த்தும் கையெடுத்து கும்பிட்டான்.

''ஹாஸ்பிட்டல்ல ஒரு வாரமேனும் இருக்கணுமே, சஞ்சனா! அது உங்களால் முடியுமா?''

''ஐய்யோ முடியாதே!'' என்று சஞ்சனா சொல்ல...

''உன்னை நான்.. உன்னுடைய ப்ரண்ட் வீட்டில் விட்டுட்டு வந்து இருப்பதா அம்மாகிட்ட சொல்லிச் சமாளிச்சிக்கிறேன்! கவலைப்படாதே, சஞ்சனா!''

திவாகர் அவளை ஹாஸ்பிட்டலில் அட்மிட் செய்து விட்டுக் கிளம்பிவிட்டான்.

சஞ்சனா கலங்கிப் போய்தான் இருந்தாள்.

'எவனுடைய குழந்தையோ சுமக்க இப்படி கடவுள் கட்டளையிட்டுவிட்டானே' என்ற வருத்தத்தில் இருந்தாள்.

'எவனுடையதையோ சுமப்பதற்கு பதிலாய்... சந்தோஷ் அத்தானை உயிர் உருக.. ஒரு காலத்தில் காதலித்ததற்காய்.. சந்தோஷ் அத்தான் மனமிரங்கி.. வரமாய் அவருடைய உயிரணுக்களை எனக்கு கொடுத்து.. அதைச் சுமந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!'

நினைப்பே தித்தித்தது!

அந்த நினைப்பு அவளுக்கு அருவெறுப்பை தரவில்லை!

ஆனாலும் திவாகர் விடமாட்டார்!

'திவாகர் அத்தானை இன்னமும் எதிரியாய்தான் பார்க்கிறார்!'

'திவாகர் மனமிரங்கினாலும்.. சந்தோஷ் அத்தான் அமெரிக்காவில் அல்லவா இருக்கிறார்.'

ஏதேதோ எண்ணங்களோடு.. அந்த நாளைக் கஷ்டப்பட்டுக் கடத்தினாள்.

மறுநாள் மதியவேளை...

'எவ்வளவு நேரம் தன்னறையில் படுத்திருப்பது.. போரடிக்கிறதே..' என்று எழுந்து சஞ்சனா ஹாஸ்பிட்டல் வராண்டாவிற்கு உலாவ வந்தாள்.

டாக்டரின் அறை திறந்து வெளியே வந்த சந்தோஷைக் கண்டுவிட்டாள்.

மறுநொடி...

''அத்தான்.. சந்தோஷ் அத்தான்..''



சஞ்சனா வீறிட்டு கத்தியது.... அவன் காதில் விழாமல் போக...

அவள் வேகமாய் ஓடி வருவதற்குள்.. சந்தோஷ் வெளியேறி.. வீலரைக் கிளப்பிக் கொண்டு சென்றுவிட்டான்.

ஏமாற்றமடைந்த சஞ்சனா டாக்டரின் அறைக்கு ஓடி.. அனுமதி கேட்டு.. அவர் முன்பு நின்றாள்.

சந்தோஷ் பற்றி விபரம் கேட்க..

டாக்டர் பத்மினி சொன்ன செய்தி...

சஞ்சனாவினுள் பூமழையாய் ஆனந்தத்தோடு இறங்கியது!




''டாக்டர் இப்போ வந்துட்டு போனாரே...''

மூச்சிறைக்க சஞ்சனா கேட்க..

''சந்தோஷ்..! அவருக்கென்ன?''

பத்மினி கேட்க..

''அவர் என் அத்தான்!''

''ஓ..''

''அமெரிக்காவுல இல்ல இருந்தார்! எப்போ டாக்டர் வந்தார்?''

''ரெண்டு நாளைக்கு முன்பு வந்தாராம்! உனக்கு சந்தோஷ் அத்தான்னு சொல்றே! உனக்கு அவர் இந்தியா வந்தது தெரியாதாம்மா?''

''ஆமா டாக்டர்! அவர் உடம்புக்கு என்ன? உடம்பேதும் சரியில்லையா?''

சஞ்சனா பயந்தபடி கேட்க...

டாக்டர் வேகமாய் சிரித்துவிட்டார்.

''அப்படியெல்லாம் இல்லை! ஒரு ஹார்ட் பேஷண்டோட அறுவை சிகிச்சைக்கு.. ரத்தம் தேவைப்பட்டது..!

அதைக் கொடுத்துட்டு போறார்...!

நம்ம ஹாஸ்பிட்டலுக்கு ரெகுலரா ரத்தமும், விந்துவும் டொனேட் பண்ற டோனர்தான் சந்தோஷ்!''

பத்மினி சொன்ன செய்தியால்.. சஞ்சனா பூவாய் மலர்ந்தாள்.

''கண்டவங்களோடதை சுமக்க வெறுப்பா இருக்கு! அவரோட ஜீவ அணுக்கள் வேணும்மா! அவர் என் அத்தான்! என் அத்தை மகன்! அவரோடதுன்னா எனக்கு சுமக்க வெறுப்பாவே இருக்காது! ப்ளீஸ்ம்மா..''

சஞ்சனா சொல்லிவிட்டு அழ...

''எதுக்கு அழறே? முதல்ல அழுகையை நிறுத்து! கண்ணைத் துடை! நிஜமாவே சந்தோஷோட அணுக்கள் தான் வேண்டுமா?''

''கட்டாயமா.. கட்டாயமா..''

''ஆனால் சந்தோஷோடது ஸ்டாக் இல்லையேம்மா! ம்..?''

டாக்டர் பத்மினி யோசிக்க..



''ப்ளீஸ் டாக்டர்.. எனக்காக உதவுங்க.. ப்ளீஸ்..''

சஞ்சனா சடாரென பத்மினியின் காலிலேயே விழுந்து விட்டாள்.

''என்ன இது அநாகரீகம்? எழும்மா! உனக்கு உதவி செய்யறேம்மா! சந்தோஷை வரவழைச்சி... ஏற்பாடு செய்யறேன்! கவலைப்படாதே! நீ போய் ரெஸ்ட் எடுத்துக்கோ! அப்புறமும் என் சோகம்? இந்த பத்மினியை நீ நம்பலாம்!''

''டாக்டர்.. டாக்டர்..''

''நீ இந்த செயலுக்கு... பிடிக்காமல் தான்.. உன் கணவனின் வற்புறுத்தலால் வந்திருக்கேன்னும் தெரியும்! இப்போ நீ இதையே மனப்பூர்வமா விரும்பும்போது.. உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்வேன், சஞ்சனா!''

''ரொம்ப நன்றி டாக்டர்!''

சஞ்சனா எழுந்து வணங்கினாள்.

தன்னறைக்குத் திரும்பி படுக்கையில் விழுந்து கத்தினாள்... கதறினாள்.. விம்மினாள்.. வெடித்தாள்.

'சந்தோஷ்.. அன்னைக்கு மட்டும் உங்க மௌனத்தை விலக்கி 'காத்திரு'ன்னு நீங்க சொல்லியிருந்தால்.. எனக்கு இத்தனை வேதனைகள் வந்திருக்காதே!'

'குறைந்த நேரம் மனிதத் தன்மையுடன்.. நிறைய நேரம் அரக்கத்தன்மையுடன் இருக்கும்.. திவாகர் என்ற ராட்சசனிடம் மாட்டி இப்படி சிதைந்து.. சின்னா பின்னமாகி இருக்க மாட்டேனே!'

'என் வேதனைகளுக்கும்.. இது போலான சோதனைகளுக்கும்.. நீங்களும் காரணம் தானே, அத்தான்?'

சந்தோஷோடு மானசீகமாய் பேசி அவளை இன்னும் வருத்திக் கொண்டாள்.

கொஞ்ச நேரத்தில் சந்தோஷின் செல்போன் சிணுங்க.. எடுத்துப் பார்த்தவன் டாக்டர் பத்மினியின் நெம்பர் பார்த்து.. மெல்ல புன்னகைத்தபடி.. செல்லை ஆன் செய்து...

''என்ன டாக்டர் இரத்தம் கொடுக்கவும் ஒரு லிமிட் இருக்கில்லையா...? கொஞ்சம் ஏமாந்தால்... என் இரத்தத்தையெல்லாம் உறிஞ்சி காசாக்கிடுவீங்க போல இருக்கே!''

சந்தோஷ் ஜோக்கடிக்க...

''சந்தோஷ்.. நீ குறும்புக்காரன்தான்! அமெரிக்கா போனதும் ரொம்பத்தான் தேறிட்டே, இல்லையா? சரி மீண்டும் இங்கே வரமுடியுமா? இல்ல வேற ஏதாவது முக்கியமான வேலையிருக்கா? நான் உன்கிட்ட பேசணும்!''

''இதோ வரேன்!''

சந்தோஷ் செல்லை அணைத்துவிட்டு.. வண்டியை மீண்டும் ஹாஸ்பிட்டலுக்கு விட்டான்.

''உட்கார் சந்தோஷ்!''

''என்ன விஷயம் டாக்டர்? மீண்டும் ஏதாவது பேஷண்ட்டுக்கு ரத்தம் கொடுக்கணுமா? இரத்தம் கொடுக்கவும் ஒரு லிமிட் இருக்கில்லே?''

சந்தோஷ் சின்ன சிரிப்போடு கேட்க...

''உன்கிட்ட நிறைய மாற்றம் தெரியுது, சந்தோஷ்! என்ன எதுனா வெள்ளைக்காரியை டாவடிச்சிட்டு இருக்கியா, அமெரிக்காவுல?''



பத்மினி குறும்பாய் கேட்க...

சந்தோஷ் சீரியஸாய் சொன்னான்.

''காதலா... நோ.. நெவர்..''

''ஏன்?''

''காதலிச்சிட்டு இருக்கேன்! இன்னும் காதலிப்பேன்! என் உயிர் உள்ளவரையும்.. என் தேவதை இங்க இருக்கா!''

சந்தோஷ் நெஞ்சைத் தொட்டுக் காட்டினான்.

''உன் காதல் கதை ரொம்ப சுவாரசியமா இருக்கும் போல இருக்கே! யார் அந்த அதிர்ஷ்டசாலி?''

''சொல்லமாட்டேன், டாக்டர்!''

''கல்யாணம் எப்போ? விரைவிலே எங்களுக்கு கல்யாண சாப்பாடு போடுவ போல தெரியுதே, சந்தோஷ்!''

'மறுஜென்மத்தில் மீண்டும் மனிதனாய் பிறந்து... சஞ்சனாவைக் காதலித்து...அப்போதாவது தவறவிடாமல் கெட்டியாய் பிடித்து.. அப்போ.. அப்போதுதான் எனக்குத் திருமணம்! இன்னும் ஒரு ஜென்மம் எடுக்க வேண்டும் அவன் திருமணம் நிறைவேற!'

சந்தோஷ் பொங்கிய அழுகை உணர்வைக் கட்டுப்படுத்தி...

''விஜய் சார்..இந்த ராட்சசி வேணாம்ன்னு மறுக்க.. மறுக்க.. கடத்திட்டுப் போய் கல்யாணம் பண்ணிட்டீங்களாமே! நிஜமா, மேடம்?''

சந்தோஷ் சொல்லிவிட்டுச் சிரிக்க..

''சந்தோஷ் பையா.. என்னையே வாரரியே! சரி.. ப்ளீஸ் பி சீரியஸ்! ஒரு தம்பதிகளுக்கு குழந்தை பிறக்க

வாய்ப்பில்லே! அந்தப் பெண் உன் ஜீவ அணுக்களை விரும்பி கேட்கறா!''

''என்னோடதையா..? வெரி இண்டரஸ்டிங்! நிஜமாவா, மேடம்? அந்தப் பெண் யார், மேடம்?''

சந்தோஷ் ஆர்வமாய் கேட்க...

''உன் வரம்பு மீறுகிறாயே, சந்தோஷ்! ரகசியங்கள் இங்கே காக்கப்படும், தெரியாதா? ம்?''

''ஓ.கே. டாக்டர்! என்னோடதை விரும்பி கேக்கறாங்கன்னா.. டொனேட் செய்ய பரிபூரண சம்மதம்!''

உடனடியாய் டாக்டர் இந்த செயலில் ஈடுபட்டனர்.

சந்தோஷின் ஜீவ அணுக்கள்.. சஞ்சனாவின் கருப்பையில்!

சஞ்சனாவின் முகத்தில்தான் எத்தனை பூரிப்பு! எத்தனை மலர்ச்சி!

ஒரு வாரத்திற்கு மேல் ஆஸ்பத்திரியில் இருந்து கிளம்பினர்.

கிளம்பும்போது திவாகரை நிறுத்தி பத்மினி சொன்னார்.

''மிஸ்டர் திவாகர்.. சஞ்சனா கம்ளீட் பெட் ரெஸ்ட்ல இருக்கணும்! நீங்க அவளை எதுக்காகவும் தொந்தரவு பண்ணக்கூடாது! புரியுதா..?

செக்ஸுக்காக குழந்தை பிறக்கும் வரை அவளை அணுகவே கூடாது! சஞ்சனாவோட கர்ப்பப்பையும் கொஞ்சம் வீக்காவே இருக்கு! அப்புறம் இந்த முயற்சி தோற்கவும் வாய்ப்பிருக்கு! நல்லா இது ஒன்றை மட்டும் நினைவுல வச்சிக்கங்க!''

''சரி டாக்டர்!'' தலையாட்டினான், திவாகர்.



''இது போல சமயங்களில் மிருகங்கள் கூட தன் துணையை தொடாது! மிருகமே அப்படி இருக்க.. நம்ம மனிதன்.. புரிஞ்சி நடந்துப்பீங்கன்னு நம்பறேன்!''

''கட்டாயம், டாக்டர்!''

''இந்த டேட்ல எல்லாம் கண்டிப்பா செக்கப்புக்கு வரணும்!'' சஞ்சனாவைப் பார்த்துச் சொல்ல...

''ம்...'' என்று தலையாட்டினாள்.

காரில் ஏறிப் புறப்பட்டனர்.

''சஞ்சனா.. நீ என் பக்கத்துல இருந்தால்.. என்னால் உனக்கு தொல்லைகள் ஏற்படலாம்! என்னைக் கண்டாலே மிருகத்தைக் கண்டாற் போல பயப்படுவாய்! அதனால், பிரசவம் முடியும்வரை.. உன் தாய்வீட்டில்.. உனது அம்மாவின் அருகில் இருந்துவிடு!''

''அத்தை இதுக்கு ஒத்துக்கணுமே!''

''நான் பேசறேன், சஞ்சனா! அம்மாவை ஒத்துக்க வைக்க வேண்டியது என் பொறுப்பு!''

சஞ்சனா புன்னகையோடு தலையாட்டினாள்.

திவாகர் செய்தியை சொல்ல...

ஐயா ராமசாமியும், பார்வதியம்மாளும் ஒரேயடியாய் மறுத்தனர்.

''அம்மா.. அவளுக்கு கர்ப்பப்பை வீக்கா இருக்காம்! ட்ரீட்மெண்ட் எடுத்திட்டு இருக்கா! உங்களுக்கு பேரப் பிள்ளை வேண்டுமா? வேண்டாமா?''

''வேண்டும்!'' இருவரும் ஒரே குரலில் சொல்ல..

''அப்போ அவள் அவங்க வீட்டுல கொஞ்ச நாள் இருக்கட்டும்!''

"சரிப்பா! செய்!"

இருவரும் சம்மதித்தனர்.

திவாகரோடு பூஞ்சோலைக்கு கிளம்பிவிட்டாள்.

சஞ்சனாவை தாயிடம் ஒப்படைத்துவிட்டு.. அன்று இரவே கிளம்பிவிட்டான்.

சொந்த ஊர் வந்து.. தாயுடனும், கௌஷிகாவுடனும் சந்தோசமாய் இருந்தாள், சஞ்சனா.

சந்தோஷும் அவளோடு பாசமாய் பேச.. நாட்கள் நிலவின் குளிர்ச்சியாய் சென்றது!

ஒருநாள்...

"ரொம்ப நன்றி, சந்தோஷ் அத்தான்!" என்று சம்பந்தமே இல்லாமல் சஞ்சனா கூற...

"எதுக்கு?" என்று அவன் புரியாமல் கேட்க..

"ஒண்ணுமில்லை!" என்று சிரித்து, தலையாட்டி பழைய சஞ்சனாவாய் சென்றவளைப் புரியாமல், புதிதாய் பார்த்தான், சந்தோஷ்.

அடுத்த தங்கைக்கும் திருமணத்தை முடித்தான்.

திருமணம் முடிந்து ஒய்வாக இருந்த ஒருநாள்... தன் வீட்டில் தனியே சந்தோஷைச் சந்தித்தாள், சஞ்சனா.

சத்தியவதி கடைவீதிக்கு சென்றிருந்தாள்.

"ரெண்டு தங்கைக்கும் திருமணம் முடிஞ்சாச்சு! அடுத்தது நீங்க மேரேஜ் பண்ணிக்கங்க, அத்தான்! நல்லா சம்பாதிக்கிறீங்க! வயசும் கூடிட்டே போகுதே, அத்தான்!"

"மேரேஜா.. இந்த ஜென்மத்துல உன்னை மறந்து வேறொருத்தியை தொட்டுத் தாலிகட்டுவேனா..? நீ என்னைத் தப்பா எடுத்துக்கக் கூடாது, சஞ்சும்மா....!



என் பழைய காதலி சஞ்சனாவோடு கற்பனையில் வாழ்ந்துட்டு.. கனவுகளில் குழந்தை பெத்துட்டு.. நான் சந்தோசமாத்தான் வாழறேன், சஞ்சனா!"

சந்தோஷ் கண்களில் பொங்கிய கண்ணீரை அடக்க பெரும்பாடுபாட்டான்.

"என்ன அத்தான், நீங்க? என்னை நீங்க இன்னும் மறக்கலையா..?"

சஞ்சனா சட்டென்று மூண்ட சினத்தோடு கேட்க...

"திவாகரோட மனைவி சஞ்சனாவை நான் நினைக்கறதே இல்லை! ஆனால் என் காதலி சஞ்சனாவை மறக்கவே இல்லை!"

சந்தோஷ் உயிரில் கலந்த வார்த்தையை உபயோகிக்க..

"நீங்க பேசறது நியாயமா..? காதலிச்ச பெண் கிடைக்கலையேங்கிறதுக்காக.. கல்யாணமே வேண்டாங்கிறது சரியா? உங்களைப்போல எல்லோரும் இருந்தால் உலகத்துல நூத்துல அறுபது பேர் சன்னியாசியாத்தான் வாழ்வாங்க!"

"என்னை மறந்து நீ வாழலாம்! உன்னால முடியுது! ஆனால், உன்னை மறந்து என்னால வாழவே முடியாது, சஞ்சனா!"

சந்தோஷ் கண்களில் நீர் மின்ன சொல்ல...

ஹாலிலிருந்த டி.வி.யிலிருந்து...

"நினைக்கத் தெரிந்த மனமே
உனக்கு மறக்கத் தெரியாதா..?
பழகத் தெரிந்த உயிரே..
உனக்கு விலகத் தெரியாதா..?
உயிரே விலகத் தெரியாதா..?"

என்று பாடி அவர்கள் வேதனையை இன்னும் தூண்ட... சஞ்சனா முதுகு குலுங்க அழுகையோடு உள்ளே ஓடினாள்.

அடுத்த நாள்...

கௌஷிகாவின் முன் போய் நின்றாள், சஞ்சனா.

''கௌஷி... நீ எனக்கொரு ஹெல்ப் பண்ணனும்டி!''

''சொல்லு, சஞ்சனா..?''

''சந்தோஷை நீ மணக்கனும்! சந்தோஷ் மனதை மாற்றி.. அவரை மணக்கனும், கௌஷிகா!''

கௌஷிகா சந்தோசத்துடனும், அதே சமயம் அதிர்ச்சியோடு பார்க்க...

''உனக்கு சந்தோஷைப் பிடிக்கும்தானே..?''

கௌஷிகா மௌனமாய் இருக்க..

''சொல்லு கௌஷிகா? ஒரு காலத்துல உன்னோட நோட்டுல ராமஜெயம் போல.. வரிவரியாய் கௌஷிகா - சந்தோஷுன்னு எழுதி.. அவரை நேசிச்சவள்தானே..?

என் நேசம் கண்டு.. அவரை வலுக்கட்டாயமாய் மறக்க நினைத்தவள்தானே...?

எனக்கு தெரியும், கௌஷி! உன் மனம் தெரியும்! உன் மனதின் ஆசைகள் தெரியும்!

பொய் சொல்லாதே..! வர மாப்பிள்ளைகளையெல் லாம்.. வேண்டாம் வேண்டாம்.. பிடிக்கலேன்னு சொல்லி அனுப்பிட்டு இருப்பதெல்லாம் சந்தோஷை மனசுல நினைச்சுட்டுதானே..?'' என்று சஞ்சனா நேரடியாய் கேட்க...



கௌஷிகா முழி பிதுங்க.. பதில் சொல்லாமல் விழித்தாள்.

''என்கிட்ட உன் இதயத்தை மறைக்க வேண்டாம்! சந்தோஷ் இன்னும் பத்து நாளில் கிளம்பிடுவார்! அதுக்குள்ள அவர்கிட்ட உன் காதலை வெளிப்படுத்தி விடேன்! ப்ளீஸ்...''

''முயற்சி செய்யறேன்டி!''

''அப்படிச் சொல்லாதே! கட்டாயமா பேச, கௌஷி! அவர் ஒத்துட்டால்... அவர் அமெரிக்கப் பயணத்தை கொஞ்ச நாள் தள்ளி வச்சுட்டு... ரெண்டு பேரும் திருமணம் செய்துட்டு... ஜோடியாய் புறப்படுங்க!''

''உன்னால எப்படிடி இப்படியெல்லாம் பேச முடியுது? சந்தோஷ் பேரை ஆசையா உச்சரிச்சாலே எரிந்து விழு வியே!''

கௌஷிகா மனதில் தோன்றிய ஆச்சரியத்தை வெளிப் படுத்த....

''என் வாழ்க்கைதான் பாதை மாறி... தாறுமாறான முள்பாதையாய் மாறி விட்டது! அவரும் நீயும் மணந்து சந்தோஷமா இருக்கனும்! அதை நான் கண்குளிரப் பார்க்கனும், கௌஷிகா!''

சஞ்சனா அழ... கௌஷிகா அவளை அணைத்துக் கொண்டாள்.

சந்தோஷுக்கு கடைசியாய் சஞ்சனாவைச் சந்தித்த சிவன் கோயில் குளக்கரைப் படிக்கட்டுதான், சொர்க்க புரி!

அன்று சந்தோஷ்... அங்கே சோகமாய் அமர்ந்திருக்க...

கௌஷிகா மெல்லப் படியிறங்கி அவனிடம் போனாள்.

சந்தோஷ் அவளைக் கவனிக்கவில்லை!

அவன் கவனமெல்லாம் குளத்தில் நீந்தும் மீன் குஞ்சுகளிடமே இருந்தது!

கௌஷிகா லேசாய் இரும....

சந்தோஷ் திரும்பிப் பார்த்தான்! கசப்பாய் ஒரு புன்னகையை வெளிப்படுத்தினான்.

கௌஷிகா அவனருகில் அமர்ந்தாள்.

''இந்த... இந்த இடத்துல சஞ்சனா 'காத்திருக்கட்டும்மா, அத்தான்?' என்று கேட்ட கேள்விக்கு... வாய் திறந்து பதில் சொல்லி இருந்தால்... என் சஞ்சனா எனக்குக் கிடைக்காமல் போய் இருக்க மாட்டாள்.'' என்று கண்ணீர் சொட்டியவனைப் பார்த்து... கௌஷிகாவும் கலங்கினாள்.

''என் சோகத்தைப் பேசி... உன்னையும் வருத்தப்பட வைக்கிறேனே!'' என்றவன்... பின் அக்கறையாய் கேட்டான்.

''கம்ப்யூட்டர் சென்டரில் வொர்க் பண்றீயே... எவ்வளவு சம்பளம் கொடுக்கறாங்க?''

''பைவ் தவுசன்!''

''இத்தனை குறைச்சலான சம்பளத்துக்கு... நாள் முழுக்க... முதுகுத் தண்டு ஒடிய... வேலை செய்யணுமா?...

நீயும் என்னைப் போலவே எம்.எஸ்ஸி கம்ப்யூட்டர் சயின்ஸ்தான் படிச்சிருக்கே! நீ சரின்னு சொல்! உனக்கும் அமெரிக்காவுலேயே நல்ல வேலையாய் பார்க்கிறேன்! என்ன?''



''இப்படிக் கேட்டதே சந்தோசமா இருக்கு! வயசான அப்பாவை அநாதையா விட்டுட்டு... அப்படியெல்லாம் அமெரிக்கா வந்து சம்பாதிக்கணும்ன்னு இஷ்டமில்லேங்க, சந்தோஷ்!''

''உனக்கு வரும் மாப்பிள்ளைகளை எல்லாம் வேண்டாம்ன்னு சொல்லி... திருமணத்துக்கு மறுப்பு சொல்லிட்டு வருவதாய் உன் அப்பா புலம்பறாரே! ஏன்?''

''..............''

''யாரையாவது, காதலிக்கிறாயா?''

''என்ன கௌஷி மௌனமா இருக்கே? அப்போ யாரையோ காதலிக்கறே... சொல்? அது யார்?''

இது போன்ற சந்தர்ப்பம் கூடி வரும் என்று கௌஷிகாவும் நினைக்கவில்லை. தன் மனதில் உள்ளதைச் சொல்ல இதுதான் சந்தர்ப்பம் என்று...

''ம்....'' என்றாள்.

''யார்....? சொன்னால் முன்ன இருந்து திருமணத்தை முடிச்சிட்டே அமெரிக்கா போவேன்! உன்னை மனம் கவர்ந்த கள்வன் யார்?''

சந்தோஷ் மகிழ்ச்சி பொங்கக் கேட்க...

''சந்தோஷ்...!''

கௌஷிகா தன் மனதில் உள்ள பெயரை மொட்ட விழ்த்தாற்போல் வாசமாய் சொல்ல...

''என்ன சொல்றே...?''

சந்தோஷ் அதிர்ச்சியோடு கேட்க...

''என் மனம் கவர்ந்த கள்வன், நீங்கதான்!''

கௌஷிகா மலர்ந்த சிரிப்போடு சொல்ல...

சந்தோஷ் பட்டென்று கன்னம் பழுக்க அறைந்தான். பின் கத்தினான்.

"உன் மனசுல என்ன நினைச்சுட்டு இருக்க? காதல் உனக்கு விளையாட்டாப் போச்சா? சஞ்சனா இல்லேன்னதும்... உன்னைக் காதலிப்பேன்! கட்டிப்பேன்னு எப்படி நினைக்கலாம்...? என்னை நினைத்துதான் இத்தனை நாளும் திருமணத்துக்கு மறுப்பு சொல்லிட்டு வந்தாயா? உன் எண்ணம்... விருப்பம் ஒரு போதும் நிறைவேறாது! சஞ்சனா இங்கே வாழ்ந்துட்டு இருக்கா!" என்று நெஞ்சைத் தொட்டுக் காட்டியவன்...

"என்னைக்கும்... என்றென்றும் வாழ்வாள்! அவளை மறப்பதானால்... என் சாவுக்குப் பிறகுதான்!"

சந்தோஷ் கத்திவிட்டு... அவளைப் புழுவைப் பார்ப்பதுபோல கேவலமாய் பார்த்துவிட்டுச் செல்ல...

கௌஷிகா சிலையாய் நின்று விட்டாள்.




சட்டென்று பொத்துக் கொண்டு கொட்டும் வானம் போல... வார்த்தைகளைக் கொட்டிவிட்டுச் சென்ற சந்தோஷ் மீதி நாட்களில் அவள் புறம்கூட திரும்பிப் பார்க்கவில்லை.



அவன் அமெரிக்கச் செல்லும் நாள் வந்தது.

சந்தோஷ் ஒவ்வொருவராய் பார்த்துச் சொல்லிக் கொண்டு வந்தவன் சஞ்சனாவைப் பார்த்து...

"சஞ்சம்மா... உடம்பைப் பார்த்துக்கோ! ரொம்ப டல்லா தெரியறே! டாக்டர்கிட்ட உடம்பைக் காட்டி... டானிக் வாங்கிச் சாப்பிடும்மா! ஊருக்கு எப்போ போறே?"

"கொஞ்ச நாள் ஆகும், அத்தான்!"

"சரி... நான் வரேன்!" என்றவன் கௌஷிகா பக்கம் திரும்பாமலேயே சென்று விட்டான்.

கௌஷிகா அனிச்சமலராய் வாடிப்போனாள்!

முகம் சோர்ந்து விட்டது!

கண்கள் கண்ணீரை சரம் தொடுக்க...

அதை அடக்கக் கஷ்டப்பட்டவளின் கையை ஆதரவாய் பற்றிக் கொண்டாள், சஞ்சனா.

கௌஷிகாவை தனியே அழைத்துப் போய்,

"ஏன்...? எதனால்?" என்று கேட்ட...

சஞ்சனாவிடம் கோயிலில் நடந்த சம்பவம் அனைத்தையும் கூறி... கதறினாள், கௌஷிகா.

"நீ அவரை தைரியமா நேசிச்சிட்டு இருடி! இந்த முறை போய் திரும்பட்டும்! அப்போ உன் திருமணத்துக்கு... நானே முன்ன நின்னு ஏற்பாடு செய்யறேன்! அத்தான் சிண்டைப் பிடிச்சி உன் கையில் கொடுக்கும் வரை ஓயமாட்டேன்! சஞ்சனா சொன்னால் அந்த சாமியே சொன்ன மாதிரி! கலங்காதே!"

கௌஷிகாவை ஆதரவாய் பற்றி... தட்டிக் கொடுத்தாள், சஞ்சனா.

மூன்றாம் மாதம்...

திவாகர் சஞ்சனாவை ஹாஸ்பிட்டலுக்கு அழைத்துச் சென்றான்.

சஞ்சனாவைப் பரிசோதித்த பத்மினி... புன்னகையோடு வந்தார்.

பயத்தோடு அமர்ந்திருந்த திவாகர் கையைப் பற்றிக் குலுக்கி... அவன் வாயில் ஒரு பைவ் ஸ்டார் சாக்லெட்டைத் திணித்தார்.

''கங்ராஜ்லேஷன், மிஸ்டர் திவாகர்! வெரி சக்ஸஸ்ஃபுல்! கரு உருவாகி அற்புதமா வளர்ந்துட்டு வருது! சந்தோசம்தானே?''

''தேங்க்யூ டாக்டர்!'' என்று சந்தோசத்தோடு வணங்கினான்.

அவனே சாதித்துவிட்டதுபோல திவாகர் ஆனந்தத்தை வெளிப்படுத்த... சஞ்சனாவுக்குள் தீயாய் எரிந்தது!

சஞ்சனா... நான் அப்பா ஆயிட்டேன்! ரொம்பவே நன்றிம்மா!'' என்று கூற...

'இந்த நன்றியை... நீ எதிரியாய் நினைக்கும் என் அத்தானிடம் கூற வேண்டும்!'

சஞ்சனாவை தனது பெற்றோர்கள் முன்பு அழைத்து வந்தான்.

''அம்மா... அப்பா... நீங்க ரெண்டு பேரும் ... தாத்தா, பாட்டி ஆயிட்டீங்க! சஞ்சனா கர்ப்பமா இருப்பதா டாக்டர் உறுதிப்படுத்திட்டாங்க! நான் உங்க குடும்ப வாரிசைக் கொண்டு வந்துட்டேன்! வாரிசு... வாரிசுன்னு புலம்பனீங்களே... இன்னும் எண்ணி ஏழு மாசத்துல என் மகன் வந்துடுவான்!



சந்தோசமா கொஞ்சிட்டு மீதி காலத்தைத் தள்ளுங்க! தறுதலை.. தண்டம்னு புலம்பனீங்களேப்பா... இப்போ பாருங்க தங்கக் கம்பி போல ஒரு மகனைப் பெத்துக் கொடுக்கப் போறேன்!''

திவாகர் அளவுக்கு மீறி சந்தோசப்பட்டான்.

சஞ்சனாவினுள் எரிந்தது.

அவனைத் திரும்பி விஷ ஜந்துவைப் பார்ப்பது போலப் பார்க்க...

அந்தப் பார்வையின் அர்த்தம் புரிந்து... நத்தையாய் சுருண்டு போனான், திவாகர்.

மாலை வரை மாமியாரோடும்... மாமனாரோடும் இருந்தாள்.

மாலை திவாகரோடு பூஞ்சோலைக்கு கிளம்பினாள், சஞ்சனா.

சத்தியவதி செய்தியறிந்து மகிழ்ந்து போனாள்.

சப்பாத்தியும், கறிக்குழம்பும் வைத்து மருமகனுக்கு பரிமாறினாள்.

திவாகர் திருப்தியாய் உண்டு விட்டுக் கிளம்பினான்.

மனக்கஷ்டத்தால் கொஞ்ச நாள் குடியை மறந்து இருந்தவனுக்கு... குடிக்க வேண்டும் போலத் தோன்ற... கள்ளக்குறிச்சிக்குச் சென்றான்.

ஏ.கே.டி. பாரில் வயிறு முட்ட குடித்தான், திவாகர்.

பின்னர் காரை எடுத்துக் கொண்டு வடக்கநந்தலுக்குப் புறப்பட்டான்.

ஊர் நெருங்கும்போது... சர்க்கரை ஆலை அருகில்... யாரோ ஒரு பெண் கையாட்ட... காரை நிறுத்தினான்.

அவள் மல்லிகா!

வனப்பும், வாளிப்புமாய்... அழகிய முல்லைக் கொடி யாய் செதுக்கிய சிற்பம் போல இருந்தாள்.

திவாகருக்கு அதிர்ச்சி!

கிட்டத்தட்ட அவளை ஏழு வருடங்களுக்கு முன் பார்த்தது! பிறகு இப்போதுதான் பார்க்கிறான்!

''நீ... நீ... எ... எப்போ வ... வந்தே?'' என்று திக்கித் திணறிக் கேட்க...

''நாலு நாள் ஆச்சி! உங்களைப் பார்க்கவே இங்கே காத்திருந்தேன்!''

மல்லிகா சொல்லிக் கொண்டே கார்க் கதவைத் திறந்து, ஏறி, அவன் அருகில் அமர்ந்தாள்.

''எங்கே போயிட்டு வரீங்க, மச்சான்?''

''என் மனைவியைக் கொண்டு... அவள் பிறந்த வீட்டில் விட்டுட்டு வரேன்!''

''ராஜாவுக்கு கல்யாணம் ஆயிடிச்சாம்ல! அழகான பொண்டாட்டி! இன்னும் ஏழு மாசத்துல புள்ளை பொறக்கப் போகுதாமே!''

''ம்... உனக்கெப்படி தெரிந்தது?''

''ஊர்ல பேசிட்டாங்க! பெரிய இடத்து நல்ல செய்தி யாச்சே! காற்றைப்போல பரவிடிச்சில்ல!'' என்று போதை யாய் சிரித்தவள்...

''வாழ்க்கை என்ன சந்தோசமா ஓடுதா, மச்சான்? என் ணமோ சொன்னீக? நான் கல்யாணமே கட்டிக்கப் போறதில் லேன்னு! எவளும் வந்து என்னை அடக்கி வைக்கக் கூடா துன்னு மீசையை முறுக்கி விட்டுட்டுல்ல வீரம் காமிச்சீக?



அந்த வீரமெல்லாம் பொண்டாட்டி வந்ததும் இருக்கா? இல்லே மலையேறிடிச்சா...? என்ன மச்சான் பேசாம வரீக?''

அவள் அழகாய் உதடு சுழித்துக் கேட்டு விட்டு... அருகில் வந்து உரசியபடி உட்கார...

''தள்ளி உட்காரு மல்லிகா!''

''துரை திருந்திட்டீங்களா...? உங்களோட ஆசையா ஒரு நாள் இருந்துட்டுப் போகலாம்ன்னுல்ல வந்தேன்!''

மல்லிகா நீட்டி முழக்க...

''அந்தப் பழக்கமெல்லாம் விட்டு நாளாச்சி மல்லிகா!''

''ஐய்யோடா... பொண்டாட்டி தலையணை மந்திரம் போட்டு முடிஞ்சி வச்சிட்டாளா? இல்ல நீங்க ஓடிப்போய் முந்தானையில ஒளிஞ்சிட்டீங்களா?''

அவள் மந்தகாசமாய் சிரித்தாள்.

''பொண்டாட்டியை ஊருக்கு அனுப்பிட்டு துரை காய்ஞ்சிப்போய் கிடக்கறீங்களே... கொஞ்சம் குளிர்ச்சிப் படுத்திட்டுப் போகலாம்ன்னு வந்தா தொரத்தறீங்களே! ராவணனா இருந்தவர் எப்போ அந்த ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியானீக?''

மல்லிகா நக்கலாய் கேட்டாள்.

முந்தானை விலகி... கண்களில் போதையேற்றி... அவனுக்கு அழைப்பு விடுக்கும் மல்லிகாவைப் பார்க்க.. அவனுக்கும் ஆசை வந்தது.

பெண் சுகம் கண்டு ரொம்ப நாட்கள் ஆகிறது.

சஞ்சனா ஹாஸ்பிட்டலுக்குச் சென்று திரும்பிய திலிருந்து காய்ந்து போய் கிடக்கிறான், திவாகர்.

உடம்பு பெண் சுகத்துக்காக ஏங்கியது.

"காரை பண்ணை வீட்டுக்குத் திருப்புங்க, மச்சான்!" என்று அணைத்துக் கொண்டவனை விலக்க மனமில்லை!

நீண்ட நாட்கள் காய்ந்து கிடந்த உடம்போடு... போதையும் சேர... மனம் தடுமாறி... காரை பண்ணை வீட்டுக்கு விட்டான்.

"மும்பைக்கு மீண்டும் போவியா மல்லிகா?"

"துரை பர்மனண்டா என்னை சின்ன வீடா வச்சிட்டா அங்கே போகணும்ன்னு அவசியமில்லே!"

மல்லிகா சொல்லிவிட்டுக் கண்ணடித்துச் சிரித்தாள்.

இந்த மல்லிகா ஒரு காலத்தில் ரெட்டை ஜடையில் மானாய் துள்ளிக் கொண்டு பள்ளிக்குச் சென்றவள்,

பன்னிரெண்டாம் வகுப்பு அவள் படித்துக் கொண்டிருந்தபோது...

திவாகர் பிறந்தநாள் வந்தது.

அந்த பிறந்தநாளின் போது ஐயா ராமசாமிக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது.

அவனுடைய ஒவ்வொரு பிறந்த நாளின்போது ஏழைகளுக்கு உணவு, உடை... அநாதை ஆசிரமங்களுக்கு மூன்று வேளை உணவு... பள்ளிக்குச் சென்று நோட், புத்தகம், பேனா என்று வழங்குவது வழக்கம்.

திவாகரைக் கெஞ்சிக் கூத்தாடி ஐயா ராமசாமி வடக்கநந்தல் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு அனுப்பி வைத்தார்.

ஒவ்வொரு பெண்களாய் வரிசையில் வந்து நோட்டு, புத்தகம் வாங்கிச் சென்றனர்.



மல்லிகா அவளருகில் வந்து சின்னச் சிரிப்போடு அவன் கொடுத்த பொருள்களை வாங்கிக் கொண்டு செல்ல

அவளையே வைத்த விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான், திவாகர்.

அவள் ஒரு விதத்தில் அவனுக்குத் தூரத்து சொந்தமும் கூட!

இத்தனை நாட்களும் மல்லிகா திவாகரின் கண்ணில் படாமல் இருந்தது. அவளுடைய புண்ணியம்!

கடைசியில் அவனுடைய கழுகுக் கண்களில் விழுந்து விட்டாள்.

அவளை அவன் விருந்தாக்கிக் கொள்ளாமல் விடவே மாட்டான்!

அங்கே இருந்த ஆசிரிய நண்பனைப் பார்க்க வருவது போல அடிக்கடி வந்தான்.

மல்லிகாவை ஆசையாசையாய் பார்த்தான்.

திவாகரின் கண்களில் மல்லிகா பட்ட சமயம்... திவாகர், சிவா, ராஜா, மூர்த்தி ஆகிய நால்வரும் சேர்ந்து உல்லாசப் பயணமாய்... மும்பை, டெல்லி, ஆக்ரா, கோவா, ஹைதராபாத் ஆகிய இடங்களுக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தான், திவாகர்.

"திவாகர்... டூர் போற இடத்துல ரொம்ப குளிருமே! அந்தக் குளிருக்கு இதமா எதுனா குட்டி இருந்தா தூளா இருக்குமே! நீ என்னடா திவாகர் நினைக்கறே?"

சிவா கேட்க...

"டில்லி, மும்பையில எல்லாம் குட்டிகளுக்கா பஞ்சம்? வாசப்படியில சிவப்பு விளக்கைப் போட்டுட்டு

நிப்பாளுங்க இல்ல... அப்பப்பபோ அதுல ஒருத்தியை செட்டப் செய்துட்டாப் போச்சு!''

திவாகர் அலட்சியமாய் சொல்ல...

''டேய்... டேய்... மடையா...? அந்த மாதிரி பொண்ணுங்ககிட்ட... சந்தோசத்தோடு இலவசமா 'எய்ட்ஸ்'ங்கிற நோய்க் கொல்லியையும் வாங்கிட்டுச் சாகணும்டா!''

''நாமதான் தக்க பாதுகாப்பா இருப்போமே!''

''அடப்போடா... பயந்து பயந்து அவளுகளோட இருக்கணும்! இந்த மல்லிகா குட்டியை விறைச்சி பார்த்துட்டு லவ்ஸ் விடறியே! அவளை எப்போ கணக்குப் பண்ணப் போறே?''

''லவ்வா... அந்த வார்த்தைக்கு மீனிங் தெரியாதவன் நான்!''

''மல்லிகாவை என்ன பண்ணப் போறே?''

''கணக்குத்தான் பண்ணணும்!''

''அதை இப்போ செய்தா என்ன?''

''படிச்சிட்டு இருக்கா! சின்னப் பெண்! காலேஜ் போகட்டும்! அப்போதான் அவளுக்கும் பக்குவம் வரும்! மடக்கிப் பார்க்கலாம்! மடங்கலேன்னால்... அவளை தூக்கிப் போயிட வேண்டியதுதான்!''

திவாகர் சட்டைக் காலரைத் தூக்கிவிட்டுச் சொன்னான்.

''எப்பவோ தூக்கறதை விட்டு... இப்பவே அவளையும் கார்ல தூக்கிப் போட்டுட்டுப் போயிட்டா என்ன?'' இது மூர்த்தி.

''விஷயம் என் அப்பன் காதுக்குப் போனால் தோலை உரிச்சிடுவார்டா!'' என்று திவாகர் சொல்ல...



''எப்படித் தெரியும்?''

''தெரியாதா?''

''காதும் காதும் வச்சாப்போல விஷயத்தை முடிச்சிடலாம்!''

''எப்படி?''

''இங்கே ஊர்லே மல்லிகா ஒரு பையனோட ஓடிப் போயிட்டான்னு வதந்தியைப் பரப்பிடுவோம்!''

''நல்ல ஐடியாதான்!'' திவாகர் சிலிர்த்துச் சொல்ல...

''ஒரு மாசம் ஜாலியா என்ஜாய் பண்ணிட்டு... அவள் சம்மதிச்சா திரும்ப ஊருக்குக் கூட்டிட்டு வரலாம்! வீட்டுல போய் கூட்டிட்டுப் போனவன் கை கழுவி விட்டதா சொல்லி சமாளிச்சி வாழ்க்கையைத் தொடங்கட்டும்!''

''மறுத்துட்டால்...?''

''அங்கேயே எவனாவது ரெட் லைட் மாமாகிட்ட இலவசமா இவளைக் கொடுத்துட்டு வந்துடலாம்!'' இது சிவா.

''அவன் இவளை வித்துப் பொழைச்சிப் போகட்டும்!'' இது மூர்த்தி.

''உங்களுக்குத்தான் எவ்வளவு நல்ல மனசுடா!''

திவாகர் கைதட்டிச் சிரித்தான்.

டூர் போறோம் என்று வீட்டில் சொல்லிக் கொண்டு கிளம்பினர்.

இரண்டு நாட்கள் விழுப்புரத்தில் லாட்ஜ் எடுத்துத் தங்கினர்.

மூன்றாம் நாள் மூர்த்தி, சிவா, ராஜா மூவரும் இரவு நேரம் மல்லிகாவிற்காய் காத்திருக்க...

மல்லிகாவோ டியூசன் சென்றுவிட்டு அந்த சிறிய சந்தில் நடந்து... மெயின் ரோட்டிற்கு வர...

தயாராய் கார்க் கதவைத் திறந்து வைத்து இவர்கள் காத்திருக்க...

கார் அருகே வந்தவளை அள்ளிப் போட்டுக் கொண்டு பறந்தனர்.

அவர்களின் செயலை யாருமே அறியவில்லை!

ஞாயிற்றுக்கிழமை என்பதால் தெருவில் ஆட்களின் நடமாட்டம் இல்லாதது அவர்களுக்கு ப்ளஸ் பாயிண்ட் டாய் அமைந்து விட்டது.

மல்லிகாவிற்கு விழிப்பு வரும் போதெல்லாம்... மயக்க மருந்து நனைத்த கர்ச்சீப்பை அவள் மூக்கருகே கொண்டு போக... அவள் மயக்கம் தெளியாமலேயே திவாகர் மடியில் பயணமானாள், சென்னைக்கு!

சென்னையில்... அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலில்... திவாகரால் அவள் கற்பு பறிக்கப்பட்டது!

விழிப்பு வந்து... தனக்கு நடந்த கொடுமையை, அநியாயத்தை, அக்கிரமத்தை, வேதனையை, சோதனையைக் கண்டு கதறிவிட்டாள், மல்லிகா.

'அழுது அழுது புரண்டாலும் மரணித்தவர் எழுவதுண்டோ?'

'அதுபோல எத்தனை கத்தினாலும்... கதறினாலும் இழந்துபோன கற்பு மீண்டும் வருமா?'

'அவளின் கருவறையை கல்லறையாக்கி விட்டான், திவாகர்!'

'மெல்ல அழகாய் மலர்ந்த மொட்டை கசக்கி, கருக வைத்து விட்டான், திவாகர்!'



தப்பிப் போகவும் வழியில்லாமல்... திவாகரிடம் மாட்டிக் கொண்டு தினம் தினம் கரைந்து கொண்டிருந்தாள், மல்லிகா.

செல்லுமிடமெல்லாம் அவளை அவன் மடியில் இருத்திக் கொண்டான், திவாகர்.

''மச்சான்... என்னை விட்டுடு மச்சான்! அப்பா, அம்மா தேடுவாங்க, மச்சான்! நான் படிக்கனும் மச்சான்!...

படிச்சி வேலைக்குப் போய் தம்பி, தங்கைகளையெல்லாம் பெரிய பெரிய படிப்பு படிக்க வைக்கனும்!...

அப்பாவை, அம்மாவை கூலி வேலைக்கு அனுப்பாமல்... உட்கார வச்சி நான் சோறு போடனும்!''

அவன் கால் பற்றி அழுதாள்.

''மச்சக்காரிடி, நீ! மாமா கைபட நீ கொடுத்து வச்சிருக்கனும்! அழலாமா?''

திவாகர் கிண்டலடித்தான்.

''மச்சான்... மச்சான் என்னை விட்டுடு மச்சான்!''

''குச்சி வீட்டுக்காரிக்கு... கோடீஸ்வரன் தொட அதிர்ஷ்டம் வேணும்!''

திவாகர் மமதையோடு சிரித்தான்.

''மாப்ளே... மயிலை எங்களுக்கெல்லாம் எப்போடா விருந்து படைக்கப் போறே?''

''அலுக்கட்டுமேடா! ஏன்டா அலையறீங்க?''

திவாகர் சொல்ல... அவர்கள் வாயை மூடிக் கொண்டார்கள்.

டில்லி, ஆக்ரா என்று அவளோடு சுற்றினார்கள்.

முதலில் சாப்பிடாமல் மறுப்பு காட்டினாள்.

அவனின் துன்புறுத்தலுக்கு பயந்து பின் பணிந்து போனாள்.

அந்த பட்டாம்பூச்சியின் கனவுகள் சிதைந்து... கற்பனைகள் சாம்பலாகி... சிறகெல்லாம் முறிக்கப்பட்டு சின்னாபின்னமாகிப் போனது!

திவாகர் தர்மப் பிரபுவாய் அவளை தன் நண்பர்களுக்கெல்லாம் பங்கிட்டுக் கொடுத்தான்.

இந்த வேதனையைத் தாங்க முடியாமல்... மங்கையர் உடலளவிலும்... மனதளவிலும் மாண்டு போனாள்.

இங்கே ஊரில் ''மல்லிகா எத்தனை அடக்கமான, ஒழுக்கமான பொண்ணு! அசலூர்காரனோட ஓடிடிச் சாம்ல!'' என்று ஊரே இவர்கள் கட்டிவிட்டுப் போன கதையைப் பேசி... காலம் தள்ளியது.

கடைசியாய் மும்பைக்கு வந்தனர்.

ஒரே அறை எடுத்து... அந்த நால்வரும் மாறி மாறி அவளைச் சிதைக்க... ஒரு நாள் இரவு அவர்கள் உறங்கிய பின் தப்பி விட்டாள்.

தெரியாத ஊரில் சந்து பொந்துகளில் பதுங்கி அவள் ஓட...

உலக்கைக்கு பயந்து உரலில் தலைவிட்ட கதையாய்... ஒரு சிவப்பு விளக்கு ஏஜெண்டிடம் மாட்டிக் கொண்டாள், மல்லிகா.

திவாகரின் சகாக்கள் ஊரெல்லாம் தேடியது.

கடைசியாய் சனியன் ஒழிஞ்சது என்று பறப்பட்டு வந்து விட்டனர்.



அந்த மல்லிகா தொழில் காரியாய் மாறினாள்.

மும்பையில் வேலை செய்வதாய் தாய் தகப்பனுக்கு தெரிவித்து... மாதா மாதம் பணம் அனுப்பி... இப்போது ஊர் பார்க்க வந்திருக்கிறாள்.

நீண்ட நாளைய வேட்கையை மல்லிகாவிடம் தணித்துக் கொண்டு... அவள் மடியில் தலை வைத்து படுத்துக் கொண்டு கேட்டான்!

''மல்லிகா... உனக்கு என்மேல் கோபமில்லையா?''

''எதுக்கு மச்சான்... உன்மேல் கோபம்?''

''என்னால் உன் வாழ்க்கையே திசை மாறிடுச்சே, மல்லிகா! அன்னைக்கு மட்டும் நான் உனக்கு அப்படி ஒரு கொடுமையைச் செய்யலேன்னால் இந்நேரம் கணவன், குழந்தைன்னு செட்டிலாகி இருப்பாயே?''

''அட போங்க மச்சான்! கல்யாணம் பண்ணிட்டா ஒரு புருஷன் போரடிக்காதா?''

திவாகர் அவளைக் கூர்ந்து நோக்க...

''இப்போ தினம் தினம் ஒரு புருஷன்! தினமும் நமக்கு முதலிரவுதான்!''

மல்லிகா கண்ணடித்தாள்.

''கல்யாணம் கட்டி... புள்ளையைப் பெத்துட்டா... அதுக்கு மூக்க சிந்தி... மூத்திரம் கழுவின்னு... யார் செய்வா அந்த கருமம் பிடிச்ச வேலையெல்லாம்?''

மல்லிகா மென்சிரிப்போடு கேட்டாள்.

''மல்லிகா... நீ படிச்சி முடிச்சி... வேலைக்குப் போய் சம்பாதிக்கணும்ன்னு எல்லாம் சொன்னியே!''

''அட போங்க மச்சான்! படிச்சிட்டு வேலைக்குப் போனா அறிவை, மூளையை, திறமையைக் காட்டணும்!

ஆனால் இந்த வேலையில மூளை வேணாம்! அறிவு, அபாரத் திறமை வேணாம்! உடம்பைப் பக்குவமா வச்சிட்டாப் போதும்! ஒரு கஷ்டமும் இல்லே!

மாசம் பூரா சம்பாதிக்கிற பணத்தை... ஒரே ராத்திரியில இல்ல சம்பாதிச்சிடுவேன்!

ஒரு நாளைக்கு குறைஞ்சது அஞ்சாயிரம்னாலும்.. இருபது நாள்ல ஒரு லட்சமில்லே சம்பாதிக்கிறேன்!...

மீதி பத்து நாட்கள் எவன்கிட்டவும் கைகட்டி நிற்காமல் லீவு எடுத்துக்கலாம் இல்லே?''

மல்லிகா சந்தோசமாய் பேச...

திவாகரின் மனக்கலக்கம் நீங்கியது.

''பொண்டாட்டி வரும் வரை... நான் உங்களோட இருக்கலாம் இல்ல...?''

அவள் மைவிழி மயக்கத்தைக் கண்டு... திவாகர் மறுக்க முடியாமல் தலையாட்ட....

''என் ராசான்னா ராசாதான்!''

மல்லிகா அவனை வாரி அணைத்துக் கொண்டாள்.

இவ்வளவு கொடுமை செய்தவனைப் புயலாய் மாறி... பூகம்பமாய் நடுங்க வைத்து... சுனாமியாய்... உயர எழுந்து... அவனை வதம் செய்யாமல்... இந்த மல்லிகா கயவனையே, அவள் வாழ்க்கையே செல்லரிக்க வைத்தவனுக்கு வஞ்சனை இல்லாமல் சுகத்தை வாரி வழங்குகிறாளே! ச்சே!

என்ன பெண் இவள்?

பெண் புத்தி பின் புத்தி என்பது இதுதானோ?






காதலுக்கு வஞ்சிக்கத் தெரியாது!

காதலுக்கு இம்சிக்கத் தெரியாது!

காதலுக்கு கள்ளம் தெரியாது!

ஆனால் காதலர்களுக்கு வஞ்சிக்கவும் தெரியும்! இம்சிக்கவும் தெரியும்!

நேசத்தால் பிணைக்கப்படும் இரு உள்ளங்களும்... உண்மையாய் இருக்க வேண்டும்!

அவர்களுக்குள் வீண் படாடோபம் கூடாது!

பந்தா கூடாது!

பாசாங்கு கூடாது!

பொய், பாசாங்கு, பேராசை, மௌனம், கோபம், சந்தேகம், புரிந்து கொள்ளாமை என இத்தனையும் காதலில் கலக்கும்போது... நுழையும் போது... காதல் கசக்கிறது!

அந்தக் காதலும்... காதலர்களும் தோல்வியை சந்திக்கின்றனர்!

காதல்... கரடு முரடான மனிதனின் வாழ்க்கையையும் மலர் படுக்கையாய் மாற்றுகிறது!

காதல்... கல்லாதவனையும் ஞானியாய் மாற்றுகிறது!

காதல்... மனிதர்களுக்கு நல்லதைச் செய்துக் கொண்டு... காலம் காலமாய்... சாகாவரம் பெற்று வாழ்கிறது!

காதல் இல்லையேல் இவ்வுலகத்து உயிர்களில்லை!

காதல் இல்லையேல் கண்டு பிடிப்புகள் இல்லை!

காதல் இல்லையேல் வெற்றியில்லை!

காதல் இல்லையேல் கவிதையில்லை!

காதல் இல்லையேல் காவியமில்லை!

ஏன்... காதல் இல்லையேல் இவ்வுலகமே இல்லை!

இப்படிப்பட்ட காதலை... நேசத்தை... புனிதத்தை... அபிராமி தன் சூழ்ச்சியாலும்...

சந்தோஷ் தன் மௌனத்தாலும்...

சஞ்சனா தன் கோபத்தாலும் கொன்று, குழி தோன்றி புதைத்து விட்டார்கள்!

விதியையே மதியால் வெல்லும் காலமிது!

இந்தக் காலத்தில் காதலை கைகழுவ விட்டுவிட்டு... சந்தோஷ் கலங்கிக் கொண்டிருக்கிறான்.

இருப்பது மாய உலகமான அமெரிக்காவானாலும்... ஆடம்பரத்தையும், ஆசைகளையும் மூட்டைக் கட்டி வைத்துவிட்டு... இயந்திரத்தனமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறான்!

இவனோடு பணிபுரியும் அத்தனை பணக்கார வெள்ளைக்காரிகளும்... இவன் குணம், மனம், பண்பு கண்டு வியந்து... நேசிக்க அப்ளிகேஷன் போட... அத்தனை பேருடைய அப்ளிகேஷனையும் நிராகரித்து விட்டான், சந்தோஷ்.

இந்தியாவில் நாளொரு பொழுதாய் சஞ்சனாவின் வயிற்றில் குழந்தை வளர்ந்து கொண்டிருந்தது!



அந்தக் குழந்தையின் அசைவில் சஞ்சனா அவளையே தொலைத்து விடுவாள்!

எல்லையில்லாத ஆனந்தத்தில் பறந்து கொண்டிருந்தாள், சஞ்சனா.

திவாகர் பற்றி அரசல், புரசலாய் கேள்விப்பட்டும்... சஞ்சனா கலங்கவே இல்லை!

நாட்கள் வேகமாய் நகர்ந்தது.

ஏழாம் மாதம் விமரிசையாய் சஞ்சனாவிற்கு வளை காப்பு நடந்தது!

ஒரு நாள் விடாத சுரமும், வாந்தியும் வந்து ஹாஸ்பிட்டலில் அட்மிட் செய்யப்பட்டான் திவாகர்.

கொஞ்ச நாட்களாய் சோர்வு, மயக்கம், உடல் மெலிவு என்று அவனுக்கு வாட்டி வதைத்தது!

சோதனைகள் முடிந்து ரிப்போர்ட் வர...

டாக்டர்கள் முகம் இருண்டு விட்டது!

"என் மகனுக்கு என்ன டாக்டர்?"

பெற்றவர்கள் பதறியபடி கேட்க...

"நார்மலாதான் இருக்கார்! நத்திங்! டோண்ட் ஒர்ரி!"

டாக்டர் கூற... இருவரும் நிம்மதியானார்கள்.

அவனை ஹாஸ்பிட்டலில் விட்டுவிட்டு... இருவரும் வீட்டிற்குச் சென்ற சமயம்....

திவாகர் இருந்த அறைக்கு டாக்டர் சென்றார்.

"சிரமப்படாதீங்க, திவாகர்! உடம்பு எப்படி இருக்கு? பரவாயில்லையா?"

டாக்டர் மகுடமுடி கேட்க...

''இப்போ தேவலாம், டாக்டர்! இனி வீட்டுக்குப் போகலாமா?''

''என்ன அவசரம்?''

''வெறும் சுரம், வாந்தி மட்டும் தானே? அதுக்கு எதுக்கு பெட்ல அட்மிட் ஆகணும்? உள்ளூர்தானே... காலை, மாலை வரேனே டாக்டர்! என்னை மாலை வீட்டுக்கு அனுப்பறீங்களா?''

திவாகர் கேட்க...

டாக்டர் மகுடமுடி மௌனமாய் இருந்தார்.

''எனக்கு என்ன டாக்டர்? வெறும் சுரம்தானே?''

திவாகர் பதற்றத்தோடு கேட்க... டாக்டர் மகுடமுடி பதிலேதும் சொல்லாமல் இருந்தார்.

''டாக்டர்... உங்க மௌனம் எனக்கு பயத்தைத் தருதே! அப்பா, அம்மாகிட்ட கூட நார்மல்ன்னு சொன்னீங்களே!''

திவாகர் பயத்தோடு கேட்க...

''மிஸ்டர் திவாகர்... நான் சொல்லப் போற விஷயம் கேட்டு அதிர்ச்சி அடையக்கூடாது! பயப்படக் கூடாது!''

''என்ன? என்ன?'' அவன் அவசரப்பட.

''உங்க கேரக்டர் சரியில்லேன்னு தெரியும்! பெரிய இடத்துப் பையன்களிடம் பண்பாடு இருக்காதுன்னும் தெரியும்! ஆனால் கேர்புல்லா இருந்துக்க வேண்டாமா?

இப்படி ஒரு நோயை... இல்ல இல்ல... எமனை இழுத்து விட்டுட்டீங்களே?''

டாக்டர் பீடிகை போட...

''நீங்க சொல்றது புரியலையே டாக்டர்!''



''உங்களுக்கு வந்திருக்கறது 'எயட்ஸ்'!

உயிர்க்கொல்லி நோய்! எத்தனை பாதுகாப்பான சமாச்சாரங்கள் இருக்கு! பயன்படுத்தாமல்... ச்சே...''

டாக்டர் மகுடமுடி அருவெறுக்க...

''ஐய்யோ...!'' என்று இடி விழுந்த கணக்காய் கதறினான்.

கத்தினான்...

நெஞ்சில் அறைந்து கொண்டு அழுதான்.

''திவாகர் என்ன இது? இது ஹாஸ்பிட்டல்ங்கிறதை மறந்துட்டீங்களா?''

''டாக்டர்... டாக்டர்...'' அவன் விம்மி, வெடிக்க...

''உங்க பெற்றோர்கள் வரலாம்! இப்படி ஒரு நோய் இருக்கே தன் பிள்ளைக்குன்னு தெரிஞ்சா ஹார்ட் பிராப்ளம் வரலாம், உங்க தாய்க்கு! உங்க மேல உயிரையே வச்சிருக்காங்க, உங்க பெற்றோர்கள்! கண்ட்ரோல் யுவர் செல்ப்!''

டாக்டர் அறிவுறுத்த...

சட்டென்று கண்ணைத் துடைத்துக் கொண்டு டாக்டரின் கைப்பற்றினான்.

''டாக்டர்... இப்படி ஒரு நோய் இருப்பதா யாருக்கும் தெரியப்படுத்தாதீங்க!''

''மாட்டேன்!''

''அந்த அவமானத்தை என்னால் தாங்கவே முடியாது! ப்ளீஸ்...'' என்று கதற...

''ஓ.கே... ஓ.கே. மிஸ்டர் திவாகர்! கூல் டவுன்! டேக் இட் ஈஸி! உங்க பெற்றோர்களுக்கு கூட நான் சொல்ல மாட்டேன்! போதுமா?''

''ரொம்ப நன்றி, டாக்டர்!''

''அழாதீங்க, திவாகர்! உங்களுக்கு வந்திருக்க நோயையே நினைச்சிட்டு... வருந்திட்டு இருந்தால்... சீக்கிரமே மரணத்தைச் சந்திக்க வேண்டி வரும்!''

திவாகர் கண்ணீரோடு அமர்ந்து விட்டான்.

''உங்க மனைவியோட வளைகாப்புக்குக் கூட நான் வந்திருந்தேன்! நல்ல, அழகான மனைவி! ஆண்டவன் பெரிய அற்புதத்தைக் கொடுத்தும்... அதை வச்சிட்டு ஒழுக்கமா இருக்க முடியலையா?''

''டாக்டர்... டாக்டர்... நான் என் பிள்ளையைப் பார்க்காமல் செத்துப் போவேனா?''

''இப்படியே வருந்தி, அழுதுட்டு இருந்தால்... சாவு கிட்டேயே கைநீட்டி வரவேற்றுட்டு இருக்கும்! கவலையை விடுங்க! ஆரோக்கிய இயற்கை உணவைத் தேர்ந்தெடுத்து உண்ணுங்க! நீண்ட நாட்கள் உயிரோடு இருக்கலாம்!''

டாக்டர் மகுடமுடி சொல்லிவிட்டு அவ்விடம் விட்டு அகன்றார்.

கொஞ்ச நேரத்தில் மல்லிகா பெரிய டிபன் கேரியரோடு அவனறைக்குள் வந்தாள்.

''என்ன மச்சான்... உடம்பு எப்படி இருக்கு? சரியாயிட்டதா...? விஜய், அசின் போல ஒரு குத்தாட்டம் போடலாமா...?''

மல்லிகா கேலியாய் உதடு வளைத்துக் கேட்க...

''ஏய்... ஏய்... ஏன்டி இப்படிச் செய்தே? உனக்கு 'எய்ட்ஸ்' இருக்கா...? எல்லா நாளும் உன்னிடம் பாதுகாப்பாதானே



இருந்தேன்! எப்போ... எப்போ... ஐய்யோ... உன்னைச் சந்தித்த முதல் நாள் குடிபோதையில... ஐய்யோ.. கடவுளே... கடவுளே...''

திவாகர் தலையில் அடித்துக் கொண்டு அழுதான்.

''என்ன மச்சான்... உனக்கு இப்போ வலிக்குதா...?''

''ஏய்... ஏய்... ஏமாத்திட்டையேடி!''

''அன்னைக்கு விபரம் தெரியாத மொட்டா இருந்தப்போ... என் நெஞ்சியில அடிச்சையே! அப்போ எனக்கு எப்படி வலிச்சிருக்கும்! ம்? அப்போ நான் எப்படி துடிச்சிருப்பேன்?''

''அதுக்காக... அதுக்காக...'' அவன் சீற...

''இந்த ஊர் பக்கமே திரும்பாத நான்... எதுக்கு மாப்ளே வந்தேன்? உன்னைப் பழி வாங்கத்தான் வந்தேன்டா, மாப்ளே!...

அநியாயமா என் வாழ்க்கையை அழிச்சிட்டு... உனக்கு உத்தமியான பொண்டாட்டி கேட்குதா?''

கண்கள் சிவக்கக் கத்தினாள், மல்லிகா.

''பொண்டாட்டிய கூட நல்லா வச்சிலேன்னு கேள்விப் பட்டேன்! உயிரா நேசிச்ச... ரெண்டு உள்ளங்களுக் கிடையே... கள்ளமா புகுந்து இல்ல பிரிச்சிட்டயாம்? நீ மட்டும் பெண் கேட்டுப் போகாமல் இருந்தால்... அவ அத்தை மனசு மாறி... தன் பையனுக்கு சஞ்சனாவை கட்டி வைச்சிருக்கலாம்!...

உனக்கு அவளைப் பிடித்தது என்ற காரணத்திற்காகவும்... உன்னை அவமானப்படுத்தினான் என்ற காரணத்திற்காகவும்... பொண்ணு கேட்டு அனுப்ப... அவங்க

மறுத்தப்போ... அவளை அடையத் திட்டம் போட்டு... தூக்க நினைச்சயாம்!

கடைசியா அந்தப் பையன்மேல அந்த பொண்ணு கோபம் கொண்டு... உன்னைக் கட்டிக்கச் சம்மதிச்சதாமே?"

"உனக்கெப்படித் தெரியும்?"

"எனக்கு தெரியும்!" அலட்சியமாய் சொல்ல...

"எப்படி?"

"உன்கிட்ட இருக்க அந்த மூன்று நாய்களும் நான் போட்ட எலும்புத் துண்டை பொறுக்கிட்டு சொல்லிடுச்சிங்க!

அப்படியே இலவசமா... அந்த நாய்களுக்கும் இந்த நோயைக் கொடுத்துட்டேன்!"

மல்லிகா பத்ரகாளியாய் சிரிக்க...

"என் குடும்பத்துக்குத் தேவையான பணத்தை... இந்த சதையை வித்து சம்பாரிச்சிட்டேன்! வாழ்ந்தது போதும்! மச்சானைப் பழிவாங்கிட்டு... அப்படியே மாண்டு போகலாம்ன்னு எண்ணி... நானே வலியத் தேடிப்போய்... எய்ட்ஸ்காரனோட இருந்து.. நோயை வாங்கிட்டில்ல வந்திருக்கேன். என் ஆசை மச்சானுக்கு கொடுக்க!

கொடுத்துட்டேன்! இந்த நிமிசமே நான் செத்தாலும்... எனக்கு சந்தோசமே!

நீ நோய் வந்து கலங்கறதை ஒரு நிமிசமேனும் பார்க்கணும்ன்னுதான் இங்கே இருந்தேன்..!

பார்த்துட்டேன்! மனமுழுக்க சந்தோசத்தோட நாளைக்கு சென்னைக்குப் போறேன்!"



ஒரு அநாதை இல்லத்துல சேர்ந்து... அப்படியே உயிரை விட்டுடலாம்ன்னு போறேன்! வரட்டா, மச்சான்?"

அவள் பூவாய் மலர்ந்து விட்டு... புயலாய் சென்றாள்.




கட்டிளம் காளையாய்... காதலியைத் தேடி ஓடும் காதலனாய்... ஆதவன் மேற்குமலைக்குள் ஓடி மறைந்த... மயக்கும் மாலைப் பொழுது!

சஞ்சனா வீட்டின் பின்கட்டு வாசல் வழியே கொஞ்ச தூரம் சென்றால்... அழகாய் சலசலத்து ஓடும் ஓடை ஒன்று உண்டு!

பொழுது போகாத நேரங்களில் தனிமையைத் தேடி சஞ்சனா அங்கே செல்வதுண்டு!

அங்கே பெரிய ஆலமரம் கரையோரம் நீண்டு வளர்ந்திருந்தது.

ஆலமரத்தின் வேர்கள் ஓடைவரை நீண்டு இருக்க... அதில் சௌகரியமாய் அமர்ந்து... தண்ணீரில் காலை நனைத்துக் கொண்டு... வயிற்றில் இங்கேயும் அங்கேயும் உருண்டு குறும்பு செய்யும் அவள் குழந்தையோடு கொஞ்சி மகிழ்ந்து கொண்டிருந்தாள், சஞ்சனா.

சருகுகள் மிதிபடும் சப்தம் கேட்டுத் திரும்பினாள்.

திவாகர் வந்து கொண்டிருந்தான்.

''வாங்க!'' என்று மென்னகை புரிந்தாள்.

வேரை விட்டு எழுந்து சமதரைக்கு வந்து அமர்ந்து...

''உட்காருங்க!'' என்று சொல்ல...

திவாகர் அவளெதிரில் அமர்ந்தான்.

''இப்பத்தான் வந்தீங்களா? உடம்பு சரியில்லேன்னு அத்தை இன்றுதான் சொன்னாங்க! நான் கஷ்டப்பட்டுக்குவேன்னு சொல்லலேன்னு சொன்னாங்க!

இப்போ பரவாயில்லையா...? நல்லாத்தானே இருந்தீங்க? திடீர்ன்னு என்ன?''

சஞ்சனா அக்கறையாய் கேட்க...

திவாகரின் கண்களில் மடைத்திறந்த வெள்ளமாய் கண்ணீர் புறப்பட்டு வழிந்தது!

அவனைக் கண்டு சஞ்சனா பதறிப் போனாள்.

''ஐயோ... ஏன்...? ஏங்க...? முடியலையா, என்ன?''

சஞ்சனாவின் கையை முகத்தில் எடுத்துப் பொத்திக் கொண்டு அழுதான்.

அவன் மேல் அவ்வளவு சீக்கிரம் அவளுக்கு பரிதாபம் வராது! ஆனால் அன்று சட்டென்று அவனுக்காக கண்கள் கலங்கி பரிதாபப்பட்டாள்.

''சஞ்சு... சஞ்சு... அதை நான் எப்படிச் சொல்வேன்?''

திவாகர் குலுங்கினான்.

''என்னங்க?''

''குழந்தையோடும், உன்னோடும் நூறு வருஷம் வாழணும்ன்னு கனவு கண்டேன்!''

''அதுக்கென்ன? நாம வாழலாம்!''



''அத்தனையும் கானல் நீராயிடிச்சே!''

''என்னன்னு சொல்லுங்களேன்? ஏன் இப்படி அழறீங்க? உங்களுக்கு என்னானது?''

''வினை விதைச்சேன்.... இப்போ அதே வினையை அறுவடை செய்யறேன்!''

சஞ்சனா புரியாமல் பார்க்க...

''ஏழு வருஷத்துக்கு முன்ன நான் செய்த பெரிய துரோகம்... காத்திருந்து, தூத்திட்டு வந்து தாக்கிடிச்சி!

நான் செய்ததிலேயே பெரிய பாவம்!

சிட்டு மாதிரி திரிஞ்சி, பறந்துட்டு இருந்த ஏழைப் பெண்ணின் ஆசை, பாசம், அன்பு, இன்பம், உணர்ச்சி, ஏக்கம், கனவு, கற்பனை எதையுமே பொருட்படுத்தாமல்... என் காலில் போட்டு மிதிச்சிட்டு.. பெரிய கொடுமை செய்துட்டேன்!

இளமை வேகத்துல அது அப்போ... பெரும் பாதகம்ன்னு தெரியாமப் போச்சி!

ஆனால் இந்த அளவு கொடூரமானவனா இருந்திருக்கேன்னு நினைக்கும்போது... எனக்கு வந்த வேதனை சரிதான்னு தோணுது!

அரசன் அன்று கொல்வான்! தெய்வம் என்னை நின்று கொன்னுடிச்சி, சஞ்சனா!''

''திவாகர்... இப்படிப் புரியாமல் பேசினால் எப்படி? தப்பு பண்ணினேன்... அதுக்கு தெய்வம் தண்டிச்சின்னு புலம்பறீங்களே, என்ன?''

''சஞ்சனா... எனக்கு உயிர்க் கொல்லி நோயான 'எய்ட்ஸ்' வந்துடிச்சி!''

"ஐய்யோ... ஐய்யோ... திவாகர் நிஜமா? பொய் தானே? இன்னைக்கு என்ன ஏப்ரல் ஒண்ணாம் தேதியா?"

"உன் மேல் ஆணையா சொல்றேம்மா! நான் ரொம்ப நாள் உயிரோடு இருக்க மாட்டேன்!

ஒண்ணா...? ரெண்டா...? நிறைய பாவங்கள் செய் திருக்கேன்!

அந்தப் பாவத்தின் விளைவுதான் இந்த நோய்..." என்றவன்...

மல்லிகாவுக்குத் தன்னால் ஏற்பட்ட கஷ்டங்களையும், துன்பங்களையும் கூறி... அவளால் தனக்கு இந்த நோய் வந்ததையும் கூற...

சஞ்சனா அதிர்ந்து போனாள்.

"சஞ்சனா... என்னைப் பார்க்க அருவெறுப்பா இருக்கா...? என்னை ஒதுக்கிடுவியா...?"

திவாகர் கத்தி, கதறினான்.

"சஞ்சனா உன்னை ரொம்பவே கொடுமைப்படுத்தி இருக்கேன்! அந்த கொடுமைக்கெல்லாம் தண்டனையாக வும்தான் இந்த நோய் எனக்கு வந்திருக்கு! என்னால் ஒரு குழந்தைக்குத் தகப்பனாக முடியாது என்ற என் துன்பம் கண்டு... இனி திருந்தி வாழலாம் என்று முயன்றேன்!

இப்போ மல்லிகா ரூபத்தில் தெய்வம் வந்து என்னை அதல பாதாளத்தில் தள்ளிவிட்டு விட்டது!

சஞ்சனா... உன்னை என்னில் பாதியா... என் தாரமா ஒரு நாளும் நடத்தினதில்லே! ஒரு போகப் பொருளாத் தான் பயன்படுத்தி இருக்கேன்!

ஒரு வேலைக்காரியைவிட மோசமா விரட்டி இருக்கேன்!



அத்தனையையும் சகித்து... என்னோடு நல்ல தமிழ் பெண்ணாய்... இந்தியப் பண்பாட்டோடு தாங்கிக் கொண்டு வாழ்ந்துவிட்டாய்..."

அவள் அவனை மௌனத்தோடு பார்த்துக் கொண் டிருக்க... மீண்டும் தொடர்ந்தான், திவாகர்.

"சஞ்சனா... நான் இப்போ உன்னைத் தாரமா பார்க்கல! என் தாயாப் பார்க்கிறேன்! என்னை உன் மகனா அரவணைச்சி... உன் மடியைத் தாணும்!

என்னை உன் பிள்ளையா நினைச்சி தட்டி தாலாட் டணும்!

உன் மடியில உயிரோடு இருக்கும்வரை தலை வச்சிப் படுத்திருக்கணும்!

இதே மடியில நான் என் உயிரை விடணும்! என் கடைசி ஆசையை நிறைவேற்றுவியா, சஞ்சனா?"

திவாகர் சொல்ல...

சஞ்சனா அவன் வாயைப் பொத்தினாள்.

மடியில் இழுத்துப் போட்டுக் கொண்டாள்.

குலுங்கியவனின் முதுகை மெல்லத் தட்டினாள்.

'கொடுமைக்காரனானாலும்... தன் கழுத்தில் தாலி கட்டிய கணவனாயிற்றே!'

சஞ்சனா கரைந்து அழுதாள்.

"சஞ்சனா... உனக்கு என்ன பிடிக்கும்? எது பிடிக் கும்னு கேட்டு செய்ததே இல்லை!...

வெளியே எங்கும் சினிமா, நகை, புடவைக் கடைன்னு கூட்டிட்டுப் போய் எதுவும் வாங்கிக் கொடுத்ததில்லே!

ஆனால் இப்போ... உனக்கு பார்த்துப் பார்த்துச் செய்யணும்ன்னு ஆசைப்படறேன்!

ஆனால்... ஆனால் நான் ரொம்ப நாள் உயிரோடு இருக்க மாட்டேன்!

சஞ்சனா.... என் ரகசியத்தை உன்னோடு வைத்துக் கொள்வாயா?

எனக்கு 'எய்ட்ஸ்' என்று வெளியே தெரிந்து... அவர்கள் என்னை இழிவாய் பார்த்தால் என்னால் தாங்கவே முடியாது சஞ்சனா!

என் பெற்றோர்களை அவர்கள் இழிவாய் பார்த்தால்... முடியவே முடியாது, சஞ்சனா! அதைக் கண்கொண்டு காணவே முடியாது, சஞ்சனா!''

கரைந்து அழுதவனின் கைப்பற்றி...

''சத்தியம்... சத்தியம் திவாகர்!''

''சஞ்சனா... நான் இறந்த பின்... சந்தோஷை மறுமணம் செய்து வாழணும்!''

''ஏன் இப்படிப் பேசறீங்க?''

''நான் உன்னை முள் பாதையில அழைச்சிச் சென்றேன்! ஆனால், சந்தோஷ் உன்னை மலர் பாதையில் அழைத்துச் செல்வார்!

சந்தோஷ் இன்னும் திருமணம் செய்துக்காமல் இருக்க... நீ கிடைக்கலையேங்கிற காரணத்தால்தான்! நீ மீண்டும் கிடைச்சால்... அவர் மகிழ்ந்து போவார், சஞ்சனா!

சஞ்சனா... உன்னையே நினைச்சிட்டு வாழற சந்தோஷை நீ மணந்து மகிழ்ச்சியா வாழணும்! சந்தோஷை ஏமாற்றி விடாதே!



என்னால் கிடைத்த வாழ்க்கையால் நிறைய கசப்புகளைச் சந்தித்து இருக்கிறாய்! அந்த கசப்புகள் உன்னை கரையேற விடாது! ஆனால் நீ கரையேற முயலணும்!...

உனக்கு நல்ல துணைவனாகவும்... உன் மகனுக்கு ஒரு நல்ல தகப்பனாகவும் இருக்கக்கூடிய மனப்பக்குவம் உள்ளவர்... சந்தோஷ்தான்! அதை நீ புரிஞ்சிக்கணும்!''

திவாகர் கூற...

''வாயை மூடுங்க, திவாகர்! என்னவெல்லாம் பேசறீங்க! திருமணமா? எனக்கா...? என் அத்தானோடா...? அது ஒரு காலத்திலும் நடக்காது!''

அவள் காட்டமாய் சொன்னாள்.

அன்று முதல் திவாகர் சஞ்சனாவின் மகனானான். அவள் தாயாய் மாறி தாலாட்டினாள்.

பூஞ்சோலையிலேயே திவாகர் தங்கி விட்டான்.

சரியாய் உண்ணாமல், உறங்காமல், நோய் பயத்தில்... ஒரு மாதம் கழித்து...

'ஹெபப்படீஸ் பீ' என்ற மஞ்சள் காமாலை வைரஸும் தாக்க... நோய் முற்றி...

அவனை எய்ட்ஸ் கொல்லும் முன்பே மஞ்சள் காமாலை கொன்று விட்டது.

டாக்டர்கள் எத்தனை போராடியும்...

திவாகர் பரிதாபமாய் செத்தே விட்டான்.

திவாகர் செய்த அக்கிரமங்களுக்கிடையே...

அவனுடைய தாய், தகப்பன் செய்த புண்ணியத்தாலோ... என்னவோ... அவன் கொஞ்ச கொஞ்சமாய் உயிர் விடாமல்... பொட்டென்று செத்து விட்டான்.

ஒன்பது மாத நிறைமாத கர்ப்பிணியான சஞ்சனா... திவாகரின் இறப்பில் கதறி விட்டாள்.

மார்பிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதாள்.

அவனை மகனாய் பாவித்து அன்பு காட்டி விட்டபின்... எப்படி கலங்காமல் கதறாமல் இருப்பாள்?



## 23

ஆசைப்பட்ட பெண்ணை மணந்து...

கொடுமைப்படுத்தி...

அவள் கர்ப்பம் தரித்தபோது மகிழ்ந்து...

திருந்தி வாழ நினைத்த திவாகர்...

இப்போது...

காற்றாகிப் போனான்!

கைப்பிடிச் சாம்பலாகிப் போனான்!

சஞ்சனாவின் வாழ்க்கையையும்... அவள் வயிற்றில் வளரும் குழந்தையின் வாழ்க்கையையும் சூன்யமாக்கி விட்டு... சீக்கிரமே புறப்பட்டு விட்டான், திவாகர் என்ற பாதகன்...! அரக்கன்...!

மஞ்சள் காமாலையால் உயிர்விட்டான் என்று ஊரெல் லாம் செய்தி பரவி... உத்தமனாய் போய் விட்டான்.

அவன் மனம் லேசாகிப் போய் சேர்ந்தான்.



ஆனால், இங்கே சஞ்சனா அவன் விட்டுச் சென்ற ரகசியங்களால்... நெஞ்சில் பாரமேத்திப் போராடினாள்!

சந்தோஷ் செய்தியறிந்து ஓடிவந்தான்!

சஞ்சனாவின் கோலம் கண்டு கதறியழுதான்!

பத்தாவது மாதம் வலி எடுத்து சஞ்சனா ஹாஸ்பிட்டலில் அட்மிட் ஆனாள்.

விடியற் காலையில்... கண்ணன் பிறந்த ரோகிணி நட்சத்திரத்தில்... சஞ்சனாவின் மகன் ரோஜாக் குவியலாய்... இந்த உலகைக் காண வந்தான்!

சஞ்சனா குழந்தையின் அழகில் சொக்கித்தான் போனாள்!

அப்படியே சந்தோஷின் கண், வாய், கன்னம், புருவம், உடலமைப்பு கொண்டு இருக்க... துக்கத்தை மறந்து மகிழ்ந்தாள்!

பெரியவர்கள் அத்தனைப் பேரும் மகிழ்ந்தனர்.

''அப்படியே எங்க திவாகரை உரிச்சி வச்சிட்டுப் பிறந்திருக்கானே, குழந்தை!''

பார்வதியம்மாள் சொல்லி விம்மியழ...

சஞ்சனாவால் அழாமல் இருக்க முடியவில்லை.

''சஞ்சனா... இனி உன்னையும், குழந்தையையும் பிரிந்து வாழ முடியாதும்மா! என் மகன் போன துக்கத்தை மறக்க... எனக்கு என் பேரப் பிள்ளையும், நீயும் எங்களோடவே இருக்கணும்மா! ஹாஸ்பிட்டல்ல இருந்து... இப்படியே நம்ம வீட்டுக்கு வந்துடும்மா!''

"வரேன், அத்தை! கொஞ்ச நாள் போகட்டும்! இனி நீங்க ரெண்டு பேரும் அத்தை, மாமா இல்ல! என் தாயும், தகப்பனும், நீங்க! நான் உங்க மருமகள் இல்லை... உங்க மகள்!

அங்கே வந்தால் எனக்கு திவாகர் ஞாபகம் வரும்! நிம்மதியாவே இருக்க முடியாது!''

சஞ்சனா கெஞ்ச... பெரியவர்கள் சம்மதித்து விட்டனர்.

ஒரு நாள்...

''என்னடி சஞ்சனா... இவனை உன் வயிற்றில் சுமக்கும்போது... என் பிள்ளை சந்தோஷையே நினைச்சுட்டு இருந்தியா என்ன? அப்படியே உன் பிள்ளை சரண் நம்ம சந்தோஷ் போலவே இருக்கானே! சின்னக் குழந்தையிலே நம்ம சந்தோஷ் இப்படித்தான்டி இருப்பான்!''

அபிராமி சொல்ல...

'சந்தோஷ் பிள்ளைதான்' என்று கத்த வேண்டும் போல வெறி வந்தது.

சஞ்சனா கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

ஆனால், கண்கள் கசிந்தது! கண்ணீரை அவளால் கட்டுப்படுத்தவே முடியவில்லை!

அதனைக் கண்ட சத்தியவதி...

''உங்களுக்கு எப்படிப் பேசணும்னே தெரியாதா, அண்ணி? சஞ்சனாவை அழ வைக்கறீங்களே...!'' என்று கோபமாய்க் கூற...

''ஏய் சத்தியவதி... நிசமாத்தான்டி சொல்றேன். குழந்தை அப்படியே நம்ம சந்தோஷ் ஜாடையிலேயே இருக்கான்! கள்ளி... வயிற்றுல சுமக்கும்போது அவனையே நினைச்சிட்டு இருந்ததன் டலன்தான்டி!''

''வாயை மூடுங்க, அண்ணி!''

''நான் தப்பா எதுவும் செல்லலையே!''

சஞ்சனா வேகமான அழுகையோடு ஓடிப்போய் கட்டிலில் விழுந்தாள்! பிழியப் பிழிய அழுதாள்!



சத்தியவதி அருகில் வந்து...

''சஞ்சனா... எதுக்குடா அழறே? உன் அத்தையைப் பற்றி தெரியுமில்லையா....? அவளுக்கு யாராவது நல்லாயிருந்தால் பிடிக்காது! ஏதாவது சரவெடியைக் கொளுத்திப் போட்டு.... அழ வச்சி பார்க்கறதுன்னால் வெல்லமா இனிக்கும்! அவ கிடக்கிறா விடுடா, தங்கம்!''

சஞ்சனாவை சத்தியவதி அணைத்துக் கொண்டாள்.

சந்தோஷ் அமெரிக்க வேலையை நிரந்தரமாய் விட்டு விட்டு... கல்லை மாநகரில் இருந்த பணத்தைக் கொண்டு கம்ப்யூட்டர் சென்டர் ஆரம்பித்தான்!

கௌஷிகாவும் அவனோடு இணைந்து அந்தக் கம்பெனிக்காக உழைத்தாள்.

குழந்தைக்கு ஒரு வயது முடிந்தபோது... சரணுடைய பிறந்தநாளை சந்தோஷ் அமர்க்களமாய் கொண்டாடினான்.

ஊருக்கெல்லாம் விருந்து படைத்தான்.

அன்று மாலை...

சஞ்சனா தனியே ஓடைப் பக்கம் சென்றதைக் கண்டு... பின்னாடியே சென்றான், சந்தோஷ்.

''சந்தோஷ் வாங்க! உட்காருங்க'' என்று எதிரில் உட்காரச் சொல்ல... அவன் அமர்ந்தான்.

''என்ன அத்தான் விஷயம்? கம்ப்யூட்டர் சென்டர் நல்லாப் போகுதா?''

''ம்....'' என்றான்.

''கௌஷிகாவைக் காக்க வைக்கறீங்களே, அத்தான்? இது நியாயமா? கல்யாணத்தை எப்போ வச்சிக்கலாம்?''

சஞ்சனா திடீரென கேட்க...

சந்தோஷ் முழித்தான். பின்...

''அந்த பேச்சானால் கிளம்பறேன், சஞ்சு!''

''கௌசிகாவை பிடிக்கலையா...?''

''..............''

''சரி அவளைப் பிடிக்காததுக்குக் காரணம் சொல்லுங்க?''

''..............''

''மௌனமா இருந்தால் என்ன அர்த்தம், அத்தான்?''

''..............''

''ஒருமுறை மௌனமா இருந்து என் வாழ்க்கையை கேள்விக் குறியாக்கிட்டீங்க! திரும்பவும் அந்த மௌனம் உங்களுக்குத் தேவையா?''

''..............''

''சரி கௌஷியை பிடிக்கலைன்னாலும்... வேற உங்க மனம் கவர்ந்த பெண் இருக்காளா? இல்ல நல்லப் பெண்ணா நானே பார்க்கட்டும்மா...?''

அவள் கேட்க... பட்டென்று பதில் வந்தது, சந்தோஷிடமிருந்து!

''உன்னைவிட வேற ஒரு நல்லப் பெண் உண்டா, சஞ்சனா?''

''என்ன அத்தான் பேசறீங்க?''

சஞ்சனா அதிக சினத்தால் சீறினாள்.

''சஞ்சனா உன் மேலான காதல் குறையாமல்... அப்படியே என் நெஞ்சில் பொக்கிஷமாய் உள்ளது!

இதுநாள் வரை உன்மேல் காதல் மட்டுமே இருந்தது! இப்போது அந்தக் காதலோடு... கருணையும் கை கோர்த்துக் கொண்டது!



சஞ்சனா நீ என்னை மணக்கணும்!

கனவாகிப் போச்சே... கற்பனையாகிப் போச்சேன்னு கலங்கினேன்! ஆனால் என் காதலுக்கு உயிர் உண்டு! என் நேசத்திற்கு சுவாசம் உண்டு! என் அன்புக்கு உணர்வுண்டு!

நம்மிடையே தோற்ற காதல்... மீண்டும் வெல்ல... திவாகர் இறந்துவிட்டார்!

நம் காதல் மீண்டும் உயிர் பெற்று இருக்கு! அந்த உயிரையும், உணர்வையும் அலட்சியப்படுத்தக் கூடாது, சஞ்சனா! நாம் மணந்து கொள்ளலாம், சஞ்சனா!

ப்ளீஸ் சஞ்சனா... மறுத்துடாதேடா!

உனக்கு ஒரு நல்ல கணவனாகவும்... உன் குழந்தைக்கு ஒரு பாசமிக்க, அன்புமிக்க தகப்பனாகவும் இருப்பேன், சஞ்சனா!''

சந்தோஷ் அவள் முன்பு மண்டியிட்டுக் கெஞ்ச...

''அத்தான்... நான் உங்களுக்கு சரிப்பட மாட்டேன்! திவாகரின் விதவை, நான்! அத்தான்... நீங்க கடவுள் போல! கடவுளுக்கு எச்சில் பண்டத்தைப் படைக்கலாமா...? பரிமாறலாமா...? நான் எச்சில் பண்டம், அத்தான்! திவாகரால் எச்சில் படுத்தப்பட்டவள்! தெய்வத்தைப் போல மனதாலும், உடலாலும் தூய்மைப்படாத உங்களுக்கு வேண்டாம், நான்!''

சஞ்சனா அழ...

''சஞ்சு... சஞ்சும்மா... என்னை ஏமாற்றி விடாதேம்மா!''

''கௌஷிகா போன்ற தூயவளைத்தான் நீங்க மணக்கணும்!

என்னை மணந்தால்... நீங்க சுகப்படவே மாட்டீர்கள்! என்னுள் காமம் செத்து விட்டது! கடமை மட்டும்தான்

வாழ்கிறது! குழந்தையின் பொருட்டுதான், கடமையை எண்ணி வாழ்கிறேன், அத்தான்!

"எனக்கு உன்னோடு எந்த சுகமுமே வேண்டாம், சஞ்சனா! உன் அருகாமையில் வாழற பாக்கியத்தை மட்டுமாவது கொடேன்! ப்ளீஸ்..."

சந்தோஷ் கெஞ்ச...

"அத்தான்... நான் உங்களை ஒரு நாளும் மணக்கவே மாட்டேன். என்றுமே என் பதில் இதுதான்!" அடித்துக் கூறவும்...

அப்படியே ஸ்தம்பித்துவிட்டான், சந்தோஷ்!

'அவள் மனம் மாறவே மாட்டாளா?'

கலங்கினான், சந்தோஷ்.




இணைய இருந்த இரு உள்ளங்களை பிரித்த அபிராமி தண்டிக்கப்பட்டாள், ஒரு விபத்தில்!

உயிர் போயிருந்தால்... நிம்மதியாய் தண்டனைக்குத் தப்பியிருப்பாள், அபிராமி!

அவளை டாக்டர்கள் காப்பாற்றி விட்டனர்.

அங்கே தான் இருக்கிறான், கடவுள்!

இரண்டு கால்களும் போய், வலது கையும் போய்... நடமாட முடியாமல் கல் சிலையாய் உட்கார்ந்து விட்டாள், அபிராமி!



உணவும், உபாதைகளும் ஒரே இடத்தில்!

சோற்றோடு... அசிங்கத்தையும் ஒரே இடத்தில் அனுபவித்தாள்!

அருவெறுக்கக் கூட முடியாமல் கலங்கினாள்!

அப்போது தேவதையாய் வந்து தாங்கிக் கொண்டவள், சஞ்சனா!

எட்டிக்காயாய் கசந்த சஞ்சனா.... இன்று தேனாய் இனித்தாள்!

தேவதையாய் கண்களுக்குத் தெரிந்தாள்!

சஞ்சனா இல்லையேல் அபிராமியைப் புதைத்த மண்ணில் வேர்விட்டு... செடி முளைத்து... துளிர்த்து இருக்கும்!

சஞ்சனாவின் கால்களைப் பற்றிக் கொண்டு அழுதாள், அபிராமி!

சஞ்சனா அவளை முழுவதுமாய் மன்னித்தாள்!

சூர்ப்பனகையாய் இருந்தவள்... சோகமாகிப் போனாள்!

செத்த பிணம் போலானாள்!

தெய்வம் நின்று உயிரோடு கொன்றுவிட்டது!

உண்ணுவதற்கு...

உறங்குவதற்கு...

பல் துலக்குவதற்கு...

குளிப்பதற்கு...

உடைமாற்றுவதற்கு...

எல்லாவற்றிற்குமே சஞ்சனா வேண்டும்!

சஞ்சனா அபிராமியின் உலகமாகிப் போனாள்!

சஞ்சனா என்ற உலகம் இயங்கவில்லையேல் அபிராமி மரித்துப் போவாள்!

"சஞ்சனா... எனக்கொரு ஆசைம்மா...!"

அபிராமி சொல்ல...

"என்ன அத்தை?"

சஞ்சனா மலர்ச்சியோடு கேட்டாள்.

"நீ சந்தோஷை கட்டிக்கணும் தாயே! நீ என் மருமகளாகணும், தாயே! சஞ்சனா மறுத்துடாதேம்மா!

சந்தோஷ்... நீ இல்லாத ஒரு வாழ்வை வாழமாட்டான்னு நல்லாப் புரிஞ்சிட்டேன், தங்கமே!...

சந்தோஷ்... உன்னைத் தவிர வேறு ஒருத்தியை நினைக்கக்கூட மாட்டான்! அப்புறம் எப்படி அவனுக்குக் கல்யாணமாகும்?"

அபிராமி குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

"என் வம்சம் சந்தோஷோட முடிய வேண்டாமா, தாயே?"

'சந்தோஷின் வாரிசு... சரண் இருக்கான், அத்தே!'

சொல்லத் துடித்த நாவிற்குக் கடிவாளமிட்டாள், சஞ்சனா.

"இல்ல அத்தை! என்னால் முடியாது!"

"சந்தோஷோட எதிர்காலம்...?"

"கௌஷிகா நல்லப் பெண்! அவள் மேல உயிரையே வச்சிருக்கார்!"

"நீ என்ன சொல்றே, சஞ்சும்மா?"

"நிஜம், அத்தே! கௌஷிகா சந்தோஷை விரும்பறாள்!"

"சந்தோஷ் விரும்பறானா?"

"ம்கூம்!"

"பின்னே எப்படி அவளைக் கட்டி வைப்பது?"

"நீங்க அத்தான்கிட்ட பேசுங்க!"

சஞ்சனா நகர்ந்துவிட... அபிராமி வேதனையுடன் கண்ணீர் சிந்திக்கொண்டே இருந்தாள்.



அபிராமி சந்தோஷிடம் சொல்லிப் பார்த்துவிட்டாள்!

அவனோ அம்மாவின் சொற்களை செவியில் போட்டுக் கொள்ளவேயில்லை!

அதன்பிறகு சந்தோஷ் சஞ்சனாவை வற்புறுத்தவில்லை.

சஞ்சனா இயந்திரத்தனமாய் வாழ்க்கையை நகர்த்தினாள்.

சந்தோஷ் ஆத்தூரில் புது பிராஞ்ச் ஆரம்பிக்க... அங்கேயும் பிசினஸ் நன்றாகப் போனது!

வருமானம் பெருகியது!

சஞ்சனா எவ்வளவு சொல்லியும்... கௌஷிகாவுடனான திருமணத்தை மறுத்தான்.

"ஸாரி கௌஷிகா! சந்தோஷ் மனசை மாத்தவே முடியலை!

அவரை இனியும் கரைக்க முடியும்ன்னு தோணலை! உன்னையும், அவரையும் இணைச்சி வைக்க முடியாத நிலையை எண்ணி வருந்துகிறேன், கௌஷிகா!"

சஞ்சனா ஈரம் படிந்த விழிகளோடு சொல்ல.

"விடு சஞ்சு! அவரோட இணையணும்ன்னு விதியிருந்தால்தான் இணையவே முடியும்! இல்லேன்னு இருக்கும் போது என்ன செய்ய முடியும்?

நான் ஆம்பளையா இருந்து... அவர் பெண்ணாய் பிறந்து இருந்தால்... மறுக்க மறுக்க... தூக்கிட்டுப் போய் வலுக்கட்டாயமாய் தாலிகட்டிவிடலாம்!...

ஆனால், அவர் ஆம்பளையா பொறந்துட்டாரே! நம் மனசை திறந்து காட்டலாம்! ஆனால், காதலைக் கெஞ்சி பெறலாமா...?"

நேசம் என்பது நம்மை அறியாமலேயே... அடி மனசில இருந்து பூக்கற அபூர்வமான, பூ! அப்படிப்பட்ட புனிதமான நேசத்தை... சந்தோஷ்கிட்ட கெஞ்சினாலும் கிடைக்காதுன்னு தோணுது!

நீயிருக்க... அவர் வேறொருத்தியை மணக்கவே மாட்டார், சஞ்சனா.''

''இது... இது ஒண்ணுக்காகவே எனக்கு சாகணும் போல இருக்குடி!''

''ஐய்யோ சஞ்சனா...''

கௌஷிகா அலறினாள்.

''பின்ன என்னடி சாக்கடையில் விழுந்து சகதியான உடம்பை... அந்த தெய்வத்துக்கு படைக்க முடியுமா?''

எத்தனை சொல்லியும் புரிஞ்சிக்காமல் இப்படி வீம்பாய் தன் வாழ்க்கையை வீணடிச்சிக்கிறாரே!

நான் செத்துட்டால்... என்னை நினைக்க மாட்டாரில்லையா?

அப்புறமா என்னை மறந்துட்டு... உன்னை மணந்துப் பார், இல்லையா?

நீ வேணாப்பார்... ஒரு நாள் இந்த உடலுக்கு தீவச்சிட்டு சாகப்போறேன்!''

கௌஷிகா சஞ்சனாவின் வாய் பொத்த அணைத்துக் கொண்டாள்.

## 25



கௌஷிகா சந்தோஷின் முன் நின்றாள்.

''சஞ்சனாவை இப்படியே விட்டால்... வாழ்க்கையே வெறுத்து... கிழிந்த நாராய்... மூலையிலேயே முடங்கி விடுவாள்!''



சந்தோஷைப் பார்த்துச் சொல்ல...

''என்ன செய்யலாம், கௌஷிகா?''

''எனக்குத் தெரியலே, சந்தோஷ்! அவளுக்கு நீங்க ஏதாவது செய்யணும், சந்தோஷ்! அவள் எழணும், சந்தோஷ்! அவள் மீண்டும் பழைய சஞ்சனாவாய் மாற வேண்டும்!''

கௌஷிகா சொன்ன பின்னர்... சஞ்சனாவின் முன் நின்றான், சந்தோஷ்.

''சஞ்சு... நீ படித்த பெண்! இப்படி மூலையிலே முடங்கிக் கிடக்கலாமா...?''

''இதுதானே எனக்கு விதிக்கப்பட்டிருக்கு, அத்தான்!''

''என்ன பேசறே, சஞ்சனா? அப்போ உன்னைப் போல கணவனை இழந்த அத்தனை பெண்களும் மூலையில் தான் முடங்கிக் கிடக்கறாங்களா? யாரும் இயங்குவது இல்லையா? பழைய காயத்தைக் கீறிக் கீறி... வலியோடு தான் இருக்காங்களா? பழையதை மற, சஞ்சு!''

''எப்படி மறப்பது, அத்தான்?''

''மறந்துதான் ஆகணும், சஞ்சனா! பழையதை மறக்கணும்னால்... உன்னை எதிலாவது ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்!''

''நான் என்ன செய்யட்டும்? எனக்கு என்ன தெரியும்?

''சமுதாயத்துக்குப் பயன்படறாப்போல நீ வாழக் கூடாதா? உன்னிடமும் நிறைய சொத்திருக்கு! திவாகர் வீட்டிலேயும் கணக்கில்லாமல் பணமும், சொத்தும் இருக்கு! அந்தப் பணத்தையெல்லாம் மனித குலத்துக்கு பயன்படறாப்போல செய்யலாமே, சஞ்சனா!''

''எனக்கு எதுவும் தெரியலே, அத்தான்!''

''எப்படித் தெரியாமல் போகும்? ம்? மாமா ஆதவன் பேர்ல ஒரு டிரஸ்ட் ஆரம்பிக்கலாம்!''

''ஆரம்பித்து....?'' அவள் புரியாமல் கேட்க...

''பள்ளிப் படிப்பை முடித்து... கல்லூரிக்கு அடியெடுத்து வைக்க முடியாமல் கலங்கும் ஏழை மாணவர்களுக்கு உதவலாம்!''

''ம்... அப்புறம்?''

''வருஷத்துக்கு இருமுறை இலவச மருத்துவ முகாம், இலவச கண் சிகிச்சை முகாமுக்கு ஏற்பாடு செய்யலாம்!''

''அருமையான செயல்தான்! செய்துடலாம்! அப்புறம்?''

சஞ்சனா மலர்ந்த முகத்துடன் கேட்கவும்...

சந்தோஷ் ஆர்வமாய் சொன்னான்.

''எத்தனையோ பெண்களின் வாழ்க்கையை நாசமாக்கியவர், திவாகர். அவர் செய்த பாவங்கள், கொடுமைகள் அவ்வளவும் உன்னையும், உன் பிள்ளையையும் தாக்கலாம்! அதிலிருந்து விடுபட.... விதவைகள் மறுவாழ்வு இல்லம், ஆதரவற்றோர் இல்லம், ஊனமுற்றோர்களுக்காக இல்லம்ன்னு ஆரம்பிக்கலாம்!''

''செய்யறேன்... செய்யறேன்!''

''கல்விங்கிற பேர்ல நிறைய தனியார் கல்வி நிறுவனங்கள் மக்களுடைய பணத்தை கொள்ளையடிக்கறாங்க! நம்ம பகுதி ரொம்ப வறுமையான பகுதி! வியர்வை சிந்தி உழைக்கும் உழைப்பாளர்களின் உழைப்பு அத்தனையையும்... தங்களின் குழந்தைகளுக்கான கல்வியால் சுரண்டப்படுகிறது!

அதை நீ தடுக்க வேண்டும், சஞ்சனா! தரமான கல்வியை... குறைவான கட்டணத்தில்... நீ வாரி வாரி வழங்க வேண்டும்!

ஏழைகளின் உழைப்பு சுரண்டப் படுவதைத் தடுக்க வேண்டும்!



சஞ்சனாங்கிற பேர்ல நீ பெரிய கல்வி ஸ்தாபனத்தை ஏற்படுத்த வேண்டும்!''

''நானா? என்னால் முடியுமா?''

அவள் நம்ப முடியாமல் கேட்க...

''உன்னால் முடியும், சஞ்சனா! உன்னால் முடியலேன்னால்... வேற யாரால் செய்ய முடியும்? நான் உனக்குத் துணையிருக்கேன்! ஒரே வருஷத்துல பர்மிஷன், கட்டடம்ன்னு கட்டி முடிச்சித் தரேன்! அடுத்த வருடமே பள்ளியை ஆரம்பித்து விடலாம்!''

சந்தோஷ் உறுதியாய் சொல்ல...

அவளுக்கும் நம்பிக்கை பிறந்தது!

அப்படி உருவானதுதான் சஞ்சனா பள்ளி!

சஞ்சனா மன உறுதியோடு உழைத்தாள்! மக்களின் நன்மதிப்பைப் பெற்றாள்.

அந்தப் பகுதி மக்களின் தேவதை, தெய்வம் சஞ்சனா!

சஞ்சனா பழைய நினைவுகளிலிருந்து விடுபட்டாள்.

சந்தோஷுக்கான டெஸ்ட்டுகள் அனைத்தும் முடிந்தது.

சஞ்சனா கௌஷிகா, சத்தியவதி மூவரும் டாக்டரின் எதிரில் இருந்தனர்.

டாக்டர் கொஞ்சம் படபடப்பாய் இருந்ததைக் கண்டு சஞ்சனா பயந்தாள்.

டாக்டர் விஜய்யும், அவர் மனைவி பத்மினியும் மேல் படிப்பிற்காக வெளிநாடு சென்றுள்ளதால்... விஜய்யுடைய அண்ணன் ஜெய்யிடம் சேர்த்திருந்தாள், கௌஷிகா.

டாக்டர் ஜெய்யிடம் சஞ்சனாவிற்கு அவ்வளவாய் பழக்கமில்லை! அவரும் ஒரு ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட் என்று தெரியும்! அவர் சந்தோஷைக் காப்பாற்றி விடுவார்

என்ற நம்பிக்கையில்தான்... அவனை சேலத்திற்கோ, கோயம்புத்தூருக்கோ கொண்டு போகவில்லை.

"சந்தோஷுக்கு ஹார்ட்ல ஒரு வால்வு பழுதாகி இருக்கும்மா! இதை ரொம்ப முத்தவிட்டு சமீபமாய் தான் என்னிடம் வந்தார்! உங்களுக்கெல்லாம் தெரியாதா?"

டாக்டர் ஜெய் கூற... சஞ்சனா இடி விழுந்த கணக்காய் அலறினாள்.

"ஐய்யோ டாக்டர்..."

"உடனே பழுதான வால்வை அறுவை சிகிச்சை மூலம் அகற்றி செயற்கை வால்வைப் பொருத்தணும்! இல்லாட்டி நாம் சந்தோஷை இழக்க நேரிடலாம்."

சஞ்சனா நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதாள்.

கௌஷிகாவின் கண்களில் சிறு ஆறு உற்பத்தியாகி வேகமாய் ஓடியது.

சத்தியவதி சத்தம் வராமல் அழுதாள்.

"இப்போ தேவை அழுகை இல்லம்மா! சந்தோஷை எப்படிக் காப்பாத்தலாம்ங்கிற சமயோசித புத்தி தான்!"

"இதய அறுவை சிகிச்சை பண்ணினால் சந்தோஷ் பிழைச்சிடுவாரா, டாக்டர்?"

கௌஷிகா அழுகையோடு கேட்க...

"என்னால நூறு சதவீதம் கேரண்டி கொடுக்க முடியாதும்மா! ஐம்பது சதவீதம் பிழைக்கலாம்! மீதி ஐம்பது சதவீதம் இறக்க..."

டாக்டர் சொல்லி முடிப்பதற்குள்... சஞ்சனா கத்தினாள்.

"போதும்... மேலே சொல்லாதீங்க, டாக்டர்!"

"உண்மையைத்தான் சொன்னேம்மா!"

"ஒருவேளை இந்த ஆபரேஷனில் சந்தோஷுக்கு ஏதாவது ஆனால்... நான் உயிர் வாழவே மாட்டேன், கௌஷிகா! செத்திடுவேன், கௌஷிகா!"



"பைத்தியம் மாதிரி பேசாதேம்மா! கௌஷிகா முதல்ல ஆக வேண்டியதைக் கவனிங்க! அப்ளிகேஷன்ல சந்தோஷ் அம்மாவிடம் கையெழுத்து வாங்குங்க! அடுத்ததா கௌண்டர்ல அறுவை சிகிச்சைக்கான அட்வான்ஸை கட்டுங்க! பார்மஸியில மருந்து, மாத்திரைகளுக்கு முன் பணம் கொடுங்க! கமான் குயிக்! உங்க சொந்தக்காரர் கள்ல சில பேரை ரத்தம் டொனேட் செய்ய ஏற்பாடு செய்யுங்க! அவங்களை உடனே வரவழைங்க! என்ன க்ரூப் ரத்தம்ன்னு டெஸ்ட் செய்யணும்!...

அவங்க ப்ளட்ல எதுனா மஞ்சள் காமாலை வைரஸ், எச்.ஐ.வி. வைரஸ் இருக்கான்னு பார்க்கணும்!

அடுத்ததா சஞ்சனா எப்பேர்ப்பட்ட மனுஷி! ரொம்ப உடைஞ்சிப் போய் இருக்காங்க! முதல்ல இவங்களுக்கு உண்ண, உறங்க ஏற்பாடு செய்யுங்க! இல்லேன்னால் இவங்களையும் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்படலாம்!"

கௌஷிகாவிடம் சொல்லி முடித்தவர்... சஞ்சனாவைப் பார்த்துச் சொன்னார்.

"நம்மை ஆட்டி வைப்பவன் கடவுள்! அவன் ஆட்டி வைப்பதற்கேற்ப ஆடும் பொம்மைகள்தான் நாம் எல்லோரும்! கடவுளை நம்பினால் கைவிட மாட்டார்! அழாதீங்க, சஞ்சனா. எத்தனை விஞ்ஞானம் முன்னேறி னாலும்... கடவுளுக்கும், கடவுள் சக்திக்கும் இன்னும் தனி மகத்துவம் இருக்கு! கடவுளைப் பிரார்த்தனை செய்யுங்க அவர் உங்களையெல்லாம் கைவிட மாட்டார்!"

சஞ்சனா துன்பத்திலும், துக்கத்திலும் சுருண்டு விட...

கௌஷிகா நொடிப் பொழுதைக்கூட வீணாக்காமல் இயங்கினாள்.

சந்தோஷுக்கு தேவையான மருந்து, மாத்திரைகளை... இங்கே கிடைக்காதவைகளை சென்னை, மும்பை, பெங்களூரு போன்ற நகரங்களில் இருந்து வரவழைத்துத் தந்தாள்.

மறுநாள்...

சந்தோஷுக்கு ஆபரேஷன் நடந்தது.

சஞ்சனா... தனது மகன் சரணைக்கூட மறந்து விட்டாள்!

பிரமை பிடித்தாற்போல ஆஸ்பத்திரி காம்பவுண்டுக்குள் இருந்த 'ஸ்ரீகிருஷ்ணர் கோயிலே' தஞ்சமென்று கிடந்தாள்.

சொட்டு தண்ணீர் அருந்தவில்லை!

பிடி உணவு உண்ணவில்லை!

தன் உணர்வு பாராட்டவில்லை!

உறக்கத்தை மறந்தாள்!

சந்தோஷின் நலனே முக்கியம் என்று... கடவுளிடம் தவமிருந்தாள்!

கௌஷிகாவிற்கு சஞ்சனாவைப் பார்க்கப் பார்க்க ஆச்சரியமே வானமாய் விரிந்தது!

சந்தோஷ் மேல் சஞ்சனா கொண்ட அன்பு, பாசம், ப்ரியம் கண்டு மிரண்டு விட்டாள்!

அவளின் தவம் கண்டு பிரம்மித்துப் போனாள்!

இத்தனை அன்பு கொண்ட சஞ்சனாவின் முன்பு... சந்தோஷ் மேல் தான் கொண்ட காதல் கூட கடுகாய் தெரிந்தது!

சந்தோஷிற்கு ஆபரேசன் முடிந்தது.

சரியாய் இருபத்தி நான்கு மணி நேரம் கழித்து மெல்ல மெல்ல சந்தோஷ் கண் விழிக்க...



முதலில் சஞ்சனாவின் வாடி, வதங்கி, நலுங்கி, அழுகையில் வீங்கிக் கிடந்த முகம் தான் கண்ணில் பட்டது.

சஞ்சனாவைப் பார்த்து சந்தோஷ் புன்னகைக்க... சஞ்சனா உயிர் பெற்று எழுந்தவள் போலானாள்!

"சந்தோஷ் அத்தான்..."

சந்தோசத்தில் துள்ளி அவன் கைப்பற்றி ஆனந்தக் கண்ணீர் விட்டாள்.

"சந்தோஷ்... இந்த அளவா எங்களை மிரட்டுவீங்க? எங்களுக்கெல்லாம் உங்க கேஸ் சவாலாய் போயிட்டது. தெரியுமா?...

சஞ்சனாவின் துன்பத்தைக் கண்டு... துயரத்தைக் கண்டு... உங்களைக் கட்டாயம் பிழைக்க வைக்க வேண்டும் என்று... கோர்புல்லாய்... பயத்தோடு இந்த ஆபரேசனைச் செய்தோம்!

எங்கள் அறுவை சிகிச்சையால் பிழைத்தீர்கள் என்பதைவிட... சஞ்சனாவின் வேண்டுதலால் தான் பிழைத்தீர்கள் என்று அடித்துச் சொல்லுவேன்!"

டாக்டர் ஜெய் கூற...

"சஞ்சனா மேடத்திற்குதான் உங்கள் மேல் எத்தனை வியக்கத்தகு அன்பு! அம்மாடியோவ்... நீங்கள் கொடுத்து வைத்தவர்கள், சந்தோஷ் சார்!"

அங்கிருந்த நர்ஸ் சொல்லிச் சிலிர்க்க...

"சஞ்சனாம்மா..."

சந்தோஷ் கண்கள் கலங்கச் சொல்லி... அவள் கைப் பற்றி... கண்களில் ஒற்றிக் கொண்டான்.

சந்தோஷ் உடன் இருந்து அவனுக்குத் தேவையானவை அனைத்தையுமே சஞ்சனா செய்தாள்.

தாயாய் மாறி சந்தோஷைக் கவனித்துக் கொண்டாள்.

நேரம் தவறாமல் மருந்து, மாத்திரை கொடுத்தாள்.

உணவு கொடுத்தாள்! பழரசம் கொடுத்தாள். அவளின் கவனிப்பில் சந்தோஷ் சீக்கிரமே குணமடைந்தான்.

அபிராமி, சத்தியவதி, பார்வதியம்மாள், ஐயா ராமசாமி அத்தனை பேருமே சஞ்சனா சந்தோஷ் மேல் கொண்டிருந்த பற்றை, பாசத்தைக் கண்டு வியந்துதான் போனார்கள்!

ஒரு அழகான மாலைப் பொழுதில் ஆஸ்பத்திரியில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீடு வர...

அவனை வாசலிலேயே நிறுத்திவிட்டு... சஞ்சனா உள்ளே ஓடினாள்.

மஞ்சள் நீரில் சுண்ணாம்பு இட்டு... ஆலம் கரைத்து எடுத்து வந்தாள். தட்டில் கற்பூரத்தை ஏற்றி... அவன் தலைக்கு மேலே மூன்று சுற்று சுற்றி... எடுத்துப் போய் தெருவில் கொட்டினாள்.




"சஞ்சனா... உன்னோட கொஞ்சம் பேசணும்மா! அனுமதி கிடைக்குமா?"

சஞ்சனா மீண்டும் பள்ளி, அநாதை இல்லம் என்று பிஸியாக இருந்த சமயம் வந்து சத்தியவதி கேட்க...

"என்னம்மா நீ...? நான் உன் பொண்ணும்மா! என்னிடம் பேச அனுமதி கேக்கறீயே! உனக்கு ஒரு மணி



நேரம் வேண்டுமா? இல்ல ஒரு நாள் வேண்டுமா? ம்...? இன்று நான் ஸ்கூலுக்குப் போகலே!"

"போகலன்னா... ஸ்கூல் என்னாவது?"

"எல்லாம் கார்த்திக் பார்த்துக்குவார்! கவலையில்லை! நீ சொல்லு?"

சந்தோஷை கவனித்துக் கொண்டு ஆஸ்பத்திரியில் இருந்த சமயம் கார்த்திக்தான் பள்ளியை பொறுப்பாய்ப் பார்த்துக் கொண்டவன்.

அதே போல சந்தோஷின் கம்ப்யூட்டர் சென்டரை கௌஷிகாதான் பொறுப்பாய் நிர்வகித்தவள்!

சந்தோஷுக்கு எப்படி கௌஷிகா உதவுகிறாளோ... வலது கையாய் செயல்படுகிறாளோ அதுபோல.. கார்த்திக் அவளின் நம்பிக்கைக்கு உரியவன்!

கெட்டிக்காரன் பழகுவதற்கு இனியவன்!

வேலையில் அபார திறமை உள்ளவன்!

"நிஜமாவே ஸ்கூலுக்கு லீவு போடப் போறீயா, சஞ்சனா?"

சத்தியவதி நம்பாமல் கேட்க...

சஞ்சனா சத்தியவதியின் அருகில் போய் அமர்ந்து... அழகாய் புன்னகைத்தாள்!

தாயின் கையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள்!

"சொல்லும்மா...? என்னிடம் என்ன பேசணும்?"

"சந்தோஷுக்கு பூரணமா குணமாயிடிச்சி!"

"சந்தோசம்தானே?"

"ம்... ஆனால் எனக்கு பயமா இருக்கு சஞ்சனா!"

"ஏன்?"

"திரும்பவும் உடம்பு சரியில்லாமல் போய் ஆஸ்பத்திரியில் படுத்துக்குவானோன்னு பயமா இருக்கு, சஞ்சனா!"

"ச்சே... வாயைக் கழுவும்மா! ஏம்மா இப்படி அவலட்சணமா பேசறே?"

சஞ்சனா கோபமிகுதியில் தாயிடம் எரிந்து விழுந்தாள்.

"பின்னே எப்படிடி சொல்ல? மனசுக்குள்ள சோகத்தை, துக்கத்தை, துன்பத்தை, கஷ்டத்தை சுமந்தே சந்தோஷ் இப்படி ஆயிட்டான்! ஆஸ்பத்திரிக்கு போற நிலைமை உன்னால்தான் வந்தது!"

சத்தியவதி சஞ்சனாவைக் குற்றம் சாட்ட...

"என்ன பேசறேம்மா? புரிஞ்சித்தான் பேசறியா, என்ன?"

சஞ்சனா கோபப்பட...

"உன்னைக் காதலித்து ஏற்பட்ட தோல்வியாலும்... உன் கணவன் இறந்து உன் வாழ்க்கை இப்படிப் பட்டு பாழாய் போச்சேன்னு வேதனைப்பட்டுமே... நொந்து போய்... இதயம் பழுதுபட்டுப் போனான்!"

"எதுக்கும் எதுக்கும் முடிச்சிப் போடறே?"

சஞ்சனா தாயிடம் முறைப்பாய் கேட்க...

"சந்தோஷுக்கு கவலையிலதான் இதயம் பழுதுபட்டுப் போனது! சந்தோஷ் உன்னை நினைத்துக் கொண்டும்... கௌஷிகா அவனை நினைத்து உருகியும்... நீ சந்தோஷ், கௌஷிகா மூன்று பேரும் வெட்டியா உங்க வாழ்க்கையை நீங்களே அழிச்சிகிறீங்க!

ஏமாத்திகிறீங்க!

நீ அவனை ஒரு போதும் கட்டிக்கப் போறதில்லே! அவன் ஒரு போதும் கௌஷிகாவை மணக்கப் போறதில்லே...! இப்படியே மூன்று பேரும் இருந்தா என்ன அர்த்தம்?



சத்தியவதி காட்டமாய் கூறினாள்.

"..............."

"நீ கணவனை இழந்து வந்த பிறகு... உன்னை மணக்க ஆசைப்பட்டான்! ஆனா நீ மறுத்துட்டே! உன்னையே நினைச்சி... சந்தோஷ் மீண்டும் உடம்புக்கு முடியாமல் போகணுமா?

"ஏம்மா அபசகுணமா பேசறே? அவர் இதயம் இயற்கையா பழுதுபட்டால்... நீயே புதுசா காரணம் கற்பிச்சிகிறே! இது நியாயமா?"

"உன்னை திருத்தவே முடியாதுடி, சஞ்சனா! அவனை வேதனைப்படுத்தி படுத்தியே மீண்டும் கொல்லத்தான் போறே!"

"அம்மா..."

சஞ்சனா சப்தமிட...

"ஏன் சஞ்சனா கத்தறே? உன்னை மறந்து அவன் வேறொருத்தியை மணந்து வாழமாட்டான்!

அப்படியிருக்க... உனக்கு ஏன் பிடிவாதம்?

உனக்கு சந்தோஷ் மேல அன்பில்லையா?"

"இருக்கும்மா! நிறையவே இருக்கு!"

சஞ்சனா பட்டென்று சொல்ல....

"காதலில்லையா..? பிரியமில்லையா...?"

"..............."

"சொல்லேன்டி? விதி வசத்தால் ரெண்டு பேரையும் கடவுள் பிரிச்சான்! திரும்பவும் நீங்க ரெண்டு பேரும் ஒன்னு சேரத்தான் திவாகரை இறைவன் கூட்டிட்டான்! கடவுளே கண் திறந்து உனக்கொரு நல்வழியை... நல்வாழ்க்கையை வழி வகுத்து கொடுக்கும்போது... அதை ஏற்றுக் கொள்ளாமல் குருடியாய் இருப்பாயா...?

"..................."

"திவாகர் உன்னை சந்தோசமா வச்சிருந்தானா?"

"................."

"உன்னை சந்தோசமா இருக்க விட்டானா? சந்தோஷைப் பற்றிப் பேசிப் பேசியே உன்னை உயிரோடு கொன்றான், இல்லையா?...

சந்தோஷ் பற்றிச் சொல்லிச் சொல்லி.... சந்தோஷை மறக்கவிடுல இல்லையா..."

"..................."

"திவாகரோட மனசு ஒன்றி வாழ்ந்திருக்கியா?"

"..............."

"இல்லே இல்லையா....? அப்படி இருக்க... சாக் கடையில் விழுந்த உடம்பு... வேறு ஒருத்தன் சூடிய மலர்ன்னு... எதுனா காரணம் காட்டி... இப்படி அநியாயமா சந்தோஷை மறுக்கிறியே...!

தெரியாமத்தான் கேக்கறேன்.... யாருமே புருஷன் செத்துட்டால் மறுமணம் செய்துக்கிறதில்லையா...?"

"..............."

"சில நல்ல இளைஞர்கள் விதவைகளை விரும்பி... முன் வந்து மணந்துக்கிறாங்க, தெரியுமா?

அழிஞ்சி போற உன் உடம்புதானே... பரிசுத்தமா கெட்டுப்போச்சி! ஆனால், உன் தூய்மையான மனசு... உன்? ஆன்மா... இன்னுமே பரிசுத்தமா சந்தோஷோட நலனுக்காக உருகிட்டுத்தானே இருக்கு! ம்...?"

சஞ்சனா எதுவுமே பேசாமல் மௌனமாய் இருக்க... சத்தியவதிக்கு பயங்கர கோபம் வந்துவிட்டது.

"மறுமணத்தை வரவேற்கிற இந்தக் காலத்தில்... மதிகெட்டு ஏன்டி இப்படி நடந்துக்கிறே? உன் மனம் ஒரு



நாளும் இளமையாய் விழித்து... உன்னைச் சித்தரவதைச் செய்யவில்லையா...?

பொய் மட்டும் சொல்லிடாதே! என்னுள் காமம் செத்துடிச்சி! கடமைக்காகத்தான் உயிர் வாழறேன்னு... சினிமா வசனம் மட்டும் பேசிடாதே!...

பாரதிதாசன் எவ்வளவு அழகா விதவைப் பெண்களின் நிலைமையை விளக்குகிறார்.

"வாடாதப் பூப்போன்ற மங்கை நல்லாள்

மணவாளன் இறத்தல் பின் மணத்தல் தீதோ?

பாடாத தேனி... பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ?"

நீ படிச்சிருக்கே தானே...? எத்தனை உண்மையான.. கவித்துவமான வரிகள்!...

நீ ஒரு வயசானவளா இருந்தால்... உன் மறுப்பை நானும் ஏத்துப்பேன்! அதை இப்படி பெரிதுபடுத்த மாட்டேன்!"

"......................"

"அடுத்ததா என் மருமகன் சந்தோஷ் மேல உள்ள அக்கறையிலும் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்! மனசு மாறி சந்தோஷை ஏத்துக்கோடி!"

சத்தியவதி மகளைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டாள்.

சஞ்சனா மௌனமாய்... சிலையைப் போன்று அமர்ந் திருந்தாள்.

"உன் பிடிவாதத்தை தளர்த்திக்கோடி! எனக்குத் தெரியும் சந்தோஷ் மேலான காதல்... கல்யாணத்துக்குப் பிறகு உன்னுள் புதைஞ்சியிருந்தாலும்... மீண்டும் மெல்ல மேலெழும்பி கொஞ்சமும் குறையாமல்... மீண்டும் தளிர்த்து... துளிர்த்து.... விழுதுவிட்டு வளர்ந்துட்டுதான் இருக்கு!"

"அதெல்லாம் இல்லேம்மா! நீயா ஏதாவது கற்பனை பண்ணிக்காதே!" என்று சஞ்சனா மறுக்க...

"நான் நம்பமாட்டேன்! உன் மனசாட்சிக்கு விரோதமா பேசாதே!"

"அம்மா... கௌஷிகா மனசுல ஆசையை வளர்த்துட்டு... எப்படிம்மா அவரைத் தட்டிப் பறிக்க...?"

சஞ்சனா மெதுவாய் இறங்கி வர...

சட்டென்று சஞ்சனாவின் கையை இறுக்கமாய் பற்றிக் கொண்டாள், சத்தியவதி.

"சஞ்சனா... கௌஷிகாவை ஒரு போதும் சந்தோஷ் ஏற்றுக்க மாட்டான்! அது ஒண்ணை மட்டும் நல்லாப் புரிஞ்சிக்கோ! பூமி... சூரியனை சுற்றுவதற்கு பதிலாய்... சூரியன் பூமியைச் சுற்றி வந்தாலும்... சந்தோஷ் மட்டும் தன் மனசு மாறவே மாட்டான், சஞ்சும்மா! உனக்கு ஒரு புருஷன் வேண்டாம் என்றாலும்... உன் பிள்ளை சரணுக்கு ஒரு அப்பாவும், அப்பா பாசமும் முழுமையாய் கிடைத்தால்தான், சரணுடைய எதிர்காலம் சிறக்கும்மா! தயவு பண்ணும்மா! உன் சரணை அநாதையாய் காலமெல்லாம் அப்பா இல்லாமல் தவிக்கலாமா?"

"அவன் ஒண்ணும் அநாதையில்லை! அவன் அப்பா குத்துக்கல்லாய் உயிரோடுதான்...."

சஞ்சனா மீதியை முடிக்காமல் நாக்கைக் கடித்துக் கொண்டாள்!

"ஏய்... ஏய்... சஞ்சனா என்ன சொல்றே?"

சஞ்சனா விதிர் விதிர்த்து தலை குனிந்திருக்க...

"சஞ்சனா உண்மையைச் சொல்லுடா? நீ சொன்னதுக்கு என்ன அர்த்தம்?"



சஞ்சனா எதுவும்பேச முடியாமல் கண்கள் கலங்கியிருக்க...

"சஞ்சனா... அம்மா அறியாமல் உன்னுள் ரகசியமா...? சொல்லும்மா...?"

அம்மா விடாமல் கேட்க...

சஞ்சனா மறுக்க முடியாமல் அத்தனையையும் கொட்ட...

"நிஜமாவா...? நிஜமாவா...? சரண் சந்தோஷ் பிள்ளையா...? சரண் உருவாக சந்தோஷ்தான் காரணமா... மட்டி... மடைச்சி... அவன் அப்பாவையே சித்தப்பான்னு கூப்பிட வச்சுட்டியேடி, பாவி!...

இனியும் பார்த்துட்டு சும்மா இருக்க மாட்டேன்! உன்னை சந்தோஷ்த்தோட சேர்த்து வச்சிட்டுத்தான்... மறு வேலையேப் பார்ப்பேன்! எல்லா உண்மைகளையும் சந்தோஷ் கிட்ட சொல்லி..."

சத்தியவதியின் பேச்சை சஞ்சனா இடைமறித்து கத்தினாள்.

"அம்மா... நிறுத்தும்மா! அவர்கிட்ட இந்த ரகசியத்தை சொன்னே செத்துடுவேன், நான்! கௌஷிகாவை நான் ஒரு நாளும் ஏமாற்ற மாட்டேன்!

சந்தோஷ் இன்று இல்லேன்னாலும்... என்றாவது ஒரு நாள் மாறுவார்! எனக்கு நம்பிக்கை இருக்கு!"

சஞ்சனா என்ற வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏற... சத்தியவதி என்ற விக்கிரமாதித்தன் அந்த வேதாளத்தைத் தூக்கி தன் தோளில் போட்டு மீண்டும் கதை கூற ஆரம்பிக்க...

இதையெல்லாம் கண்ட ஒரு ஜோடி கண்கள் சத்தமில்லாமல் அழுகையோடு வெளியேறியது.



## 27

மறுநாள்...

விடியற்காலை எட்டுமணியளவில்...

சஞ்சனா, சந்தோஷ் அதிர்ச்சியாய் நோக்க...

சத்தியவதி, அபிராமி மகிழ...

அங்கே மாலையும் கழுத்துமாய் கௌஷிகாவும், கார்த்திக்கும் வந்து நின்றனர்.

கௌஷிகாவின் கழுத்தில் புது மஞ்சள் கயிற்றில் அழகாய் தாலி தொங்கியது.

"ஏய் கௌஷி... என்னடி இது? என்ன காரியம் செய்துட்டு வந்திருக்கே? ஏன் இப்படிச் செய்தாய்? நம்ம சந்தோஷ்..."

சஞ்சனா முடிப்பதற்குள்... கௌஷிகா பட்டென்று சொன்னாள்.

"என் வாழ்க்கை...! என் இஷ்டம்...!"

"அப்போ சந்தோஷை உயிருக்குயிரா நேசிப்பதாய் சொன்னதெல்லாம்... அவருக்காக இது நாள் வரை காத்திருந்ததெல்லாம்...?"

சஞ்சனா குற்றம் சாட்ட...

"இன்னும் சந்தோஷைக் காதலிக்க நான் என்ன முட்டாளா...? அதுவும் உன்னை உயிருக்குயிரா காதலித்தவரை... இன்னும் காதலிப்பவரை!...

அவர் மனசுல ஒருத்தி இருக்கான்னு தெரிஞ்சும்... முட்டாள் மாதிரி அவரை நினைச்சுட்டு வெட்டியா



வாழ்ந்திருக்கேன்! எனக்கு... என்னை நினைத்தால் வெட்கக்கேடா இருக்கு!...

அவருக்கு ஒண்ணுன்னால் நீ கரைந்து போறதும்... உனக்கு ஒண்ணுன்னால் அவர் உருகிப் போறதும்... தவித்துப் போறதும்... ச்சே...! ஏன் ரெண்டு பேரும் நடிக்கறீங்க?...

ஊரை வேண்டுமானால் ஏமாற்றலாம்! ஆனால் உன் தோழியான என்னை ஏன் ஏமாத்தறே?

எனக்குத் தெரியும் உங்க ரெண்டு பேருக்கும் கள்ளத் தொடர்பு இருக்கு!"

"ஏய்... ஏய்..." சஞ்சனா சீற... சந்தோஷ் கோபத்தை அடக்கப் பெரும்பாடு பட்டான்!

"உங்க காதல் மீண்டும் புத்துணர்வு பெற்று அன்யோன்யமா வாழறது எனக்கு தெரியும்!"

"நிறுத்துடி, கௌஷி!"

"எதுக்கு நிறுத்தணும்! உண்மை உங்களுக்கெல்லாம் கசக்குதா? அவரை எனக்குக் கட்டி வச்சிட்டால்... நான் ஊரறிய பொண்டாட்டியாயும்... நீ ரகசிய பொண்டாட்டியாவும் வாழலாம்ன்னு ஒரு எண்ணத்தால்தான்... எனக்கு நன்மை செய்யறாப்போல... சந்தோஷோட சேர்த்து வைக்கறேன்னு நீ வாய் கிழியப் பேசினதெல்லாம்!"

கௌஷிகா கருணையே இல்லாமல் சஞ்சனா மீது குற்றம் சாட்ட...

"வேண்டாம்... மேலே பேசாதே!"

சஞ்சனா அழுதாள்.

"அப்படித்தான் பேசவேன்! நிஜத்தைப் பேச நான் எதுக்குப் பயப்படணும்? சந்தோஷ் மேல் உனக்கு ஆசையும், மோகமும் இருக்கு!"

வீறிட்டு அழுத சஞ்சனா... அழுகையை நிறுத்தி...

"ஆமாம்டி! என் அத்தான்... என் சந்தோஷ்...! நான் ஆசைப்படுவேன்! என்னடி செய்வே...?"

சஞ்சனா நெஞ்சை நிமிர்த்திக் கேட்க...

சந்தோஷ், அபிராமி, சத்தியவதி மூவரும் வியந்தனர். அவர்கள் முகம் மகிழ்ச்சியில் மலர்ந்தது.

"இப்படி மர்மமா வாழாமல்... தாலிகட்டி வாழ முயற்சி செய்!"

கௌஷிகாவின் வார்த்தைகள் கூர் வாளாய் சஞ்சனாவிற்குள் இறங்க...

"அதை நீ சொல்லாதே! எனக்குத் தெரியும்! ஐயோ அத்தான்... இவளுக்காக... இவளுக்காக என் காதலைத் தியாகம் செய்து வாழக் கத்துக்கிட்டேனே! உங்களையும் வருத்தி... என்னையும் வருத்தி... சமீபமாய் என்னுள் மீண்டும் துளிர்த்த காதலுக்கு... நீர் ஊற்றாமல்... எப்படித் துடிச்சேன் தெரியுமா, அத்தான்? சந்தோஷ் அத்தான்... என்னையும், குழந்தையையும் ஏத்துப்பீங்களா?"

சஞ்சனா அழுகையோடு கேட்க...

சந்தோஷ் அருகில் நின்றவளை சட்டென்று அவசரமாய் இழுத்து இறுக்கிக் கொண்டான்!

அவன் பரந்த நெஞ்சில் முகம் புதைத்து இன்னும் விசித்தாள்!

சந்தோஷின் பிடி மேலும் இறுகியது!

சத்தியவதியும், அபிராமியும் ஆனந்தக் கண்ணீர் விட்டனர்.

சஞ்சனாவின் முகம் பற்றி... கண்கள் பளபளக்கக் கன்னத்தில் முத்தமிட்டான், சந்தோஷ்.

கௌஷிகாவின் முகம் பாறையாய் இருந்தாலும் உள்ளுக்குள் பூரித்து விட்டாள்.



சஞ்சனாவை உரியவனிடம் ஒப்படைத்து விட்ட திருப்தி அவள் மனதில் நிலவியது.

சத்தியவதியும், சஞ்சனாவும் நேற்று பேசிக் கொண்டிருந்ததைக் கேட்ட கௌஷிகா... இதயம் கனக்க... கார்த்திக் முன்பு நின்றாள்.

தன் நிலையை விளக்கினாள்.

சஞ்சனாவிற்கும், சந்தோஷிற்கும் ஒரு நல்ல வாழ்க்கை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமானால்... தனக்கு முதலில் திருமணம் ஆக வேண்டும் என்று கூறினாள்.

தன்னை மணக்க சம்மதமா என்று கார்த்திக்கிடம் கேட்க... அவன் ஆனந்தமாய் அவள் கைப்பற்ற... இதோ இன்று காலை சிவன் கோயிலில் மாலை மாற்றி... தாலி கட்டிக் கொண்டு... சந்தோஷ், சஞ்சனா முன்பு நின்று விட்டாள், கௌஷிகா!

கார்த்திக் ஒரு அநாதை!

அதனால்தான் கௌஷிகாவின் எண்ணம்... மறுநாளே ஈடேறியது!

கௌஷிகா கார்த்திக்கைப் பார்த்து கண்கள் கலங்க...

கார்த்திக் அவளை நேசத்தோடு நோக்கி... தோள் பற்றி... அணைத்து... அவள் வீடு நோக்கிச் சென்றான்!

கௌஷிகாவின் தந்தைக்கும்... கௌஷிகாவின் இந்த செயல் மகிழ்ச்சியைத் தந்தது!

இன்பமாய் மருமகன் கார்த்திக்கை வரவேற்று... பாசத்தோடு கட்டிக் கொண்டார்!

சத்தியவதி மூலம் சரண் அவன் குழந்தை என்று அறிந்த சந்தோஷ்... மேலும் பூரிப்பானான்!

தன் மகளைத் தூக்கி வைத்துக் கொண்டாடினான்!

இருவரையும் சேர்த்து வைக்கத்தான் கௌஷிகா கார்த்திக்கை மணந்தாள் என்று அறிந்தனர்.

ஒரு சுபயோக சுபதினத்தில்... பார்வதியம்மாள் மாங்கல்யத்தை எடுத்துக் கொடுக்க...

ஐயா ராமசாமி, அபிராமி, சத்தியவதி என்று அனைவரும் ஆனந்தமாய் அட்சதைத் தூவ...

கார்த்திக், கௌஷிகா அளவில்லாமல் மகிழ...

சந்தோஷ் சஞ்சனாவின் சங்குக் கழுத்தில் தாலியைக் கட்டினான்!

திருமணம் இனிதே முடிந்தது!

இருவருக்கும் கிடைத்த தனிமையில்... எதிரெதிரே அமர்ந்து... ஒருவரை ஒருவர் நேசமாய் விழிகளால் ஸ்பரிசிக்க.

சட்டென்று சஞ்சனாவின் கண்கள் கோடைமழையாய் பொத்துக் கொண்டு கண்ணீரைக் கொட்டியது!

சந்தோஷ் அவள் விழிகளில் வழிந்த நீரைத் துடைக்க...

சஞ்சனா அடக்க முடியாமல் அழ...

அப்படியே சந்தோஷ் அவளைத் தன் மார்பில் சாய்த்து... வெதுவெதுப்பான கண்ணீர் வழியும் கண்களில் அழுந்த முத்தமிட்டான்! கன்னம், நெற்றி, உதடு என்று கணக்கில்லாமல் காதலாய் முத்தமிட்டவன் சொன்னான்...

"சஞ்சனாம்மா... என் தேவதையே... என் இதயமே... என் கண்ணே... இனி காலத்துக்கும் அழக்கூடாதுடா! சஞ்சு குட்டி... ஐ லவ் யூடா! ஐ லைக் யூடா, செல்லம்!"

சந்தோஷ் மோகத்தோடு சொல்லி... வேகத்தோடு அவள் இதழ்களில் முத்திரையைப் பதிக்க...

சஞ்சனாவும் பதிலுக்கு ஆசையாசையாய் அவன் முகம் பற்றி கன்னம், உதடு என்று முத்தமிட... சூழ்நிலையே ரம்யமாயிருந்தது!

காதல் சாகாத வரம் பெற்றது!

அதைக் காதல் நிரூபித்து விட்டது!

*